# கன்மோகினி




PPLEMENT TO JAGANMOHINI


## விஷயம் பிரதானமா ? விளம்பரம் பிரதானமா ?

அபாரமான செலவில் வெளியிடும் விசேஷமலர்களில் நிறைய விளம்பரங்களை வெளியிட்டு, செலவில் பெரும்பகுதியை மீட்டுக்கொள்வது சம்பிரதாயம். இம்மலரில் **10ல் 1** பங்காவது விளம்பரங்கள் வெளியிடுவதென்று முதலில் தீர்மானித்தோம். பிறகு, ஏற்கனவே அறிவித்திருந்த எழுத்தாளர்களின் விஷயதானங்கள் எதிர்பார்த்த அளவுக்குமேல் வளர்ந்து விட்டதனாலும், நிர்ணயித்திருந்த 200 பக்க அளவுக்குள் சில கட்டுரைகளையே விட்டுவிடவேண்டி வந்ததாலும் வாசகர்களுக்காக விளம்பர வருமானத்தைத் தியாகம் செய்துவிட்டோம். மேலட்டை தவிர, முற்றும், 200 பக்கங்களும், விஷயமேன்மையுடன் பிரகாசிக்கின்றன. எமது சொந்த விளம்பரங்கள்கூட வெளியிடவில்லை என்பதையும் கவனிக்கவும்.

—மானேஜர்.

---


**படப்பொலிவுடன் பத்திரிகைவெளியிடுவதற்கு மிக்க**
**அவசியமானது திருப்திகரமான ப்ளாக்குகளே !**
**“தென் இந்தியாவில் மிகச் சிறந்த ப்ளாக் தயாரிப்போர்”**
**என்று பல வருடங்களாகப் பிரஸித்தி பெற்றுள்ளவர்கள்**
**எப். ஸி. ஏ. கம்பெனிதான்**



இந்த மலரை அலங்கரிக்கும் சகலவிதமான
ப்ளாக்குகளும் எங்களாலேயே செய்யப்பட்டவை
என்பதை சந்தோஷத்துடன் தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

எம். ஸி. அப்பாசாமி செட்டி & கம்பெனி, ( M.C.A. & Co., )
14 ஜோன்ஸ் தெரு, மண்ணடி, மதறாஸ்.

PPLEMENT TO JAGANMOHINI OF 1-1-194




All rights of reproduction and translation of the contents of JAGANMOHINI are strictly reserved. The names and characters in all stories in this magazine are entirely imaginary and have no reference whatsoever to real persons.
JAGANMOHINI is printed and published by V. M. PARTHASARATHY at the Jaganmohini Press, Vaithamanidhi Cottage, Station Road, Singaperumalkoil
JAGANMOHINI is owned and edited by Mrs. V. M. KOTHAINAYAKI AMMAL, assisted by the Editor-in-charge: V. M. SRINIVASAN, M.A., B.L.

# கண்ணன் கருணை

அன்பு சொல்லி அழைத்தோம்-கண்ணு
அழகு சொட்டும் அமுதா!-உன்னை
நம்பி வாழுகின்றோம்-இந்த
நாட்டு மக்க ளெல்லாம்.

—சுவாமி சுத்தானந்த பாரதி.

கண்ணன் கருணையை நம்பியே நாம் சக்தியானுசாரம் மோகினி மூலமாகப் புரியும் தமிழ்த்தொண்டில் கடந்த 1944-ம் ஆண்டு பல அம்சங்களிலும் மோகினியின் சரித்திரத்தில் ஒரு முக்கியமான ஆண்டாக அமைந்தது அந்த அகிலலோகநாதனின் க்ருபாகடாக்ஷத்தினாலேயன்றோ!

கடந்தவைகளைப் பற்றிக் களிப்பதும், வருங்காலத்தைப்பற்றி திட்டமிடுவதும் மனித இயற்கையல்லவா? அதற்கு நாமும் விலக்கல்ல. சம்பிரதாயப்படி, கடந்த ஆண்டின் ஸேவகத்தைக் கவனிப்போம்.

1. சரீர சக்தி, அறிவு சக்தி, ஆத்ம சக்தி முதலியவற்றை வளர்ப்பதற்கு அனுகூலமாக அறிவும் ஆற்றலும் மிகுந்த அனேகப் பெரியோர்களால் எழுதப்பட்ட அரிய விஷயங்களைத் தாங்கி 1-1-44ல் மோகினி 21-வது ஆண்டு மலர் மலர்ந்தது. பொங்கல் புன்னகையுடன் வஸந்த மலர் சூடிவந்தவள் நிகரற்ற புகழ்மாலையையும் சூடிக்கொண்டாள்.

2. பெண்ணுலகிற்கே பெருமையளித்த ஷை மலர் மற்றுமோர் விசேஷ மோகினி வெளியீட்டிற்கு பலத்த அஸ்திவாரமாக அமைந்தது. தமிழ்மலர்ச் சோலையிலே அரும்பணி புரியும் அங்கனாமணிகளின் புத்தப் புதிய கற்பனா மலர்களைத்தாங்கி நந்தவனம் மலரத்தொடங்கி ருதுமலர்களை அளிக்கலாயிற்று. படியாத பெண்களுக்கும் பேனா படிந்து சொன்னபடி கேட்கிறது என்ற உண்மையை வெளிப்படுத்தி வஸந்தருது, கிரீஷ்மருது, வர்ஷருது, சரத்ருது மலர்கள் மூலம் இதுவரை 70 ஸ்த்ரீ எழுத்தாளிகளின் புதுப்புது சிருஷ்டிகளை மோகினி அன்பர்களுக்கு அளித்து அவர்களது ரஸிக உள்ளம் வஸந்தச் சோலையென மலரும்படிச் செய்யும் பாக்கியம் கிடைத்தது. தமிழ்ப்புத்தக உலகில் இதுவரை இத்தகைய ஸ்த்ரீகளின் ப்ரத்யேக வெளியீடுகள் தோன்றியதேயில்லை. ஜகன்மோகினி வளர்க்கும் நவரஸ விருந்தளிக்கும் நந்தவனம் நந்தாவனமாய், மேன் மேலும் தமிழ்ப் பெண்மணிகள் கூடிக் கலையாடல் புரியும் பிருந்தாவனமாக வளரவேண்டுமெனப் பெரியோர்களின் ஆசியைப் பெற்றுவிட்டது.

3. மோகினி மாத இதழ்களிலும் மனோரம்யமான பல புதிய அம்சங்களைச் சேர்த்தோம். சுவாமி சுத்தானந்தர் ஒவ்வொரு இதழிலும் அரிய கலை விருந்து அளித்துவந்தார். உள்ளத்திலிருந்து மலர்ந்த கவிதா மலர்களையும், அனுபவ ஆராய்ச்சிகளால் எழுந்த சொற்சித்திரங்களையும் வாசகர்களுக்கு பெரும் விருந்தளித்தார். காப்டன் சேஷாத்திரிநாதன் புதிதாக ஆரம்பித்த "டாக்டரின் டயரிலிருந்து" என்ற பகுதி எல்லோர் கவனத்தையும் கவர்ந்தது. ஸ்ரீமதி அம்புஜம்மாள் எழுதிய "ஸகோதரிகளுக்குமட்டும்" பகுதி பெண்ணுலகத்திற்குப் பெருந் தொண்டாயமைந்தது. மற்றபடி வழக்கம் போல் பி. ஸ்ரீ., சூடாமணி, குகப்ரியை, மற்றும் பலர் ரஸமான எழுத்தோவியங்களைச் சமர்ப்பித்தனர். ஷை கற்பனாலங்காரங்கள் யாவும் ஒன்று சேர்ந்து "மோகினி ஒரு கலைச் செல்வியாக அணிநடை குலுங்குகின்றாள்" என்றும், "உலகை மோகிக்கச் செய்வது வெளியழகு மட்டுமன்று; உள்ளழகுதான் உண்மையான அழகு. அந்த அழகின் சக்தியால் ஜகன்மோகினி பெண்ணுலகில் கலைக்கதிர்களை வீசிப் பொலிகிறது" என்றும் "உண்மையாகவே அது ஜகன்மோகினியாகி வருகிறது;" "முதலில் இடுகுறிப் பெய

ராயிருந்து இப்போது காரணப் பெயராகிவிட்டது'' என்றெல்லாம் நன் மதிப்பு பெற்றுவருகிறாள்.

4. கிராமத்தில் காரியாலயத்தை வைத்திருந்தாலும், (மின்சாரவசதியின்றி, பலவித இடையூறுகளையும் சமாளித்துக்கொண்டு) இயன்ற அளவில் மேற்கூறிய தொண்டு புரிவதுடன் நில்லாமல், வழக்கம்போல் தனிப் புத்தகங்கள் வெளியிடுவதிலும் ஒன்றும் பின்வாங்கவில்லை. அமுதமொழி, உதயசூரியன்—நவீனங்களை வெளியிட்டு வாசகர்களின் அன்புக்குப் பாத்திரமானோம்.

அமுதமொழி வை. மு. கோ. (65வது நவீனம்) ஒரேசமயத்தில் மூன்று பதிப்புகள் வெளியாகியுள்ளது. மலிவுப் பதிப்பில் இரண்டுவிதம், பாதாமி· அன்ப்ளீச்ட் காகிதங்களில். சுமார் 20 படங்கள் வெவ்வேறு கலர்களில் வெளியாகியுள்ளன. உயரிய பதிப்பு சூபர்பைன் கிளேஸ் காகிதத்தில், எல்லா படங்களும் இருவர்ணங்களில் அச்சாகியுள்ளன, கதைப்போக்கில் புதிதாகக் கையாளப்பட்டமுறை வாசகர்களின் நன்மதிப்பைப் பெற்றுவிட்டது.

உதயசூரியன் (வை. மு. ஸ்ரீ. முதல் நவீனம்) கவியோகி சுத்தானந்தரின் முன்னுரையுடன் வெளியாயிற்று. முதல் நவீனமே முதல்தரமாயிருப்பதாக முன்னுரையில் சுவாமிகள் குறிப்பிட்டதற்கேற்ப முதல் மாதத்திலேயே முற்றும் செலவாகிவிட்டது. 2-வது பதிப்பு விரைவில் தயாராகும். அறிஞர்களின் ஆசி அபாரமாகக் கிடைத்துவருகிறது. இந்நாலுக்கு சுவாமி சுத்தானந்தர் முன்னுரையில் குறிப்பிட்டார்: ''இவரது கதைச் சுவையிலும் அன்னையின் கற்பனையழகும் உணர்ச்சிக்கனலும் ததும்புகின்றன...முதல் நாவலாயிருந்தும் முதல்தரமாக அமைந்திருக்கிறது...... காட்சிப்படலங்கள் விறுவிறுப்பாகச் செல்லுகின்றன......எளிய நடை, உள்ளத்திலிருந்து வந்த சொற்கள், நவரஸ பாவனைகள், விரஸமில்லாத காதல் ரஸம், கம்பீரமான வீரச்சுவை, உலகியல்பின் மேடு பள்ளங்களைச் சித்திரித்துக்காட்டும் அனுபவத்திறமை—ஆகிய கதை யிலக்கணங்களெல்லாம் உதய சூரியனுக்குக் கிரணங்களாக அமைந்திருக்கின்றன......'' ஸ்ரீமதி ''குமுதினி'' எழுதுகிறார். ''வை. மு. கோ. வின் பிள்ளை என்கிற முத்திரை வை. மு. ஸ்ரீ. யின் ஒவ்வொரு வாக்கியத்திலும் விளங்குகிறது. கதையில் உணர்ச்சி பாவமே அதிகம் சிறப்புற்று இருக்கிறது.......'' காலக்ஷேப திலகம் ஸ்ரீமதி ஸி. ஸரஸ்வதிபாய் தமது நீண்ட கடிதத்தில் தெரிவிக்கிறார். ''உண்மையில் மிகவும் நன்றாயிருக்கிறது. பால்யம் முதல் அத்தொழிலிலேயே பழகியும், ஸ்வயம் புத்தியோடும், மிகவும் மேலான படிப்பைப் படித்தவருமான ஒரு அநுபவஸ்தரால் எழுதப்பட்டது இருக்கவேண்டிய நிலைமையில் அது இருக்கிறது...மகாகவிகள் நவரஸத்தோடுதான் நாடகம் முதலிய கிரந்தங்கள் எழுதுவார்களானாலும், அவைகளில் சிருங்காரம் அல்லது வீரம், இவைகளில் ஒன்று முக்கியமாகவும் மற்ற ஹாஸ்யாதிரஸங்கள் அங்கமாகவும் விளங்கும். வீரமும் சிருங்காரமும் இரண்டும் ஒரே கிரந்தத்தில் முக்கியமாய் இராது. ''ச்ருங்கார வீரயோரேக: ப்ரதானம் யத்ர வர்ண்யதே'' என்று சிருங்காரம் அல்லது வீரம் இரண்டில் ஒன்றுதான் முக்கிய கதையை வஹிக்கும். இக்கதையில் பரம முக்கிய ஸ்தலத்தில் இரண்டு ரஸங்களுக்கும் ஸம்பூர்ணமாய் இடங்கொடுத்து, அதனால் கதையின் ருசியைக் கெடுத்துவிடாமல், அதனாலேயே விசேஷ சோபையைத் தரச்செய்தது மிகவும் அபூர்வ சந்தர்ப்பம்.....இக்கதாசிரியர்......உதயசூரியனை எப்பொழுது ஆரம்பித்தாரோ, உலகில் சூரிய உதயத்திற்குப் பிறகு நிகழ்வதை நாம் அனுபவிப்பதுபோல், இவருடைய கற்பனாலோகத்தின் சிருஷ்டிகளையும் இனி நாம் ஏராளமாய் அனுபவிக்க இடமிருக்கிறதல்லவா?......இவர் எழுத்தாளர் உலகில் பிரவேசித்தது வாசகர்களின் அதிர்ஷ்டமென்றே சொல்லுவேன்......''.

225665

# இருபத்திரெண்டாம் ஆண்டு

அகிலலோக ரக்ஷகனும் கீதாசாரியனுமாகிய ஸ்ரீபார்த்தசாரதியின் திருவருள் கடாக்ஷத்தினாலும் ஸ்ரீ பாடலாத்ரி நரஸிம்மனின் பரம கிருபையினாலும் உங்கள் ஆதரவினாலும் பெரியோரின் ஆசீர்வாதத்தினாலும் மோகினிக்கு 21-ஆண்டுகள் இனிது முடிந்து 22-வது ஆண்டு மங்களகரமாகப் பிறந்துவிட்டது. மோகினி தனது பொங்கல் புதுமலரைத் தாங்கி ஆனந்தமாகக் காட்சியளிக்கிறாள். இந்தப் புதிய வருஷத்தில் கடவுளின் அருளால் நம்மெல்லோருடைய வீட்டிலும் ஆனந்தமாகவும், மங்களகரமாகவும் பால் பொங்கவேண்டுமாய் இறைவனை வேண்டுகிறேன்.

இந்தியா தனது நாகரிகத்தின் அடிப்படையான வேததர்மத்தை மறந்து பரதர்ம மோகத்தில் வீழ்ந்து அழிந்து வருகிறது. வேத தர்மத்தைக் காப்பாற்ற வேண்டியது பத்திரிகைகளின் கடமையாகும். இது சம்பந்தமாக ஒரு தமிழ்த்தலைவர் நமக்கு எழுதியிருக்கிறார்: "மோகினி ஒன்றே சூதாட்டமில்லாமல் தார்மிக உணர்ச்சியுடன் நடக்கிறது... ......மோகினியை உரிய காலத்தில் வாரப்பத்திரிகையாக்கமுடியும்...... மேன்மேலும் கண்ணபிரான் அருளால், கீதாதர்மத்தின் பெருமையால் மோகினி அபிவிருத்தியடையும்." (20—12—44.) இவ்வாறு அறிஞர்களின் ஆசியை அதிகரித்தே பெற்றுவரும் மோகினி, இந்தப் புது வருடத்தில் இன்னும் சிறப்பான தொண்டு புரிய முன்வந்திருக்கிறாள்.

(1) தார்மிக ஏணியில் படிப்படியாக வேதகாலந் தொட்டு இந்தக் காந்தியுகம்வரை நமது தர்மம் எப்படி வளர்ந்து வந்துள்ளதென்பதைக் கலாநிதி பி. ஸ்ரீ, தமது ப்ரத்யேகச் சிறப்பு வாய்ந்த முறையில் வெளியிடுவார். இந்தத் தொடரில் "வேதமுரசு" முதல் வியாசம். (2) சுவாமி சுத்தானந்த பாரதியார் நான்கு வேதங்களையும் ஆழ்ந்து ஆராய்ந்து அதன் ஸாரங்களைப் பாடிவரும் பணியில் தற்சமயம் ஈடுபட்டிருக்கிறார். வேததர்மத்தைக் காப்பாற்ற மோகினியில் காலத்திற்கேற்ற பாடல்கள் வெளிவரும். (3) பழைய பாடல்களும் அழகான மெட்டுக்களும் மறைந்து வரும் இக்காலத்தில், பழைய ஆடல் பாடல்களைப் புதுப்பிக்கும் புதிய பாடல்கள் வரும். (4) படங்களில் அட்டைப் படத்திற்கு விசேஷஸ்தானம் உண்டல்லவா? அடுத்த இதழ் முதல் அட்டைச் சித்திரம் ஒவ்வொன்றும் சமுதாயத்திற்கு ஒரு புதிய ஆதர்சமாக விளங்கும்; கவியோகியின் புதுப் புது கவிதாமலர் படப்பொலிவுடன் வெளிவரும். ஸ்ரீ ராகவன் சித்திரக் கலைக்கு ஏராளமான விருந்து காத்திருக்கிறது. "சகோதரிகளுக்கு மட்டும்" "குழந்தைகளுக்குமட்டும்" "டாக்டரின் டயரியிலிருந்து," "குடும்பவைத்தியம்" முதலிய பகுதிகள், கதைகள், கட்டுரைகளுடன், இதர அம்சங்களும் மோகினியைச் சிறப்பிக்கின்றன.

கலைவாணியின் அருளால் உதிக்கும் அறிவுப்பொருளை இயன்ற அளவில் அன்பர்களுக்கு அளிப்பதே மோகினியின் பணி. இத்தகைய தமிழ்த் தொண்டில் உருவாகிய இந்த தாரண பொங்கல் மலரைக் குறித்து சில விவரங்கள் கூறவேண்டியதவசியம். முதல் பக்கத்திலிருந்து கடைசிப் பக்கம்வரை, முழுதும், 200 பக்கங்களும், வாசகர்களுக்கு வேண்டிய பலவகைப்பட்ட கலை விருந்தே அளிக்கப்பட்டிருக்கிறது. மிகப் பிரஸித்தி பெற்ற எழுத்தாளர்கள் அநேக அரிய பெரிய விஷயங்களைக் குறித்து எழுதிச் சிறப்பித்துள்ள இம்மலரில் சுமார் 100 சித்திரங்கள் பூரணப் பொலிவுடன் திகழ்கின்றன. விளம்பரங்களைச் சேகரியாது, பணமேதான் பிரதானம் என்று கருதாது, அபாரமான செலவில் தயாரான இந்த அரிய கலைப் பொக்கிஷத்தை மிகவும் குறைந்த விலையான ரூ. 2/-க்கே கொடுப்பதைப்பற்றி பெருமை கொள்கிறோம்; பூரிப்படைகிறோம்.



## அன்னையே! உன் பாதம் அடைக்கலமே.

சகல கலா மூலாதாரிணியான உனது அருளால் பூத்த இந்தப் பொங்கல் புது மலரை உன் பாதங்களுக்கே சமர்ப்பிக்கின்றேன்.

எம்பெருமானுடைய மகிமை, எப்படி வேதங்களினாலும் எல்லைகாண முடியாததோ, அப்படியே உனது திருக்குணங்களும் அத்தகைய மகிமை வாய்ந்தவையன்றோ!

ஊமையையும் பேசவைக்க வல்ல உனது கிருபாகடாக்ஷத்தினால், இந்த அல்பஞனை அடியேனும் இத்தகைய ஒரு தமிழ் மலரை உன் பாதகமலங்களுக்கு அர்ச்சிக்கும் பெரும் பாக்கியம் கிடைத்துள்ளது.

உனது வாத்ஸல்ய விசேஷத்தினால் வளம் பெறும் தமிழ் அமுதம், இந்த மோகினிக் கலசத்தின் மூலம் தமிழன்பர்களின் கலைத் தாகத்தை ஓரளவு தீர்க்குமென்றே நம்பும் உனது தாஸன்,

வை. மு. ஸ்ரீ.
மலர் ஆசிரியன்

# அனைவர்க்கும் வந்தனம்

ஒரு அரிய பெரிய காரியத்தைச் சரிவரச் செய்து முடித்தபின், அதை வெற்றிகரமாக நடக்கும்படி உதவிய சகலருக்கும் வந்தனத்தைத் தெரிவிப்பது கடமையல்லவா? அதேபோல், இம்மதுரமான மலர் பூரணப் பொலிவுடன் மலர்வதற்குக் காரணமாயிருந்த அனைவர்க்கும் எமது நன்றியறிதலுடன் கூடிய வந்தனத்தைச் செலுத்துகிறோம்.

முதலாவது, சர்க்கார் களிகூர்ந்து கிருபை செய்ததற்காக அவர்களுக்கு வாககர் சார்பாகவும் வந்தனம் செய்கிறோம். புதிய கட்டுதிட்டங்களின்படி சர்க்காரின் உத்திரவின்றி விசேஷ மலர் வெளியிடுவதற்கில்லை. சாதாரண பேப்பர் உபயோகிக்க அனுமதித்திருந்தால் சென்ற ஆண்டு மலரில் 400 பக்கங்கள் வெளியிட்டதை அளவாகக்கொண்டு 30% விதிக்குக்கட்டுப்பட்டு 120 பக்கங்களே வெளியிடமுடியும். சர்க்கார் கிருபையுடன் நியூஸ் ப்ரிண்ட் உபயோகிக்க அனுமதித்ததால்தான் 200 பக்கங்கள் வெளியிட முடிந்தது.

சில நிபந்தனைகளின் பேரிலேயே இந்தச் சலுகையை அளித்ததால், மோகினி மாத இதழ்களில் கொஞ்சம் பக்கங்கள் குறைக்கவேண்டி வந்தது. பொங்கல் புது விருந்தை எதிர்பார்த்தே வாசகர்கள் மிகவும் பொறுமையோடு குறைந்த பக்கங்களில் நிறைந்த சுவையை ரஸித்து வந்தார்கள். நாம் "நந்தவனம்", இதர நவீனங்கள் முதலியவற்றிற்கு கிளேஸ் முதலிய இதர ரகங்களை உபயோகிப்பதால் இந்த மலரில் நியூஸ் ப்ரிண்ட் தவிர 8 பக்கமே ஆர்ட்பேப்பர் உபயோகிக்கலாம் என சர்க்கார் திட்டமிட்டுவிட்டார்கள். அதன்படியே ராப்பரும், ஆர்ட் அனுபந்தம் 4 பக்கமும் (அதாவது ப. 41–44) வெளியிட்டுள்ளோம். இம்மலரில் வெளியாகியுள்ள எல்லா விசேஷ படங்களுக்கும் வேண்டிய ஆர்ட் பேப்பர் எம் வசம் இருந்தும், ஷை யுத்தகால காகிதக் கட்டுப்பாடு திட்டத்தின்படி உபயோகிக்க முடியாத நிலையிலிருக்கிறது. வாசகர்கள் இதைக் கவனித்து, விஷயமும் ஓவியமும் மேன்மையாயிருப்பதுதான் முக்கியமே தவிர, காகிதத்தைப் பற்றி குறை கூறவேண்டியதில்லை என்று மனந்தேறுவார்களென்று நம்புகிறோம்.

இரண்டாவது, விஷயமேன்மை பொருந்திய இந்தக் கலைப் பொக்கிஷத்தை உருவாக்கிய அறிஞர்கள் அனைவர்க்கும் எமது வந்தனங்கள். இந்த மலரில் எந்த அம்சம் மிகச் சிறந்ததென்று கூற இயலாது நாங்கள் திகைப்பதுபோலத்தான் வாசகர்களும் பிரமித்துப்போவார்கள் என்று உறுதியாய் நம்புகிறோம். ஒவ்வொரு அம்சமும் விசேஷத் தனிச் சிறப்புடன் ஒளிவீசி நிற்கிறது. இத்தகைய தமிழ் விருந்தையளித்த எல்லா எழுத்தாளர்களுக்கும் உங்கள் சார்பாகவும் வந்தனத்தைச் செலுத்துகிறோம்.

மூன்றாவதாக, இம் மலரை பிரமிக்கத்தக்க படப்பொலிவுடன் அமையும்படி உதவிய சித்திர நிபுணர்களுக்கு எமது வந்தனம். ஆசிரியர்கள் நல்ல சந்தர்ப்பங்களைச் சிருஷ்டிக்கலாம்; ஓவிய நிபுணர்கள் அவற்றை உயிரோவியங்களாகத் தீட்டிவிடலாம்; ஆனால் எல்லாம் பரிமளிக்க சிறந்த முறையில் பளாக்குகளைச் செய்யவேண்டுமல்லவா? இப்பணியில் மிகவும் திருப்தியளித்து ப்ளாக்குகளை மிகவும் குறைந்த காலத்தில் தயாரித்த நிபுணர்களுக்கும் எமது வந்தனம்.

கடைசியாக, மோகினி ஊழியர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றி. இராப்பகலாக உழைத்து மிகவும் குறுகிய காலத்தில் இந்த பெரிய காரியத்தை சாதித்திருக்கிறார்கள் மிகுந்த சிரத்தையோடு. பூர்வாங்க ஏற்பாடுகளும் சகல சாதனங்களும திருப்திகரமாகவிருப்பினும், யாவும் வாசகர்கள் மனம் களிக்கும்படி புத்தக உருவில் அமைப்பது ஊழியர்களின் முயற்சியையும் திறமையையுமல்லவா பொருத்திருக்கிறது? வாசகரின் பாராட்டைப் பெறுவதே அவர்களுக்கு மகிழ்ச்சி.

அனைவர்க்கும் மீண்டும் வந்தனம்.

வை.மு. கோதைநாயகி. வை.மு. பார்த்தஸாரதி. வை.மு. ஸ்ரீநிவாஸன்.

# விஷய அட்டவணை


| | | |
|---|---|---|
| பொங்கலோ பொங்கல்! | படம் — "விஜய்" | பக்கம். 1 |
| கண்ணன் கருணை | நமது தொண்டு—ஆசிரியர் | 2 |
| இருபத்திரெண்டாம் ஆண்டு | நமது திட்டம் — ,, | 4 |
| உன் பாதம் அடைக்கலமே! | சமர்ப்பணம் — ,, | 5 |
| அனைவர்க்கும் வந்தனம் | நமது நன்றி — ,, | 6 |
| இன்னும் ஒரு நூற்றாண்டிரும்! | படம்—ஏ. வி. ராகவன் | 9 |
| பொங்கல் கும்மி | சுவாமி சுத்தானந்த பாரதி | 10 |
| நீண்ட ஆயுள் | சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரி | 12 |
| ஊட்டுகின்றார்! ஆசீர்வதிக்கின்றார்! | சித்திர விளக்கம்—வை.மு.ஸ்ரீ | 17 |
| ஒரு பாட்டினால் வந்த உபத்திரவம் | ராவ்பகதூர் ப. சம்பந்த முதலியார் | 18 |
| பேசும் பொற்சித்திரமே! | படம்—குஞ்சரன் | 23 |
| கைங்கரியச் சிகரம் | படம்—ராகவன் | 24 |
| ஹிந்து மதத்தின் உட்கருத்தும் வருங்கால நிலைமையும் | திவான்பகதூர் கே. எஸ். ராமஸ்வாமி சாஸ்திரி | 25 |
| ஒன்றுபட்டாலுண்டு வாழ்வே! | படம்—"விஜய்" | 32 |
| உயிர்மாலை | சாப்டன் நீ. சேஷாத்திரிநாதன் | 33 |
| ஆபீஸ் நிலைமை | படம்—எலி தூங்கவில்லை. | 35 |
| சாதிக்கட்டொழித்த வேதிய வீரன் | அ. சுப்ரமண்ய பாரதி | 36 |
| துஷ்ட நிக்ரஹ கருணாநிதி! | ஒரு ஓவியக் கற்பனை-ஏ.வி. ராகவன் | 41 |
| கணபுரத்து என் கருமணியே! | குலசேகரர் பாசுரம் ,, | 42 |
| நப்பின்னாய்! தாள் திறவாய் | யதிராஜரின் பக்திப் பரவசம் ,, | 43 |
| ஆசார்ய பக்தி | கொங்குபிராட்டி சரிதை ,, | 44 |
| இராமானுஜர் கட்டளையும் உலக நன்மையும் | திவான்பகதூர் வி. பாஷ்ய மய்யங்கார் | 45 |
| கந்தருவர் | ராவ்ஸாஹேப் வையாபுரிப் பிள்ளை | 48 |
| கம்பன், காபி, காந்தி | பி. ஸ்ரீ. | 53 |
| ஆத்மாவும் பரமாத்மாவும் | பி. ஆர். ராஜசூடாமணி | 58 |
| ஞானவள்ளல் வந்துவிட்டான் | படம்—சாமுவேல் | 60 |
| நவீன இலக்கியம் | கா. ஸ்ரீ. ஸ்ரீ. | 61 |
| அன்பு வெள்ளம் | ரா. ஸ்ரீ. தேசிகன் | 64 |
| ஸர்வம் ஸ்த்ரீமயம். | படம்—இன்னிசை | 68 |
| வித்தியாசம். 6-படங்கள். | விளக்கம்—வை. மு. ஸ்ரீ. | 69 |
| நான் அறிந்த தமிழ் மணிகள் | ஜெ. ர. ரங்கராஜு | 72 |
| முனிவர் கோபம் முகுந்தன் சாந்தம். | ப்ருகு—படங்கள்-ராகவன் | 77 |
| நவீன ப்ரஹ்மதேவன் | வை. மு. ஸ்ரீ. (31 படங்களுடன்) | 79 |
| நிகரற்ற தொண்டு | நமது ஓவியப்புலவர் ... | 87 |
| ரங்க ரங்கா! | குழந்தைகளுக்கு! "பேனா" | 88 |
| ஸ்ரீ வைஷ்ணவ அன்பர்களுக்கு | வை. மு. ஸ்ரீநிவாஸதாஸன் | 89 |
| ஸ்ரீ வசனபூஷணத்தின் பெருமை | ஸ்ரீ. கோ. க. வா. அ. குமார ஸ்ரீ சைலாசாரியார் ஸ்வாமி | 90 |
| ஸ்ரீ வேதாந்த தேசிகனும் விட்டுசித்தன் கோதையும் | ஸ்ரீ. ப்ர. ப. அண்ணங்கரா சாரியார் ஸ்வாமி | 93 |

| | | |
|---|---|---|
| நவரஸ விருந்தளிக்கும் நாரீமணிகள் | ஆசிரியை | 97 |
| சிக்கல் யாத்திரை | ஸி. ஸரஸ்வதிபாய் | |
| உண்மை சங்கீதமா? உதர போஷண கீதமா? | பெங்களூர் நாகரத்தினம்மாள் | 102 |
| இரண சிகிச்சை | ஜெயலக்ஷ்மி ஸ்ரீநிவாஸன் | 105 |
| பாரதியாரும் கோவில் யானையும் | தங்கம்மாள் பாரதி | 108 |
| ஒட்டுக் கேட்ட சம்பாஷணை | கமலா பத்மநாபன் | 110 |
| ஸர்ப்ப நிர்த்தனம் | படம்—இப்ராஹீம் | 114 |
| ராதையும் கிருஷ்ணனும் | மைதிலியின் போட்டோ | 115 |
| ஆசிரயம் | எம். எஸ். கமலா | 116 |
| பிரதிக்ஞை (13 படங்களுடன்) | வை. மு. கோ. 66வது நாவல். | 121 - 168 |
| சுப்பன் டயரி | எஸ். அம்புஜம்மாள் | 169 |
| சில விருக்ஷங்கள் | சகோதரி சுபலக்ஷ்மியம்மாள் | 174 |
| கணவனின் நிழல் | படம்—தாம்பத்ய தர்மம் | 176 |
| சமூகமும் ஸ்த்ரீ எழுத்தாளரும் | கி. ஸாவித்ரியம்மாள் | 177 |
| அழைக்கும் விதம் | படம்—ப்ரத்யக்ஷம் | 179 |
| என் தியாகு | ஜானகி. ("கினஜா") | 180 |
| பஞ்சம் எங்கே? | படம்—கண்கூடு | 184 |
| தாயின் அன்பு | குமுதினி | 185 |
| கற்பின் வலிமை | படம்—ரிஷிபத்னி | 188 |
| பழமொழிக்கோவை | ஜானம்மாள் | 189 |
| பக்திப் பெருக்கு | "ரங்கப்ரியை" | 194 |
| அஸ்தமனம் | படம்—இப்ராஹீம் | 196 |
| துணி வெளுத்ததா? மனம் வெளுத்ததா? | வை. மு. பத்மினி | 197 |
| பொங்கலோ பொங்கல் | மங்களம் | 200 |



## போடோ படங்கள்


"ஸ்ரீவத்ஸன்"


| | | |
|---|---|---|
| இன்னும் மறையவில்லை | புராதன பலகைச் சக்கரவண்டி | 52 |
| இயற்கையின் எழில் | 2 காட்சிகள்: மைசூர், பெங்களூர். | 57 |
| அழகில் இருவிதம் | இயற்கையும் செயற்கையும் | 104 |
| இரு க்ஷேத்திரங்கள் | திருவையாறு, திருக்குடந்தை | 193 |


## படங்கள்


| | |
|---|---|
| ஏ. வி. ராகவன்— | 5, 9, 10—11, 12, 13, 16, 24, 41—44, 58—59, 77—8, 79—87, 95, 121—168. |
| "விஜய்" | 1, 18—23, 32, 120, 192, 197—200. |
| "அனுஷம்" | 54, 66, 88, 101, 113, 173, 187, 200. |
| எம். சாமுவேல் | 35, 60, 68—71. 109, 176, 179, 184, 188. |
| குஞ்சரன் | 17, 23, 40. |
| இப்ராஹீம் | 114, 196. |







இன்னும் ஒரு நூற்றாண்டிருக்கும்!

[illegible] ஆசிர்வதிக்கின்றார்! ([illegible]-ம் பக்கம் பார்க்கவும்.)





## பெண் உரிமைக் கும்மி.

முத்துமுத் தாய்முல்லை பூத்ததடி ஜகன்
மோகனன் பூங்குழல் கேட்டதடி ;
கத்து குயிலோசை கொஞ்சுதடி-கலைக்
காதல்வந் துள்ளத்தைக் கெஞ்சுதடி!

விண்ணமு தம்பொழி வெள்ளி நிலாவில்,
விடுதலைக் கும்மி யடித்திடுவோம்.
பெண்ணமு தங்களின் பிறப்பு ரிமையைப்
பேசிக் கும்மி யடித்திடுவோம்! கால்கள்
வீசிக் கும்மி யடித்திடுவோம்!

பாலிற் கலந்த பசுந்தமிழ்த் தேனெனப்
பண்கள் இசைத்து நடித்திடுவோம்!
காலிற் சிலம்பு கலீர் கலீரெனக்
கைகள் அடித்துக் குதித்திடுவோம்!

கட்டுண்ட வாழ்க்கைவி ணுச்சுதடி: அந்தக்
காலம் மலையேறிப் போச்சுதடி;
வெட்டிரு துண்டெனப் பேசிடுவோம்-மாதர்
வேற்றுமைப் புத்தியை ஏசிடுவோம்!

காதலுண் டானதும் பெண்ணுலே-வாழ்வின்
கதை வளர்ந்ததும் பெண்ணுலே;
ஆதர வான மனையறப் பூத்துநல்
அன்பு கனிவதும் பெண்ணுலே !

தீரர் விளைவதும் பெண்ணுலே-கலைச்
செல்வஞ் செழிப்பதும் பெண்ணுலே;
பாரில் அழகும் சுவையும் அமுதும்
பரந்து தழைப்பதும் பெண்ணுலே!

வீட்டிற் •காரியும் பெண்ணன்றே-வீரர்
விளைந்த கற்பகம் பெண்ணன்றே ?
நாட்டிற் சமபங்கு பெண்ணன்றே-பொது
நல வலக்காரம் பெண்ணன்றே?


தண்ணீர் சுமக்கவும் சமைத்துப்போடவும்
சந்ததி ஈனவும் வந்திருக்கும்,
பெண்ணுக்கு வேண்டாம் பெரிய படிப்பெனும்
பேதமையை இனி ஆதரியோம்!

ஆண்பிள்ளை யென்றுற் களிப்பதுவும்-பெண்ணை
'ஐயோடீ' என்று சலிப்பதுவும்,
வீண் மனப்பிழை என்று விளம்பிநாம்
வீர சுதந்தரம் கூறிடுவோம்!



SUPPLEMENT TO JAGANMOHINI OF 1-1-1945

# பொங்கல் கும்மி



'செஞ்சுருட்டி—ரூபகம்'

செல்வம் இருவர்க்கும் பங்கென்போம்-குல
க்ஷேமம் இருவர்க்கும் பங்கென்போம்.
கல்வி இருவர்க்கும் கண்ணென்போம்-தூய
கற்பும் இருவரின் காப்பென்போம்!

அட்டி லுக்கும், மாட்டுக் கொட்டி லுக்கும்
அத்தான்
கட்டிலுக்கும், சிறு தொட்டி லுக்கும்
கட்டடி மையாகக் கைகட்டி வாழ்ந்திடும்
கதியை மீறிக் குதித்திடுவோம்!

வீட்டுக்குள் ளேயடை பட்டுக் கிடந்தநம்
வீரங் குமுறுதே ஆர்கலிபோல்,
நாட்டில் நிமிர்ந்து நடந்து சுதந்தர
நாத வெளியில் உலாவிடுவோம்!

பொருத்த மில்லாத பொம்மைமணம்-வீட்டைப்
பொட்ட லடிக்கும் வரசுல்கம்,
அருத்த மற்ற சடங்குகள் யாவையும்
அள்ளிப் பழங்குழி தள்ளிடுவோம்!


மூலையைக் காத்திடும் பேச்சுமில்லை இனி
முக்காடு போட்டிடும் கூச்ச மில்லை...
மாலையும் மஞ்சளுங் குங்குமமும்-புது
மலர் நகையுமாய் வாழ்ந்திடுவோம்!


அல்லியைப் போல் அர சாண்டிடுவோம் அருள்
ஒளவையைப் போற்கவி பாடிடுவோம்,
வள்ளியைப் போல மனங்கொண்டகாதல்
மணாளரை யின்புறக் கூடிடுவோம்!

பேனுப்பிடிப்பதி லும் சலியோம் சட்டம்
பேசிச்செயிப்பதி லுஞ்சலியோம்!
சேனுதி பத்யத்தி லுஞ்சலியோம்பெண்கள்
தேசத்தை யாளக் கைவிசி வந்தோம்.

ஆணின்றிப் பெண்ணில்லை பெண்ணின்றி
ஆணில்லை ;
ஆண்பெண் விளையாட் டுலகமெல்லாம்!
பூணுக்கும் பொன்னுக்கும் பூமிக்கும்
நெல்லுக்கும்
பொருத்த மெப்படி அப்படி நாம்!

அன்பும் அறிவும்போல், அர்த்தநா ரீசர்போல்,
அல்லியும் நீரும்போல் வாழ்ந்திடுவோம்;
இன்பச் சிகரத்தில் ஏறிடுவோம்-ஆண்பெண்
இரண்டும் ஒன்றெனக் கூறிடுவோம்.





# நீண்ட ஆயுள்

## சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரியார்

இராமசாஸ்திரிகளுக்கு வயது 91. ஆயுள் முழுதும் நித்திய நியமங்களை தவறாமல் செய்து வந்தவர். புகையிலை, பொடி முதலிய சில்லரை விவகாரங்கள் எப்போதும் கிடையாது. இரவு ஒன்பது மணி என்றால் எந்த நாளிலும் படுத்துவிடுவார். எந்தவிதமான ஒழுங்குக் குறைவும் அறிந்தவர் அல்ல. இவர் ஜுரம் என்று ஒரு நாளும் படுத்தது கிடையாது. 91 வயதானாலும் இன்னும் கோல் பிடிக்காமல் நிமிர்ந்து நடக்கிறார். "ஆசார நியமமான வாழ்க்கையின் பிரயோஜனத்தைப் பார்த்தாயா?" என்று இராமசாஸ்திரிகளை எல்லாரும் சொல்லிக் காட்டுவார்கள்.



குடியானத் தெருவில் இராமபோயனுக்கு வயது 89. ஒட்டசாதி. தினசரி ஒரு சீசா கள்ளு உள்ளே செலுத்தாமல் அவனுக்கு எந்த நாளும் பொழுது அஸ்தமித்தது கிடையாது. இந்த நியமத்தை 16 வயது முதல் அனுசரித்தவன். எப்போதும் இடுப்பில் பையில் புகையிலை இருக்கும்; அது சேர்க்காமல் அவன் வெற்றிலைப் போடுவது கிடையாது. 89-வயதானாலும் தன் பையன்கள் வேலைசெய்யும்போது கிழவனும் கட்டப்பாறை எடுத்துக் கொண்டு கூடப்போகாமலிருக்க மாட்டான். இவனும் ஒரு அடி போட்டால்தான் கல் பெயர்ந்து வேலை முடியும். அவனுடைய இரண்டாவது மனைவி இறந்துபோனாள். முதல் மனைவி உயிரோடு இருக்கிறாள். சாஸ்திரிகளுக்குப் போட்டி இராமபோயக் கிழவன்.

நீண்ட ஆயுளின் ரகசியம் என்ன? இதைப்பற்றி வைத்தியர்கள் ரொம்ப எழுதியிருக்கிறார்கள். அதையெல்லாம் படிக்க ஆரம்பித்தால் இல்லாத வியாதியும் வந்துவிடும். இருக்கும் ஆயுசும் குறைந்து போகும். சிலர் மோர் குடிக்க வேண்டும் என்கிறார்கள். சிலர் பால் ரொம்ப முக்கியம் என்கிறார்கள். சிலர் நம்ம ஊரில் இல்லாத பழவகையைச் சொல்லி அதை சம்பாதித்துச் சாப்பிட்டால்தான் தீரும் என்கி

றார்கள். மீன் எண்ணெயைப்பற்றிச் சிலர் ஓயாமல் வற்புறுத்துவார்கள். இதையெல்லாம் படித்துக் கலவரப்படுத்திக்கொண்டு கவலையடையவேண்டாம். கவலை ஆயுளுக்கு விஷத்தைப்போல்.

சில்லரை அசவுகரியங்களுக்கெல்லாம் மருந்து சாப்பிடாமல், எப்படி நோய் வந்தது என்பதை ஆராய்ந்து பார்த்து அதற்கு பரிகாரம் தேடிக்கொள்வது நல்லது. காரணத்தை நீக்கினால் வியாதி தானாக சொஸ்தப்பட்டுப்போகும். ஒவ்வொன்றுக்கும் மருந்து குடிக்க ஆரம்பித்தால் இல்லாத நோய்கள் தேடிக்கொண்டு வர ஆரம்பிக்கும்.

நம்மால் சமாளிக்க முடியாத வியாதிகள் உண்டு. அவை வந்தால் வைத்தியர்களைக் கேட்டு அவர்கள் சொல்கிறபடி நடப்பது அவசியம். இக்காலத்தில் அநேக வியாதிகளுக்கு நல்ல மருந்துகளை கண்டுபிடித்து வைத்திருக்கிறார்கள். புதுமுறை வைத்தியர்கள் என்னத்தையாவது செய்து ஆளைசாகாமல் பார்ப்பதில் கெட்டிக்காரர்கள். இதனால் இக்காலத்தில் பணம் செலவிடக்கூடியவர்கள் வியாதிகளால் சீக்கிரம் உயிர் இழப்பது கிடையாது. நோயுடன் காலம் தள்ளிக்கொண்டே போவதற்குப் பலவழிகள் தேடிவைத்திருக்கிறார்கள். இது உலகத்துக்கு நன்மையா என்பது வேறு கேள்வி. கிராமங்களிலுள்ள ஏழைகளுக்கு இந்த சவுகரியம் அதிகமாக இல்லை.

65 வயது முதல் 75 வயது வரையில் அதிக ஆபத்து. அதற்கு முந்தியும் பிந்தியும் பயம் அவ்வளவாக இல்லை. 75 தாண்டிவிட்டால் ஆயுசு கெட்டி.

ரகசியம், பரம்பரையில் இருக்கிறது. குழந்தையைப்பெற்ற தாய் தகப்பன்மார், பாட்டன் பாட்டிமார், அவர்கள் நால்வரையும் பெற்ற முப்பாட்டன் முப்பாட்டிகள், அவர்கள் எண்மரைப்பெற்ற பதினாறு முன்னோர்கள், இப்படியே மற்ற முன்னோர்கள் எல்லாருடைய தேக தருமத்தையும் பொருந்தி நிற்கும், மனிதனுடைய ஆயுள். சுகமான வாழ்க்கை வேண்டுமானால் நல்ல மனைவியைச் சம்பாதித்துக்கொள்ள வேண்டும் என்பர் புருஷன்மார்கள். இவ்வாறே ஸ்திரீகள் அதைத் திருப்பிச்சொல்லுவார்கள். நீண்ட ஆயுள் வேண்டுமானால் நல்ல பாட்டன் பாட்டியைச் சம்பாதிக்கவேண்டும்! அதற்கு எங்கே போகிறது? இதனால்தான் ஆயுள் என்பது "தலையெழுத்து" என்று நம்முடைய முன்னோர்கள் சொல்லிவிட்டார்கள். அது உண்மை.

பரம்பரையே ஆயுள் வரம்பின் முக்கிய அம்சம். பரம்பரை என்றால் தாயும் தகப்பனும், இரண்டு வகைப் பாட்டன் பாட்டி, முப்பாட்டன், முப்பாட்டி, "கொள்ளு", "எள்ளு" என்கிற எல்லாவித பாட்டன் பாட்டிமார்களும் உள்பட எல்லாரும் சேர்ந்து ஒருவனுடைய தலையெழுத்தை எழுதிவிடுகிறார்கள்.



பத்துத்தலைமுறை வரையில் சென்றால் ஒருவன் தலையெழுத்துக்கு எஜமான்கள் 1024 பேர் ஆகும்!

ஏதாவது கொடிய வகைத் தொத்துவியாதி வந்து சேர்ந்து அதனால் உண்டான மரணம், நெருப்பு, நீர், அல்லது மோட்டார் விபத்துக்கள் இந்த பரம்பரைக் கணக்கில் சேராமற்படி ஒருவன் முன்னோர்கள் எத்தனை வயது வரையில் பிழைத்தார்கள் என்று பார்த்துச் சொல்லமுடியுமானால் ஒருவனுடைய ஆயுளை அநேகமாக மதிப்பிடலாம்.

பரம்பரையில் வந்தது போக தனிப்பட்ட வியக்திச் சுபாவமும் உண்டு. சுபாவம் என்றால் தேகம், மனம் இரண்டின் சுபாவமும். தேகத்தைப் பொருத்தமட்டில், 35 வயது வரையில் கொஞ்சம் சதையோடு இருப்பது நல்லது. அந்த வயதுக்குமேல் கொஞ்சம் ஒல்லியாக இருப்பதே நலம். 35 வயது தாண்டியபிறகு அதிகப்படியான ஒவ்வொரு ராத்தலும், வயிற்றைச் சுற்றிய அளவில் அதிகப்படியான ஒவ்வொரு விரக்கடையும் ஆயுசுக்கு அந்த அளவில் தடையே ஆகும்! ஒல்லியாக இருப்பதோடு, விருத்தாப்பிய மடைந்தவர்களுக்கு மன அமைதி முக்கியமான பத்தியம். "நடந்தது நடக்கட்டும், கவலை ஏன்?" என்றிருப்பவர்களிடம் யம கிங்கரர்கள் அண்டுவதற்குப் பயப்படுவார்கள். நல்லது நேர்ந்தாலும் கெட்டது நேரிட்டாலும் மிதமிஞ்சிய களிப்பு அல்லது விஷாதம் கூடாது. சமநிலை நீண்ட ஆயுளைத் தரும். தூய வாழ்வும் உள்ள அமைதியும் மோக்ஷம் தரும் என்பது வேதாந்தம். அதுவே நீண்ட ஆயுளும் ஆரோக்கியமும் தரும் என்பது வைத்தியசாஸ்திரம். பொறுமை, நேர்மை, அறிவு, தெய்வபக்தி, அமைதி, அடக்கம் எல்லாம் ஆயுள் விருத்திக்குச் சாதனங்கள். மோக்ஷ சாதனங்கள் மட்டுமல்ல.

* * * *

குழந்தைப் பருவம் தாண்டியபின் மனிதனைக் கொல்லும் நோய்களில் முக்கியமானது ரத்தப்பை வியாதி. ரத்த ஓட்டத்தின் வேகப்பெருக்கமும் இதை யொட்டிய வியாதி. இந்த இரண்டு நோய்களே முதியவர்களுடைய பரம சத்துருக்கள். இவை இரண்டுக்கும் காரணங்கள் அமிதபோஜனம், வரம்பு மீறிய உழைப்பு, கவலை, ஓய்வு ஒழிச்சல் இல்லாமல் வேலைசெய்வது, புகையிலை வழக்கம், மதுபானம் இவை. அக்கிரம வாழ்க்கையில் சம்பாதித்துக் கொள்ளும் வியாதிகள் ரத்தப்பைக் கோளாறுகளையும் உண்டாக்கிவிடும். இவையும் தவிர, பல், தொண்டை இவற்றின் கோளாறுகள் இதய நோய்களை உண்டாக்குவதும் உண்டு.

ரத்தவேகப் பெருக்கத்திற்கும் ரத்தப்பை வியாதிக்கும் மருந்து இல்லை. நோயின் வேகத்தை அறிந்து அதற்குத் தகுந்தாப்போல் நடந்துகொண்டு சமாளிப்பதே வழி. மலேரியாக்காய்ச்சல், நியூமோனியா என்கிற நுரையீரல் வேக்காடு, முதலிய வியாதிகளைத்தீர்க்க மருந்துகள் கொடுப்பதுபோல் இதயநோய்களைத் தீர்த்துவிடும்படியான மருந்துகள் இல்லை. வியாதியஸ்தன் தன் வாழ்க்கையை மாற்றிக்கொண்டு நோயை மறக்கவேண்டும். எல்லாவற்றையும் மிதமாக்கிக்கொள்ளவேண்டும். சாப்பாடு, வேலை, விஹாரம், கவலை, கோபம், சந்தோஷம், அனைத்தையும் கிலுப்பதமான அளவுக்குள் நிறுத்தவேண்டும். பாரம் தூக்கக் கூடாது. பெஞ்சு நாற்காலி எடுத்து வைக்கிறேன் என்று சாகசம் செய்யக்கூடாது. அவசரப்படக்கூடாது. கூச்சல் போடக்கூடாது. கோபிக்கக்கூடாது. மனம், வாக்கு, காயம் மூன்றையும் வரம்புக்கு மேல் போகாமல் கவனித்துக்கொள்ள வேண்டும். ரத்தப்பை வியாதியுள்ளவர்களுக்கு ஒரு மூட்டையைத் தூக்கினால் எவ்வளவு அபாயமோ, அவ்வளவு ஒரு வாய்ச்சண்டை

அல்லது ஒரு கோபாவேசத்திலும் உண்டு. எந்தவிதமான ஆவேசமும் கூடாது. இதயத்தில் அல்லது ரத்த வேகத்தில் வியாதி கண்டவர்களுக்கு வேதாந்தமே மருந்து. கர்மயோக முறையே பத்தியம்.

ஆயாசமாக இருந்தாலும் சரி, களைப்புத் தோன்றாமலிருந்தாலும் சரி, நியமப்படி ஓய்வு எடுத்துக் கொள்ளவேண்டும். உணவு விஷயத்தில் கண்டிப்பாக அளவுக்குள் இருக்கவேண்டும். மதுசம்பந்தமும் புகையிலைச் சம்பந்தமான வழக்கங்களையும் தள்ளிவிடவேண்டும். சிறு சந்தோஷங்களுக்காக ஆயுள் ஏன் குறைத்துக்கொள்ளவேண்டும்? எது எவ்வாறாயினும் கோபத்தை கிட்ட அண்டாமல் பார்த்துக்கொள்ள வேண்டும்.

அளவு என்பது ஆளுக்கு ஆள் பேதப்படும். ஒருவனுக்குச் சரியாக இருப்பது மற்றவனுக்குச் சரியாக இராது. அவனவன் தன்னுடைய வரம்பை கண்டுகொள்ளவேண்டும்.

தூக்கமும் விளையாட்டும் அவசியம்வேண்டும். விளையாட்டு என்றால் சில விளையாட்டுகள் வேலையும் கவலையுமாக இருக்கும். அவற்றில் பயன் இல்லை. தினசரி வேலையை விட்டு வேறு வழியில் மனம் செல்லும்படியாகவும், சந்தோஷம் தருவதாகவும் இருக்கவேண்டும். இருக்கிற கவலைகள் போதாமல் நடக்காத கதைகளைப் படித்து, திருடினவன் யார், கொலையாளி யார் என்று கவலையும் கனவும் உண்டாக்கும் கதைகளினால் இதய நோய்க்காரர்களுக்கு பயன் ஒன்றுமில்லை. ஆவேசமும் திகிலும் ஒதுக்கவேண்டும் என்றிருக்க, சினிமாவுக்குச்சென்று உண்மையில் நிகழாத திகிலும் கோபமும் ஆவேசங்களையும் பார்த்து அமைதியைக் கெடுத்துக்கொள்ள வேண்டியதில்லை.

தூக்கம் சிலருக்கு 7 மணியே போதும், சிலருக்கு 10 மணியும் வேண்டும். எவ்வளவு நேரம் தூங்கினால் தன்னுடைய உடம்பும் மூளையும் ஓய்வு பெற்று மறுநாள் செய்ய வேண்டிய வேலைக்கும் நடக்கக் கூடிய சந்தர்ப்பங்களுக்கும் சிரமமின்றி தயாராக இருக்கமுடியும் என்பதை தன் அனுபவத்திலிருந்து தெரிந்துகொண்டு அந்தப்படி வயது முதிர்ந்தவர்கள் தூங்கவேண்டும். யாரோ அதிகமாகத் தூங்குகிறார்களாம் என்று கேள்விப்பட்டு நாமும் அப்படிச் செய்யலாமே என்று படுக்கையில் தூக்கம் இல்லாமல் புரள வேண்டியதில்லை. யாரோ குறைச்சலாகத் தூங்கி விடியற்காலம் எழுந்து பச்சைத்தண்ணீரில் குளித்துவிட்டு எல்லா வேலைகளையும் சரியாகச் செய்து வருகிறார் என்று கேள்விப்பட்டு நாமும் அவ்வாறு பரிட்சைசெய்து பார்க்கலாம் என்று ஆரம்பித்து உடம்பை கெடுத்துக்கொள்ளக்கூடாது.


இதய நோய் கண்டவர்கள், மலச்சிக்கல் என்று அடிக்கடி பேதிக்கு சாப்பிடக்கூடாது. எனிமாக்குழாய் உபயோகப்படுத்தி தண்ணீர் ஏற்றிக் கழுவிவிடுவதே நல்லது. மலங் கழிக்கச் சிரமப்பட்டு ஆயாசம் உண்டாக்கிக் கொள்ளக் கூடாது. இதயக் கோளாறுக்கு எவ்வித சிரமமும் கெடுதல் உண்டாக்கும்.

யௌவனமும் தேக பலமும் இருந்த காலத்தில் செய்ததை வயதானவர்கள் செய்யப் பார்ப்பது அபாயம். 'கொஞ்ச நாட்களுக்கு முன் நானும் வேகமாக படி ஏறினேன், வாய்க்கால் தாண்டினேன்,' என்று வயதானபின் சாகசம் செய்யக்கூடாது. விருத்தாப்பியம் என்பது யாரோ சொல்லும் கணக்கு அல்ல. உடலிலுள்ள எல்லா தசைகளும் ஆயுள் மர்மஸ்தானங்களும் விருத்தாப்பியம் அடைந்திருக்கின்றன என்பதை உணரவேண்டும். சாதாரணமாய் அவசியமான காரியங்களுக்காக நடமாடுவதே வயோதிகர்களுக்கு போதியது ஆகும். யௌவனத்தில் செய்யாத தேகப் பயிற்சியை யெல்லாம் இப்போது செய்து ஆரோக்கியம் அடையலாம்

என்று சில வயோதிகர்கள் ஆரம்பிப்பது பைத்தியக்காரத்தனம்.

முக்கியமாக மனத்தை விருத்தாப்பியத்துக்குத் தகுந்த பண்பாட்டில் நிறுத்தவேண்டும். நகைச்சுவையே ஆயுளைத்தரும் சஞ்சீவினி. அதன் துணையுடன் விருத்தாப்பிய தெசையையும் அழகோடு முடிக்கலாம். யமனைத் தோழனாக எதிர்கொள்ளச் செய்வது மன அமைதியும் நகைச்சுவையும்; இதைக் கண்டால் அவனும் தூர நிற்பான்.

'மிதமான உணவு, மிதமான விஹாரம், அளவுக்கு அடங்கின தூக்கம், அளவுமீறாத தேகசிரமம்' என்று கண்ணன் உபதேசித்தது தியானயோகத்துக்கு. ஆயுள் விருத்திக்கும் ஆரோக்கிய வாழ்க்கைக்கும் அதுவே உபதேசம். நீண்ட ஆயுளும், அழகிய முதுமையும் ஒரு தேகாப்பியாசமே அதும். "மிகைபட உண்போனுக்கு யோகம் இல்லை, முற்றிலும் உபவாசம் இருக்கிறவனுக்கும் இல்லை, அதிகம் உறங்கும் மந்தனுக்கும் இல்லை, இரவு முழுதும் ஜாகரணை செய்பவனுக்கும் இல்லை" என்றான் பகவான். யோகம் என்பது உள்ளத்தின் ஆரோக்கியம். அதற்கு உடம்பையும் சரியாக கவனிக்கவேண்டும்" என்று பகவத்கீதையுபதேசம். அவ்வாறே தேகத்தின் ஆரோக்யத்திற்கும் யோகநிலை வேண்டும். "மனதில் அமைதி இருந்தால் உடல் ஆரோக்கியமும் நீண்ட ஆயுளும் பெறலாம்" என்பது வைத்திய சாஸ்திரம்.



# சித்திர விளக்கம்

வை.மு.கோ.

## மேலட்டைப் படம்

*ஊட்டுகின்றார்.*

"கதை சொல்லும் கலையில் ஈடுபடுவதே தன் சிறப்பியல்பாகக் கொண்டு தொண்டுபுரிந்துவரும் மோகினி, நாரதரின் கலகப்பிரியத்தை வெளியிடவும் முனைந்துவிட்டதோ?" என்று பிரமிப்பு அடைகிறீர்களோ? மேலட்டைப் படத்தைக் கண்டதுமே, "யாரிடம் தனது தொழிலை ஆரம்பித்துவிட்டார் நாரதர்? ருக்மிணியா, சத்தியபாமாவா அவர் வித்தையில் மயங்கியிருப்பது?" என்ற சம்சயம் எழுகிறதா உங்கள் உள்ளத்தில்?

விஷயம் வேறு! நாரதர் கலகப்பிரியர்மட்டுமல்ல; கானலோலரும் விஷ்ணு பக்தரும்கூட. உலகநாதனின் உயரிய சரிதையைக் கானப்பிரவாகமாகப் பொழிந்துகொண்டிருக்கிறார், ஹிரண்யனின் காதலியின் முன்பு. பகவந்நாம சங்கீர்த்தனம் மட்டுமா செய்கிறார்! அவள் கருவினிலே திரு உருப்பெற்று வளரும் சிசுவுக்கு நாராயண நாமத்தை உபதேசிக்கிறார், பக்தியை ஊட்டுகிறார். சிசுவுக்கு உபதேசம் செய்யும் விசித்திரத்தைக் காணுங்கள்.

நமது சித்திர நிபுணரின் மிகப் பெரிய வெற்றியாகிய இந்த உயிரோவியத்தைக் கண்ணுற்ற கவி நைத்ரபர், அதன் எழிலுக்குக் காணிக்கையாக ஒரு கவிமலரை அர்ச்சித்தார். * *

நாரதர் அந்தத் தெய்விகக் குழந்தையின் மனத்தைக் குதூகலிக்கச் செய்ததைப் பொருளாகக் கொண்டு மோகினி உங்களைக் குதூகலிக்கச் செய்கிறாள், கலாஸேவகர்களின் ஒத்துழைப்பினால்.

## முகப்புப் படம் (ப. 9)

*ஆசீர்வதிக்கின்றார்.*

ஜோதிமயமான அந்தத் திருமுக மண்டலத்திலே ஜ்வலிக்கும் தேஜஸ்ஸும், அருள்வடிவான அந்த அபயஹஸ்தத்தின் அமைப்பில் ஆழ்ந்து விளங்கும் ஆசீர்வாதமும் எதைக் குறிக்கின்றன? கருணைக் கடலான அந்த அகிலலோகநாதனின் உள்ளத்தில் எழும் அன்பு மொழிகளைச் சிந்தித்துப் பாருங்கள்:

"செல்வா! மனிதவர்க்கத்தில் மகாத்மா என்று மகுடமிடப்பட்ட ஆண்டி நீ ஒருவனாவது கலியுகத்தின் இந்த பாதத்தில் உத்தமனாக விளங்குகிறாயே, அதுவே எனக்கு மட்டற்ற மகிழ்ச்சியை அளிக்கின்றது. உலகத்தின் ஒவ்வொரு மூலை முடுக்கினின்றும் உனக்குச்சாற்றப்படும் புகழ்மாலைகள், உன்னைவிட என்னையே பரவசப்படுத்துகின்றன. அன்று தோன்றிய யதிராஜனின் பிம்பமாகவே இன்று நீ தோன்றி, தற்காலப் பிரபஞ்ச நாடகத்தின் கதாநாயகனாக விளங்குவதனால் தான், உலக இருள் நடுவிலும் ஜோதி தென்படுகிறது. தேவதூஷணையும், நாஸ்திகத் திமிரும், அமானுஷ்ய யுத்தங்களும், அசுரசக்திகளும், அக்ருத்ய அந்யாயங்களும் தலைவிரித்தாடும் இக்காலத்தில் நீ ஒருவனாவது கீதையின் மகிமையையுணர்ந்து அதை அனுஷ்டித்து அதன் புகழ் பாடிவருகிறாயே, நீயே உண்மையான வைஷ்ணவன். உன்னாலன்றோ மனிதவர்க்கம் உயர்ப்பதவியை அடையவேண்டும். கர்மயோகியாகிய உன் ஹிருதய கமலத்தில் ஸதா ஒலித்துக்கொண்டிருக்கும் ஜீவநாதம் என் செவிகளில் மதுர ப்ரவாகத்தைப் பாயச்செய்கிறது. உன்னைவிட்டுப் பிரிய மனங்கலங்கிய ஸதீமணி உன் ஹிருதய கமலவாஸினியாக விளங்குவதைக் கண்டு பூரிக்கிறேன். லக்ஷ்மி என்னைவிட்டு ஒரு க்ஷணமாவது பிரிந்திருக்கிறாளா, உன்னைவிட்டு உன் கஸ்தூரி அகல்வதற்கு? வேதமுள்ளளவும் உங்களிருவரின் புகழ் வேரூன்றி நிற்கட்டும்!"

★ ★ ஆரணம் சொல் பூரணன்தன்-கதை அரக்கனது காதலிக்கே
நாரணன்பால் அன்புகொண்ட-அந்த நாரதனே புகன்றுவந்தான்
கதைசொல்லி விதையிட்டான்-முற்றாக் கருவுருவில் குழந்தைமனம்
குதுகலிக்கச் செய்துவிட்டான்-அன்பின் புதுமலரை ஒளிரவைத்தான்.

# ஒரு பாட்டினால் வந்த உபத்திரவம்

ராவ்பகதூர் ப. சம்பந்த முதலியார்

சில வருடங்களுக்கு முன்பு, எனக்கு ஒரு நாள், வடக்கேயிருந்த ஒரு நண்பரிடமிருந்து ஒரு கடிதம் வந்தது; அதில் மறுநாட் காலை, சென்னைக்கு பரோடா சமஸ்தானத்து சங்கீத வித்வான் ஒருவர் வரப்போகிறதாகவும், அவர் வடக்கேயுள்ள இந்துஸ்தானி சங்கீதத்தில் மிகவும் பெயர் பெற்றவர் என்றும், தனக்கு மிகவும் ஆப்த நண்பரென்றும், அவர் ராமேச்வர யாத்திரைக்குப் போகும் வழியில் சென்னையில் ஒருநாள் தங்கப்போவதாகவும் மறுநாட்காலையில் அவரை ரெயில் ஸ்டேஷனில் சந்தித்து, வரவேற்று, என் வீட்டிற்கழைத்துக் கொண்டுபோய் உபசரித்து, அவர் கர்நாடக சங்கீதத்தைக் கேட்க மிகவும் ஆசைக்கொண்டிருப்பதால் அந்த தினத்திற்குள் எவ்வளவு நல்ல கர்நாடக சங்கீதம் கேட்க முடியுமோ, அவ்வளவும் கேட்கச் செய்யவேண்டியது என் கடமை என்றும் எழுதியிருந்தது.

அவர் பெயர் வினாயகராவ் பான்ஸ்லே. அவர் இந்துஸ்தானி கவாய்களில் மிகச் சிறந்தவர் என்று நான் முன்பே கேள்விப்பட்டிருந்தேன். ஆகவே அவரை நேரில் பார்க்கும்படியான சந்தர்ப்பம் நேரிட்டதே என்று மிகவும் சந்தோஷப்பட்டேன். அன்றியும் இந்துஸ்தானி சங்கீதத்தைவிட, கர்நாடக சங்கீதம் மிகவும் உயர்ந்தது என்று எனக்கு அந்தரங்கத்தில் ஒரு அபிப்பிராயம் நெடுநாளாக உண்டு. ஆகவே இந்த வடக்கத்திய சங்கீத வித்வானுக்கு நம்முடைய சங்கீதத்தின் பெருமையை எடுத்துக் காட்டவேண்டும் எனும் எண்ணம் உதித்தது. ஆகவே மிகவும் மனக்கிளர்ச்சியுடன் மறுநாட் காலையில், அவரை சென்னை ரெயில் ஸ்டேஷனுக்குப்போய் வரவேற்று, மாலை மரியாதையுடன் உபசரித்து, என் காரில் அவரை ஏற்றிக்கொண்டு என் வீட்டிற்குத் திரும்பினேன்; அன்றை தினம் பம்பாய் ரெயில் சென்னைக்கு வருவதற்கு இரண்டு மணி நேரம் காலதாமதமாயது.

நாங்கள் என் வீட்டிற்குப்போய் சேருவதற்காக வாதாமுத்தையப்பன் தெருவில் வந்துகொண்டிருக்கும் பொழுது, என் மோட்டார் வண்டிக்காரன் வண்டியை திடீரென்று நிறுத்தினான்; என்னவென்று வெளியில் தலை நீட்டிப் பார்த்தபொழுது, எதிரில் ஒரு பெரிய ஜனக்கூட்டம் வந்துகொண்டிருந்தது, திரும்பி வேறு வழியாகப் போகலாமா இல்லையா என்று நான் தீர்மானிப்பதற்கு முன்பாக, அந்த ஜனக்கூட்டத்தின் மத்தியில் எங்கள் கார் அகப்பட்டுக்கொண்டது. சரி இக்கூட்டம் போனபிறகுதான் வீடு போய்ச் சேரவேண்டுமென்று என் புதிய நண்பருக்குத் தெரிவித்தேன். உடனே அக் கூட்டத்தின் மத்தியினின்றும் மதுரமான சங்கீதம் உண்டாயிற்று. அக் கூட்டம், ஒரு செட்டியார் வீட்டுப் பிள்ளையை பள்ளிக்கூடத்தில் வைப்பதற்காக ஊர்வலம் வரும் ஊர்கோலமாயிருந்தது; அவர் சென்னையில் மிகவும் பிரபல நாதஸ்வரக்காரனாகிய மதுரைமுத்து என்பவனை ஏற்படுத்தியிருந்தார், அவன் அச்சமயம் பிலஹரி ராகத்தில் ஒரு பாட்டை

மிகவும் அழகாக வாசித்துக்கொண்டிருந்தான்; அதைக் கேட்டவுடன் எனது புதிய நண்பர் முகமலர்ந்து, வெகு சந்தோஷத்துடன் அப்பாட்டைக் கேட்டு, "நாம் வீட்டிற்கு சீக்கிரம் போகாதபடி இக்கூட்டம் நம்மைத் தடுத்ததற்காக நான் வருத்தப்படவில்லை, அகஸ்மாத்தாய் இப்படிப்பட்ட நல்ல கர்நாடக சங்கீதம் கேட்கும்படியாக எனக்கு பாக்கியம் தெய்வாதீனமாகக் கிடைத்ததே" என்று சந்தோஷப்பட்டுக்கொண்டிருந்தார்.

உடனே அந்த நாதஸ்வரக்காரன், அப்பாட்டை நிறுத்திவிட்டு, வேறொரு பாட்டை ஆரம்பித்தான். அந்தப் பாட்டு, ஒரு சினிமா பாட்டு; அது சென்னையில் சினிமாவுக்குப் போகிறவர்களால் மிகவும் கொண்டாடப்பட்டு, பட்டணம் முழுவதும் மிகவும் பிரசித்தமாயிருந்தது. அது "சல் சல் ஜவான்!" என்னும் முதல் பதங்களையுடைய ஒரு இந்துஸ்தானி பாட்டு. அந்தப் பாட்டை மதுரைமுத்து வாசிக்க ஆரம்பித்தவுடன், எனது நண்பர் முகம்கோணினார். அவன் அப்பாட்டை வாசிக்க வாசிக்க, அவரது முகம் கோணுதல் அதிகமடைந்தது; இதற்கு என்ன காரணம் என்று அவரை மெல்ல வினவ, அவர் அடியில் வருமாறு பதில் உரைத்தார்.

"இந்தப் பாட்டை நான் கேட்கப் பிரியப்படவில்லை; அதற்குப் பல காரணங்கள் உண்டு. இது சர்தாரணமாக வடக்கே நாடகத்தில் பாடும்படியான மெட்டு உடையது. இப்படிப்பட்ட பாட்டுகளை வடக்கத்திய கவாய்கள் கச்சேரிகளில் பாடமாட்டார்கள். தங்கள் அந்தஸ்திற்கு குறைவென்று மதிப்பார்கள். அன்றியும் வடக்கில் பாடுபவர்களே இதை ஒரே ராகத்தில் பாடாமல் பல ராகங்களைக் கலந்து பாடுகிறார்கள்; தாளக்கட்டிலும் அப்படியே. சாஹித்தியமும் சிறந்ததல்ல. அப்படியிருக்க இந்த வாத்தியக்காரன் அப்பாட்டை வாசிப்பதில் ராகசுத்தமுமில்லை, தாளசுத்தமுமில்லை, சாஹித்தியத்தையும் கொலைசெய்து வாசிக்கிறான். நாம் சீக்கிரம் தங்கள் வீடுபோய்ச் சேரும் வழியை தயவு செய்துபாருங்கள்" என்றார். அதன் பேரில், என் வண்டிக்காரனிடம் சொல்லி, எப்படியாவது வண்டியைத் திருப்பிக்கொண்டு, பக்கத்து வீதி வழியாக வீடுபோய்ச் சேரும்படி கட்டளையிட, அவன் ஜன நெருக்கத்தில் கஷ்டப்பட்டு அப்படியே செய்தான். அப்படிச் செய்தபொழுது அந்த "சல் சல் ஜவான்" சங்கீதம் காதில் விழாத தூரம் வரையில், எனது நண்பருடைய முகம் வாட்டம் நீங்கவில்லை.

என் வீடுபோய்ச் சேர்ந்தவுடன் என் அதிதியை, மேற்தட்டிற்கு



அழைத்துக்கொண்டுபோய், அவரது காலைக்கடன்களையெல்லாம் முடிக்கச் செய்து, அவருக்கு வடக்கே கிடைக்காத இட்லியையும் காப்பியையும் கொடுக்க, அவர் அதை மிகவும் சந்தோஷத்துடன் புசித்துக்கொண்டிருந்தார். அப்பொழுது மணி ஏறக்குறைய ஒன்பதாயிற்று. உடனே கீழிருந்து ஹார்மோனியம் பெட்டி வாசிக்கும் சப்தம் கேட்டது. உடனே அவர், "இதென்ன வாத்தியம்?" என்று கேட்க நான் எனது இரண்டு பேத்திமார்களுக்கு, பாட்டு வாத்தியார் பாட்டுக் கற்பிக்கிறார்' என்று கூற, அவர் "மிகவும் சந்தோஷம்; ஆயினும், இந்த ஆர்மோனியம் பெட்டி சுருதியை வைத்துக் கொள்வதைவிட்டு, நம்முடைய

தேசத்து சுருதியாகிய தம்புராவை வைத்துக்கொண்டால், நல்லதல்லவா?'' என்று தெரிவித்தார். கொஞ்ச நேரத்துக்கெல்லாம் என் பேத்திகளாகிய கற்பகமும், லட்சுமியும், சரளி வரிசையை முடித்து ஒரு கீதமும் வர்ணமும் பாடக் கேட்டவராய் அவர் அவர்கள் குரலை மெச்சிக்கொண்டிருக்கும் பொழுதே, உடனே என் பேத்திமார்களுக்கு அவர்கள் பாட்டு உபாத்தியாயர் 'சல் சல் ஜவான்'; என்னும் பாட்டைக் கற்பிக்க ஆரம்பித்தார். உடனே எனது புதிய நண்பர் முகம் கோணியது ஒருபுற மிருக்கட்டும், எனக்கு மிகவும் கோபம் பிறக்க, நான் உடனே கீழேபோய், பாட்டு உபாத்தியாயரை "இந்தப் பாட்டை இவர்களுக்கு உங்களை யார் கற்பிக்கச்சொன்னது?" என்று கேட்க, அவர் "பட்டணம் எல்லாம், எல்லோரும் பாடுகிறார்களே, ஆகவே குழந்தைகளுக்கும் அப்பாட்டைக் கற்பிக்க வேண்டுமென்று அம்மா சொன்னர்கள்;" என்று பதில் உரைத்தார். "ஆயினும் அது வேண்டாம்;வேறு ஏதாவது கற்பியுங்கள்" என்று சொல்லிவிட்டு, மேலேவந்து, எனது நண்பரிடம் நடந்த செய்தியைச் சொன்னேன். அப்போது அவர் "உங்கள் பாட்டு வாத்தியாருக்கு இந்துஸ்தானி பாஷை தெரியுமா?" என்று கேட்டதற்கு "அவருக்குத் தெரியாது" என்று நான் பதில் சொல்ல, அவர் "ஆனல் இனிமேல் அவர் குழந்தைகளுக்கு ஏதாவது தெரியாத பாஷையில் பாட்டைக் கற்பிப்பதானல் அப்பதங்களை எப்படி உச்சரிப்பதென்றும், அவைகளின் அர்த்தமென்னவென்றும் கற்றுக்கொண்டே, பிறகு சொல்லிக் கொடுக்கும்படிச் செய்யுங்கள் தயவுசெய்து" என்று கூறினர். நானும் அவர் கூறியது சரியென்று ஒப்புக்கொண்டேன்.

பிறகு, அவரிடம் என் மேஜையின் மீதிருந்த இரண்டொரு ஆங்கில வர்த்தமானப் பத்திரிகைகளைக் கொடுத்து படித்துக்கொண்டிருக்கும்படிச் சொல்லிவிட்டு, நான் எங்கள் எதிர் வீட்டுக்கு ஏதோ வேலையாய் போய் திரும்பி வந்தேன். அச்சமயம் என் வாயிற்படிக்கெதிரில் ஒரு ஏழைப் பண்டாரம் ஒத்தைத்தந்திசுரைக் குடுக்கையைக் கையில் வைத்துக்கொண்டு, ராமலிங்க சுவாமிகள் பாடிய ஒரு பாட்டைப் பாட ஆரம்பித்தான்; நான் மெத்தைக்குப்போக, எனது நண்பர் அந்தப் பிச்சைக்காரன் பாட்டையும், ராக சுத்தத்தையும் மெச்சி அவனுக்கு ஏதோ கொடுக்கப்போனர். நான் அதைத்தடுத்து 'அவனுக்குத் கொடுக்கவேண்டியது என் கடமை' என்று சொல்லி, அப்பிச்சைக்காரனுக்கு ஒரு அணா கொடுத்தேன். அவன் மிகவும் சந்தோஷப்பட்டவ




னய் இன்னொரு பாட்டைப் பாட ஆரம்பித்தான். அந்த பாட்டு என்னவென்று நினைக்கிறீர்கள்? சல்சல் ஜவான்! அந்தப்பாட்டைப் பாட ஆரம்பித்தவுடன் எனக்கு கோபத்தால் சிரிப்புவர, எனது நண்பரும் நகைத்துவிட்டார். இதைக் கண்ட அப்பிச்சைக்காரன், தான் பாடும் பாட்டை நாங்கள் மெச்சுவதாக எண்ணி அப்பாட்டை இன்னும் உரக்கப் பாட ஆரம்பித்தான். உடனே நான் அவனைத் தடுத்து 'அப்பா அந்தப் பாட்டைப் பாடாமலிருப்பதற்காக உனக்கு 2 அணா கொடுக்கிறேன்' என்று சொல்லி அப்படியே செய்து அவனை வந்த வழி அனுப்பிவிட்டேன்.

சுலபத்தில் இக்கஷ்டத்தினின்று நீங்கினேமே என்று சந்தோஷப்

பட்டு, என் அதிதியை ஸ்நானம் செய்யச்சொல்லி பிறகு இருவருமாக போஜனம் கொண்டபின், மறுபடியும் மேல்மாடத்துக்குப்போய் இளைப்பாறச் செய்தேன். அங்கிருந்த என் ரேடியோ செட்டைக் கண்டவுடன், எனது புதிய நண்பர் முகமலர்ந்து 'உங்களுக்கு சங்கீதத்தில் இவ்வளவு பிரியம் இருக்கிறதென்று எனக்கு இதைப் பார்த்த பிறகுதான் தெரிந்தது' என்றுகூறி, அந்த ரேடியோவை முடுக்கும்படிக் கேட்டார். இத்றகுள்ளாக ஒரு மணி ஆக அச்சமயம் திருச்சிராப்பள்ளியில் நல்ல சங்கீதம் கிடைக்குமென்று எண்ணினவனாய் திருச்சி ரேடியோவுக்கு என் ரேடியோ பெட்டியை முடுக்கினேன். அன்றைதினம் 'கதம்பம்' என்றிருந்தது. அரைமணி சாவகாசம், கே. பி. சுந்தராம்பாள் பாட்டு. எஸ். ஜி. கிட்டப்பா பாட்டு முதலிய பாட்டுகளைக் கேட்டு என் நண்பர் மிகவும் ஆனந்தித்தார்; "இப்படிப்பட்ட பாடகர்களுடைய பாடல்கள் கர்நாடகத்திலிருக்கும்பொழுது, வடக்கத்திய நாடகப்பாட்டு..." என்று சொல்லி ஆரம்பித்தாரோ இல்லையோ, திருச்சிராப்பள்ளி ரேடியோவிலிருந்து "சல் சல் ஜவான்" பாட்டு ஆரம்பித்தது! அதன்பேரில் என் அதிதி ஒன்றும் கூருததற்குமுன்பே, ரேடியோ பெட்டியின் விசையை மூடி பாட்டை நிறுத்தினேன். அவர் அதைக் கண்டு முதலில் புன்னகை செய்து, பிறகு பெருமூச்சுவிட்டார்.

அதன்பிறகு "ரெயில் பிரயாணம் செய்த சிரமம் நீங்க, கொஞ்சம் சயனித்துக் கொள்ளுங்கள்" என்று கூறி, அப்படியே அவரைப் படுக்கச் செய்து, சாயங்காலம் நான்கு மணிக்கு எழுப்பினேன். பிறகு தேனீர் சாப்பிட்டுவிட்டு, ஓர் பிரபல சங்கீத சபையின் கச்சேரிக்கு 5 மணிக்கு அழைத்துச் சென்றேன்.

அச்சபையின் காரியதரிசிக்கு எனது புதிய நண்பர் இன்னாரெனத் தெரியப்படுத்தியவுடன் எங்களை, பாடிக்கொண்டிருந்த பிரபல சங்கீத வித்வான் அருகில் அழைத்துக் கொண்டுபோய் உட்காரவைத்தார். அச்சமயம் உள்ளூர் வித்வான் 'மோகனா' ராகத்தில் ஒரு பாட்டை பாடிக்கொண்டிருந்தார் வெகு அழகாக. எனது புதிய நண்பர், அவர் பாடியதை மிகவும் மெச்சி, இந்த ராகத்திற்கு கர்னாடகத்தில் என்ன பெயர் என்றுகேட்க, நான் மோகனா என்று பதில் உரைத்தேன், "இந்த ராகம் அழகியது, எங்கள் தேசத்தில் இதற்கு பூபாளி என்று பெயர்", என்று கூறினார். உள்ளூர் வித்வான் பேசிக்கொண்டிருந்ததைப் பற்றி வினவ, நான் அதைத் தெரிவித்து 'என் புதிய நண்பர் நீங்கள் பாடியதை மிகவும் மெச்சினார்' என்று சொல்லி, அவர் இன்னாரென்றும் தெரிவித்தேன். அதை நான் சொல்லியதுதான் தாமதம், உடனே உள்




ளூர் வித்வான், வடக்கிலிருந்து வந்தவரைக்கௌரவப்படுத்துவதாகவோ அல்லது தனக்கும் இந்துஸ்தானி சங்கீதம் தெரியும் என்று அவருக்கு அறியப்படுத்தவோ, உடனே 'சல் சல் ஜவான்' பாட்டைப் பாட ஆரம்பித்தார். உடனே என் புதிய நண்பர் முகம் மாறியதை பார்த்திருக்க வேண்டும்! வந்திருந்தவர்களில் யாராவதி படம்பிடிக்கக் கற்றுக் கொண்டவர்களாயிருந்தால் உடனே, அவர் முகத்தை படம்பிடித்திருப்பார்கள். எனது புதிய நண்பர், நாடகமேடையில் நடித்திருப்பவரோ அல்லவோ. எனக்குத் தெரியாது. ஆயினும் உடனே தன் கோணிய முகத்தை மாற்றிக் கொண்டு புன்னகைகொண்டவராய் ஏதோ தன் கடியாரத்தைப் பார்ப்பதுபோல் பார்த்து "முதலியார்சார்! நாம் வேறொரு இடத்திற்குப் போக

நிச்சயித்திருப்பதை ஞாபகப்படுத்துகிறேன்'' என்றார். "அதைக் கேட்டதும் அவரது குறிப்பறிந்தவனாய், " ஆம் ; ஆம். நேரமாகிவிட்டது '' என்று சொல்லி அவசரமாய், உள்ளூர் சங்கீதவித்வானிடமிருந்துவிடை பெற்றுக் கொண்டு நாங்களிருவரும் கச்சேரிசாலையின்றும் வெளிக் கிளம்பினோம்.

இதை வாசிக்கும் நண்பர்கள் என்னை நம்பினாலும் நம்பட்டும் ; இல்லாவிட்டாலும் வேண்டாம், நாங்கள் இருவரும் என் காரில் ஏறி உட்கார்ந்ததும், எங்களிருவருக்கும் அடக்கக்கூடாதபடி சிரிப்பு வந்தது. பிறகு அங்கிருந்த எனது நண்பரை கடற்கரை ஓரம் அழைத்துச் சென்று, அவர் மனதைக் கொஞ்சம் குளிரச் செய்யலாமென்று எண்ணினவனாய், எனது (chaffeur) ஷாபரை மெரினாப்பக்கம் ஓட்டச் சொன்னேன். போகும்பொழுது, வழியில் விக்டோரியா பப்ளிக் ஹாலைக் கடந்து செல்லவேண்டி வந்தது. அக்கட்டடத்தைப் பார்த்து எனது புதிய நண்பர் இது என்னவென்று கேட்க, இது விக்டோரியா பப்ளிக் ஹால் என்று பதில் சொன்னேன். அச் சமயம் உள்ளே ஒரே வெளிச்சமாயிருக்க அங்கு என்ன நடக்கிறதென்று கேட்ட கேள்விக்கு, அச்சமயம் ஒரு வாலிப சபையார் என்து நாடகம் ஒன்றை அன்று நடித்துக் கொண்டிருப்பது எனக்கு ஞாபகம் வர, அதை அவருக்குத் தெரிவித்தேன். உடனே அவர் அதைத் தான் பார்க்கவேண்டுமென்று விருப்பமிருப்பதாகச் சொல்ல, அவரை அழைத்துக்கொண்டு, டவுன் ஹாலின் மெத்தைக்குப் போனேன். அந்த வாலிப சங்கத்தார் எங்களை மிகவும் சந்தோஷமாய் வரவேற்று முன்னால் உட்கார வைத்தார்கள். அப்பொழுது சுமார் 7½-மணி இருக்கும் அரைமணி சாவகாசம் அவர் நாடகத்தைப் பார்த்துக்கொண்டிருந்து நாடகக்கதையின் போக்கைப் பற்றி ஏதோ புகழ்ந்து பேசினார், பாஷை தெரியாமலிருந்த போதிலும் கதையின் நடிப்பைக்கொண்டு அவர் கிரஹித்துக் கொண்டார்போலும். பிறகு ஒரு காட்சியில் கதா நாயகன் கதா நாயகியை ஒரு மலர்ச்சோலையில் சந்தித்து இருவரும் நிலவை வியந்து பேசிக்கொண்டிருக்கும் பொழுது, கதா நாயகன் தனது காதலியை " இச்சமயம், என் செவிகள் இன்பமடையும்படி உன் இனிய குரலினால் ஏதாவது பாடு'' என்று வேண்டுகிறான் ; உடனே கதாநாயகி சல் சல்—என்று பாட ஆரம்பித்தாள். அப்பாட்டின் மூன்றாவது பதம் அந்த நடிகயின் வாயினின்றும் வருமுன் தெய்வாதீனமாய் 8-மணி அடிக்கும் ஓசை கேட்டது.




உடனே இதுதான் சமயம் என்று " ஆ ஹா ! 8-மணியாகிவிட்டது தாங்கள் வீட்டுக்குப்போய் சாப்பிட்டுவிட்டு 'ரெயில் ஏறி ராமேச்வரம் போக நேரமாய்விட்டது '' என்று அவசரமாய்க் கூறி அவர் கையைப் பற்றி இழுத்துக்கொண்டு போகாதகுறையாய் வெளியில் அழைத்துக் கொண்டு வந்துவிட்டேன். நான் திடீர் என்று எழுந்திருக்கவே, கதா நாயகியாக நடித்த நடிகனும், பக்க வாத்தியக்காரர்களும், பாட்டை திடீரென்று நிறுத்திவிட்டார்கள். எனது புதிய நண்பர், அந்தப் பாட்டு ஆரம்பிக்கப்பட்டதைக் கேட்டாரோ

இல்லையோ, நான் என்ன காரணம் பற்றி அவரை திடீரென்றுவெளியே அழைத்துக்கொண்டு வந்துவிட்டேன் என்பதைத் தெரிந்துகொண்டாரோ என்னவோ, இன்றளவும் எனக்கு சந்தேகமாகத்தானிருக்கிறது.

சீக்கிரம் வீட்டிற்குப் போய் அவருக்கு போஜனம் அளித்து, பிறகு அவரை அன்றிரவு, எழும்பூர் ரெயில் ஸ்டேஷனுக்கு அழைத்துக் கொண்டுபோய் ரெயில் ஏற்றிவிட்டு வந்தபிறகுதான் அன்றிரவு தூங்கினேன். அன்று என் நித்திரையில் கூட அப்பாட்டைக் கேட்டேனோ என்னமோ நான் வாஸ்தவமாய்ச் சொல்லமுடியாது.

இரண்டு நாள் பொறுத்து எனது புதிய நண்பர் ராமேச்வரத்திலிருந்து எனக்கு எழுதிய கடிதத்தில் நான் பட்டணத்தில் தன்னை வரவேற்றதற்காக வந்தனம்கூறிவிட்டு, கடைசியில் கர்நாடக சங்கீதத்தைப்பற்றி சில வரிகள் எழுதியிருந்தார். அதை மாத்திரம் இதை வாசிக்கும் எனது நண்பர்களுக்குத் தெரிவிக்க விரும்புகிறேன்.


''ஒவ்வொருசங்கீத வித்வானும் தான் அறிந்த பாஷையில் பாடுவதுதான் தகுதி. இதர பாஷைப் பாட்டுகளைப் பாடவேண்டுமென்று விருப்பமிருந்தால், அப்பாஷையைக் கற்று, பாடும் பாட்டுகளின் அர்த்தத்தை அறிந்த பிறகே பாடுதல் நலமென்று தோன்றுகிறது.''




எனது புதிய நண்பர் எனக்கு தெரிவித்த இந்த உண்மையை நான் நமது நாட்டு சங்கீத வித்வான்களுக்கும் சங்கீதப் பிரியர்களுக்கும் வணக்கத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

---

பிள்ளைக் கனியமுதே - கண்ணம்மா பேசும் பொற் சித்திரமே!
அள்ளி அணைத்திடவே - என் முன்னே ஆடிவருந் தேனே ஸ்ரீபாரதி.





## கைங்கரியச் சிகரம்

ஸ்ரீ வைஷ்ணவ சமூகத்தின் சரித்திரத்தில் "கைங்கர்யச் சிகரம்" என்று வர்ணிக்கத் தகுந்த அரும்பணியைப் புரிந்த அந்த பக்த மணியின் உள்ளத்தை "தங்கமானது" என்றுமட்டும் குறிப்பிட்டால் போதுமா? பாகவத குலத்தின் தந்தையென்று பிரசித்திபெற்ற பெரிய நம்பி மிகப்பெரிய கைங்கரியத்தையே புரிந்தார் மாறனேர் நம்பிக்கு. உண்மையான ஸ்ரீ வைஷ்ணவனுக்கு உத்தம உள்ளமே முக்கியம், குலம் முக்கியமில்லை. ராஜாணத்துடன் தத்தளித்துக்கொண்டிருந்த பள்ளர் குலத்துதித்த பக்தரான மாறனேர்நம்பிக்கு பாகவத குலதிலகரான பெரியநம்பி மெய்யன்புடன் சகல கைங்கர்யங்களும் செய்து, பிறகு சரம கைங்கரியமும் செய்தார். ராமாவதாரத்தில், ஜடாயுவுக்கு பகவானே கைங்கரியம் செய்யவில்லையா? கிருஷ்ணாவதாரத்தில், தாஸிபுத்திரராகிய விதுரருக்கு தர்மர் கைங்கரியம் செய்ததை பகவான் அங்கீகரிக்கவில்லையா?

—வை. மு. ஸ்ரீ.

# ஹிந்து மதத்தின் உட்கருத்தும் வருங்கால நிலைமையும்

நம்முடைய நாடும் நம்முடைய ஜனசமுதாயமும் நம்முடைய நாகரீகமும் நம்முடைய கலைகளும் சாஸ்திரங்களும் நம்முடைய மதமும் பிரிக்கக்கூடாத முறையில் ஒன்றுபட்ட கூட்டுறவுடன் கூடிய தத்துவங்களாகும். ஆனால் சில காலமாக அவைகளுக்குள் முரண்பாடு ஏற்பட்டு கூட்டுறவு குலைந்துபோகாவிட்டாலும் குறைந்திருக்கும் சம்பவம் யாவரும் அறிந்த விஷயம். நம் மதப் பிளவுகள் நீங்கி நம் சமூக சச்சரவுகள் மறைந்து நம்முடைய நாகரீகம் ஓங்கி வளர்ந்து நாமும் சுதந்திரமும் சுயராஜ்யமும் அடைந்து நாமும் நிமிர்ந்த தலையுடன் நடந்து உலகத்தின் நன்மதிப்பை அடைந்து வாழவேண்டும் என்பது எனது அடக்கமுடியாத ஆசையாகும்.

எவ்வளவு மேன்மையாக இருந்து உலகத்திற்கே வழிகாட்டியாக ஏற்பட்டவர்கள் படிப்படியாக இறங்கி வந்து நாடிழந்து, நாகரீகம் குன்றி, அறிவும் ஒற்றுமையும் குறைந்து இகபரசுகங்கள் நீங்கி மிகவும் தாழ்ந்த நிலைக்கு வந்துவிட்டோமே என்று தீராத்துயரமாக இருக்கின்றது. கடவுள் நம்மை கைதூக்கி விடவேண்டுமென்று பயபக்தியுடன் கோருவதுடன் நாம் தற்காப்பான முயற்சிகளில் ஈடுபடவேணும். அகதிக்குத் தெய்வமே துணை என்பது உண்மையே. ஆனால் உழைப்புள்ளவனுக்குத்தான் தெய்வம் துணையாகும் (God helps those who help themselves) என்பதும் உண்மை. 'நாமே நமக்குத் தோழன் நாமே நமக்குப் பகைவன்' என்று கண்ணன் உபதேசம். நம்முடைய நாட்டில் முகம்மதிய மதம் கிறிஸ்தவ மதம் போன்ற ஒற்றுமையும் ஆற்றலும் உள்ள உலக மதங்கள் (World Religons) உட்புகுந்துள்ள காலம் தற்காலம். நாம் இக்காலத்தில்கூட சிறு பிளவுகளையும் உட்பகைகளையும் முக்கியமாகக் கருதினால் அது தற்கொலையாகத்தான் முடியும்.

"உள்ளேஓட்டைகளும் வெளியில் முட்களும் உள்ள தாமரைத் தண்டின் நூல்கள் ஏன் ஒடிந்துபோகாமல் இருக்கும்?"

நம்முடைய பள்ளிக்கூடங்களில் ஹிந்து மதப் பொதுக் கொள்கைகளை ஹிந்து வாலிபர்களுக்கு நாம் அறிவிப்பதில்லை. அனேகப் பிளவுகளால் அத்தகையக் கொள்கைகளை நாம் தேடுவதுமில்லை; தெரிவிப்பதுமில்லை. நம்முடைய பிளவுபட்டக் கிளைமதங்களின் நூல்களை முதுமை பருவத்தில் சம்பிரதாயமாக ரகசியமாகப் படித்து வாதம் செய்து வீரியம் பேசிவிட்டால் போதும் என்ற நினைவு எப்படியோநம்முடைய நாட்டில் குடிகொண்டுவிட்டது. நாம் பெரும்பான்மையான கூட்டமாக (Nation) இருந்தாலும் நாம் அனேக ஒற்றுமையற்றஉட்பகையுள்ள சிறுபான்மைக்கூட்டசமூகமாக (A bundle of many microscopic and conflicting minorities) ஆகிவிட்டோம். வெளியடையாளங்களிலும் விநோதமாக குழப்பமான முறை (A chaotic confused multiplicity.) விஞ்ஞான சாஸ்திரஉணர்ச்சி உலகம் எங்கும் ததும்பும் நாளில் எவ்வளவோ மூட உணர்ச்சிகள்

பழக்க வழக்கங்கள் (Supersti-tions.) இந்தக் குறைகளைத் தவிர்க்க வேணுமென்ற விருப்பங்கூட இல்லை.

மற்ற மதங்களும் சமூகங்களும் கிளை மதங்களையும் கிளை சமூகங்களையும் ஒன்றுபடுத்தி சமூக சக்தியை அதிகப்படுத்த முயற்சிப்பதைப் பார்த்தும் நமக்கு அத்தகைய ஆர்வம் ஏற்படவே இல்லை. கிறிஸ்தவர்களுக்குள் அனேக கிளைமதங்களும் உட்பகைகள் இருந்தாலும் அவர்கள் தாம்பரத்தில் சில ஆண்டுகளுக்கு முன் பெரிய மகாநாட்டை நடத்தியதை உங்களுக்கு நினைவு மூட்டுகின்றேன். அதன் பயனை மிஷன் கலாசாலைகள் உட்சச்சரவுகளை நீக்கிக்கொண்டு மதப் பரப்புக்கு முன்வந்து ஒத்துழைப்புக்குத் தலைப்பட்டன. பைபிளை (Bible)ப்படிக்க பெருமுயற்சி மிஷன் பள்ளிக்கூடங்களில் ஏற்பட்டுவருகின்றது. நம்முடைய முயற்சி எப்படியிருக்கிறதென்றால் மூன்று மதங்கள் என்று கூறப்பட்ட அத்துவைத, விசிஷ்டாத்வைத, துவைதப் போர்களால் மனக்கசப்பை விருத்திசெய்து கொண்டிருக்கிறோம்.

"வெளிவேஷமாகமட்டும் அமைதியுள்ளவர்கள்போல் நடிக்கும் நம்மைவிட்டு ஒருவர்க் கொருவர் பகையை மூட்டும் அசூயை நீங்க வேணும்."

என்று தேசிகர் உபதேசித்தது இன்றைக்கும் உண்மையல்லவா? வெளிமயக்காக சாந்தி வார்த்தைகளும் பிரேமைப் பேச்சுகளும் பேசி என்ன பிரயோஜனம? ஹிந்துமதத்தின் பொதுக் கொள்கைகளை அறிந்து மாணாக்கர்களுக்கு அறிவிக்கவேணும். எல்லா ஹிந்துச் சிறுவர்களும் நம்முடைய பொது பிரமாணமான பகவத்கீதையைப் படித்துக் களிக்க வேணும்.

மற்றொரு முக்கியமான விஷயத்தையும் நாம்பொருட்படுத்தவேணும். உலகமெங்கும் நாஸ்திகமும் பண ஆசையும் சிற்றின்ப ஆசையும் பெருத்த வெறிகளாக இருக்கின்றன. விவேகானந்த சுவாமிகள் ஒரு சொற்பொழிவில் வருங்காலக் கடும் போர் மதங்களுக்குள் அல்ல, மதத்திற்கும் நாஸ்திகத்திற்கும் என்று கூறியுள்ளார். ருஷியாவில் மதம் மனமயக்க மருந்து(Religion is an opiate of the people) என்று கொள்கை. இப்பொழுது இந்தக் கூத்து, போர்த்துயரத்தால் குறைந்திருக்கின்றது. நம்முடைய தானமும் தியானமும் நிறைந்த நாட்டில் சுயமரியாதை என்ற பெயருடன் பிறரை இகழ்ந்து தெய்வத்தைத் துவேஷிக்கும் கொள்கைக்காக பிரசாரம் நடக்கின்றது. தெய்வபக்தி நிறைந்த நாடு என்று உலகம்போற்றும் இந்த நாட்டிலேயே இந்த விஷமப் பிரசாரம் ஏற்பட்டால் உலகத்திற்கு நற்கதி எப்படி கிடைக்கும்? உப்பே உருசியிழந்தால் என்னஉருசிஏற்படும்?(If salt itself loses its savour, wherewith can salt be salted?) சத்தியத்தின் உண்மை ஆர்யம் திராவிடம் என்ற பயனற்ற போராட்டங்களால் சீர்குலைந்துவிடுமா? தெய்வத்தில் திராவிட தெய்வம் ஆர்யதெய்வம் என்று உண்டா? நம்முடைய நாகரீகத்தின் மூலாதார நூல்களைப் பழிக்கலாமா அழிக்கலாமா? நாம் தெய்வபக்தியைப் பரப்பி தெய்விக நூல்களைப் பாதுகாக்கவேணும். கோழைத்தன்மாக பயப்படக்கூடாது.

சிலர்கள் மதத்திற்கும் அரசியலுக்கும் பொருளாதாரத்திற்கும் சமூக ஒற்றுமைக்கும் என்ன சம்பந்தம் என்று நினைக்கலாம். நான் அப்படி நினைக்கவில்லை. மதம் தேசிய சுதந்திரத்திற்கும் சர்வதேசீய அமைதிக்கும் தூண்டுகோலாக இருக்க வேணும். இவ்வுலகத்தில் சொத்து சுகம் சுதந்திரம் இழந்து அவ்வுலகத்தில் சுகப்படுவது என்ற முறை என் மனதிற்கு இசையவில்லை. சுதந்திர வாழ்க்கை மனிதனுடைய இயற்கை நிலை. அப்படியே ஒற்றுமை வாழ்க்

கை மனிதனுடைய இயற்கை நிலை. அப்படியே தெய்வ பக்தி மனிதனுடைய இயற்கை நிலை. இயற்கையில் அமைந்த பிறப்புரிமைகள் ஒன்றுக்கொன்று முரணாக இருக்க முடியாது. மனு சொல்வது:—

“எது பிறர்க்கடங்கி இருக்கும் தன்மை உள்ளதோ அதை விட்டுவிடவேணும். எது தன்வசமானதோ அதை விடா முயற்சியாகச் செய்ய வேணும். பரவசம் துக்கம்; ஆத்மவசம் சுகம். பரதந்திரம் துயரம் சுதந்திரம் இன்பம். இதுதான் சுக துக்கங்களுடைய வேற்றுமை.”

சுதந்திர சுயராஜ்ய விருப்பத்தை மறக்கும் அல்லது முறிக்கும் மதம் மதமல்ல; அது தமோகுணமேயாகும். தற்காப்பில் விருப்பமும் ஊக்கமும் முயற்சியும் இல்லாதவனை சத்துவ குணமுள்ளவன் என்று கூறுவது உண்மையற்ற புகழ்ச்சிச் சொல் என்று என் நோக்கம்.

மதக் கழகங்கள் பிரஹ்மவித்யையைப் பற்றி விசாரிக்கவேண்டும் ஆனால் அவைகள் சமூக பொருளாதார அரசியல் விஷயங்கள் முதலியவைகளின் விவரங்களைப்பற்றி விசாரிக்காவிட்டாலும் அவைகளின் உட்கருத்தையும் உயரிய நோக்கத்தையும் கவனிக்கவேணும். கேனோபனிடதம் என்ற தலவகாரோபனிடதத்தில் உமாதேவி பிரஹ்மத்தைத் தெரிவித்தாள்.

“இந்திரன் ஆகாயத்தில் அழகொளிவீசும் உமாதேவியைக்கண்டு “யார் இந்த யக்ஷன்?” என்று வினவினன். அவள் “அவர் பிரஹ்மம். அவருடைய வெற்றியால் நீங்கள் பெருமை அடையுங்கள்” என்று கூறினள்.”

ஆகையால் பிரஹ்மம் ஆனந்த ரூபம் மட்டுமல்ல. தர்ம ஜய உருவமாகவும் கடவுள் இருக்கின்றார். சமூக ஒற்றுமை, தர்ம வழியில் கிடைக்கும் பொருள், சுதந்திர சுயராஜ்யமும் பகவானுடைய விபூதிகளே. இவைகள் நிரம்பியிருந்த காலத்தில்தான் பிரஹ்மவித்யையும் பாரததேசத்தில் மேன்மையாக விளங்கிற்று.

“சாஸ்திரங்களில்தடையற்ற அறிவும் வில்லில் பூட்டிய அம்பும்.” என்று காளிதாச மகாகவி வர்ணிக்கின்றார்.

“ஆயுதங்களால் காக்கப்பட்டநாட்டில் நூல் ஆராய்ச்சி நிலைக்கும்.” என்பது தத்துவமே. பாரததேவியின் உபாசனையை மறந்து ஈச்வரி உபாசனை உண்டா!

நம்முடைய நாகரீகத்தின் சிறப்பும் பெருமையும் நடுநிலைமையான வாழ்க்கை.(The balanced life, the golden mean)

“மிகையான வழியை எப்பொழுதும் விட்டுவிடவேணும்.”

**(அதிசர்வத்ரவர்ஜயேத்.)**

என்பது வியாசமஹரிஷியின் உபதேசம். நான்குசாதிகள் ஏற்பட்டது பெருமைக்கும் போருக்குமல்ல: முறைப்படிப் பணிசெய்து பொது நன்மையைப் பேணுவதற்கு ஏற்பட்ட பாகுபாடு. அதுஇப்பொழுது சின்னஞ்சிறு வகுப்புகளாகி வீண் பெருமையிலும் பெரும்போரிலும் முடிந்தது. அப்படியேபொருளாதார விஷயங்களிலும் விவசாயம் கைத்தொழில் வியாபாரம் மூன்றும் ஒன்றுக்கொன்று முரணன்றி இருந்தது.

நம் நாடு விவசாயத்தை முக்கியமாகக் கடைப்பிடித்த நாடு. தொழில் முன்னேற்றம் (Indnstrialisation) விவசாய முன்னேற்றத்திற்கு எதிரியாகவும் போட்டியாகவும் இருக்கக்கூடாது. பெரிய பெரிய யந்திரங்களை அதிகமாக்கித் தொழிலாளிகளைத் தொழிலழிந்து திக்கற்றவர்களாக்குவது முறையல்ல. சிலபொருள்களை உண்டாக்க மாத்திரம் பெரிய யந்திரங்களை உபயோகப்படுத்தவேணுமே தவிர, எல்லாக் காரியங்களுக்கும் அவைகளை உபயோகிக்கக்கூடாது. மனு தர்ம சாஸ்திரத்தில்

“பெரு இயந்திரங்களை உபயோகித்தல்.”

**(மகாயந்த்ர பிரவர்த்தனம்.)**

கண்டிக்கப்படுகின்றது. புரட்சியைப் பெரிதாகக் கொண்டாடும் காலம் இக்காலம். போட்டியை (Competition) பெருமைப்படுத்தி போர் முறைகளாலும் வியாபார முறைகளாலும் ஏனைய நாடுகளையும் நாகரீகங்களையும் அழித்து நம்முடைய நாட்டையும்நாகரீகத்தையும் வளர்ப்பது தற்கால முறை. ஆனால் நம்மவர்கள் அன்பான அஹிம்சையான வாழ்க்கையைப் பெருமையாக் நினைத்தார்கள். அந்த அன்பு அஹிம்சை சுகத்திற்கும் சுதந்திரத்திற்கும் எதிரி அல்ல.

இத்தகைய அடிப்படையான பொது விஷயங்களைக் கூறுவது தான் இந்தக் கட்டுரையின் முக்கிய மான நோக்கம். அனேக சிக்கலான மதவிஷயங்களையும் தர்ம விஷயங்களையும் இக் கட்டுரையில் ஆராய்ச்சி செய்வது அசாத்திய மான விஷயம், ஆனாலும் அவைகளில் சில முக்யமான குறிப்பு மட்டும் இவ்விடத்தில் சுருக்கமாகக் கூற நான் விரும்புகிறேன்.

மத தத்துவ விஷயங்களை முதன்மையாக எடுத்துக்கொள்வோம். பிரமாண விசாரங்கள் எவ்வளவோ இருக்கின்றன. உபநிடதங்களில் எல்லாவற்றிற்கும் சமப் பிராமாண்யமா அல்லது தசோபநிடதங்களுக்கு ஏற்றமுண்டா? அவைகளில் சிலவோ பலவோ நவீனமா? பிரஹ்ம சூத்திரங்கள் விஷயத்தில் 555, 545, 546 என்ற எண்களில் எந்த எண் உண்மை? அவைகளில் பூர்வ பக்ஷ சித்தாந்தசூத்திரங்களின் தீர்மானத்தில் எந்த ஆசார்யர் கூறுவது உண்மை? அல்லது வேறு தீர்மானம் செய்யவேணுமா? பகவத் கீதையில் உள்ள சுலோகங்கள் எழுநூறு ஏழுநூற்று நாற்பத்தைந்தா? இவைகள் விரைவாக தீர்மானமாகக் கூடிய பிரச்னைகள் அல்ல. என்றைக்கும் தீராமலே இருக்கலாம். இது தவிர, தத்துவ விஷயங்களில் எவ்வளவோ விசாரங்கள் இருக்கின்றன. மதங்களுக்குள் பேதங்களையே நாம் கணக்கு எடுக்கிறோம். ஒற்றுமையான பாகங்களைக் கணக்கு எடுப்பதில்லை. அந்த தொண்டை முக்கியமாகக் கருதுவதுமில்லை. உதாகரணமாக ஜீவன் முக்தி விதேகமுக்தி விவாதங்களை எடுத்துக்கொள்ளலாம்.

ஷட்தர்சனங்களை மகர்ஷிகள் இயற்றியிருந்தால் இவ்வளவு அபிப்ராய பேதங்கள் இருக்குமா? அல்லது மதுசூதன சரஸ்வதி கூறுவது போல் அவைகளுக்குள் சமரசமும் சோபான க்ரமமும் உண்டா? அப்படியே ஆசார்யர்கள் கூறின பாஷ்யங்களிலும் உள்ள மதவேற்றுமைகளை இணைக்கக்கூடுமா? அதிகாரி பேதம் என்ற முறையிலோ சோபான க்ரமம் என்ற முறையிலோ சமரசப்படுத்த முடியுமா? க்யாதி வாதங்கள் இருந்தபடிதான் இருந்தாக வேணுமா அல்லது சமரசப்படுத்தக்கூடுமா? உதாகரணமாக ஆரம்பவாதம், பரிணாம வாதம், விவர்த்த வாதத்தை எடுத்துக்கொண்டால், அவைகளை எந்த திருஷ்டாந்தத்தாலாவது இணைக்க முடியுமா? கனககுண்டலம் ரஜ்ஜுசர்பம் சுக்திரஜதம் முதலிய உதாகரணங்களுடன் நின்றுவிடவேண்டுமா. கீதையில் அந்த உதாகரணங்களைச் சொல்லவில்லை.

"ஆகாயத்தில் இருந்துகொண்டே காற்று எங்கும் செல்வதுபோல், எல்லா உயிர்களும் என்னிடம் இருக்கின்றன என்று அறிந்து கொள்."

என்ற சுலோகத்தை கவனித்தால் காரணம் பூர்ணமாக இருந்து கொண்டே கார்யமாகவும் இருக்கக் கூடும் என்று தெரிகின்றது.

"அதுவும் பூர்ணம் இதுவும் பூர்ணம். பூர்ணத்திலிருந்து பூர்ணம் உண்டாகின்றது, பூர்ணத்திலிருந்து பூர்ணத்தை எடுத்தால் மிச்சமும் பூர்ணமேயாகும்."

என்ற உபதேசத்தின் கருத்து என்ன? சாக்த மதத்தில் அதிகாரி

பரிணாமவாதத்தைக் கூறுகின்றார்கள். அதை நன்கு விசாரிக்க வேண்டும்.

இவைகள் எப்படி இருந்தாலும் சிவன் ஜீவனா விஷ்ணு ஜீவனா, லக்ஷ்மி ஜீவகோடியா ஈச்வரகோடியா என்ற புதிர்களுக்கு இனி இடமில்லை. சிவவிஷ்ணுக்களில் யார் உயர்ந்தவர் என்ற வாதங்கள் உயிரற்ற வாதங்கள். பாகவதத்தில் அத்ரி உபாக்யானத்தில் அத்ரி மகர்ஷி உலகத்தின் மூலப் பொருளைப்பற்றித் தவம்செய்த பொழுது, மும்மூர்த்திகளும் அவருக்கு தர்சனம் கொடுத்தார்கள். "நான் ஒருவரைத்தேட மூவர் வந்த காரணம்யாது?" என்று அவர்வினவ அப்பொழுது மகாவிஷ்ணு

"நீ எதை தியானம் செய்கின்றாயோ அது நாங்கள் மூவரும்."

என்று விடையளித்தார்.

தக்ஷயக்ஞ உபாக்யானத்தில்

"நானும் பிரம்மனும் சிவனும் உலகத்திற்கு மூலப்பொருள்.

என்று மகாவிஷ்ணு கூறினார். கடவுள் ஒருவரே. முத்தொழிலைப்பற்றி மூன்று உருவங்கள். அவருடைய ஒவ்வொரு பெயரும் ஒவ்வொரு குணத்தைக் குறிக்கின்றது.

"ஒரு உருவமே மூன்றாயிற்று அவைகளுக்குள் உயர்வு தாழ்வு இல்லை."

என்று காளிதாச மகாகவி குமாரசம்பவத்தில் கூறுகின்றார். கடவுளும் அவருடைய சக்தியும் ஒன்றே.

"கதிரவன்ஒளி எப்படிகதிரவனை விட வேறு அல்லவோ அப்படியே நான் ராமனைவிட வேறு அல்ல."

என்று சீதாதேவி வால்மீகி ராமாயணத்தில் உபதேசிக்கின்றாள். பிரஹ்மம் சகுணமா நிர்க்குணமா சாகாரமா நிராகாரமா என்ற வாதமும் பயனற்ற வாதம்.

"பிரஹ்மம் என்றும் பரமாத்மா வென்றும் பகவான் என்றும் கூறப்பட்டுள்ளது."

என்று பாகவதத்தில் கூறப்பட்ட உண்மையை நாம் உணரவேணும்.

இதுபோல் மார்க்கங்களின் விஷயத்திலும் இனிப் போராட்டத்திற்கு இடம் இல்லை. கீதையில்

"சிலர்மனதால் கடவுளைதியானத்தால் தன்னிடம் காண்கின்றார்கள். சிலர்ஞானயோகத்தாலும் சிலர் கர்மயோகத்தாலும் காண்கின்றார்கள். மற்றவர்கள் இப்படி அறியாமல் பிறரிடம் இருந்து அறிந்து உபாசனை செய்கின்றார்கள். அவர்களும் வேதத்தை ஒப்பி இறப்பைக் கடக்கின்றார்கள்."

என்று கண்ணன் கூறியிருப்பதைக் கவனிக்க வேணும்.

வருங்காலத்தில் அத்துவைதம்மித்யாவாதத்தையும் அவிகாரிபரிணாமவாதத்தையும் ஒன்றுபடுத்தி த்யேய பிரஹ்மத்தையும் ஞேயபிரஹ்மத்தையும் ஒன்றுபடுத்திபரஞானத்தையும் பர பக்தியையும் ஒன்றுபடுத்தலாம். விசிஷ்டாத்துவைதம் த்ரிகுணம் திரிபுடிதாண்டிய நிலையில் ஜீவன் முக்தியையும்நிர்குணபிரஹ்மத்தையும் நிர்பீச சமாதியையும் ஒப்புக்கொள்ளலாம். துவைதமும் அப்படியே செய்வதுடன் நித்ய சம்சாரிகளான ஜீவன்களும் தமோயோக்யமான ஜீவன்களும் உண்டு என்ற எண்ணத்தையும் முக்தியில் ஆனந்த தாரதம்யமுண்டு என்ற எண்ணத்தையும் மாற்றிக்கொள்ளலாம். ஆசார்யர்கள் ஒவ்வொருவருடைய சித்தாந்தங்களைக் கண்டிக்கலாமானால், இனி சித்தாந்த மாறுபாடு கூடாது என்ற வாயடி எப்படி அடிக்கலாம். வியாச சூத்திரங்களிலேயே ஜைமினி, ஆச்மரத்யர், ஔடுலோமி, காசகிருத்ஸ்னர் முதலானவர்கள் பல்வேறு சித்தாந்தங்களைக் கூறியதாக புலப்படுகின்றது. இஷ்டதைவம், இஷ்டசாதனம், இஷ்டசித்தி என்ற பரந்த நோக்கம்தான் உயர்ந்த உண்மை. ரந்திதேவர் கோரி அடைந்த சித்தியை இகழ நமக்கு என்ன அதிகாரம்?

"எனக்கு அரசு வேண்டாம்: சுவர்க்கம் வேண்டாம்: மோக்ஷம் வேண்டாம். துயரப்படுகின்றவர்

களின் துயர் நீக்கலேமட்டுந்தான் நான் விரும்புகின்றேன்.''

அப்படியே மற்றொரு இடத்தில் பாகவதத்தில் பக்தியை முக்தியைவிட உயர்த்திக் கூறப்பட்டிருக்கின்றது.

''அச்யுதனிடத்தில் அன்பற்ற ஞானம் ஒளியற்றது. ஏகாந்தியாக பிரபத்தி செய்தவர்கள் வேறு ஒன்றையும் விரும்பமாட்டார்கள். ஆச்சர்யமான மங்களமான அச்யுத சரிதத்தை ஆனந்தக் கடலில் மூழ்கிப் பாடிக்கொண்டிருப்பார்கள்.''

முக்தியை இந்த உலகத்திலே இப்பொழுதே அடையக் கூடும். காம குரோதங்களை வென்று கடவுளைக்கண்டு களித்தலே முக்தி. பரமபதத்திற்கு போவது விதேக முக்தி. பரமபதித்தை இங்கேயே அனுபவிப்பது ஜீவன் முக்தி.

"எவருடைய மனது சமநிலையில் இருக்கின்றதோ அவர்களுக்கு இங்கேயே சம்சார ஜெயம் ஏற்படுகின்றது. பிரஹ்மம் குற்றமற்றது. ஆகையால் அவர்கள் பிரஹ்மத்திலேயே லயித்திருக்கின்றார்கள். இங்கேயே எவன் இறப்பதற்குமுன் காம குரோதங்களின் வேகத்தைப் பொறுத்துக்கொள்ள முடியுமோ அவன்தான் யோகி. அவன்தான் இன்பமுள்ளவன். எவன் உள்ளின்பம், உள்ளனுபவம். உள்ளொளி உள்ளவனே அவன் பிரஹ்மமூர்த்தி பிரஹ்மானந்தத்தை அனுபவிக்கின்றான். மும்மலமற்ற முனிகள் பிளவான எண்ணங்களை நீக்கி ஒன்றுபட்டமனதுடன் எல்லோருடைய நன்மையையும் நாடி பேரின்பத்தை அடைகின்றார்கள். காம குரோதங்களை நீங்கி மனமடங்கின ஞானிகளுக்கு இப்பொழுதும் பிறதும் பிரஹ்மானந்தமுண்டு,"

(பகவத்கீதை-அத்யாயம் 5)

"உடலில் பற்று நீங்கி பரமனைக் கண்டாலும் எங்கே எங்கே மனம் சென்றாலும் அங்கே அங்கே பரமானந்தம்.''

(சரஸ்வதீ ரகஸ்ய உபநிஷத்)

தத்துவ விஷயங்களில்போல் ஆசார விஷயங்களிலும் சுருக்கிக் கொள்ளவேணும். உறுதியான நம்பிக்கையுடன் செய்யவேணும். சமரசமான எண்ணம் இருக்கவேணும். சமிதாதானத்தையும் ஔபாசனத்தையும் பிராம்ஹணர்கள் அனேகமாக விட்டுவிட்டார்கள். 40 சம்ஸ்காரங்களைப் பற்றி மட்டும் பேசிக்கொண்டிருக்கின்றார்கள். விஸ்தாரமாக கர்மாக்களைச் செய்கிறவர்கள் செய்யட்டும். ஆனால் அவர்கள் சந்தியாவந்தனம் தர்ப்பணம் சிராத்தம் தவறாமல்செய்து ஜபம் பாராயணம் தேவதார்ச்சனம்முதலிய நற்காரியங்களில் ஈடுபட்டிருப்பவர்களை இகழலாமா? அந்தணர்களே ஒருவரை ஒருவர் தூஷித்தால் மற்றவர்களை இகழ்வது என்ன விந்தை?

"ஜபத்தாலேபிராஹ்மணன் சித்தி அடையக்கூடும். இதைப்பற்றி ஐயம் வேண்டாம். வேறு எதைச் செய்தாலும் செய்யாவிட்டாலும் யாவரிடத்திலும் அன்பாயிருத்தலே அந்தணத்தன்மையாகும்.''

(மனுதர்ம சாஸ்திரம்)

எல்லா ஹிந்துக்களும் பஞ்சாக்ஷரம், ஷடாக்ஷரம், அஷ்டாக்ஷரம் முதலிய மந்திரங்களை ஜபம் செய்யவேணும். மந்திரசித்தி யோகசித்திகளை நாம் இழந்துவிட்டோம். எந்த மந்திரம் உயர்ந்தது என்ற வீண் வாதங்களில்இறங்கிவிட்டோம். எந்த தெய்வம் உயர்ந்தது என்பதுபோல் தான் எந்த மந்திரம் உயர்ந்தது என்ற வாதம் பயனற்ற வாதம். வேதத்தை நம்பினவர்கள் ஹிந்துக்கள். எல்லா மந்திரங்களும் வேதத்தில் கூறப்பட்டவைகளே. இது மட்டுமல்ல. கிளைமதப்பற்றினால் பிராம்மணர்களுக்குள்ளாகவே உணவு மணம்விஷயங்களில் தீராப் பிளவுகள் ஏற்பட்டுவிட்டன. கிளைகளிலிருந்து சிறுசிறு கிளைகள். ஸ்மார்த்தர்களுக்குள் எவ்வளவோ சிறு வகுப்புக்கள். வைஷ்ணவர்களுக்குள்ளேயும் அப்படியே. இதுவுந்தவிர வேதாத்யயனம் செய்யப்பட்டவர்களுக்கு திராவிட வேதம்

தெரியாது. திருவாய்மொழிபடிக்கப்பட்டவர்கள் தேவாரம் திருவாசகத்தைப்படிக்கமாட்டார்கள். 15கோடி ஹிந்துக்கள் கொண்டாடும் துளசி ராமாயணத்தை தென்னிந்தியர்கள் படிப்பதில்லை. சம்ஸ்கிருத ஞானம் மிகவும்குறைந்துபோயிற்று. இந்தக் குறைகள் எல்லாம் நீங்கவேணும்.

ப்ராஹ்மணர்களுக்கும் அப்பிராம்மணர்களுக்கும் ஹரி ஜனங்களுக்கும் ஆன்மீக சம்பந்தங்கள் ஏற்படாததால்தான் மதமாற்றங்கள் (Conversions)முன் ஏற்பட்டன இப்பொழுதும் ஏற்பட்டுவருகின்றன.

எல்லாவித மடாதிபதிகளும் ஹிந்துத் தலைவர்களும் ஹிந்து மதபிரசார சங்கத்தை (Hindu Mission) ஸ்தாபிக்கவேணும். புரோகிதர்களுக்கு வேண்டிய விஷயங்களை அர்த்த அறிவுடன் புகட்ட மதகலாசாலையும் (College of Divinity) ஏற்படுத்தவேணும். ஒவ்வொரு தாலூகாவிற்கும் மதப் பிரசாரகர்களையும் சொற்பொழிவாளர்களையும் ஏற்படுத்தவேணும். எல்லா ஹிந்துக்களுக்கும் பொதுவான பஜனை மந்திரங்களை ஏற்பாடு செய்யவேணும். அனேக் ஹிந்து அனாதாலயங்கள் ஏற்படவேணும். வியாயாம சாலைகள் எல்லா இடங்களிலும் ஏற்படவேணும். ஏழைகளுக்குப் பள்ளிக்கூடங்களும் வைத்திய சாலைகளும் தொழிற்சாலைகளும்ஏற்படவேணும்.

மற்ற மதஸ்தர்கள் இந்த முறைகளில் ஊழியம் செய்ய முன்வரும் பொழுது நம்மவர்கள் அப்படிச் செய்யாவிட்டால் ஹிந்துத் தலைவர்களிடம் ஹிந்துமக்களுக்கு எப்படி அபிமானம் இருக்கும்? ஹிந்து மதத்தில் எப்படி பற்றிருக்கும்? கோயிலில் மணி அடித்துப் பூஜை செய்தால்மட்டும் போதுமா?

"எவன் எல்லா உயிர்களிலிருக்கும் ஈசனை விட்டுவிட்டு அர்ச்சனை மட்டும் செய்கின்றானோ அவன்சாம்பலில் ஆகுதி செய்கிறான்."

என்று பாகவதம் கூறவில்லையா! நம்முடைய சகோதரர்கள் சுதந்திரமிழந்து சுகாதார உணர்ச்சியற்று விஞ்ஞானசாஸ்திர அறிவு இல்லாமல் எழுதப்படிக்கத் தெரியாதவர்களாக பரம ஏழைகளாகப் பஞ்சங்களில் அடிபட்டு நோய்வாய்ப்பட்டு கடவுள் வழிபாடு தெரியாதவர்களாக ஆடுமாடுகளைப்போல் வாழ்வது நம்முடைய நெஞ்சைப் பிளக்கின்றது.

ஹிந்துக்கள் முன்னேற்றம் என்றால் மற்ற மதங்களைச் சார்ந்தவர்களிடத்திலோ மற்ற நாட்டிலுள்ளவர்களிடத்திலோ இகழ்ச்சியோ பகையோ கிடையாது. ஆனால் அவர்கள் நம்மவர்களை தங்கள் மதங்களுக்கு இழுத்துக்கொள்வதை நம்மவர்கள் பேடிகள் போல பார்த்துக்கொண்டிருப்பது மிகவும் மனவருத்தமாக இருக்கின்றது. நம்முடைய மதத்தைவிட்டுச் சென்றவர்களை நாம் நம்முடைய மதத்திற்குத் திருப்புவதில்லை. நாளுக்குநாள் நம்முடைய மக்களை மற்றமதத்தவர்கள் சேர்த்துக்கொள்வதை தடுப்பதுமில்லை; விசனிப்பதுமில்லை. நம்முடைய மிக உயர்ந்த மதத்தின் கொள்கைகளையும் ஆசாரங்களையும் பழக்கங்களையும் அவர்களிடத்தில் பரவச்செய்யவேணும். அவைகளிடத்தில் அவர்களுக்கு உறுதியான அன்பும் ஊக்கமும் ஏற்பட வேண்டிய சாதனங்களையும் ஸ்தாபனங்களையும் நாம் விரைவிலே ஏற்படுத்தவேணும்.

எவ்வளவோ கூறவேண்டும் என்று ஆசைஇருந்தாலும் பொருத்தம் மீறக்கூடாமையால் இவ்வளவுடன் முடித்துக்கொள்ளுகிறேன். இப்பொழுதுள்ள நிகழ்ச்சிகள் மனதை திடுக்கிடச் செய்கின்றன. நம்முடைய புண்ணிய பூமியே பிளவுபட்டு துண்டு துண்டாகப் போய்விடும் போலிருக்கின்றது. மதப்போர்களும் பழக்கப் பிளவுகளும் வகுப்பு வாதங்களும் தீராத வழக்காகத்தான் இருக்கும் போலிருக்கின்றது. அச்சமும் அடிமைத்தனமும் தங்கியேவிடுமோ

என்று பயமாக இருக்கின்றது. ஒப்புயர்வற்ற பிரஹ்மவித்யையை கண்ணன் கீதையில்

"நான் வித்யைகளில் ஆன்ம வித்யையாக இருக்கின்றேன்."

என்று கூறி இருக்கின்றார். அது உருக்குலைந்து பிளவுகளால் மாய்ந்து போய்விடுமோ என்று அச்சம் எழுகின்றது. ஆனால் அவர் அதைப் பாதுகாப்பர். நாமும் அச்சந்தீர்ந்து வருங்கால நன்மையைக் கோரவேணும். கண்ணுங் கருத்துமாக உழைக்கவேணும்.

நீ அழிவற்ற அறத்தைக் காக்கின்றாய். நீ அழிவற்றவன்.

(பகவத்கீதை)

முன்னிருந்த குறைகளுக்காக நாம் நம்மை அவமதிக்கக்கூடாது. இறக்கும்வரையில் இலக்குமியைத் தேடவேணும். அவள் கிடைக்கமாட்டாள் என்று கருதக்கூடாது.

(மனுதர்ம சாஸ்திரம்)

ஓம் தத்ஸத். ஸ்ரீகிருஷ்ணார்ப்பணமஸ்து.



# உயிர் மாலை

காப்டன் என். சேஷாத்திரி நாதன்

"சக்தி சொரூபமான பரமாணுக்கள் பூமண்டலத்தில் எங்கும் வியாபித்திருக்கின்றன" என்று சகலவிஞ்ஞானிகளும்கூறுவார்கள். உலகத்தில் எவ்விதப் பொருளாயிருந்தாலும் சரி, அதிலடங்கிய பரமாணுக்கள் சலனம் செய்துகொண்டே யிருக்கின்றன. இச் சலனம் நமது கண்ணுக்குப் புலப்படுவதில்லை. சக்தியில்லாப் பொருளுமில்லை. பொருளில்லாச் சக்தியுமில்லை என்று விஞ்ஞானிகள் யாவரும் தெளிவாக்குவார்கள்.

சலனம், உஷ்ணம், ஜோதி, மின்சார சக்தி எல்லாம் வெளிப்பட வேண்டுமானல், பொருள்—சேதம் வேண்டுமென்பது சாதாரணமாய்த் தெரிந்த விஷயமே. 'பொருள்-சேதம்' 'பொருள்-மாற்றம்' 'பொருள்-கட்டுமானம்' எல்லாம் ஒவ்வொரு அணு ஜீவனிலும் நடைபெற்று 'உயிர்—சக்தி' யாய் வெளிப்படும்.

கண்ணுக்குப் புலப்படும் ஜீவராசி தவிர கண்ணுக்குப் புலப்படாத ஜீவராசி உண்டென்பதும் ஸாதாரணமாய்த் தெரிந்த விஷயந்தான். இவை அணுதர்சியின் (Microscope) உதவியால் காணப்படுவதும், அணுதர்சியின் உதவியாலும்கூடக் காணப்படாதது என இருவகையாம். இந்த அணுஜீவன்கள் இப்பூமண்டலத்தைச் சுற்றிய வாயு மண்டலத்திலும் நீரிலும் மண்ணிலும் எண்ணற்றிருக்கின்றன.

உயிர்ப் பொருளடங்கிய உயிரணுக்கள், உயிரற்ற உலோகப் பொருளைப் பயன் படுத்திக் கொண்டு, விளங்கி வருகின்றன. இதுதான் உயிர்மாலையின் முதற் தொடுப்பென்று சொல்லலாம். உயிரற்ற உலோகப் பொருளுக்கும் உயிர்ப் பொருளுக்கும் மத்தியில் ஒருவிதப் பொருள் இருக்காதென்று எப்படிச்சொல்வது? விஞ்ஞான ஆராய்ச்சியால் வெளிப்படலாம். அப்படியிருந்தால் அதுவும் முதற்தொடுப்பில் சேர்ந்திருக்கும்.

புரோட்டோப்லாஸம் (Protoplasm) என்ற உயிர்ப் பொருளில்லாமல் உயிரணுக்கள் கிடையா. இந்த உயிர்ப் பொருளுக்கு நைட்ரஜன் வாயு முக்கியமான பொருளாகும். நைட்ரஜன் நம்மைச் சுற்றியிருக்கும் வாயு மண்டலத்தில் பரவியிருக்கும் ஒரு பாகமாகும். வேறொரு பாகம் பிராணவாயுவாகும். மீதியிருக்கும் வாயுக்களைப் பற்றி நமக்கு இங்கு அறிந்துகொள்ள வேண்டியதில்லை. இந்த இரண்டு வாயுக்களும் விபரீத குணமுடையவை. நைட்ரஜன் உயிர்ப் பொருளமைக்கும் குண முடையது. பிராணவாயு, உயிர்ப் பொருளைச் சேதம் செய்யும் குணமுடையது.

செடிகளுக்கு உயிர்ப்பொருள் செய்வதற்கு நைட்ரஜனடங்கிய உப்புக்கள் தேவை. இவை நன்றாய் விளையும் நிலத்திலே ஏராளமாய்க் காணப்படும். இப்படி

ஏராளமாயிருப்பதற்குச் சில பாக்டிரியா அணுஜீவன்களே காரணமாகும். பூமியில் கிடக்கும் பிராணிகளின் கழிவு ஸாதனங்கள் இவைகளுக்கு உணவாகின்றன. உணவுக்காகப் பயன்படுத்தும்போது நைட்ரஜனுப்புக்களைப் பூமியில் பெருகச்செய்கின்றன. தாவர இனங்கள் நைட்ரஜனுப்புக்களை நிலத்திலிருந்து மிதமிஞ்சிப் பயன்படுத்துகையில் நிலத்தில் இந்த உப்புக்கள் சீக்கிரமாகக் குறைந்து போகக்கூடும். அப்போது தாவரஇனங்கள் வளருவதற்குக் கேடுவரலாம். இந்த ஸமயத்திலும் உதவிசெய்வது பாக்டிரியாக்களேயாகும். செடியின் வேரைச் சூழ்ந்து வாழும் சில பாக்டிரியாக்கள், இவை வாயு மண்டலத்திலிருந்து நைட்ரஜனை உப்பாக மாற்றிச் செடிகளுக்கு ஊட்டிக் கொடுக்கும். இப்படி உயிர் மாலையில் தாவர இனங்கள் தொடுக்கப்படுகிறன.

தாவரங்களை உணவாகப் புசித்துப் பிராணிகள் வளருகின்றன. பிராணிகளைக் கொன்றுதின்னும் பிராணிகளுண்டென்று யாவருக்கும் தெரியும். தாவரங்கள் விளையாவிட்டால் பிராணிகளும் மனிதனும் வாழ முடியுமா?

உலகத்திலிருந்து மனித வர்க்கத்தை அழித்துவிட வேண்டுமென்று ஒரு துஷ்டன் நினைப்பானாகில் அவன் செய்யவேண்டியது ஒன்று தான். நிலத்திலிருக்கும் பாக்டிரியாக்களை எல்லாம் நாசம் செய்துவிட வேண்டியது. பாக்டிரியாவில்லாமல் நைட்ரஜன் உப்புக்கள் நிலத்தில் விளையா. பிராணிகளுக்கு உணவு கிடையாமல் மாண்டுவிடும். பிராணிகள் இறந்த பின்பு மனிதனும் உயிர் விட வேண்டியதுதான்.

ஆனால், பெரிய பிராணிகளை யாவது நாசம் செய்துவிடலாம். உலகிலிருக்கும் பாக்டிரியாக்களையெல்லாம் நாசம் செய்ய முடியாது. உலகில் ஜீவராசிகள் ஒன்றோடொன்று தாங்கி வளருகின்றன. இவைகளால் உயிர்மாலைக் கதம்பம்செய்யப்பட்டிருக்கிறது

வெல்ஸ் (Wells H. G.) என்ற ஆங்கில விஞ்ஞானி ஒரு விசேஷமான நிலை பூமியில் வருமென்று தீர்க்கதரிசனம் கூறியிருக்கிறார். மனிதனுடைய எண்ணிக்கை உலகத்தில் பெருகி அவனுக்கு உணவுக் குறைவைஉண்டு பண்ணி விடலாம். அப்போது அவன் புதிய வழிகளைக் கையாண்டு வாயு மண்டலத்திலிருந்தும் உணவு தேடிக்கொள்வான். இந்தநிலைவருமா? உலகில்நன்மையளிக்கும் பாக்டிரியாக்கள் தவிர தோஷகுணமுள்ள பாக்டிரியாவும்,வைரஸ்(Virus)என்ற அணுஜீவனும்ஏராளமாயிருக்கின்றன. இவைகளோடு எவ்வளவு போரிட்டபோதிலும், இவைகளால் உண்டாகும் உபத்திரவம்முற்றிலும் தீருமா? மனித வர்க்கத்தை ஓரளவுக்குமேல் பெருகவிடாமல் நிறுத்திக்கொள்ளக்கூடும்.

இறந்துபோன மனிதனும், பிராணிகளும், மண்ணோடு மண்ணைக் கலந்து, பாக்டிரியாக்களால் திரும்பவும் அழிக்கப்படுகின்றன. திரும்பவும் நைட்ரஜன் நிலத்தில் அதிகமாகும்.

இப்படி உயிர்மாலை முடிவடைகிறது. உயிர்மாலையை யார் சூட்டிக்கொண்டிருக்கிறாள் ?—சகல ஜீவராசிக்கும் ஆதாரமாயிருக்கும் பூமாதேவிக் கேற்றது இந்த உயிர்மாலைக்கதம்பம். அவள்தான் சூட்டிக்கொண்டிருக்கிறாள் என்று சொல்லலாம்.

SUPPLEMENT TO JAGANMOHINI OF 1-1-1945

2 FEB 1945
MADRAS



# சாதிக்கட்டொழித்த வேதியவீரன்

வாசகர் திரு. அ. சுப்ரமணிய பாரதி.

## காட்சி 1

**இடம்:-குருக்ஷேத்ர யுத்த பூமியில் ஒரு பாசறை**

(பேரிடிபோன்ற பெரிய யுத்த ஆரவார முழக்கம்)

அசுவத்தாமன்:—ஆகா! இது என்ன! ப்ரளயகாலத்துப் பேரிடி போன்ற முழக்கம்! (ஆலோசனை செய்து) சந்தேகமேயில்லை! கதாதரனாகிய பீமஸேனனோ, காண்டீபனாகிய அர்ஜுனனோ, ஸாத்யகியோ - இவர்களில் யாரோ ஒருவன் வாலிப ஆணவ மதத்தினால் என் தந்தையை எதிர்த்திருக்கிறான்! இதனால் அவர் கடுஞ்சினங்கொண்டு போர் புரிய முனைந்திருக்கிறார்! தெரிந்தது! சேவகா! ரதம் கொண்டுவரச்சொல் இந்த நிமிஷமே!

சேவகன்:—இதோ!

அசு:—சேவகா, ரதத்திற்காக காத்திருக்கமுடியாது. இதோ இந்த என் கை வாளாயுதத்தையும் புஜ பலத்தையும் துணையாகக்கொண்டு போர்க்களம் போகிறேன். வா நீயும். (போகிறான்)

[சைந்யங்களும் கர்ணன் முதலியவர்களும் புறமுதுகிட்டோடி வரும் ஆரவாரம்.]

சேவ:—ஐயா! அதோ பாருங்கள்

அசு:—ஆகா! இது என்ன? சேனைவீரர்கள் புறமுதுகிட்டோடி வருகின்றனர். வில்வீரர்களான கர்ணன் முதலியவர்களும் குடல் தெறிக்க ஓடிவருகின்றனர்!

சே:—நமக்குத் தோல்வி போலிருக்கிறது!

அசு:—(சிரித்து) என்ன விந்தை இது! போர்க்களத்தை விட்டுப் புறமுதுகிட்டோடிவிட்டால் மரணம் இவர்களை விட்டுவிடும்போலிருக்கிறது! (இரைந்து) கர்ணா, மாமா, திரும்புங்கள்! திரும்புங்கள்! இதோ நானும் வருகிறேன் போர்முனைக்கு! வில்லையல்லது வேறு துணை வேண்டாத என் தந்தையல்லவா போர்க்களத்தில் முன்அணியாய் அலங்கரித்திருப்பவர்? ஏன் அச்சம்! ஏன்? சேனைகளில் ஒருவன்—(இரைந்து) உம்முடைய தந்தை உயிரோடிருக்கிறார் என்கிற எண்ணம்போலிருக்கிறதுமக்கு?

அசு:—(ஆச்சரியத்துடன்) என்ன! என்ன! ஏனிப்படிச் சொல்லுகிறான்?—அண்டங்கள் நிலைகுலைந்திலவே! ஆதித்தர் பன்னிருவரும் ஆகாயத்தில் தோன்றக்காணோமே! மேகங்கள் ஏழும் விண்ணகத்தெழுந்து முழங்கவில்லையே! ஏனோ இந்த அவச்சொல்!

ஸாரதி:—அந்தோ! காப்பாற்றவேணும்! காப்பாற்றவேணும்!—அபயம்! (கூவிக்கொண்டு ஓடி வருகிறான்.)

அசு:—ஸாரதி அசுவஸேனா! மூவுலகங்களையும் காக்கவல்ல நிகரற்ற வேதிய வீரருடைய ஸாரதியல்லவா நீ? உன்னை நான் காப்பதாவது? ஏன் இந்த அல்லல்?

ஸாரதி:-அந்த வில் வீரரிருந்தால் நானேன் வேறோர் புகலிடம் நாடுகிறேன்?

அசு:—ஸாரதி! அவர் எங்கே?

ஸாரதி:—அந்தோ! இனி நாம் அவரை இவ்வுலகில் காணமுடியாது!—

அசு:—ஆ! தந்தை இறந்தாரா? ஆ! என் ஐயன் என்னை விட்டுப் பிரிய எப்படி மனந்துணிந்தார்? எப்

படிதுணிந்தான் நமன் அவருயிரைக் கவர? தன் அரிய கதாயுதத்தைப் பிரயோகித்தானோ பீமன்? ஆசாரியர் என்றெண்ணிப் பாராமல் அர்ஜுனனும் அவனோடு சேர்ந்துகொண்டானோ? இல்லை. கபடநாடக சூத்ரதாரியாகிய கண்ணன் கடுஞ்சினங்கொண்டானோ?

ஸாரதி:—இப்படியும் நடக்குமா?

அசு:—இவர்களையல்லாமல் என் ஐயனை எதிர்க்கத்துணிபவர் யாவர்?

ஸாரதி:—உம் தந்தை வீராவேசங்கொண்டு போர் முனையில் நின்றால் எதிர்ப்பவர் யாருமில்லையென்பதுண்மையே! சோகமுற்றுப் படை துறந்தார். அச்சமயம் பார்த்துப் பகைவர் தம் பகையைத் தீர்த்துக் கொண்டனர்!

அசு:—அந்தோ! என்ன விந்தை இது? சோகமுறுவானேன்! படை துறப்பானேன்?

ஸாரதி:—ஸத்யவ்ருத சீலராகிய தருமபுத்திரர்—முதலில் "அசுவத்தாமா ஹத:!" என்றார்; சற்றுப் பொறுத்துக் குஞ்சரஹ என்றார். முதலில் சொல்லிய அசுவத்தாமா ஹத:! என்ற சொல் செவியிற்பட்ட மாத்திரத்தில் — புதல்வன் இறந்தான் என்றெண்ணிச் சோகமடைந்து படை துறந்தார். இது தான் காரணம்.

அசு:—அந்தோ, புத்ரவாத்ஸல்யமா காரணம் என் ஐயன் இறந்ததற்கு? இணையிலா வீரரே! வேதியர் வேந்தே! எந்தையே! நான் இறந்ததாக எண்ணம் பிறந்த அப்போதே சோகமுற்று அவசரமாய்ப் பகைவரிடம் அகப்பட்டு இறந்தீரே, நான் நீர் என்னிடங்கொண்ட வாத்ஸல்யம் காரணமாய் இறந்ததை நிச்சயமாய் அறிந்த பின்பும் உயிரோடிருக்கின்றேனே! அந்தோ! 'பெற்ற மனம் பித்து! பிள்ளைமனம் கல்லு!' என்பது சரியாயிற்றே! இப்படிப் பட்ட என்னிடம் தாம் கொண்ட வாஞ்சை வீணல்லவா? அந்தோ!

(விருத்தம்)

வில்லாய் நீ வெம்போர் முனை வெல்லும் விறலாய் நீ
சொல்லாய் நீ தொல்வேதியருட்கும் தொழிலாய் நீ
வல்லார் வல்ல கலைகளனைத்தும் வல்லானே
எல்லாமின்றே பொன்றினவுன்னோடெந்தாயே

(மூர்ச்சையடைகிறான்)

கிருபாசாரியார் பிரவேசிக்கிறார்

ஸாரதி:—ஐயா! இதோ கிருபாசாரியார் வருகிறார், துக்கப்பட வேண்டாம். கண்திறந்து பாரும்.

கிரு:—அசுவத்தாமா! எழுந்திரு!—துக்கப்படாதே! அன்று சபையில் பாவிகள் துகிலுரிந்தபோது நாங்கள் பதுமைகளைப்போலிருந்து அந்தப் பதிவ்ருதையின் பரிபவம் கண்டோம். இன்று — போர்க்களத்தில் துரோணவதங் கண்டோம். நாங்களிருந்தென்ன பயன்? எழுந்திரு.

அசு:—இதோ துக்கத்தை மறந்தேன்! மாமா!—என்ன சொல்வேன்! பொய் சொல்லவறியாத புனிதன், பகையேயில்லாத பார்த்திபன், என் தந்தையை—தன் குருவை வதஞ்செய்ய இந்தச் சூழ்ச்சி செய்தானே! இது ஏன்? எப்படித் துணிந்தது மனம் இச்சதி செய்ய?

க்ருபா:— தர்மபுத்ரனுடைய சூழ்ச்சியாயிராது இது! கோபாலனுடைய சூழ்ச்சியாயிருக்கக் கூடுமென்று என்மனத்திற்குப்படுகிறது.

அசு:—அப்படியிருக்கலாம். எப்படியானாலென்ன? நான் இனிமேல் உயிர் தரியேன். என் தந்தையைக் காண அவர் சென்ற இடமே செல்வேன், என் பொருட்டு உயிரை இழந்த என் தந்தையின் பிரிவு—என்னைத் தீயாய் எரிக்கிறது! என் கையில் வாளைத் தாங்கேன்! என் தந்தை படைதுறந்து இறந்தாரல்லவா? வாளே, நீ சுகமே யிரு!—(வாளை எறியப்போகிறான்.)

கிருபா:— அசுவத்தாமா! நில்; பதறாதே! புத்ரசோகத்தில் நிராயுதபாணியாய் நின்ற வேதியர் வேந்தாகிய உன் தந்தையை முடிமேலடித்த துருபதனுடைய மைந்தன் திருஷ்டத்யும்னன் இறுமாப்புடன் இதோ பாசறைக்குச்செல்கிறான்!—இவனை விடுவது தகுமா?

அசு:—என் ஐயன் முடியைப் படைகொண்டு தாக்கியவன் இந்த அதமனு? பாஞ்சால நாட்டுப் பாதகனு? அடே துஷ்டா! மூவுலகங்களும் மூண்டெழுந்தாலும் முப்புரத்தையும் சிரித்தெரித்த ருத்ர மூர்த்தியைப்போல் ஒரு நொடியில் அழிக்க வல்ல வீரன் அசுவத்தாமன் ஒருவனிருக்கிறுன் என்பதை நீ மறந்து போனதேன்? சோகமுற்றிருந்தவரை அடித்ததனுல் நீ பாவி! பாவியாகிய உன்னே, சூரியனே நோக்கி அர்க்யம் விடும் என் கையினுல் தீண்டேன்! இதோ என் இடக்காலால்—உன் தலையை மிதித்துன்னே அழிக்கிறேன். (இரைந்து) ஏ தர்மநந்தனு! பொய்யறியாத பூபாலா! உனக்கும் உன் தம்பிமார்களுக்கும் என் தந்தை செய்த தீங்கென்ன? உங்களுக்கு இது தகுமா? எல்லோருக்கும் ஆசிரியராய், வேதியர் வேந்தராய் விளங்கிய வயது முதிர்ந்த என் தந்தையை ஓர் ஈனன் தீண்டுவதா? நீங்கள் பார்த்திருப்பதா? (பெருமூச்சுடன்) எவரெவர் இந்தக் கொடுஞ்செயலைப் பார்த்துக் கொண்டிருந்தார்களோ அவர்களே யெல்லாம் இப்போதே என்வாளுக்கு இரையாக்குகிறேன். அசுவஸேநரே இரதம்—

ஸாரதி:—இதோ—

கிருபா:—அசுவஸேனு! நில். அசுவத்தாமா! உன் தந்தையடைந்த பரிபவத்திற்கு உன்னேயன்றி யார் பரிகாரம் செய்யவல்லவர்! ஆயினும் நீ ஸேனுதிபதியான பின்பே இதைச் செய்யவேண்டும்.

அசு:—மாமா, அது பரதந்த்ர மானதன்றோ?

கிருபா:—அப்படி நினைக்காதே! நீ ஸேனுதிபதியாகாவிட்டால் பீஷ்மரும் துரோணருமில்லாத சேனைகள் உன் வசப்பட்டு நிற்குமா? உனக்கு அந்தப் பதவியை அளிக்கத் துரியோதனன் விரும்புவான். வாபோவோம் அவனிடம்.

அசு:—நான் இப்போது எனது ஐயனடைந்த பரிபவமென்னும் தீயில் வெந்து சாகிறேன்! அதிலிருந்து எப்படியாவது நான் தப்பவேண்டும்! அதற்குக் குளிர்ந்த நீர் ஸ்நானத்தை விரும்புகிறதுள்ளம்!—செல்வோம்.

(போகிருர்கள்)

## காட்சி 2

(இடம்-குருக்ஷேத்திர பூமியில் வேருெரு பாசறை]

துரியோதனன்:—கர்ணு! இச்சமயம் நீதான் முனேந்து நிற்கவேண்டும்!

### விருத்தம்

கங்கை மகன் சிலேயின் குருவென்பவர்
காதிமலேந்தே கையற்ருர்
இங்கினி யென்னுயிர் நண்ப நீயல்லது
வெல்லவலோருமிலரேயால்
அங்கர் பிரானீவருதினியின்பதி
ஆகுக, அன்பநின்னேடும்
வெங்களம் நேருநுவன் பொருவன்சமர்
வெற்றிகொள்வாகை புனேவேனே.

நண்ப! கங்கையின் மைந்தராகிய பீஷ்மரும் வில்லாசிரியராகிய துரோணரும்பிரிந்ததன்றி விதுரரும் போர்புரிய மறுத்து வில்லே முறித்தெறிந்துவிட்டுப் பலராமருடன் தீர்த்தயாத்திரை சென்ருர். இச்சமயம் நீயே எனக்குற்ற துணே. சேனுதிபதியாயிரு. போரைநடத்து!

கர்ணன்:—அப்படியேசெய்வேன். இதுவரையில் உன் அன்னமுண்டு வாழ்ந்தவனல்லவா நான்?—நான் அந்தக் கடனேக் கழிக்காவிடில்—

### விருத்தம்

ஒருரும் ஒரு குலமும் இல்லா என்னே
உங்கள் குலத்துள்ளோரில்
ஒருவனுக்கித்
தேருருமவர் மனேக்கே வளர்ந்
தவென்னேச்
செம்பொன்மணிமுடி சூட்டியம்புராசி
நீருரும் புவிபாலர் பலரும் போற்ற
நின்னினும் சீர்பெற வைத்தாய் நினக்
கேயன்றி
ஏருரும் சுதிர்முடியா யுற்றபோரில்
யார்க்கினியென் னுயி ரளிப்பதியம்பு
வாயே.

துரி;—நல்லது, நண்ப! இனி நமக்கே ஜயம். ஆகா! துரோணரின் முடிவை நினேத்தால் வருத்தமாயிருக்கிறது. அந்தணராதலின் சோகமுற்றுப் படைதுறந்தார்; பகைவரிடம் அகப்பட்டார். ஒரு க்ஷத்ரிய வீரனுல் இவ்வாறு செய்



சாதிக்கட்டொழித்த வேதிய வீரன்

திருப்பானு? செய்திருக்கவேமாட்டான்; ப்ரசண்டமாருதம் என்று திகைக்கும்படி சினங் கொண்டெழுந்து பகைவரை சின்னபின்னமாக்கியிருப்பான். இல்லையா?

கர்:—விஷயம் வேறு. புத்ர சோகமல்ல காரணம்.

துரி:—அப்படியா! அது யாது?

கர்:—அசுவத்தாமனை அரசனுக்க வேண்டுமென்கிற எண்ணம் அவர்க்குண்டு நீண்டநாளாய்! அதற்கியலாமற்போகவே—அந்தணனாகிய நமக்கினிப் படையெதற்கு... என்றெண்ணிச் செய்த காரியம் இது!

துரி:—ஆச்சரியம்! அப்படிப் பட்ட எண்ணமா அவர்க்கு?

கர்:—ஆம்! துருபதன் இதையறிவான். அதனாலேதான் இவர்க்கு அவன் தன் நாட்டிலே தங்க இடமுந் தரவில்லை.

துரி:—நண்ப, இப்போது ஞாபகத்துக்கு வருகிறது. சிந்துராஜனுக்கு நாம் அபயமளித்தோம். அர்ஜுனன் அவனைத்தாக்கினான். அதுபோது நிகரற்ற வில் வீரராகிய இவர் ஒன்றும் செய்யவில்லையல்லவா?

கர்:—வஞ்சகர்!

அசு:—(கிருபாசாரியருடன் திடீரென்று பிரவேசித்து—) ஆம் அவர் வஞ்சகர்! அவர் வஞ்சகர்!

கிருபா:—கௌரவகுலாதிப! மங்களம்!

துரி:—கிருபாசாரியரா? நமஸ்காரம். அசுவத்தாமா! வருத்தப் படாதே! உன் தந்தை வேதத்தில் பிர்மாவைப் போன்றவர், வில் வல்லமையில் ருத்ரமூர்த்தியைப் போன்றவர், காப்பாற்றுவதில் பரந்தாமனைப் போன்றவர். இவரை இழந்தோம். இந்த துக்கம் தாங்கமுடியாததுதான். பொறுத்துக் கொண்டு இனியாகவேண்டியதைக் கவனிப்போம்—

அசு:—இனியாகவேண்டியதென்ன? நான் உயிரோடிருக்கையில் என்னையின்ற வீரபுருஷன் பரிபவமடைந்தாரல்லவா? இதைப் பார்த்துக் கொண்டிருந்தாரனைவரையும் அதஞ்செய்வேன் இப்போதே! இச்சமயம் எதிர்ப்படுவாரையும் தொலைப்பேன்! படைபூண்டு பாண்டவர் படையில் மதங்கொண்டு அலைபவரையும் பாஞ்சாலன் மரபினரையும்—முன்னொருநாள் பரசுராமன் தன் தந்தையின் பொருட்டுக் கோடரிகொண்டு தரணி வேந்தரை ஒறுத்ததுபோல்—ஒறுத்து இரத்தக் கடலாக்குவேன் இந்தப்புவியை! இது தான் இனிச்செய்யவேண்டியது!

கிருபா:—வேந்தே! இந்த அதிதீவிர பராக்ரமசாலியைச் சேனைத் தலைவனுக்க இது தான் சமயம், கவனிக்கவேணும்.

துரி:—ஆசாரியரே தகும்! தகும்! ஆயினும் செய்வதற்கில்லை. அங்கராஜனுக்கு முன்பே வாக்களித்தாயிற்று! இனியென்னசெய்யலாம்.?

அசு:—(கோபத்துடன்) நல்லது அதுதான் உசிதம்! வேந்தே! இனி இங்கே போர்என்னும்பேரே இல்லாமற் செய்கிறேன்.

விருத்தம்

அவனிதனக் கதிபதியே யறைவன் கேளாய்
அர்ஜுனனுக்கடலாழியவனேயன்றிச்
சிவன் வந்து தேர் விடினும் கொல்வேன் அந்தத்
தேர் நின்றுரிருநவரையும் செங்கோல் வேந்தே
பவனன்சேய் முதலானதுணைவரோரோர்
பகழி முனைதனக்காற்றுர்பரவையாடை
புவனங்களனைத்தையும் நின் குடைக் கிழாக்கிப்
புரிதிறல் வாகையும் நினக்கே புனைவிப்பேனே

கர்ண:—(நகைத்து) அசுவத்தாமா! நீசொன்னபடி செய்ய வல்லவர் இந்த கௌரவப்படையில் இல்லாமற்போகவில்லை. ஞாபகமிருக்கட்டும். சொல்வதெளிது; சொல்லியபடி செய்வதரிது!

அசு:—உண்மை. நான் இறுமாப்பினால் சொன்ன பேச்சல்ல இது. துக்கத்தினால் சொன்னது.

கர்ண:—அப்படியா? துக்கம் கண்ணீரைப் பெருக்கும். வீரம் ஆயுதமேந்தச்செய்யும், இவை மாறியதேன்?

அசு:—ஆகா! என்னசொன்னாய்? அசுவத்தாமனாகிய எனக்கும் கண்ணீரால் துக்கம் நீங்குமென்று சொன்னாய்? தேரோட்டும் சின்ன சாதிக்குரிய புத்தி உன்னை விடவில்லையே!

கர்ண:—என்ன பேச்சுப் பேசினாய்?—ஸூதனானாலென்ன? ஸூதபுத்ரனானாலென்ன? வீரத்வமடைவது அவரவர் முயற்சியாலேயன்றோ?

அசு:—அப்படியா? அப்படியானால் ஏன் போர்க்களத்தை விட்டுப் புறமுதுகிட்டு ஓடிவந்தாய்? ஆசாரியனுடைய சாபத்தால் படைவலியிழந்த நீ கையிற் படைபூண்டு போர்க்களத்திலிருந்தாலும் இல்லாவிட்டாலும் ஒன்றுதானே?

கர்:—ஆகா! நன்றாய்ச் சொன்னாய்—

விருத்தம்

நான்பிடித்த படையாசான் நவின்றதொரு சாபத்தால்
தான்படைத்த பெருஞ்சத்தி தனையிழக்கு மாயினுமவ்
வூன்படைத்த போரிடையே உந்தையைப்போற் படைதுறந்து
வான்படைத்த புகழிழந்து மதிமயங்கி நின்றேனோ'

சொல். போர்க்களத்தில் படைதுறந்து நிற்பது மானமிழந்த மங்கையர் செயலன்றோ? அப்படி நான் செய்தேனோ?


அசு;—(சிரித்து) அடடா! என்ன வீரம்! என்ன தீரம்! நீயே புருஷன் அடே நீயெப்படி மூவுலகமும் புகழும் என் ஐயன் ஆற்றலை அறிவாய் பொய்யறியாத புனிதனாகிய அந்த தருமபுத்திரனே சொல்வன் என் தந்தை படைதுறந்த தன்மையை! ஆனாலுமென்ன?—அச்சத்தினாலாவது துக்கத்தினாலாவது மற்றும் வேறெந்தக் காரணத்தினாலாவது என் தந்தை தம்மைத்தாக்கிய திருஷ்டத்யும்னனுடைய கரத்தைத் தடுக்கவில்லையே! சை ஏ பாணர் குலப்பதரே! இதோ உன் தலைமேல் என் இடக்காலை வைக்கிறேன். தடு பார்க்கலாம்—

துரி:—ஆசார்ய புத்ர! வேண்டாம்.

கர்ண:—(கோபத்துடன்) அடே அந்தண அதமனே! இந்தக்ஷணமே உன்னை இந்த வாளுக்கு இரையாக்கியிருப்பேன். நீ சாதியிற் பெரியவனாயிற்றே என்று தயங்குகிறேன். ஆயினும் என்னை நோக்கி இறுமாப்புடன் தூக்கிய உன் காலை வெட்டி இரண்டுதுண்டாக்குகிறேன் பார்!—

அசு:—அட மூடா! என் ஜாதியா உன்னைத்தடுக்கிறது? இதோ இப்போதே சாதிக் கட்டொழித்த வேதிய வீரனானேன். அதற்கடையாளமான பூணூலை அறுத்தெறிந்தேன். படைதாங்கி வா. போர் புரியலாம். இல்லையேல்—முடிமேல் இருகரங்களையும் கூப்பிக்கொண்டு நில்.

(இருவரும் வாளையேந்திப் போர்புரியத் துணிந்து ஆரவாரம் செய்கின்றனர்.)



Supplement to "JAGANMOHINI" of 1—1—'45



கருணைக் கடலான பகவான், கொலைக் கருவியாகிய வில்லையும் அம்பையும் எடுத்துக் கொண்டான் ராமாவதாரத்திலே, தவறான வழியில் சென்ற தன் மக்களாகிய அரக்கர்களையும் தடுத்து ஆட்கொள்ளும் பொருட்டு, அவர்கள் துயரத்தையும் துடைத்து உய்விக்கும் பொருட்டு. அந்த நோக்கம் நிறைவேறியதும் தன் ஆதிசொரூபமாகிய மகாவிஷ்ணுவாகிறான். இப்போது மகத்தான சக்தி சொரூபங்களாகிய சங்க சக்கரங்களும், கதாயுதமும் வில்லோடு இசைந்து அமைகின்றன. இந்தப் பரிணாம நிலையை ஓவியப் புலவர் ஒருவாறு கண்டு காட்டுகிறார்.


துஷ்ட நிக்ரஹம் செய்யும் ஆயுத பாணியாகத் தோன்றின போதிலும், அந்தத் துஷ்டர்களையும் திருத்திப் பணிகொள்ளவேண்டுமென்கிற பரம கருணையும், அன்பும், 'அவர்களும் முடிவில் உய்ந்து தன்னையடைவார்கள்' என்ற அமைதியான ஸங்கல்பமும் ஜோதிமயமான திருமுக மண்டலத்திலே பிரதிபலிக்கின்றன.


புண்டரீகமலராதன்மேல்
புவனியெல்லாம் படைத்தவனே !
திண்திறலாள் தாடகைதன்
உரமுருவச் சிலைவளைத்தாய் !
எண் திசையும் ஆளுடையாய் !
இராகவனே ! தாலேலோ.
கண்டவர்தம் மனம் வழங்கும்
கணபுரத்து என் கருமணியே !
-குலசேகராழ்வார்-

உந்து மதகளிற்ற னோடாத தோள்வலியன்
நந்தகோபாலன் மருமகளே நப்பின்னாய்!
செந்தாமரைக்கையாற் சீரார் வளையொலிப்ப
வந்து திறவாய் மகிழ்ந்து



இந்த யதி வேறுயாருமில்லை, யதிராஜர் என்று தேசப்பிரசித்தி பெற்ற ஸ்ரீ பகவத் ராமானுஜர்தான்! முகத்தைத்தான் பாருங்கள். இவருள்ளம் கால வெள்ளத்தை எதிர்த்துப் பின்னேக்கிப் போய், கண்ணபிரானுடைய ஆய்ப்பாடியை அடைந்துவிட்டது. அந்த் ஆய்ப்பாடியில்தான் இருக்கிறது, பாடும்போதும், அந்தப் பெண்ணை நமஸ்கரிக்கும் போதும். ஆம் பாடிவந்தது திருப்பாவை. ''உந்து மதகளித்த'' என்ற பாசுரம். கண்ணன் காதலியான நப்பின்னையல்லவா இவர் மனக் கண்முன் தோன்றியவர்? அதே நப்பின்னை வந்து கதவு திறந்ததாகவே தோன்றியது, பெரிய நம்பியின் செல்வப் புதல்வியைக் கண்டதும்.



ஆசார்ய பக்தி

ராமனுடைய பாதரட்சையைச் சிங்காசன மேற்றி வழிபட்ட பரதனை அறியாதார் யார்? அண்ணனிடம் பரதன் கொண்டிருந்த பக்தி அது. கொங்கு பிராட்டியோ ராமானுஜருடைய பாதுகையை திருக்கோவிலாழ்வாரில் வைத்துப் பூஜித்தார். ஆச்சரியமான ஆசார்ய பக்தி இது. மருமகளின் இந்த நிலையை அறியாத மாமி கடுங்கோபம் கொண்டாள். பாதரட்சைகளை எடுத்து எறிந்து விடவேண்டுமென்று போனவளை அவை ஸர்ப்பமாகப் பயமுறுத்தின. முடிவில், குருபக்தியின் மகிமையையும், மருமகளின் மகிமையையும் நன்கே தெரிந்துகொண்டாள்.

# இராமானுஜர் கட்டளையும் உலக நன்மையும்

திவான்பகதூர் வி. பாஷ்யம் அய்யங்கார்

ஸ்ரீ வைஷ்ணவர்கள் தங்கள் திருக் கோவில்களிலும் வீடுகளிலும் பகவதாராதனம் செய்து முடிக்கும் பொழுது சாற்றுமுறையில் பின்வரும் இரண்டு மங்கள சுலோகங்களையும் அநுசந்திக்கிறார்கள்.

*ஸர்வதேச தசாகாலேஷ்*
*அவ்யாஹததபராக்ரமா-*
*ராமாநுஜார்யதிவ்யாக்ஞா*
*வர்த்ததாம் அபிவர்த்ததாம்.*
*ராமாநுஜார்ய திவ்யாக்ஞா*
*ப்ரதிவாஸரம் உஜ்வலா-*
*திகந்தவ்யாபிநீ பூயாத்*
*ஸாஹி லோக ஹிதைஷிணீ.*

இவைகளின் தாத்பர்யமாவது— ஸ்ரீ ராமாநுஜன் ஸ்தாபித்த கட்டளை யாதொரு தடையுமின்றி எல்லா தேசத்திலும் எந்நிலைமையிலும் எக்காலத்திலும் ஓங்கி வளரவேண்டுமென்பதும், அது நாளுக்குநாள் ஒளி மிக்கு திக்குக்கள் முழுவதும் பரவவேண்டுமென்பதும் இப் பிரார்த்தனையின் உத்தேசம். "அது உலக நன்மையைப்பயக்கத் தக்கதல்லவா?" என்று இவைகளிலேயே குறிக்கப்பட்டிருக்கிறது.

மேல் கண்ட பிரார்த்தனை பக்ஷபாதத்தால் செய்யப்படுகிறதா? அல்லது இராமானுஜனுடைய ஆக்ஞை வாஸ்தவத்தில் லோக ஹிதமா? இதை விசாரிப்போம். இரண்டு கேள்விகள் உதிக்கின்றன. முதலாவது,- இராமானுஜன் ஸ்தாபித்த கட்டளை என்பதென்ன? இரண்டாவது,- அதுஉலகநன்மையைப் பயக்கத்தக்கதா? இவ்விரண்டு கேள்விகளையும் விரித்தாராயப்புகில் பெரிய நூலாகும். அதற்கிங்கிடமில்லை. முக்கியமான சில விஷயங்களை மட்டும் இக் கட்டுரையில் தெரிவிப்பேன்.

முதலில் உலக நன்மையை எடுத்துக்கொள்வோம். உலக நன்மையாவது உலகோர் நன்மை என்பது தெளிவு. நன்மையை ஐஹிகமென்றும் ஆமுஷ்மிகமென்றும் இருவகைப்படுத்துவர் சிலர். ஐஹிகமாவது தேகம் படைத்த ஜீவனால் இவ்வுலகில் அடையக்கூடிய சிறப்பு. ஆமுஷ்மிகமாவது இத் தேகங் கழிந்த பின்னர் ஜீவன் பெறக்கூடிய நிலை. ஆனால் இப் பேதம் முக்கியமல்ல. இம்மையும் மறுமையும் தொடர்ச்சியேயன்றித் தனித்தனவையல்ல. ஒருவன் மனோ, வாக், காயங்களாகிற முக்கரணங்களாலும் இம்மையில் என்ன செய்கிறானோ அதின் பயனாகவே அவனுக்கு மறுமையும் ஏற்படுமென்பது துணிவு. ஆகையால் நாம் இங்கு இவ்வுலக நன்மையையே வைத்துப் பேசவமையும். இந் நன்மை எத்தகையது. ஆராயுங்கால் மனிதன் தனித்தவன் அல்லன். எங்கும் அவன், சிறியதோ, பெரியதோ ஒரு கூட்டத்தைச் சேர்ந்தவனாகவே காணப்படுகிறான். ஒருகூட்டத்தைச் சேர்ந்த ஒவ்வொருவனும்அதன் அங்கமாகின்றான். அங்கத்தினருடைய சுகதுக்கங்கள்அநேகமாய்அவர்கள்கூட்டத்தின்நிலையைப்பற்றி நிற்குமேயல்லாது தனித்திருக்க முடியாது. இனி ஒவ்வொரு கூட்டமும் நாளடைவில் பெருகுவது இயற்கை. கூட்டம் பெருத்துச் சமூகமாகிறது. நீண்ட ஆலோசனையில்

மனிதவர்க்கம் முழுவதும் ஒரே சமூகம் என்பதும் மனிதர்களனைவரும்

அதின் அங்கங்கள் என்பதும் புலப்படும். நம்மெல்லோரையும் படைத்துக் காப்பது ஒரே கடவுள் என்பதையும், யாவரும் அவனுடைய பிரஜைகள் என்பதையும்,

எவ்வறிவாளி மறுப்பான்? ஆகவே லோகஹிதம் என்பது மனித சமூகத்திற்குத் திருப்தியையும் சுகத்தையும் மேன்மையையும் அளிக்குமோ அதுவே லோகஹிதம் என்று சொல்லத்தக்கது.

இனி, இராமாநுஜன் கட்டளை என்பது என்ன? தத்வவிசாரம் செய்து அவன் கண்டெடுத்த உண்மையைத் தெரிந்துகொண்டு அதை நடைமுறையாக்க வேண்டுமென்பதே அவனுடைய கட்டளை எனத்தகும். ஆகில், அவ்வுண்மை என்ன? உயிருள்ள சேதனவர்க்கமும் உயிரில்லாத அசேதனவர்க்கமும் ஒன்றுகூடிப் பல்வேறு பெயர்களோடும் உருவங்களோடும் நமக்குத் தென்படும் இவ்வுலகம் அவ்விரண்டு தத்வங்களிலும் "உடல்மிசை உயிரெனக் கரந்து எங்கும் பரந்து" நின்று தனக்கே உரித்தான விசேஷ ஞான சக்தியாதிகளால் அவைகளை தரித்தும், விஸ்தரித்தும், சுருக்கியும், பேறுதந்தும் ஆக்ஷிசெய்யும் "உயர்வற உயர் நலமுடை", ப்பரமாத்மாவின் பிரிவில்லாச் சரீரமாய், ஞான பூர்த்தியில் அவனென்றே பாவிக்கவும் சொல்லவும் தக்க அவயவிப் பொருள், என்பதே அவன்போதித்த உண்மையின் சாரம். ஸகல சாஸ்த்ரங்களிலிருந்து இச்சீரியவர்த்தத்தை கடைந்தெடுத்து அதை அசைக்கவொண்ணாதபடி நிலைநாட்டித் தன் "வண்மையினாலும் மாதகவாலும் மதிபுரையுந் தண்மையினாலும்" உச்சநீச பேதமின்றி அனைவர்க்கும் அள்ளி இறைத்த "அற்புதன் செம்மை இராமாநுஜன்" ஆக்கிய கீர்த்தியும் எடுத்துரைக்கப்பாலதோ?

மேலும், அவன் தான் கண்ட தத்வார்த்தத்திற்கேற்ற புருஷார்த்தத்தையும் நிச்சயித்தான்.

மனிதர்கள் எதை அடைய விரும்புகிறார்களோ அதுவே புருஷார்த்தம் எனப்படும்,

இதை தர்ம, அர்த்த, காம, மோக்ஷமென்று நால்வகைப்படுத்தி இவைகளில் நான்காவதான மோக்ஷமே சாச்வதப்பதவியாகையால், அதுவே சிறந்ததென்றனர் முதியோர். இராமாநுஜன் இதை இன்னும் விசதப்படுத்தினான். தன்னலம் கலசாத நிரந்தர நித்ய பகவத்குணானுபவமே உத்தம மோக்ஷநிலையென்றும், அக்குணானுபவத்தால் ஏற்படும் அன்பின் மிகுதியால் தூண்டப்பட்டு அவசமாய்ச் செய்யும் கைங்கரியமே உத்க்ருஷ்ட புருஷார்த்தமென்று மறுதியிட்டான். மேலும்,

பகவத் கைங்கரியத்தின் எல்லைநிலம் அவனுடைய ப்ரஜைகளுக்கு அன்போடும் விச்வாஸத்தோடும் செய்யும் தொண்டென்றும் விளக்கினான். தன்னலத்தைத் தவிர்த்து பரிசுத்த மனமுடன் பாகவத கைங்கரியத்திலீடுபட்டவர்களுக்கு இம்மையும் மோக்ஷத்தோடொக்குமென்றும் கோஷித்தான்.

இப்பொழுது, மேல்கண்ட சாஸனங்களிலிருந்து கிடைக்கும் நன்மைகளைக் கவனிப்போம். முதலாவதாக நம்மையும் மற்றெல்லோரையும் அடக்கிய இவ்வுலகம் ஆதிகாரணமாகிய ஸர்வேச்வரனுடைய விபூதியாய் அவனுக்கே உரித்தாகையால் மனிதனுடைய பகைக்கும் விநாசத்திற்கும் அடிக் கிழங்கான "நான்" என்கிற அகங்காரமும் "எனது" என்கிற மமகாரமும் ஒழியும். இவ்வர்த்தத்தையே

"வீடுமின் முற்றவும், வீடு செய்து,
உம்முயிர் வீடுடையானிடை வீடு
செய்மினே"

என்றும்,

"நீர் நும தென்றிவை வேர்முதல்
மாய்த்து இறைசேர்மின் உயிர்கத
னேர்நிறையில்லே"

என்றும் முன்னிலையிலுரைத்தார் நம்மாழ்வார். மேலும், உலகத்தினுடைய ஒருமையும் பொதுத்தன்மையும் "அவன் முற்றிலடங்கே" என்று ஆழ்வார் உரைத்தபடி அம்முற்றில் நாம் ஒடுங்கவேண்டும் அவசியமும்

அதிலிருந்தே வெளியாகும். நாமனை வரும் "ஏகமேவாத்விதீயம்" என்று சொல்லப்பட்ட ஒரே ச்ருஷ்டிகர்த்தாவின் பிரிவில்லா அவயவங்கள் என்பதிலிருந்து இடையில்லாக் கூட்டுணர்ச்சியும் பரஸ்பர ஆதாரத்தன்மையும் ஏற்படும். எல்லோரும் ஈசுவரனால் வ்யாபிக்கப்பட்டவர்களாகையால் ஒவ்வொருவனும் மற்றவர்களை ஈசுவரவடிவங்களாகப்பாவித்து ஈசுவரனோடொக்க அவர்களுக்குத் தொண்டாற்றித் தன் பிறவிப்பயனை அடையவேண்டுமென்னும் ஞானமும் பரவும்.

முக்கியமாய், இராமானுஜனுடைய ஸந்தேசம் இக்காலத்தினர் அறியும்படி நன்றாய் ப்ரசாரம் செய்யப்பட்டு எல்லா தேசங்களிலும் பரவினால் உலக யுத்தங்களின் அடிவேர் அறும். பொருளாதாரக் கோளாறுகளே இந்த யுத்தங்களுக்காதிகாரணம். பணக்காரர்களும் ஏழைகளும் எப்பொழுதுமே இருந்திருக்கிறார்கள். ஆயினும், மேனாடுகளில் இயந்திரங்கள் தொழிற்சாலைகள் முதலான பெருவாரி முதலாளி ஸ்தாபனங்கள் ஏற்பட்ட பின்பு சிலர் அதிக பணக்காரர்களாயும் பெரும்பான்மையோர் தொழிலற்று கேவலம் ஏழைகளாயும் ஆனதுமன்றி இவ்விரு திறத்தாருக்குள் கக்ஷி ப்ரதிகக்ஷியும் மாச்சரியமும் அதிகரித்து வருகிறது. அந்நாடுகளில் சுதந்தரவாதத்தில் பிறந்த பொருளாதாரத் தனியுரிமைக் கக்ஷி சிலகாலம் வலுத்திருந்து இப்பொழுது பொது உரிமைக் கக்ஷியின்முன் பின்னடைந்து வருகிறது. பொது உரிமைக் கக்ஷியோ உறுதியான அடிப்படையில்லாமல் ஒன்றுக்கொன்றுமுறண்பட்ட அநேகவிதங்களாய் பிளவுபட்டு பெரும்பாலும் வன்மையையும் புரட்சி மார்க்கத்தையும்பற்றி நிற்கிறது. இதின்பெயரால் எத்தனை அக்கிரமங்கள் நடந்தன, நடந்துவருகின்றன! இது தனியுரிமையை முழுதிலும் அழிக்க முயல்கின்றது. ஆனால் அது முடியாதகாரியம். தனியுரிமையை அடக்கி நல்வழிப்படுத்தி ஆள்வதே அறிவின் பயனாகும். இதைப் பலவந்தமில்லாமல் ப்ரசாரம் முதலிய ஸாத்வீக முறையினாலேயே சாதிக்கலாம். உத்தம வழி இதுவே. இதற்கு உபநிஷத்துக்களும் அவைகளை அநுசரித்து இராமாநுஜனும் போதித்த தத்வாத்தங்கள் கற்படையாய் உதவும்.

இவ்வர்த்தத்தையே இக்காலத்தில் "Trusteeship" என்னும் பெயரால் காந்தியடிகளும் வற்புறுத்தி வருகிறார்.

இராமாநுஜனுடைய கட்டளை எத்துணை சீரியதென்றும் உலகத்தில் எவ்வளவு நலத்தை உண்டாக்கக்கூடியதென்றும் இப்பொழுது விளங்கலாம். அது திக்குக்களின் முடிவுவரையில் பரவவேண்டுமென்று வாயால் சொல்வதால் மட்டும் பயனில்லை. இராமாநுஜனடியார்கள் அதை உண்மையாய் அனுஷ்டித்து உலக முழுதும் பரவச்செய்யவேண்டும். அதுவே உலக நன்மையை விளைக்கும்; சிறந்த கைங்கரியமுமாகும்.

**பூமன்னுமாது பொருந்திய மார்பன் * புகழ்மலிந்த**
**பாமன்னுமாற னடிபணிந் துய்ந்தவன் * பல்கலையோர்**
**தாம்மன்ன வந்த விராமாநுசன் சரணாரவிந்தம்**
**நாம்மன்னிவாழ * நெஞ்சே சொல்லுவோமவன் நாமங்களே.**

**பொருளும் புதல்வரும் பூமியும் * பூங்குழலாருமென்றே**
**மருள்கொண் டிளைக்கும் நமக்கு நெஞ்சே! * மற்றுளார்தரமோ?**
**இருள்கொண்ட வெந்துயர்மாற்றித் தன்னீறில் பெரும்புகழே**
**தெருளுந் தெருள்தந்து * இராமாநுசன் செய்யும் சேமங்களே.**

—*இராமாநுச நூற்றந்தாதி*

# கந்தருவர்

ராவ்சாஹேப். எஸ். வையாபுரிப்பிள்ளை

சில வருஷங்களுக்கு முன் தமிழ் மக்கள் செய்யுள் என்ற சொல்லைக் கேட்டவுடனேயே மிக்க வெறுப்புக் காட்டி வந்தனர். பெரும்பாலும் செய்யுளிலுள்ள நூல்களைக் கற்பவர் இல்லையென்றே சொல்லலாம். ஆதலால் செய்யுள் வளர்ச்சி குன்றியிருந்தது. இவ் வெறுப்பு நீங்கும்படி செய்தது ஸ்ரீ சுப்பிரமணிய பாரதி, ஸ்ரீ தேசிகவினாயகம்பிள்ளை முதலியோருடைய அரிய பாட்டுக்களேயாகும். இப் பாட்டுக்களில் நவீனக் கருத்துக்களும் நோக்கங்களும் உள்ளக்கிளர்ச்சிகளும் நிரம்பியுள்ளமை இவற்றை நம் மக்கள் போற்றிவருவதற்குப் பெருங்காரணமாயிருந்தது. பாட்டுக்களைக் காட்டினும் வசன நூல்களே இப்போதும் அதிகமாக விரும்பிக் கற்கப்பட்டு வருகின்றன.

பண்டைத் தமிழகத்தின் நிலைமை முற்றும் வேறாக இருந்தது. வசனம் என்பதே முற்காலத்துப் பெரும்பாலும் இல்லை. செய்யுள்-நூல்களே மிகுதியும் பரவியிருந்தன. நூல்களுக்குரிய விஷயங்கள் காதல் வீரம், ஈகை என்ற மூன்று பெரும் பகுதியில் அடங்கும். இப் பகுதிகளைக் குறித்து எழுந்த செய்யுட்களே பண்டைக்காலத்துத் தொகை நூல்களில் காணப்படுவனவாம். செய்யுள் இயற்றும்போது கவிஞர்கள் சில மரபுகளைக் கையாண்டனர். இம் மரபுகளின் இயல்புகளை விளக்குதற்கே தொல்காப்பிய ஆசிரியர் தமது பொருளதிகாரத்தை அமைத்தனர். அகத்திணையியல், களவியல், கற்பியல், பொருளியல், மெய்ப்பாட்டியல், செய்யுளியல் முதலியன காதற்செய்யுள் பற்றிய மரபுகளை உணர்த்துகின்றன. காதற்செய்யுள் நயம்பெறவேண்டுமாயின் அந்நிகழ்ச்சியில் பங்கு கொள்ளுந் தலைவனும் தலைவியும் சுதந்திரர்களாக இருத்தல் வேண்டும். இச் சுதந்திரம் இல்லையெனில் காதல் நிகழ்ச்சிக்குப் பெரும்பாலும் இடமேயில்லை என்று சொல்லலாம். யாதோர் இடையூறும் இல்லாதபடி யதேச்சையாய் ஒருவரையொருவர் காதலித்த செய்தியைக் கூறுமிடத்துத்தான் கவிஞன் காதலின் பெருநலத்தை மனக்கண்ணால் நன்குணர்ந்து சித்திரிக்க இயலும். ஆகவே, தொல்காப்பியர் முதலிய இலக்கண ஆசிரியர்கள் சுதந்திரத்தோடுகூடிய ரகசியக்காதல் நிகழ்ச்சியைக் களவு எனத் தனிப்படப் பகுத்துக் கூறினார்கள். இக் காதல் நிகழ்ச்சிக்குப் பின் மணம் புரிந்து வாழும் வாழ்க்கைநிலையைக் கற்பு எனப் பகுத்தனர், கற்பொழுக்கம் நிகழுகின்ற இடத்திலும் தலைவன் சுதந்திரனாகவும் தலைவி சுதந்திரமற்றவளாகவும் கொள்ளப்படுகின்றனர். இது நமது நாட்டின் வழக்கத்தோடு பொருந்த அமைந்தது. சுதந்தரத்தோடு நிகழும் காதல் ஒழுக்கம் தெய்வத்தன்மையுடையதாகக் கவிஞர்கள் கருதினார்கள். தெய்வப் பிறப்பினருள் ஒருவகையாராகிய கந்தருவர்கள் இவ்வகைக் காதல் ஒழுக்கத்தினராக வடமொழி நூல்கள் கூறுதலினாலே இதனைக் கந்தருவ ஒழுக்கம் என தமிழ் மூதறிஞர்கள் பெயரிட்டனர். இதனைத் தொல்காப்பியனாரும் இறையனாரும்

மறையோர் தேளத்து
மன்றல் எட்டனுள்

துறையமை நல்யாழ்த்
துணைமையோர் இயல்பே
(யாழ்த்துணைமையோர்-கந்தருவர்)

எனவும்

அன்பின் ஐந்திணைக் களவெனப்படுவது
அந்தணர் அருமறை மன்றல் எட்டனுள்
கந்தருவ வழக்கம் என்மனார் புலவர்

எனவும் முறையே கூறினர். கம்பரும் (சூர்ப்பணகைப்-54)

காந்தர்ப்பம் என்பதுண்டால்
காதலிற் கலந்த சிந்தை
மாந்தர்க்கும் மடந்தை மார்க்கும்
மறைகளே வகுத்த கூட்டம்

எனப் பாடினர். கந்தருவமணத்தின் இயல்பை

ஒன்றே வேறே என்றிரு பால்வயின்
ஒன்றி யுயர்ந்த பால தாணையின்
ஒத்த கிழவனும் கிழத்தியுங் காண்ப

என்ற சூத்திரம் விளக்குகிறது.

க்ந்தருவ மணம் வடநூலுள்ளும் எண்வகை மணங்களில் ஒன்றுதல் காணலாம். கௌடில்யத்தில் (III, 2) எண்வகை மணங்களும் விவரிக்கப் பட்டிருக்கின்றன.

இச்சாயாந்யோந்ய ஸம்யோக:
கன்யா யாஸ்ச வரஸ்யச
காந்தர்வ ஸதுவிக்ஞேயோ
மைதுந்ய : காமஸம்பவ:
(III, 32)

என்று இம் மணத்தை மனு விவரித்துள்ளார்.

மேற்கூறியனகொண்டு பண்டைத் தமிழ்ச் செய்யுட்களுக்கு உயிர்நிலையாய் உள்ளது இக் கந்தருவ ஒழுக்கம் என்பது விளங்கும். ஆகவே, கந்தர்வர்களுடைய வரலாற்றை வடநூல் கொண்டும் தமிழ் நூல் கொண்டும் முறைப்பட அறிதல் மிகவும் அவசியமாகும்.

ரிக்வேதத்தில் இருபது இடங்களில் கந்தர்வ என்ற சொல் வழங்கப்பட்டுள்ளது. இவற்றுள் மூன்று இடங்களில்மாத்திரமே பன்மைப்பிரயோகம் உள்ளது. ஏனைய இடங்களிலெல்லாம் இச் சொல் ஒருமையிலேயே வருகின்றது. அதர்வவேதத்தில் முப்பத்திரண்டு இடங்களில் இச் சொல் வழங்கப்பட்டுள்ளது; இவற்றுள் பதினாறு இடங்கள் பன்மை.

பாரசீகரது அவெஸ்தாவில் சில இடங்களில் 'கந்தரவ' என்று ஒரு பூதத்தின் பெயர் வந்துள்ளது. இவ்விடங்களிலும் ஒருமையாகவே உள்ளது.

பிற்பட்டெழுந்த ஸம்ஹிதைகளிலே தேவர்கள், பிதிரர்கள், அசுரர்கள் என்பவர்களையடுத்து ஒரு தனி இனத்தவராகக் கந்தருவர்கள்குறிக்கப்பட்டுள்ளார்கள். இவ்வினத்தில் இருபத்தேழுபேர் அடங்கியுள்ளனர் என்று சிலஎஜுர்ப்பகுதிகள் தெரிவிக்கின்றன; 'ஆறுயிரத்து முந்நூற்று முப்பத்து மூன்று பேர்கள் உள்ளனர்' என்று அதர்வவேதம் தெரிவிக்கின்றது. அப்பகுதி வருமாறு: 'பிதுர்க்களும் தேவஜனங்களும் தனித்தனியாய் எல்லாத் தேவர்களும் பிரமசாரியை அனுசரித்துச் சூழுகிறார்கள். ஆறுயிரத்து முந்நூற்று முப்பத்து மூன்று கந்தர்வர்களும் தேவர்களும் அவனை அனுசரித்துச் சென்றுள்ளார். அவன் எல்லாத் தேவர்களையும் தவத்தால் பூரணஞ் செய்கிறான் (XI, 5, 2)'

இவற்றையெல்லாம் நோக்கினால் பூர்வத்தில் ஒருவகைக் கொள்ளப்பட்ட நிலைமையிலிருந்து ஒரு கணம் அல்லது ஓர் இனமாக இக்கொள்கை வ்ரவர விருத்தியடைந்துள்ளமை தெளியலாம்.

கந்தர்வர் என்பது இந்தியர்களும் ஐரேனியர்களும் ஒன்றாக வாழ்ந்த காலத்தில் தோன்றிய கருத்து; ஆதலால் அதன் உண்மையியல்பு அறியக்கூடாதபடி இருளில் புதைந்து கிடக்கிறது. அன்றியும் ரிக்வேதத்திலிருந்து கிடைக்கும் சான்று மிக அற்பமாக இருத்தலாலும் இக்கருத்தின் ஆதியியல்பு உறுதியாய் அறிந்து கொள்ள முடியவில்லை. இரண்டு முதல் ஏழாம் மண்டலம் இறுதியாகவுள்ள ரிக்வேதப்பகுதியில் இப்பெயர் ஓரிடத்தில்தான் காணப்படுகிறது. எட்டாம் மண்டலத்தில் இரண்டிடங்களில் வந்துள்ளது; ஆனால் இந்திரனுக்குப் பகையானவன் என்ற கருத்தில் வருகிறது. ஒரு சில இடங்களில் இச்சொல் இனத்தைக் குறிக்கும் பொதுப்பெய

ராக அமைந்துள்ளது. ஏகதேசமாக விசுவாவசு (எல்லாப் பொருளும் உடைய) என்ற அடைமொழியோடு இது வழங்கியுள்ளது. உதாரணமாக அதர்வவேதத்தில் 'மேகமயமே! ஒளித்திரளே! நட்சத்திரியமே! விசுவாவசுவானகந்தருவனை நாடுந்தேவர்களே! உங்களை நான் போற்றுகிறேன்'(II, 2, 4)என வந்துள்ளது. இவ் அடைமொழி ஓரிடத்தேதனித்து நின்று கந்தருவனைக் குறிக்கிறது. பிற்பட்டெழுந்த ஸம்ஹிதைகளிலும் பிராஹ்மணங்களிலும் இலக்கியங்களிலும் கந்தருவர்களில் ஒருவனுக்குரிய பெயராக இது வழங்கப்படுகிறது.

தமிழ் நூல்களுள் கடைச் சங்க இலக்கியமாகியபுறநானூற்றுக் காப்புச் செய்யுளில்

'பதினெண் கணனும் ஏத்தவும் படுமே'

என வந்துள்ளது. இதன் உரை பதினெண்கணங்கள் இவையென விளக்கி அவற்றுள் ஒன்றாகக் கந்தருவகணத்தையும் சேர்த்துக்கூறும். ஆனால் இக்கணத்தில் உட்பட்ட கந்தர்வர்கள் எத்தனைபேர் என்பதை இவ்வுரை விளக்கவில்லை. திவாகரமும் இப்பதினெட்டுக் கணங்களைப் பன்னிரண்டாவது தொகுதியில் விளக்குகிறது. இவ்விளக்கத்துள் சாரணர், போக பூமியர் முதலியன சில ஜைனசமயத்துக்குரிய கருத்துக்கள் எனத் தோன்றுகிறது.

ரிக்வேதத்தின்படி வாயுமண்டலத்தின் உச்சியில் கந்தருவன் உள்ளான்; அவனே திசைகளை அளப்பவன் (X, 139, 5); அளத்தற்கரிய வாயுமண்டலத்தில் அவன் காணப்படுகிறான் (VIII, 66, 5); அவன் தெய்வப்பிறப்பினன்; வானமண்டலத்தின்மேல் நேராக நிற்கிறான் (X, 123, 7); அவன் அப்ஸரஸ்களால் மகிழ்ந்து நோக்கப்படும்காதலனாயுள்ளான் (X, 123, 5). இனி அதர்வவேதத்தின்படி, கந்தருவன் வானுலகத்து உள்ளான்(II, 2, 1); வானின் ஒளி வகைகளோடு அவன் சேர்த்துக் கூறப்படுகிறான்; சூரியனோடும், சூரியபக்ஷியோடும், சூரியன் குதிரையோடும், சூரியனுக்குச் சமானமான ஸோமரஸத்தோடும், பொன்னிறப்பறவையோடும், வருணனது தூதனோடும், அவன் இணைக்கப்படுகிறான். அன்றியும் இருபத்தேழுநட்சத்திரங்களோடும், முக்கியமாக ரோஹிணியோடும், கூட்டியுரைக்கப்படுகிறான் (XIII. 1, 23). நற்பேறு பெற்றோர் கந்தருவர்களோடு வசிக்கிறார்கள். (IV, 34, 3)

இவன்ஸோமமூலிகையோடு இயைபுடையவன்என்பதுரிக்வேதம்9-வது மண்டலத்தால் விளங்கும். ஸோமமுள்ள இடத்தை இவன் காவல் புரிந்து தேவஜாதியாரை ரக்ஷிக்கிறான் (ரிக் IX, 83, 4). இதுபெருகி வளரும் வண்ணத்தை வான மண்டலத்தினின்று இவன்நோக்கிக்கொண்டிருக்கிறான் (IX, 85, 12). பர்ஜன்யன், சூர்யபுத்ரி என்னும் இவர்களோடு கந்தர்வர்களும் ஸோமத்தை வளர்த்துவருகிறார்கள் (IX, 113,3). கந்தருவன் வாயின் வழியாகத் தேவர்கள் தங்கள் ஸோமபானத்தைப் பருகுகிறார்கள் (அதர்வVII, 77, 3). கந்தருவர்கள் தேவர்களுக்காக ஸோமத்தை வைத்திருந்தார்கள். ஆனால் அதனைக் களவாட விட்டுவிட்டமையால் இவர்களுக்குத் தண்டமாக ஸோமபானம் விலக்கப்பட்டது. ஸோம மூலிகையோடு தொடர்பு இருத்தலினால் பொதுவாக மூலிகைகளின் இயல்புகளை அறிந்தவர்கள் என்று இவர்கள் வர்ணிக்கப்படுகிறார்கள் (IV. 4. 11) யாருந் தொடவிடாதபடி ஸோமத்தைக் கந்தருவன் காத்து வந்தமையால் இந்திரன் இவன்மீது பகை கொள்ள நேரிட்டது. சில தேவர்கள் இவனை வெல்லும்படியாக இந்திரனைப் பிரார்த்திக்கிறார்கள். 'பருந்து வடிவில் வந்த கந்தர்வ விசுவாவசுவின் கைக்ககப்படாது தவிர்ந்து கொள்' என ஸோமம் பிரார்த்திக்கப்படுகிறது. எனினும் கந்தர்வர்களிடையில் உள்ளதாகவும் கந்தர்வ

விசுவாவசுவினல் களவாடப்பட்டதாகவும் ஸோமம் குறிப்பிடப்படுகிறது. பெண்கள்மீது கந்தர்வர்களுக்கு இச்சை மிகுதியாக உண்டானபடியால், வாக்குத்தேவதையை அனுப்பி அவள்மூலம் தேவர்கள் ஸோமத்தைப் பெற்றுக்கொண்டதாக ஐதரேயப் பிராஹ்மணம்முதலியன தெரிவிக்கின்றன. ஸோமத்தைக் களவாடிச் சென்ற க்ருஸிநு (ரிக் IV, 27. 3) ஒரு கந்தருவன் என்று கருத இடமுண்டு.

ஒரு சிலவிடங்களில் கந்தர்வன் நீரில் வாழ்பவனைக் குறிக்கப்படுகிறன். நீர்வாழ் கந்தருவனும் நீரரமகள் ஒருத்தியும் யம, யமி என்பவர்களின் பெற்றோர்களாக ரிக்வேதத்தில் (X, 10, 4) சொல்லப்பட்டுள்ளார்கள். நீரிலே பெய்த ஸோமரஸம் நீர்வாழ் கந்தருவன் எனச் சொல்லப்பட்டுள்ளது (IX, 86, 36). அப்ஸரஸுகளோடுசேர்த்துக் கூறப்பெறும் கந்தர்வன் நீரில்வாழ்பவன் (அதர்-II, 2, 3).

கந்தர்வனும் நீரரமகளுங் கூடுங் கலவி திருமணத்திற்கு லக்ஷ்யமாகவுள்ளது. ஆதலால் கந்தருவன் திருமணச் சடங்குகளோடு தொடர்புடையவனகக்கொள்ளப்படுகிறன். மணமாகாத கன்னிப்பெண் கந்தர்வனுக்கும் ஸோமனுக்கும், அக்னிக்கும் உரியவள் என்பது வடநூல் மரபு. கணவனது எதிராளியாகக் கந்தர்வவிசுவாவசு கருதப்படுகிறன். பிற்காலத்து நூல்களிலே கந்தர்வர்கள் பெண்களைக் காதல் செய்யும் ஒழுக்கம் பல இடங்களில் வந்துள்ளது. உதாரணமாக ஆதிகாவியமாகிய ராமாயணத்தில் (I, 172, 19) இவர்களது ஒழுக்கத்தைக் கருத்துட்கொண்டு ஐந்தாவது வகையாய் நிகழும் காதல்மணம் கந்தருவ மணம் என்று அழைக்கப்பட்டுள்ளது. அபிவிருத்திக்குரிய தெய்வங்களாகக் கந்தர்வர்களும் அப்ஸரஸ்களும் போற்றப்படுகிறர்கள். மகப்பேறு வேண்டுவோர் இவர்களை வணங்குதல் மரபு.

கந்தர்வர்கள் தெய்வலோகத்து இசைவாணர்கள் என்ற கருத்துப் பாரதத்திலும் அதற்குப் பிற்பட்டெழுந்த நூல்களிலும் மட்டுமே காணப்படுகின்றது.

சித்திரசேனன் என்ற கந்தருவ அரசன் வீணை முதலிய கருவிகள் மூலமாயும் சாரீர மூலமாயும் அர்ஜுனனுக்கு அமராபதியில் சங்கீதம் கற்றுக்கொடுத்ததாக மகாபாரதம் கூறும். விசுவாவசுவும் நாரதரும் நகுஷனது அரண்மனையில் சங்கீதம் பயிற்றுவோராக இருந்தனர் என்பதும் பாரதம் கூறும் செய்தியே. நாரதர் முதலில் கந்தருவர் எனக் கருதப்பட்டுப் பின்னர் ரிஷி கணத்துள் கொள்ளப்பட்டனர். கந்தருவம் என்ற சொல்லுக்கே சங்கீதம் என்பது பொருளாய் முடிந்தது. கந்தருவவேதம் என்பது ராமாயணத்தில் (III, 91, 15) இசை நூலுக்குப் பெயராக வந்துள்ளது. ரிக்வேதம் முதலியவற்றில் இவர்கள் இசைவல்லவர் என்ற குறிப்புப் போலும் காணப்படவில்லை.

கந்தர்வர்களுடைய தோற்றத்தைக் குறித்து ஒரு சில குறிப்புக்களே நூல்களில் காணப்படுகின்றன. ஓரிடத்து வாயுவைப்போன்ற தலைமுடியை உடையவர்கள் (ரிக் III, 38, 6), என்றும், ஒளி பொருந்திய ஆயுதங்களையுடையவன் கந்தருவன் (ரிக் X, 123, 7) என்றும் ரிக்வேதம் கூறும். அதர்வவேதத்தில் சடைபற்றிய தலைமுடியுடையவர்கள் என்றும் பாதி விலங்கு வடிவமுள்ளவர்கள் என்றும் மக்களுக்குத் தீங்கை விளைவிப்பவர்கள் என்றும் கூறப்படுகிறர்கள். அழகுள்ள வடிவுள்ளவர்கள் என்று சதபதபிராஹ்மணம் கூறும். நறுமணமுள்ள ஆடையை அணிந்தவர்கள் என்று ரிக்வேதமும் [X, 123, 7), பூமியின் நறுமணங்கொண்ட சரீரமுடையவர்கள் என்று அதர்வவேதமும் (XII. 1, 23) கூறுகின்றன. இதனல் நறுமணம் என்று பொருள்படும் கந்த என்ற சொல்லின் அடி

யாக இவர்கள் பெயர் பிறந்திருக்கலாம் என்று ஊகித்தல் கூடும்.

இதுவரையும் வடநூல்களில் காணப்படும் விஷயங்களை நோக்கினோம். தமிழ் நூல்களில் காணப்படுவன ஒரு சில உள்ளன. தமிழாசிரியர்களாலும் 'கந்தர்வ விவாகம்' கூறப்பட்டுள்ளமை மேலே கூறினோம். கந்தர்வர்கள் பதினெண் கணத்தைச் சார்ந்தவர்கள் என்பதும் புறநானூற்றால் அறிந்தோம். இவர்கள் இசையில் வல்லவர்கள் என்பது ஆசிரியர் தொல்காப்பியரால் குறிக்கப்பட்டுள்ளது. 'துறையமை நல்யாழ்த்துணைமையோர்'

என்று அவர் கூறியது இதற்குச் சான்று. கந்தர்வவேதம் என்று வடநூலார் குறிப்பதுபோலவே தொல்காப்பியனாரும் இசை நூலை 'மறை' என்று குறிப்பர். 'நரம்பின் மறைய என்மனார் புலவர்' என்று அவர் கூறியது இங்கே தக்கசான்றாவது. இக்குறிப்புக்கள் தமிழிலக்கிய வரலாற்றை உணர்வதற்குப் பயன்படவல்லன. ஓர் உதாரணம் :

தொல்காப்பியர் கந்தர்வர்களை இசைவாணராகக் குறிப்பிடுதலினாலும் கந்தர்வ வேதத்தை 'நரம்பின் மறை' என்று வேதத்திற்குரிய சொல்லாற் கூறுதலினாலும் அவரது காலம் வியாசபாரதமும் வால்மீகி ராமாயணமும் தோன்றிய காலத்திற்குப் பிற்பட்டதாகலாம் என்று ஊகிக்க இடமுண்டு. பாரதம் கி. மு. 400—க்கும் கி. பி. 400 க்கும் இடைப்பட்ட காலத்தில் வளர்ந்து முற்றியிருக்கவேண்டுமென வடநூலாராய்ச்சியாளர் கூறுகின்றனர் (Winternitz History of Indian Literature Vol. I, P 465). இவ்விரண்டு காலத்திற்கும் நடுப்பகுதியாகிய கி. பி. முதல் நூற்றாண்டில் பாரதம் பெரும்பான்மையும் முற்றியிருக்கலாம். ராமாயணம் வளர்ந்து முற்றிய காலம் கி. பி. 2-ம் நூற்றாண்டாகக்கொள்ளலாம் என்பர் (Ibid P 516). அங்ஙனமாயின், தொல்காப்பியர்காலம் கி. பி. இரண்டாம் நூற்றாண்டிற்கு முற்பட்டதன்று என ஒருவாறு துணியலாம்.

குறிப்பு:- மக்டானல் இயற்றிய 'வேதத்துச் சரிதைக்கதைகள்' என்ற நூலின் துணைகொண்டு இஃது எழுதப்பெற்றது.

## இன்னும் மறையவில்லை!






இந்தத் தலைப்பு மோகினி வாசகர்களுக்குக் கொஞ்சம் திகைப்பை உண்டு பண்ணக்கூடும். "இது என்ன, ஒரு சேராச் சேர்த்தி?" என்று நினைக்கவும் தோன்றும். "ஸ்டாலின், நாஸி, சர்ச்சில் என்று சொன்னால் அது எப்பேர்ப்பட்ட சேர்த்தியோ, அப்பேர்ப்பட்ட சேர்த்திதான் இந்தக் கட்டுரையின் தலைப்பும்"—என்றே அருகில் உள்ள நண்பர் ஒருவர் சொல்லுகிறார். வேறொரு நண்பர் கேட்கிறார்: "காப்பி ஏன் அப்படி நடுவில்வந்து குந்திக்கொண்டது? காந்தி காப்பி சாப்பிடமாட்டார்: சாப்பிடுகிறவர்களையும் தனது புதிய தொண்டர் படையில் சேர்த்துக்கொள்ளவும் மாட்டார். கம்பருக்கோ காப்பிக்கள்ளே தெரியாது!"

நான் சம்பந்தப்பட்ட வரையில், இங்கே சேராச் சேர்த்தி ஒன்றுமில்லை. நான்தான் சேர்த்துவிட்டேனே என்வாழ்க்கையில் கம்பனையும் காப்பியையும் காந்தியையும். எனது மூன்று காதல் அல்லவா? பாரதியார் தமது மூன்று காதலைப் பாடியிருக்கிறாரென்பது உங்களுக்குத் தெரியாதா?

பிள்ளைப் பிராயத்திலேயே பாரதியார் மயங்கிவிட்டாராம் ஸரஸ்வதியைக் கண்டு. பிறகு வயது முதிர்ந்ததும் செல்வம் சேர்க்க வேண்டுமென்ற ஆசையும் அவசியமும் ஏற்பட, லக்ஷ்மியின் பெண்மை மயக்கிவிட்டதாம்இவர் உள்ளத்தை. வயது முதிர முதிர, காளி மயக்கிவிட்டாளாம் தேசபக்தி நிறைந்த அந்த உள்ளத்தை. எனவே ஸரஸ்வதி—காதல், லக்ஷ்மி—காதல், காளி-காதல் என்ற மூன்று காதலைக் குறித்துப் பாரதியார் பாடியிருக்கிறார். அவரைப் பின்பற்றி நானும் என்னுடைய மூன்று காதலைப்பாட ஆசைப்பட்டேன். பாட்டு வரவில்லை; பாட வேண்டிய அரிய பெரிய விஷயத்தை வசனத்திலாவது சொல்லிவிடலாமென்று நினைக்கிறேன்.

வசனம்தான் சரியாக வருகிறேனென்கிறதா? பாரதியாரின் ஞான ரதமா காத்திருக்கிறது என் தலைவாசலிலே? அவரே தம்முடைய அந்த ரதத்தைக் குறித்துத் திருப்தியில்லாமல் பேசுகிறார்:—"...அத்தனை தீவிரமுடையதன்று. எளிதாக நெடுந்தூரம் கொண்டுபோகத் தக்கதுமன்று. கொஞ்சம் நொண்டி, என்ன செய்யலாம்? இருப்பதை வைத்துக் கொண்டுதானே காரியம் (காலம்?) கழிக்கவேண்டும்?"

என்னுடைய வசனரதம் ரொம்ப ரொம்ப நொண்டி; சண்டியும்கூட. காந்தியடிகளின் ஒத்துழையாமையை நான் கைக்கொள்ளாவிட்டாலும் அது கைகொள்ளத்தயார்! எனினும் பாரதியார் சொல்லுகிற மாதிரி நானும் 'அந்த ரதத்தின்மீது ஏறிக்கொண்டேன்'; ரதம் பின்னோக்கிப் போகிறது.

* * * *

பாரதியாருக்குப் பள்ளிப் படிப்பிலே புத்தி பிடிபடவில்லை; எனினும் ஸரஸ்வதி வெள்ளைத் தாமரைமேல் விரிந்த முகத்தாமரையுடன் வீணையும் கையுமாகக் காட்சி கொடுத்தாளாம். எனக்கும் பிள்ளைப் பிராயத்திலே பள்ளிப்படிப்பில் புத்திசெல்லவில்லை; ஆனால் ஸரஸ்வதி அப்படி ஒன்றும் காட்சி கொடுத்துவிட

ஸ்ரீமான் பி. ஸ்ரீ. ஆசார்யா.



வில்லை! என தந்தையார், பாட்டனார் முதலானவர்கள் தமிழ்க்காதலர்கள்தான்; எனக்கும் ஒருவாறு அது பரம்பரையாகவந்தது. எனினும் கம்பன் என்றால் காததூரம் ஓடுவேன், என் பிள்ளைப் பிராயத்திலே!

உத்தியோகஸ்தர் ஒருவர்—என் குடும்ப சிநேகிதர் (இப்போது உபகாரச் சம்பளம் பெற்றுவருகிறார்)—கம்பராமாயணமும் கையுமாகவே இருப்பார் அந்தக் காலத்திலும். "அதற்கு என்ன அர்த்தம்? இதற்கு என்ன அர்த்தம்?" என்று எங்கே கேட்டுவிடப் போகிறாரோ?—என்று தான் ஓடிப்போவேன். ஆனால், பாரதியாருக்கு இளமையிலே அறிவுத்தெய்வம் பிரத்யக்ஷமானதுபோல் எனக்குப்பிரத்யக்ஷமானது காப்பித் தெய்வம்தான்!

காப்பிதான் என் முதலாவது காதல். கம்பன்காதல் பிறகுதான் ஏற்பட்டது. அதற்கும் அப்பால் காந்திகாதல். இப்போது கம்பன் காதலையும் காந்திகாதலையும் இணைத்திருப்பது காப்பிக் காதல்தான்! ஆகவேதான் காப்பித்தெய்வத்தை நடுநாயகமாகப் பிரதிஷ்டை செய்திருக்கிறேன். எனினும் முதல் முதலாக என் பக்தியைச் செலுத்த வேண்டியது காப்பிதேவிக்குத்தான்!

*  *  *  *

பாரதியாருக்கு ஸரஸ்வதி பிரத்யக்ஷமாவதற்கு முன்பு தூரத்திலிருந்தே காட்சி கொடுப்பதும், நகைகாட்டுவதும், ஞானம் சொல்லுவது மாயிருந்தாளாம். எனக்கும் காப்பித் தெய்வம் தூரத்திலிருந்துதான் முதல் முதல் காட்சியளித்தது. அந்தக் காலத்தில் நகரங்களிலும் இத்தனை காப்பி ஹோட்டல்களில்லை. அம்மா கொடுக்கும் பைசாக்களையும் அணைக்களையும் சேர்த்துவைத்துக்கொண்டு திருநெல்வேலி ஜங்ஷனில் அபூர்வமாக இருந்தகாப்பிக்கடைக்குள்ளே புகுந்து அந்தத் தெய்வத்தின் அருளைக் கொஞ்சம் அனுபவிப்பதுண்டு; ஆனால் அத்தகைய சந்தர்ப்பங்கள் வெகு அபூர்வம்.

ஸரஸ்வதி பாரதியாரை நெருங்கி வந்து தரிசனம் கொடுத்தது ஆற்றங்கரை மண்டபம் ஒன்றிலே. அதைக் குறித்து அவர் பாடியிருக்கிறார்:

ஆற்றங் கரை தனிலே--தனி
ஆனதொர் மண்டப மீதினிலே,
தென்றல்
காற்றை நுகர்ந்திருந்தேன்,--
அங்குக்
கன்னிக் கவிதை கொணர்ந்து
தந்தாள்; அதை
ஏற்று மனமகிழ்ந்தே "அடி!
என்னோ டிணங்கி மணம்
புரிவாய்" என்று
போற்றிய போதினிலே,--இளம்
புன்னகை பூத்து மறைந்து
விட்டாளம்மா!
ஆற்றங் கரை தனிலே

இப்படியே எனக்கும் காப்பித் தெய்வம் பூர்ண தரிசனமளித்தது எங்கள் கிராமத்திலிருந்து சற்றே விலகி யிருக்கும் தனியான ஒரு சிவன் கோவிலிலே. அங்கே அந்தத் திருமடைப் பள்ளியில் அந்தப் பட்டருடைய பையனை எனது பால்ய சிநேகிதன் ஒருவன் அண்டாவிலே காப்பி போட்டு வைத்தான்: இருவரும் ஆசைதீரப் பருகினோம். எனினும் அந்தக் காப்பி தினந்தோறும் கிடைக்கவில்லை. சிவ பக்தர்கள் கண்டுபிடித்து காப்பித்தெய்வத்தைத் துரத்திவிட்டார்கள்! எனவே காப்பித் தெய்வத்தின் புன்னகைதான் கிடைத்தது!

நாளடைவில் பாரதியாருக்கு ஸரஸ்வதி காதல் பித்துப்பிடித்தது போல் ஆகிவிட்டதாம். பகல்-பேச்சும் இராக்கனவும் எல்லாம் அவளது நினைவுதானும், எனது காப்பிப் பைத்தியமும் அப்படியே முறுகி முதிர்ந்து வளர்ந்தது. ஒவ்வொரு காப்பிக் கடையாக ஏறி இறங்கலானேன், கையில் காசிருந்தபோதெல்லாம்.

*  *  *  *

22 வயதுக்குமேல் பாரதியாருக்கு லக்ஷ்மி காதல் ஏற்பட்டதாம். குடும்பத்தைக் காப்பாற்ற வேண்டுமல்லவா? எங்கேயோ ஓர் இன்பச்

சோலையில் அந்தச் சுந்தரி ஒதுங்கி நின்று தன் ஜோதி முகத்தைக் காட்டினளாம். அந்தத் தினம் முதலாக அந்த ஆசை நிறைவேறவேயில்லையாம். அபூர்வமாகச் சில ரூபாய்கள் கிடைக்கும். அதை அவளுடைய புன்னகையென்று குறிப்பிடுகிறார். அந்தப் புன்னகையிலேயே அன்று முழுதும் மகிழ்ந்து போவாராம். ஒரு சமயம் ரூபாய் சற்று அதிகமாகவும் கிடைக்கும். அப்போது 'லக்ஷ்மி கொஞ்சம் என் முன்னே நின்று கடாக்ஷிக்கிருள்' என்றே எண்ணிவிடுவார் : "அந்த மோகத்திலே தலைசுற்றிடும் காண்!" என்கிறார். பின்னர்,

என்ன பிழைகள் கண்டோ-
அவள்
வன்னைப் புறக்கணித் தேகிடு
வாள் !

என்று வருந்துகிறார்.

பாரதியார் கண்ட ஐசுவரியமெல்லாம் வீட்டில் அல்ல ; காட்டு வழிகளிலும் மலைக்காட்சியிலும் நீர் வீழ்ச்சியிலும்தான்;—இயற்கையழகு என்ற ஐசுவரியம்தான்! மகாலக்ஷ்மி இந்தச் செல்வத்தை இவருக்குக் காட்டிவிட்டு, ஜமீன்தாருக்கோ பிரபுவுக்கோ ராஜாவுக்கோ பொருட்செல்வத்தை இவருக்குத் தெரியாமலே வாரி வழங்கிக்கொண்டிருந்தாள் !

எனக்கோ லக்ஷ்மி காதலுமில்லை, ஸரஸ்வதி காதலும் விசேஷமாக இல்லை ! ஆனல் காப்பிக் காதலோடு நாளடைவில் கம்பன் காதலும் எப்படியோ ஏற்பட்டுவிட்டது. கம்பன் கவிதையழகைக் கொஞ்சம் கண்டுகொண்டேன். பாரதியாரின் தோழரான ஸ்ரீ வி. வேதநாயகம்பிள்ளை, எம். ஏ. பி. எல்., என்ற நண்பரின் கூட்டுறவால் கம்பனுடைய புன்னகையைக் கண்டேன் என்று சொல்லலாம். ஸ்ரீ வையாபுரிப்பிள்ளையின்தோழமையினலும், அவருடைய மாமாவான ஸ்ரீ. துமரேசப்பிள்ளையின் பிரசங்கங்களினலும் கம்பனுடைய கடாக்ஷத்தை ஒருவாறு பெற்றதாகவே தோன்றியது. எனினும் கம்பன் சிறப்பைப் பல ஆண்டுகளாக நான் தெளிவாய்த் தெரிந்துகொள்ளவில்லை. சேரன்மாதேவியில் பாரத்வாஜ ஆச்ரமத்திலே ஆசிரியர் வ. வே. சு. ஐயரைக் கண்டபின்புதான் கம்பன் காவியத்தின் கட்டுக்கோப்பு மர்மங்களை உணர்ந்துகொள்ள நேர்ந்தது. பின்னர் ரஸிகமணி டி. கே. சியின் ரஸிகத்தன்மையும் கம்பனைக் கற்பதில் எனக்கு ஒரு புதிய ஊக்கம் அளித்தது. ஆசிரியர் வ. வே. சு. ஐயர் காட்டிய ஆராய்ச்சி வழியிலேதான் கம்பனை ஓரளவு தெளிவாகத் தெரிந்துகொள்ள முடிந்தது. ஆம், ஓரளவுதான். என் கம்பராமாயண ஞானம் அற்பம் தான் : 'அறியாமை'யே கடல்போலக் காண்கிறது. எனினும் காதலுக்குக் குறைவில்லை. பாரதியாருக்கு லக்ஷ்மியின் அருள் நன்ருக ஏற்படாவிட்டாலும் லக்ஷ்மி காதலுக்குக்குறைவில்லையே! "எனக்கும் அந்த மோகத்திலே தலை சுற்றிடும் காண் !"

* * * *

• பாரதியாரின் மூன்ருவது காதல் தேசக் காதல்தான். தேசமாதா பராசக்தியாகக் காட்சியளித்தாள் ; பராசக்தியே தேச மாதாவாகக் காட்சியளித்தாளென்றும் சொல்லலாம். இந்த அனுபவத்தைப் பின் வருமாறு பாடுகிருர் :

பின்னெர் இராவினிலே - கரும்
பெண்மை அழகொன்று வந்தது
கண்முன்பு ;
கன்னி வடிவமென்றே - களி
கண்டு சற்றே அருகில் சென்று
பார்க்கையில்,
அன்னை வடிவமடா !-இவள்
ஆதி பரா சக்தி தேவியடா! இவள்
இன்னருள்வேண்டுமடா! பின்னர்
யாவும் உலகில் வசப்பட்டுப்போ
மடா !

தேசமாதாவின் தரிசனம் கிடைத்ததும் அறிவு, செல்வம் முதலான சகல நன்மைகளும் தமக்கு அதிகரிக்குமென்று பாரதியார் நம்பினர்.

அறிவு அதிகரித்தது என்பதில் சந்தேகமேயில்லை. ஆனால்

செல்வங்கள் பொங்கிவரும்

என்று நம்பினாரே, அந்தக் கனவு நனவாகவில்லை. பாரதியாரைப் பட்டினிபோட்ட அப்வாதம்தான் தேசமாதாவுக்குக் கிடைத்தது! எனினும் அந்த மாதாமீது காதல் மேலும் மேலும் பொங்கியவண்ணமாகவே இருந்தது.

எனக்கு இப்படித் தாயின் தரிசனம் ஒன்றும் கிடைக்கவில்லை. நான் கவியுமில்லை; பாரதியாரைப் போன்ற அதிதீவிர தேசபக்தனுமில்லை. எனினும் ஏதோ பூர்வஜன்ம புண்ணியமாகத்தானிருக்க வேண்டும்,—காந்திபக்திபல ஆண்டுகளுக்கு முன்னமே தோன்றி வளர்ந்துவருகிறது. எனினும் காந்தியத்தைத் தமிழர்களுக்கெல்லாம் புகட்ட வேண்டுமென்ற ஆசை இன்னும் நிறைவேறவில்லை. இதற்கும் ஸரஸ்வதியின் இன்னருள் வேண்டியிருக்கிறது.

* * * *


இவ்வளவு காந்திக் காதலிலும் காப்பிக்காதல் குறைந்திருக்கிறதே யொழிய முற்றும் மறைந்த பாடில்லை. கம்பன் காதலும் நாளுக்குநாள் நிமிஷத்திற்கு நிமிஷம் அதிகரித்தே வருகிறது. தமிழர்களுக்கெல்லாம் கம்பன்கவிதையின் அழகையும் சக்தியையும் புகட்டவேண்டுமென்ற பேராசையும் இனிமேல்தான் நிறைவேற வேண்டும். இதற்கும் கலைமகளின் அருள் தேவை.

* * * *

ஆற்றல் சிறிதுதான்; எனினும் காதல் பெரிதல்லவா? அபார சக்தி வாய்ந்ததல்லவா?

காற்றில் ஏறிஅவ்
விண்ணையும் சாடுவோம்
காதற் பெண்கள்
கடைக்கண் பணியிலே

-பாரதியார்.



# ஆத்மாவும் பரமாத்மாவும்

## பி. ஆர். ராஜ சூடாமணி.

[ராதை ஆத்மா; கண்ணன் பரமாத்மா; தாய் கட்டுப்பாடுகளோடு கூடிய உலகம். எழுச்சியோடுகூடின பகுத்தறிவுதான் தோழி.

ஆத்மா பரிபாக நிலைக்கு வந்துவிட்டது. ஸ்வபோதம் ஏற்பட்டுத் தன் நிலைமைக்கேற்ற தலைவனோடு ஐக்கியம் தேடுகிற ஆத்மாவுக்குப் பகுத்தறிவு இளமை தொட்டுத் துணைவனாகப் பல தருணங்களிலும் விளையாடினவனைச் சுட்டிக் காட்டுகிறது. இப்பேர்பட்ட தலைவனோடு கலந்து வாழ விரும்பினபோதிலும், தன்னை என்றும் கைவிடாது காப்பனோ என்ற மாயை சூழ்ந்துவர தத்தளிக்கிறது ஆத்மா. இந்த மயக்கத்திற்குக் காரணம் தலைவனுடைய லீலா விநோதங்கள்தான். இதுவே இந்தப் பாடல்தனில் ஒளிந்து விளையாடும் தத்துவம். -ஆசிரியை.]



கன்னியுள்ளம் கலங்கலாமோ?—தோழீ!
என்ன என்று அறிகிலேனே?

என் இளமை துள்ளுதடீ!—எனக்குத்
தன்னழகைத் தான் நோக்கும்
தன்னறிவு வந்த போதும்,—தோழீ!
இந்நிலையில் இன்பமில்லை.

'ராதை இன்னும் குழந்தையென்பாள்'—தாயும்
போதனைகள் புகன்றெனக்கு
நீதியெல்லாம் நிதமுரைத்துத்—தோழீ!
வேதனைகள் செய்வதென்ன?

பண்டொருநாள் மரப்பாவை—ஏந்தி
அண்டிவந்த கண்ணனைத் தான்
கொண்டுவந்தாய் மனக்கண்ணால்—தோழீ
கண்டுகொள்ள வைத்துவிட்டாய்.



மண்ணாலே வீடுகட்டி—அன்று
மண்சோறும் ஆக்கிவைக்க,
அண்ணாந்து மண்ணையுண்ட—கண்ணன்
அழகனென்று காட்டிவிட்டாய்.

புல்லெடுத்து வில்லாக்கிச்—சின்னக்
கல்லெடுத்து எனை அடித்துத்
தொல்லை செய்த கண்ணனைத்தான்—தோழீ!
நல்லனென்று நம்பவைத்தாய்.

"கண்ணைமூடி வாய்திறப்பாய்—ராதே;
கற்கண்டு இடுவன்" என்றான்
அண்ணாந்தேன்; கல்லையிட்டான்.—கண்ணன்
அழகையெல்லாம் எண்ணவைத்தாய்.

பொல்லாங்கு செய்தவன் தான்—தோழீ!
பொறுப்பறிந்து மணப்பானோ?
நல்லான்போல் நடித்துவிட்டே,—என்னை
நடுத்தெருவில் விடுவானோ?

ஆணுக்கோர் ஆணரசாய்ப்—பெண்மை
அழகுக்கோர் அழகு செய்யும்
ஆணழகைக் காண எண்ணி—நெஞ்சம்
அலைந்தோடித் திரியுதடீ.

பிராம்மண—கிருஸ்துவ கவியாகிய இவர் ஒருங்கே கிருஷ்ணபக்தரும் கிருஸ்து பக்தரும் ஆவார். பூர்வாச்ரம வாஸனை இவரை விட்டுவிடவில்லை யென்பது இவரது உள்ளத்தில்மலரும் கவிதைகளினின்று தெரிகிறதல்லவா? மேலே ராதையும் கிருஷ்ணனும், ஆத்மாவும் பரமாத்மாவும் என்று பாடியவர், அடுத்த பக்கத்தில் "ஞானவள்ளல் வந்துவிட்டான்" என்று கிருஸ்து— வரவைப் பற்றியும் பாடி தன் மதத்தினரையும் பரவசப்படுத்துகிறார்.

—வை. மு. ஸ்ரீ.



வானெழுந்த மீனமொன்று ஞானஒளி வீசி
"வான்துறந்து மண்புகுந்து மனிதரை ஆட்கொள்ள
ஞானவள்ளல் வந்துவிட்டான்! ஞானிகளே வருக!
நவின பாதம் தொழுக!" என்று நயந்தழைத்ததம்மா!

—ராஜசூடாமணி

# நவீன இலக்கியம்

## கா. ஸ்ரீ. ஸ்ரீ

நான் என்னும் அகந்தையிலே மூழ்கிய ஒரு கலைஞன், தற்காலத்துப் பிரச்னைகளுக்குமேலே தான் உயர்ந்துவிட்டதாகவும், கலையின் தூய வடிவத்தையும் உண்மையான கலையையுமே தான் உபாசிப்பதாகவும் கருதி, தன் எழுத்துக்களே ஸ்திரமாக இருக்கும் என்று எண்ணுவானுயின், அது அவனுடைய வெறுங் கற்பனைதான். உண்மையிலே அவன் செய்வது கலைத்தொண்டு அல்ல; கலையும் தொண்டுதான்: முதலாளித்துவத்தின் ஏற்பாட்டுக்கு அவன் கருவியாகியிருக்கிறன் என்றுதான் அர்த்தம். அவனுடைய அந்த எழுத்துக்கள் சமூகத்திலே தாம் பெறவேண்டிய பெருமையை இழந்து, மிதப்பிலே வாழும் ஒரு சிலருடைய மனத்தைமட்டுமே திருப்திப்படுத்துகின்றன. இன்று நம்மிடையே வாழும் எழுத்தாளர்களில் சிலர் ஆசாபங்கமுற்றுச் சோர்வடைந்திருப்பதற்குக் காரணம், அவர்கள் தமக்குள் தாமே மூழ்கியிருப்பதுதான். சமூக வாழ்க்கையை ஆழ்ந்த கருத்தோடு கண்டு ஆராயாமல், உலகத்தினின்றும் பயந்து, காலத்தின் வேகச் சுழலினின்றும் விலகித் தம்மையும் தமது கலையையும் காத்துக்கொள்வதாக அவர்கள் நினைக்கிறர்கள். ஆனல், சுற்றுப்புறத்துக் கடுமையான உலகம் அவர்களைப் பல சோதனைகளுக்கு ஆளாக்கி, அவர்களுடைய சுய அபிமானத்தையே பொடிசூர்ணமாக்கிவிடுகிறது.

உண்மையை ஸ்தாபித்து முன்னேற விரும்பும் எழுத்தாளனுக்கு மற்றொரு பெரிய விரோதியாக இருப்பது, இலக்கியத்திலே சர்வாதிகாரம் வகிக்க விரும்பும் ஒரு வர்க்கம். இம்மாதிரியான வர்க்கத்தைப் பற்றி ஹெரால்ட் ஜே. லாஸ்கி கூறும் பின்வரும் வாக்கியங்கள் மிகவும் பொருத்தமாக உள்ளன:

"தம்முடைய சுயநலத்துக்குப் பாதகமாக இருக்கும் கருத்துக்களை மட்டும் பசப்பும் அதிகாரத்தை ஒரு வர்க்கம் கையாண்டுவருகிறது; இத்தகையவர்களுடைய சுயநல விருப்பந்தான், முன்னேற விரும்பும் ஒரு சமூகத்துக்கு முக்கியமான பேராபத்தாக இருக்கிறது. புதுமையோ அல்லது புதியசோதனைகளினல் ஏற்படக்கூடிய மாறுதலோ அந்த வர்க்கத்துக்கு அடியோடு பிடிக்காது. தன் ஆதிக்கத்துக்கு உட்பட்ட ஜன சமூகத்தைக் கட்டிக் காப்பதிலேயே அந்தக் கூட்டம் கண்ணும் கருத்துமாக இருக்கும். அப்போதுதானே அந்தக் கூட்டத்தினரின் சுயநலம் நிறைவேற முடியும்? அவர்கள் தம் நலத்துக்குத் தக்கபடி ஒரு விஷயத்தைச் சரி என்றோ தப்பு என்றோ தீர்மானிப்பார்கள். தமக்குப் பிடித்தமான அளவுகோல்களை வைத்துக்கொண்டே விஷயங்களை அளப்பார்கள்"...

இந்த வர்க்கத்தினரை மீறி எழுந்த புயல்போன்ற எழுத்துக்கள் தாம் உலக இலக்கியத்தில் பல புரட்சிகளைச் செய்துள்ளன. சமூகத்துக்கு அதன் உண்மையான முன்னேற்றப் பாதையைக் காண்பித்துள்ளன.

ஆத்ம சிந்தனை செய்வதாகக் கூறிக்கொண்டு, எழுத்தாளன் ஆத்ம வஞ்சனை செய்வதைப்போன்ற

பாவம் வேறு இல்லை. இன்றைப் பிரச்னைகளை அலசி ஆராய்ந்து எதிர் கால உலகத்தின் புதிய உதயத்துக்கு அறிகுறியான ஒளியைப் பரப்பும் சக்தி வாய்ந்தவன்தான் ஸ்திரமான எழுத்தாளன் ஆக முடியும். அதனோடு, சிந்தனைமட்டும் இருந்தால் போதுமா? அதை அமரமான கலையுருவிலே சமைக்கும் மட்டற்ற ஆற்றலும் அவனுக்கு இருத்தல் வேண்டும்,

வட இந்திய ஆசிரியர்கள் தமது இலக்கியத்தில் நூதன காலத்தில் கையாண்டுள்ள எழுத்துத் திறமைகளை இந்தக் கட்டுரையிலே குறிப்பிடவேண்டும் என்று எனக்கு உத்தரவு. ஹிந்தி, மராட்டி, குஜராத்தி ஆகிய மூன்று பாஷைகளில் சுமார் நூறு சிறந்த எழுத்தாளர்களை எனக்குத் தெரியும். ஆனால், மேலே கூறிய லக்ஷணங்களை வைத்துக்கொண்டு நான் ஆராயப் புகுந்தால், முக்கியமாக இருவரைப் பற்றித்தான் இங்கே குறிப்பிட முடியும். முதல்வர், மராட்டி எழுத்தாளரான வி. ஸ- காண்டேகர்; மற்றவர் ஹிந்தி எழுத்தாளரான 'அஞ்ஞேயர்'

வி. ஸ. காண்டேகர் பல இடையூறுகளுக்கு எதிராக, எதிர் நீச்சுப் போட்டுக்கொண்டு, சென்ற இருபது வருஷகாலமாக இலக்கிய சேவை செய்துவந்திருக்கிறார்கள். இளம் வயசிலே அவரை விஷப் பாம்பு தீண்டியது; ஆனால் தம்முடைய மனோ தைரியத்தால் அவர் பிழைத்தெழுந்தார். அந்த மனோ ரதத்தைத்தான் தமக்கு எதிரே வரும் ஒவ்வோர் இடையூறுக்கும் மாற்றாக அவர் உபயோகிக்கிறார்.

காண்டேகரின் நூல்களிற் சில ஏற்கனவே தமிழில் வெளிவந்திருப்பதனால், தமிழன்பர்கள் அவற்றைப் படித்திருக்கக்கூடும். ஆகவே அவர் விஷயமாக எழுந்த ஒரு ஆக்ஷேபத்தையும் அதற்கு அவர் கொடுத்த சூடான பதிலையும் இங்கே விவரித்தால், அதை நம் வாசகர்கள் புரிந்துகொள்ள முடியும் என்றே நினைக்கிறேன்.

'புயலும் படகும்' என்ற நாவலைப் படித்த புலவர் ஒருவர், "இந்த நாவலில் என்ன கலை இருக்கிறது? 'முதற் காதல், முதற்காதல்' என்ற சொற்கள் நூறு தடவை இதில் வந்திருக்கின்றன. சே! வறட்சியான வெறும் உபதேசத்தைத் தவிர இந்த நாவலில் வேறு ஒன்றுமே இல்லை!" என்று அபிப்பிராயம் கூறினர்.

இதற்கு ஆசிரியர் கூறிய பதில் வருமாறு:—

"அறிவீனத்தினாலோ பொறாமையினாலோ அல்லது வேறு எந்தக் காரணத்தினாலோ, சத்தியத்தை எவ்வளவு விகாசப்படுத்திக் காட்டினாலும் இன்றைய இலக்கிய ராஜபாட்டையிலேயே அது தாராளமாகச் செல்லும். ஆனால் ஏற்கெனவே பரம்பரையாக வந்துள்ள இலக்கியக் கற்பனைகளுக்கும் எதிராக, எவனாவது ஒருவன் குரல் காட்டினால் போதும்; உடனே பல பேருக்கு உயிரே தவியாகத் தவிக்கிறது. மனிதன் தன்னை எவ்வளவுதான் சீர்திருத்தவாதி என்று தம்பட்டம் அடித்துக் கொண்டபோதிலும் உண்மையிலே அவன் ஸநாதனியாகவே இருக்கிறான். சமூக வாழ்க்கையிலே இந்த ஸநாதனத் தன்மையைக் கண்டு நாம் பரிகாசம் செய்கிறோம்; ஆனால் அதே விஷயம் இலக்கிய வேஷத்திலே வரும்போது ஆழ்ந்த மதிப்புரை என்ற மரியாதை அதற்கு ஏற்பட்டுவிடுகிறது!

"உபதேசம் என்று கூறி இந்தப் புதிய இலக்கியத்தை அமுக்கப்பார்க்கும் இந்தப் பழம் பேர்வழிகளுடைய மன எரிச்சலுக்குக் காரணம் வேறு. இலக்கியத்திலே கனவில் காணும் உருவங்கள் மட்டுமே அவர்களுக்குப் பிடிக்கும்; அவைமட்டுமே அவர்களுக்கு வேண்டும். கடுமையான வாழ்க்கையைக் கணப்பொழுது மறந்து வாசகன் மயங்கி

இருப்பதே இத்தகைய கலையின் நோக்கம் என்று அவர்கள் கருதுபவர்கள். சிருங்கார ரஸம் ஒன்றுதான் புளித்துப்போகாமல் இருக்கக் கூடியது என்று கூறும் அவர்களுடைய ஆனந்தக் கற்பனை வியாபகமானது என்று யார் சொல்வார்கள்? காதற் கதையைப்போலவே கருணை ரஸம் நிரம்பிய கதையும் மனத்துக்கு ரம்யமாக இருக்க முடியும்; விஷயத்தைப்போலவே சிந்தனையைத் தூண்டும் இலக்கியத்தையும் ரசிகன் மறக்க முடியாது என்ற விஷயத்திலே இன்னமும் இந்தக் கூட்டத்தாரின் சந்தேகம் தீர்ந்தபாடில்லை.''


மேலே சொன்ன லாஸ்கியின் கூற்றுக்கும் காண்டேகரின் இந்தச் சமாதானத்துக்கும் அதிகமான வித்தியாசம் இல்லை. இருபது வருஷ காலம் நிரந்தரமாக உழைத்து, மகாராஷ்டிரத்தில் புதியயுகத்தை சிருஷ்டித்தவரான ஒரு பிரசித்த எழுத்தாளரும் இந்தப் பழங்காலக் கூட்டத்தின் சுயநல அம்புக்கு இலக்காக நேர்ந்திருக்கிறது.

நான் குறிப்பிட்ட மற்றோர் இலக்கிய நண்பர் 'அஞ்ஞேயர்' ('அறிய முடியாதவர்'),

இது அவருடைய புனைபெயர். அவருடைய இயற்பெயர் மிகவும் நீண்டது அதை அறிந்துகொள்ள வேண்டிய அவசியமும் இல்லை; ஏனெனில், பல அரசியல் இயக்கங்களில் பங்கெடுத்துக்கொண்டு தீவிரமாக உழைத்ததோடு, முப்பதுவருஷ காலமாக இலக்கிய சேவையும் செய்துவரும் இந்த நண்பர் இன்றுகாறும் ரஸிகர்களால் 'அறிய முடியாதவரா'கவே இருந்து வருகிறார்.

'அஞ்ஞேயர்' எழுதிய "சேகரன்—ஒரு வாழ்க்கை" என்ற நாவலின் முதல் இரண்டுபாகங்கள் சமீபத்தில் வெளியாகியுள்ளன. முதற் பாகத்தின் விஷயம். எழுச்சி, இரண்டாவது பாகம்: போராட்டம், இந்த இரண்டு பாகங்களிலும் இவர் இப்போதைச் சமூகத்தில் வாழும் ஒரு புரட்சிக்காரனுடைய எண்ணங்களை விவரித்திருக்கிறார். மனிதனுடைய உள்ளத்திலே இதுகாறும் உருப்பெறாமல் அமுங்கிக்கிடக்கும் உணர்ச்சிகளுக்கெல்லாம் அவர் இந்த நூலிலே பேசும் சக்தியை அளித்திருக்கிறார். இந்த நாவலின் மற்றப் பாகங்களும் முறையே வெளிவர இருக்கின்றன.

நம் தமிழ் நாட்டிலும் மேலே சொன்ன கூட்டம் இப்போது உலாவிக்கொண்டிருக்கிறது. நேர்மையான உள்ளத்தோடும், கூர்மையாகப் பாயும் மனன சக்தியோடும் வேகமாகத் துள்ளும் எழுத்தைக் கண்டு இந்தக் கூட்டம் நடுங்குகிறது ஆனால் உண்மையிலே இந்தக் கூட்டத்தின் எதிர்ப்பின் சார்பிலே பலம் இல்லை என்பது தெளிவாகிவிட்டது. வன்மைவாய்ந்த எழுத்தாளர்களின் நோக்கத்திலே நம் நாட்டு வாசகர்களின் கருத்து செல்வதை நாம் கண்டுகொண்டிருக்கிறோம். இருள் விலகுவதற்கு இது நல்ல அறிகுறி. விரைவிலேயே அருணோதயத்தைக் காண்போம் என்ற நம்பிக்கையிலே, கம்பீரமாக மேன்மேலும் நடந்து செல்வோம். இலக்கிய நண்பர்கள் நமக்குள்ளே ஒற்றுமையோடு இருந்து நவீன இலக்கியத்துக்கு அடிகோலுவோம். ஒவ்வோர் அங்குலமாக முன்னேறுவதே நமது லக்ஷ்யம். இந்த லக்ஷ்யத்துக்கான எவ்விதக் கடுமையான வழியிலும் நாம் செல்லத் தயாராக இருப்போம்; பாதையிலே நேரக்கூடிய எந்த இடையூறையும் நொறுக்கிப் பொடிசூர்ணமாக்கவும் சிறிதும் தயங்கமாட்டோம்.



# அன்பு வெள்ளம்

ரா. ஸ்ரீ. தேசிகன். எம். ஏ

காலைச் சூரியனின் இளங்கதிர்கள் ஒரு குன்றின் சிகரத்தின்மீது குதித்து விளையாட ஆரம்பித்துவிடுகின்றன. அக்குன்றின் அடிவாரத்தில் ஒரு சிறிய ஆறு ஓடுகிறது. அவ்வாற்றங் கரைமீது ஒரு திவ்ய புருஷர் ஆழ்ந்த தியானத்தில் கண்மூடி நிற்கிறார். காலையின் வனப்பை வாரி விழுங்கின காரணத்தினாலா, பண்பாடிவரும் அவ்வாற்றின் இன்னிசை கானத்தின் சுவையை மாந்தினதினாலா, அல்லது மஹாகவி ஆண்டவன் இயற்றிய பிரபஞ்ச காவியத்தின் விசித்திரத்திலிருந்து பிறந்தவியப்பினாலா—எந்தக்காரணத்தினால் அவர் மெய்ம்மறந்து நிற்கிறார் என்ற வினாக்கள் அவரைச் சூழ்ந்துள்ள சிஷ்யர்கள் மனத்தில் குவிந்து எழுகின்றன.

அவர்கள் அவர் வாயிலிருந்து பெருகிவரும் அமுத வாக்கைப் பருக ஆர்வத்துடன் காத்துக்கொண்டிருக்கின்றனர். குருவின் தியானம் கலைகிறது. கண்களில் ஓர் அமானுஷ்ய ஒளி வீசுகிறது. முகத்தில் சாந்தம் அந்திப் பொழுதின் அமைதிபோல் இலங்குகிறது.

சிஷ்யர்களை நோக்கி "எவர் நம் சகோதரர்? என்ற கேள்வியைக் கேட்கிறார். அவர் கண்கள் அவர்களை அளக்கின்றன. பதில் ஒன்றுமே காணோம். அதற்குத் தாமே விடை அளிக்கிறார். "ஆண்டவன் அருள் ஒளியை உண்ணுஞ் சோறும் பருகு நீருமாக நாடுகின்ற அனைவரும் என் சகோதரர்கள்" என்கிறார்.

எத்தனையோ நூற்றாண்டுகளுக்கு முன் செய்யப்பட்ட இந்த உபதேசத்தின் ஒலி கம்பர் காவியத்தில் பல இடங்களில் கேட்கிறது. இராமாயணக் கதைக்கே இது ஓர் ஆதார சுருதிபோல விளங்குகிறது.

ஆழ்வார் பாசுரங்களில் திளைத்துப் பண்பட்ட கம்பர் உள்ளத்தில் இக்கருத்து முளைத்தெழாமல் இருக்குமா? குகனோடு இராமன் தோழமை கொண்டதைப் பெரியாழ்வார் அனுமன் வாயிலாகக் கூறுகிறார். சீதைக்கு அனுமன் தெரிவித்த அடையாளங்களில் இஃதொன்று.

"கூரணிந்த வேல்வலவன்
குகனோடும் கங்கை தன்னில்
சிரணிந்த தோழமை கொண்டதுமோ
ரடையாளம்"

அசோகவனத்தில் சோகத்தினால் சாம்பி உயிர் ஓவியம் புகை யுண்டதென நிற்கின்ற சீதையின் அகக்கண்முன் அநேக நினைவுச் சித்திரங்கள் விரிகின்றன.

ஏழைக் குகனைப் பார்த்து "என் தம்பி; உன் தம்பி; நான் உன் தோழன்; சீதை உன் கொழுந்தி" என்று உரிமை பாராட்டிய சிநேக குணத்தை உன்னிச் சோர்கின்றாள்.

"ஆழநீர்க்கங்கையம்பி கடாவிய
ஏழை வேடனுக் கெம்பிநின் றம்பி
நீ
தோழன் மங்கை கொழுந்தி
யெனச்சொன்ன
வாழி நண்பினை யுன்னிமயங்கு
வாள்

இப் பாட்டிற்கு மூலம் திருமங்கை ஆழ்வார் அருளிய பாட்டுத்தான் என்பதில் சந்தேகமில்லை.

ஏழையேதலன் கீழ்மகனென்னா
திரங்கி மற்றவற்கின்னருள்
சுரந்து
மாழைமான் மடநோக்கியுன்
தோழி

உம்பி யெம்பி யென்றொழிந்திலை
தோழன் நீயெனக்கிங் கொழி
யென்ற

திருமங்கை ஆழ்வாரிடத்தில் கம்பருக்கு ஈடுபாடுண்டு என்ற உண்மையைக் கீழ்வரும் பாட்டு வலியுறுத்துகிறது. குவளைகள் தம் கண்களென்றும் மலர்க்குமுதம் வாயென்றும் உழத்தியர் களை களையவில்லை என்றும் திருமங்கை ஆழ்வார் பாடுகிறார்.

மையணைந்தகுவளைகள் தங்கண்
களென்றும்
மலர்க்குமுதம் வாயென்றும்
கடைசிமார்கள்,
செய்யணைந்து களைகளையா
தேறும் காழிச்
சீராம விண்ணகரே சேர்மினீரே

இதே கருத்தை வைத்து கம்பர் பாடுகிறார்.

பண்கள்வாய் மிழற்று மின்சொற்
கடைசியர் பரந்து நீண்ட
கண்கைகாள் முகவாயொக்குங்
களையலாற் களையிலாமை
யுண்கள்வார் கடைவாய் மள்ளர்
களை கலாதுலாவி நிற்பார்
பெண்கள்பால் வைத்தநேயம்
பிழைப்பரோ சிறியோர் பெற்றால்

திருத்தக்கதேவர் இயற்றிய 'சீவக சிந்தாமணி'யிலும் இதே கருத்துடைய பாட்டைப் பார்க்கிறோம்.

கண்ணெனக் குவளையுங்கட்ட
லோம்பினார்
வண்ணவாண்முகமென மரையி
னுள்புகார்
பண்ணெழுத்தியல் படப்பரப்பி
யிட்டனர்
தண் வய'லுழவர் தந்'தன்மை
யின்னதே

இவ்விரு கவிகளுக்கும் ஆழ்வார் தான் மூலமென்று ஒருவாறு ஊகிக்கலாம்.

ஆழ்வார்கள் காட்டிய புதிய அன்பு நெறி கம்பரின் உள்ளத்தைக் கவர்ந்துவிட்டது. யூதர் கோஷ்டியிலிருந்து பிரிந்து புதியவேதத்தை வகுத்த ஏசுநாதர்போல, ஆழ்வார்கள் குறுகிய வைதீக நெறியை விட்டுத் தொண்டர் குலத்தை ஏற்படுத்தினார்கள். அங்கே சாதிமதச் சழக்குகளில்லை. சாதிச்செருக்கில்லை. அக்காரணம் பற்றியே 'துலம் தரும்' என்ற சொல்லிற்குப் பிராமணர் குலம் அன்று, அடியார் குலமே அதற்குப் பொருள் என்று உரை தந்திருக்கிறார், ஆழ்வார் உட்கருத்தை உள்ளபடி அறிந்த பெரியவாச்சான்பிள்ளை. சாதிபேதமில்லாத அக்கூட்டத்திற்கு மண்ணும் மணமும் கொண்டுவாருங்கள் என்று உலகம் கேட்கச் சாற்றுகிறார் பெரியாழ்வார்.

இந்தச் சகோதரத் தன்மையைத் தான் கம்பர் அழுத்திக் கூறுகிறார். கம்பர் இக்கருத்தை அமைத்திருக்கிற முறையை ஆராய்வோம்.


இராமன், சீதை, இலக்குமணன் இம்மூவரும் கங்கைக்கரையிலிருக்கிறார்கள். பரதன் கோசலை கைகேயி, சுமத்திரை இவர்களோடு அவர்களை அழைத்துவரப்போகிறான். குகனைச்சந்திக்கிறான் பரதன். சுற்றத்தார் தேவரொடும் தொழநின்ற கோசலையை "இவர் யார்?" என்று குகன் வினவுகிறான். மூன்றுலகையுமீன்றானைப்பெற்றதனால் அடைந்த செல்வத்தை யான் பிறத்தலால் துறந்த பெரியாள் என்று நெஞ்சுருகக் கூறுகிறான் பரதன்.

சுற்றத்தார் தேவரொடுந் தொழ
நின்ற
கோசலையைத் தொழுது நோக்கி
வெற்றித்தார்க் குரிசிலிவராரென்று
குகன் வினவ வேந்தர்வைகும்
முற்றத்தான் முதற்றேவி மூன்
றுலகு
மீன்றானை முன்னீன்றானைப்
பெற்றத்தாற் பெறுஞ்செல்வம்
யான் பிறத்த
லாற்றுறந்த பெரியாளென்றான்

இவ்வுரையைக் கேட்டலும் குகன் அவன் அடியில் விழுகிறான். 'இவன் யார்? என்று கோசலை கேட்கிறாள்.

இவன் இராமனுக்குத் தம்பி, இலக்குமணன், சத்துருக்கன் நான் இம் மூவருக்கும் தமையன் என்று பரதன் இயம்புகின்றான்.

ஸ்ரீமான். ரா. ஸ்ரீ. தேசிகன் எம். ஏ.



என்றலுமே யடியின்மீசை
நெடிது வீழ்ந்தழுவானை
யிவன் யாரென்று
கன்றுபிரி காராவின் றுயருடைய
கொடிவினவக் கழற்கான்
மைந்தன்
இன்றுணைவனிராகவனுக்கிலக்கு
வற்குமிளையவற்கு மெனக்கு
மூத்தான்
குன்றனைய திருநெடுந்தோட் குக
னென்பானிந்நின்ற குரிசி
லென்றான்.

கல்வி கேள்விகளினால் பண்பட்ட உள்ளத்தை உடைய கோசலை ஆசீர்வாதம் செய்கிறாள். "காடு சேர்ந்ததினால் இரண்டு பிள்ளைகளை இழந்ததாகக் கருதின எனக்கு ஓர் இலாபம் கிடைத்திருக்கிறது. குகனோடு எனக்கு ஐந்து பிள்ளைகளாகி விட்டீர். எல்லோரும் சேர்ந்து உலகை ஆளுவீர்கள்" என்கிறாள்.

"கைவீரலீர்மைந்தி, ரினித்துய
ரானுடிறந்து காடுநோக்கி
மெய்வீரர் பெயர்ந்ததுவுநலமா
யிற்றுமன்றே விலங்கற்றிண்
டோள்
கைவீரக் களிறனைய காளை
யிவன்றன்னோடுங் கலந்துநீவிர்
ஐவீருமொருவீராயகலிடத்தை
நெடுங்கால மளித்திரென்றாள்"

இத் தோழமை கங்கைக்கரையில் நடக்கிறது. மலைமீது சுக்கிரீவனோடு சக்கியம் ஏற்படுகிறது. அப்பொழுது அறுவராய்விட்டார்கள். கடற்கரை மீது வீபிஷணனோடு சேர்க்கை நிகழ்கிறது. அங்கே எழுவராய்விடுகிறார்கள். இப்படிச் சகோதரத்தன்மையைப் பெருக்கிக்கொண்டே போகிறார்.

"குகனொடுமைவரானே முன்பு
பின் குன்று சூழ்வான்
மகனொடு மறுவரானே மெம்
முழையன்பின்வந்த
அகனமர் காதலைய நின்னொடு
மெழுவரானேம்
புகலருங் கானந்தந்து புதல்வ
ராற் பொலிந்தானுந்தை"

அறநெறியிலே அன்புமூலம் உலகத்தை ஆளவேண்டும் என்று கனவு காண்கிறார் கம்பர். அறத்திற்கும் அன்பிற்கும் அரும்பாடு படுகிறவர்கள் அனைவரும் சகோதரர்கள் என்ற தத்துவத்தை அவர் நமக்குக் காட்டுகிறார்-

விபீஷணன் அரக்கர் குலத்தில் பிறந்தாலும் குணத்தினால் ராமனுக்குச் சகோதரனாய்விடுகிறான். தன் தமையனுக்கு அவன் துரோகம் செய்யவில்லை. அறக்கொடிக்கீழ் போர்செய்கிறபொழுது ஒரு வயிற்றிலே பிறந்த போலிச் சகோதர உரிமையைத் 'தூ' என்று தள்ளி அறத்திலே ஊன்றியிருக்கிற உண்மைச் சகோதரத்தன்மையை நாடவேண்டும். வால்மீகி இப்படிக் குறிப்பாய்க் காட்டின விஷயம் ஆழ்வார் கையில் சற்று அலர்கிறது; கம்பர் கையில் அது முற்றும் மலர்ந்து விடுகிறது.

பகவானுடைய அருட்பிரகாச வெள்ளம் மேட்டு நீரைப்போல எங்கும் பாய்கிறது. நம்முள்ளத்தைச் செதுக்கி வைத்துக்கொண்டால், அந்நீரை அங்கே தேக்கி வைத்துக்கொள்ளலாம். அவ் அருள் வெள்ளம் ஏழை வேடனிடத்தில் செல்லுகிறது. குரங்கின் உள்ளத்தே பாய்கிறது; அரக்கன் சிந்தையையும் தனக்கிடமாக்கிக் கொள்கிறது.


இயற்கை அன்னை மடியிலே சதா விளையாடும் கவி வால்மீகி இந்தத் தோழமை நிகழக்கூடிய இடங்களை அழகுபெறக் காட்டியிருக்கிறார். கம்பீரமாய்ச் சுழித்தோடுகிற கங்கைக் கரை, வானளாவி நிற்கின்ற மலை, பொங்கிப் பரந்து கிடக்கிற கடல்— இம்மூன்று இடங்களில் இயற்கையின் எழிலைக் காண்கிறோம். இவ்வெழில் நிரம்பிய புனிதமான இடங்களில்தான் நம்மாத்மாவுக்கும் பரமாத்மாவுக்கும் இடையறாத சம்பந்தம் உண்டாகிறது. உலகத்தையே அன்பினாலே தழுவக்கூடிய வைணவ தத்துவம் இப்பிரதேசங்க

ஸ்ரீமான். ரா. ஸ்ரீ. தேசிகன், எம். ஏ.

ளில்தான் உதயமாகும். இயற்கை அழகினுல் உள்ளம் பண்படுகிறது. பண்பட்ட உள்ளத்தால் அன்பு சுரக்கிறது.. பிறர் துக்கம் துடைக்க அது விரைகிறது. ஆனல்? எவன் ஒருவன், பிறர் துயர் கண்டு கண்ணீர் வடிக்கின்றனே அவனே உண்மையான வைணவன் என்ற உபதேசம் மறைந்துபோய்ச் சாதிச் சண்டையும், மதப் பேய்களின் தலைவிரி கோலமும் எங்கும் நிகழ ஆரம்பித்துவிட்டன. சாதி அணைகள் மதக் கோட்டைகள் தேசச்சுவர்கள் எல்லாம் தகர்ந்துபோயிருக்கும், உண்மையான உபதேசத்தை ஓங்க விட்டிருந்தால். நம் நாட்டின் துரதிர்ஷ்டம், ஜீவநதிபோல் அம் வார்களிடமிருந்து வருகிற வைணவ வெள்ளத்தை அணைபோட்டுத் தடுத்துவிட்டார்கள். ஆனல் அவ் வெள்ளம் மீண்டும் பெருக்கெடுக்கும் என்பதில் சந்தேகமில்லை.


தனக்கென்று வாழாது பிறர் துக்கம் கண்டு கண்ணீர்விட்டு உண்மைக் கர்மயோகம் செய்யும் ஒரு புனிதக் கிழவனர் தோன்றியிருக்கிருர். அக்கிழவர் அந்திப்பொழுதில் இசைக்கும் வைணவ கீதத்தில் ஆழ்வார் கண்ட வைணவம் உயிர் பெற்று எழுகிறது. கிழவர் தோன்றினல் மட்டும் போதுமா?—அவர் உபதேசத்தைப் பரப்ப அநேக மதுர கவிகளும் வேண்டும்.






இந்த தம்பதிகளுக்குள்ளேயுள்ள வித்தியாசத்தைக் காணுங்கள்: (1) கணவர் தெருத்திண்ணையில் உட்கார்ந்து சன்மார்க்க சத்கதாகாலக்ஷேபம் செய்கிறார். மனைவியோ புறக்கடையில் உட்கார்ந்து வம்புமடம்அமைத்து ஊர்க்குப்பைகளை அளந்துகொட்டுகிறாள்! (2) கணவன் மிருகேந்திரனை அடக்கியாளுகிறான். வீட்டிலோ அவன் மனைவி அவனை அலற வைக்கிறாள். இந்தப் பெண்சிங்கத்திற்கெதிரே அந்தச் சிங்கம் என்ன செய்ய முடியும், அவ்வீரனே நடுங்குகையில்!


—வை. மு. ஸ்ரீ.




விரலுக்கு விரல் வித்தியாசத்தை அமைத்துள்ள பகவான், ஒருவர்க்கொருவர் குணத்திலும் வேற்றுமைகளை ஏற்படுத்தியிருப்பதில் ஆச்சரியமென்ன?

(3) கணவன் கட்டைவண்டி இழுத்து, கஷ்ட ஜீவனம் செய்கின்ருன். வாழ்க்கையின் கொடிய பரீட்சைகள் அவனுக்கே தெரியும். அவன் மனைவியோ, சிரமம் தெரியாது, தனது நிலைமைக்கு மீறி, சாத்துக்கொடி பழங்களாக வாங்கித் தின்று தள்ளுகிருள்!

(4) சங்கீதத்தில் மனம் லயிக்கவேண்டியது நியாயம்தான். ஆனல், அன்னை என்ற முறையில் தனக்குள்ள கடமையையும் தவறியா பாடிக்கொண்டேயிருப்பது? மனைவி இப்படியிருக்க, கணவன் குழந்தையைச் சமாதானப்படுத்தவேணும்! அவளுக்கு சங்கீதத்தின்மீது மோகம்; அவனுக்கு அவள்மீது மோகம்; ஆனல் குழந்தையைப் பற்றின பொறுப்பை அவனே ஏற்றுக்கொள்கிருன். இருவர்க்கும் இடையே உள்ள வித்தியாசம் இவ்வளவுதான்!




வருங்காலத்தைப்பற்றி மனக்கோட்டைகள் கட்டுவதென்பது மனிதவர்க்கத்தின் பிரிக்கமுடியாத குணம். நினைப்பதற்கும் நடப்பதற்கும் இடையேயுள்ள வித்தியாசம்தான் பகவத் சங்கல்பம் என்பது.

(5) கட்சிக்காரர்கள் திரள் திரளாக வருவார்களென்று வக்கீல் காத்திருக்கிறார். ஆனால் மனைவியின் கடன்காரர்களே கூட்டமாகவந்து இவரைத் திகைக்க வைக்கின்றனர்.

(6) குழந்தையின் வளமையைக்கண்டு பூரிக்கும் தாய் ''என் ராஜா பெரியவனானால் எப்படித்தான் இருப்பான்'' என்று பொங்கிப்போகிறாள். ஆனால் வருடங்கள் உருண்டோடியபின், கடோத்கஜன்போல் வளர்ந்துள்ள குமாரனைக் கண்டு பிரமித்து நிற்கிறாள்,

வை. மு. ஸ்ரீ

# நான் அறிந்த தமிழ் மணிகள்

ஜெகதாரிணி ரகுபதி ரங்கராஜம்

1945-ம் ஹூ ஜனவரிமீ 1உ வெளியாகும் "ஜகன்மோஹினி" ஆண்டு மலருக்கு மேற்கண்ட தலையங்கத்தின்கீழ் 3-4 தமிழ்மணிகளைப்பற்றி டெம்மி 1-8 அளவில் 3-4 பக்கங்களில் எழுதியனுப்பும்படி எனது சகோதரி ஆசிரியை கோதைநாயகி அம்மையார் ஆக்ஞாபித்தார்கள். கடுகைக் குடைந்து அதற்குள் கடலைப் புகவிடும் அபாரசக்தி எனக்கு இல்லையே என முதலில் அஞ்சினேனாயினும், அம்மையாரின் வேண்டுகோளை மறுக்க வகையறியாது ஒத்துக்கொண்டேன். அப்பால் பத்திரிகாசிரியர்கள், நாவலாசிரியர்கள், கவியரசர்கள், நாடகாசிரியர்கள், சங்கீதவல்லார், ராஜீயவாதிகள், இவர்களிலும் பிராம்மணர், பிராம்மணரல்லாதார், முஸ்லீம்கள், கிறிஸ்தவர்கள், அப்பால் ஆண் பெண்கள் இன்னும் எத்தனையோ வகுப்புகளில் யாரைத்தேர்ந்தெடுப்பதென்பது அடுத்த கடினமான பிரச்னையாயிற்று.

இந்தியாவிலிருந்து கொள்ளையடித்துப் போகப்பட்ட நவரத்தினங்களில் இறுதியில் இந்திய சக்கரவர்த்தியின் கிரீடத்தை அலங்கரித்து நிற்கும் கோஹினூர் என்னும் வைரம் சிறந்ததா, மலையாளபகவதியின் மூக்கை அலங்கரித்து நிற்கும் நாகரத்னம் சிறந்ததா அல்லது இந்திய மஹாராஜாக்கள் அணிந்திருக்கும் ஆபரணங்களில் பதித்திருக்கும் பச்சையோ, நீலமோ, மஞ்சளோ, அவர்கள் ஒரு வெளிச்சமுள்ள அறைக்குட் பிரவேசித்த உடனே, அக்கற்களின் வர்ணமாகிய பச்சையோ. நீலமோ, மஞ்சளோ அததன் வர்ணத்திற்கேற்றபடி அறைகள் பூராவும் அந்நிறங்களாகத் தோற்றும் கற்கள் சிறந்தவைகளா எனச் சொல்வது எவ்வளவு கஷ்டமோ அதைப்போலவே இத்தேர்தலும் கஷ்டத்தைக் கொடுத்தது. மேற்சொன்ன பல காரணங்களையும் உத்தேசித்து நான் ஸ்ரீ சக்ரவர்த்தி ராஜகோபாலாச்சாரியாரவர்கள், ஸ்ரீ டி. கே சிதம்பரநாத முதலியாரவர்கள் ஸ்ரீ வை. மு. கோதைநாயகி அம்மையார் ஆகிய மூவரைப்பற்றி சுருக்கமாக எழுதுவது என்னும் முடிவுக்கு வந்தேன். எனக்குத் தெரிந்த இதர தமிழ்மணிகளில் பலர் மேற்சொன்ன மூவருக்கு மேம்பட்டவர்களாகவோ, அல்லது சமதையுடையவர்களாகவோ இருந்தபோதிலும் அவர்களைப்பற்றி எழுத இடமின்மையால் எழுதவில்லையேயன்றி வேறுவித அபிப்பிராயத்துடன் நான் எழுதாமல்விட்டேன் என என்மேல் கோபப்படாமலிருக்கும்படி எல்லோரையும் கேட்டுக்கொள்கிறேன்.

## 1. திரு. சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரியார்

இவர்கள் சேலம் ஜில்லா ஓசூர் தாலுகா தொரப்பள்ளி என்னும் சிறு கிராமத்தில், சேற்றில் செந்தாமரை மலர்வதைப் போலும், நத்தை வயிற்றில் முத்துப் பிறப்பதைப்போலும் 1879ம் ஹூ திரு அவதாரம் செய்தார்கள். இவர்களது பெற்றோர்கள் தனவந்தரல்லவாதலால் திண்ணைப் பள்ளிக்கூடத்தில் கல்வி கற்று, பின் பெரிய பள்ளிக்கூடங்கள் சென்று அவர்களது ஊக்கத்தாலும் விடாமுயற்சியாலும்

வகுப்பில் முதன்மை மாணுக்கராயிருந்ததோடு அந்தந்த வகுப்பு உபாத்தியாயர்களின் நன்மதிப்பு பெற்று பலவித கஷ்டங்களனுபவித்து வக்கீல் பரீட்சையிலும் தேறி தமது 21-வது வயதாகிய 1900-ம் வருஷத்தில் சிறுகக்கட்டிப் பெருகவாழ் என்பதற்கேற்ப சிறு வீட்டில் வசித்து வக்கீல் தொழில் ஆரம்பித்தார்கள். ஆரம்பத்திலிருந்தே ஒட்டிப் பேசுவதா வெட்டிப் பேசுவதா என்னும் இருவித வாதங்களில் ஒட்டிப் பேசுவதே சிலாக்யமெனத் தெரிந்து வாதத்தில் அதுவரை பெரும் ப்ரக்யாதியும் பெற்றிருந்த பல வக்கீல்களை பால்ய வக்கீலான இவர், வாதத்தில் தோற்கடித்து வெற்றி பெறவே அவரது பெரும் புகழும் ஓங்கிப் பரவி மாதம் பல ஆயிர ரூபாய்கள் வருமானம் வந்துகொண்டிருந்தது. ஆயினும்தாம் அக்காலத்திலும் படாடோபமான வாழ்வை விரும்பாது எளிய வாழ்க்கையே நடத்திவந்தார்கள். அவர்களுக்கு ஏழைகளிடத்தில் எப்போதும் அனுதாபம் உண்டு. சில வக்கீல்களைப்போல் 'எனது 1 நாள் கட்டணம் (fees) இவ்வளவு; அவ்வளவு கொடுத்தால்தான் வாதிப்பேன், உனது துரதிர்ஷ்டம்தான் என் அதிர்ஷ்டம்' என்று சொல்லி கட்சிக்காரரைக் கசக்கிப் பிழியாமல் அவரவர் அந்தஸ்துக்கேற்றபடியும், மிகவும் ஏழைகளாயிருந்து அநியாயமான கேஸ் ஜோடித்துக் கொண்டுவரப்பட்டிருக்கிறது என்று அவர்கள் மனதில் பட்டால் இனமாயும் வாதித்து வந்தார்கள்.

அப்படி இருக்கும்போது ஏழைகளின் பரிதாபகரமான நிலைமையைப் போக்கி, அவர்கள் முழுப் பட்டினியைப் போக்கி அரைப் பட்டினியான நிலைமைக்காவது தம்மாலியன்றவரை உழைத்து அவர்கள் நிலைமையை உயர்த்தும் நோக்கத்துடன் 1906-ம் ௵ முதல் இராஜீயத்துறைகளில்வேலைசெய்து வரும்போது ஸ்ரீ காந்திமகானைச் சந்தித்த அன்றே ஊசியும் காந்தமும் ஒன்றையொன்று இழுப்பதைப் போல் அவர்கள் இருவரும் ஒருமனப்பட்டு வேலை செய்து வந்தார்கள். இவர்கள் இருவரில் யாரை குருவென்றும் யாரை சிஷரென்றும் என்றால் இன்றையவரை சொல்லக்கூடவில்லை. ஏனெனில் குரு சிஷராகவும் சிஷர் குருவாகவும் மாறியபோதிலும் குரு சிஷ்யர் ஆகிய இருவர் லக்ஷியங்களும் ஒன்றாகிவிட்ட பின் அந்த வித்யாசமே இல்லாமற்போவது இயற்கை அல்லவா? ஆகவே 14-வருஷங்களாக தீவிர ராஜீயவாதியாக இருந்து 1920-ம் ௵ வக்கீல் தொழிலை விடுத்து தம்மை ஏழைமக்களுக்கு அர்ப்பணம் செய்துவிட்டு ஒத்துழையாமை இயக்கத்தில் சேர்ந்து சக்கரவர்த்தியின் விருந்தினராகிச் சிறைவாசம் செய்தார்கள். சிறையிலிருந்து வெளிப்பட்ட பின் ராஜீய விஷயங்களில் பல மாறுதல்கள் ஏற்பட்டதாலும் அம்மாறுதல்கள் மூலமாய் ஏழைமக்கள் அபிவிருத்தி அடைவது சாத்யமில்லையென அவர்கள் மனதில் பட்டதாலும் கதராபிவிருத்தியும் ஹரிஜனப் பள்ளிக்கூடாபிவிருத்தியும் ஆகிய இரு வேலைகளைமட்டும் வைத்துக்கொண்டு இதர ராஜீய விஷயங்களில் சம்பந்தப்படாது விலகி நின்றார்கள்.

எனது பேனவை எவ்வளவு இழுத்துப் பிடித்து எழுத முயன்றாலும் அது நீண்டுகொண்டே போவதாலும், ஸ்ரீராஜாஜியைப்பற்றி ஒரு புஸ்தகமே எழுதக்கூடுமாதலாலும் எல்லோருக்கும் தெரிந்த இடையில் நடந்தேறிய சம்பவங்களை விட்டுவிட்டு காங்கிரஸ்கட்சி சென்னைசட்டசபையில் பெருவாரியான ஸ்தானங்கள் பெற்று ராஜாஜி அவர்கள் பிரதம மந்திரியாக வந்ததும் அதுவரை இருந்துவந்த பொம்மை மந்திரிகளைப்போலல்லாது எவ்வாறு உண்மை மந்திரிகள் சொற்ப சம்பளமாகிய ரூபாய் 500 பெற்று

தங்கள் கடமைகளைச் சரிவர நடத்த வேண்டுமென்று காட்டியதில் வெளிப்படையாகத் தெரியாத சில அரிய விஷயங்களைமட்டும் தெரிவித்துவிட்டு இதைப் பூர்த்தி செய்கிறேன்.

முதல் நாள் ஸ்ரீராஜாஜி அவர்கள் தம் பிரதம மந்திரி ஆசனத்தில் அமர்ந்ததும், ஒரு இலாகாவின் தலைமை உத்யோகஸ்தரைவரும்படி டெலிபோன் செய்தார்கள். அதுவரையில் அநேகமாய் மந்திரிகள் தான் அப்பேர்ப்பட்டவர்களை அவர்கள் உத்யோக இடங்களில் போய்ப் பார்ப்பது வழக்கமாதலாலும், அவர்கள் அழைக்கப்படுவதும் அவர்கள் போனதும் வழக்கமில்லையாதலாலும் அவர் வராது உதாசினம்செய்து வரவேயில்லை. அவ்வாறு இறுமாப்புடன் வராது இருந்த அந்த அதிகாரியை ஸ்ரீ ராஜாஜி அவர்கள் போட்ட ஒரு உத்தரவானது அவர் கதியைக் கலக்கி ஸ்ரீ ராஜாஜீயைத் தேடிவரும்படிச் செய்தது. வந்தவுடன் உள்ளே தாராளமாய்ப் போகச் சென்றார். ஆனால் வாயில் காப்போன் அவர்கள் பேரச்சிட்ட சீட்டைக் கொடுத்தால் காண்பித்து உத்தரவுபெற்று வருவதாகச் சொன்னதின்பேரில், கோபத்துடன் பேரச்சிட்ட சீட்டைக் கொடுத்துவிட்டு உடனே வரச்சொல்லுவாரென்ற நம்பிக்கையுடன் கூடவே போனார். ஆனால் ராஜாஜி அவர்கள் "வேலையாயிருக்கிறேன், உட்காரச் சொல்" என்றார்கள். ஐயோ! அப்போது அந்த அதிகாரிக்கு வந்த கோபக்கனல் அவர் முகத்தில் வீசியதைப் பார்த்தால் எள்ளும் கொள்ளும் பட்டால்கூட வெடித்துவிடும் போலிருந்தது. அந்த அதிகாரி 1-மணிநேரம் காத்திருந்து அதிக தொந்தரவு செய்ததன்பேரில் வாயில் காப்போன் போய் 'துரை அவர்கள் காத்திருக்கிறார்கள்' என்றான். ஸ்ரீராஜாஜி அவர்கள் 'நான் மணியடிக்கும் வரை உள்ளே வராதே உன் வேலையைக் கவனி' என்றார்கள். அதிகாரி அப்பால் 1-மணி சாவகாசம் காத்திருந்தும் பார்க்காமலே அன்று போகும்படி நேரிட்டது. மறுநாள் அதிகாரிவந்து சீட்டனுப்பிய உடனே ஸ்ரீராஜாஜி அவர்கள், முதலில் தாம் அவரைக் கூப்பிடவிட்டபோது எத்தனை மணிநேரம் தாமதித்து துரை வந்தாரோ அவ்வளவு நேரம் ஆகிவிடவே, அவரை வரச்சொல்லி, கண்டித்துப் பேசி அனுப்பிவிட்டார். இவ்விஷயம் எல்லா ராஜதானி தலைமை அதிகாரிகள் காதுக்கு எட்டவே, எல்லோரும் தாங்கள்தான் இதுவரை எஜமானராயிருந்தது போய் இப்போது தங்களுக்கும் எஜமானர் வந்துவிட்டதை உணரும் படிச் செய்துவிட்டார்கள்.

கவர்ண்மெண்ட்டுக்கு ஒருவர் அனுப்பிய ஒரு அப்பீலின் பேரில் அந்த இலாகா தலைவரான காரியதரிசி அவர்கள், குமாஸ்தா எழுதி வைத்திருந்த குறிப்புகளைப் பார்த்து மனுவை நிராகரிப்பதாக உத்தரவு போட்டு ஸ்ரீராஜாஜி கையெழுத்துக்கு வழக்கம்போல் அனுப்பினார். அதுவரை இருந்துவந்த மந்திரிகளைப்போல் காட்டிய இடத்தில் கையெழுத்துப் போடும் சுபாவம் காங்கிரஸ் மந்திரிகளுக்கு இல்லையாதலால் ஸ்ரீராஜாஜி அவர்கள் அப்பீலைப் படித்துப் பார்த்ததில் அவ்வுத்திரவு அநியாயமெனவும் குமஸ்தா ஏக்காரணம்பற்றியோ திருத்தி எழுதியதாகத் தெரிந்துகொண்டு அக் காரியதரிசியையும் அக்குறிப்பு எழுதிய குமாஸ்தாவையும் அழைத்து வரும்படி எழுதி அனுப்பி அவர்கள் இருவரும் வந்ததும் அதிகாரியை (காரியதரிசி) தன்பக்கத்தில் உட்காரவைத்துக்கொண்டு அந்த மனுவை படித்துப் பார்க்கச் சொல்ல அவர் படித்ததும் நடுங்கிவிட்டார். அவரிடமிருந்து அதை வாங்கி குமாஸ்தாவிடம்காட்டி "இக்குறிப்பு நீ எழுதியது தானா?" என்றார். "ஆம்" என்று நடுங்கியபடிச்சொல்லவே "லஞ்சம் வாங்கிக்கொண்டு அவ்வாறுமாற்றி எழு

தினுயா? அல்லது உனக்கு ஆங்கிலம் தெரியாதா சொல்''என்ருர். லஞ்சம் வாங்கி எழுதினேன்என்ருலும் குற்றம்; ஆங்கிலம் தெரியாது என்ருலும் வேலைக்கு லாயக்கில்லை வீட்டுக்குப்போ என்பார்கள். ஆதலால் "மன்னிக்க வேண்டும், மன்னிக்க வேண்டும்'' என்று கெஞ்சினர் குமாஸ்தா. காரியதரிசி அவர்களுக்கும் உறைக்கும்படி "நீ முட்டாள்தனமாய் எழுதிவைத்ததைக் கவனியாது கனம் காரியதரிசி அவர்கள் கையெழுத்திட்டு எனக்கு அனுப்பிவிட்டார்கள். "நானும் கண்மூடித்தனமாய் கையெழுத்துப் போட்டிருந்தால் காங்கிரஸ் மந்திரிகளும் மந்திரிகளல்ல; மந்திகள் தான் என்ற பட்டமும் கிடைத்திருக்கும். இம்முறை மன்னித்தேன். இனி இம்மாதிரி நடக்கும் பட்சத்தில் உடனே வீட்டிற்கு அனுப்பிவிடுவேன்'' என்று கண்டிப்பாய் இருவருக்கும் படும்படிச் சொல்லிவிட்டார்.

அதுமுதல் அதிகாரிகளும் குமாஸ்தாக்களும் காங்கிரஸ் மந்திரிகள் இருந்தவரை மிக்க பயபக்தியுடன் வேலைசெய்ய ஆரம்பித்தார்கள். இப்பேர்ப்பட்ட விஷயங்கள் பல எனக்குத் தெரியும்.

ஸ்ரீ ராஜாஜி எழுதிய கண்ணன் காட்டிய வழி என்னும் புத்தகத்தையும், வாராந்தரப் பத்திரிகைகளிலும் வருஷ அனுபந்தங்களிலும் எளிய நடையில் எழுதும் வியாசங்களையும் கவனித்துப் படிப்பவர்களுக்கு அவர்கள் ராஜீயவாதிமட்டுமல்ல; தலைசிறந்த எழுத்தாளரும் கூட என்பது நன்கு தெரியும். ஏற்கெனவே இவ் வியாசம் நீண்டுவிட்டதால் இதை இத்துடன்நிறுத்திவிட்டு மற்ற இருவரைப்பற்றியும் சில வரிகளாவது எழுதுகிறேன்.

## 2. ஸ்ரீ டி. கே. சிதம்பரநாத முதலியாரவர்கள்

இவர்கள் திருநெல்வேலி ஜில்லா தென்காசி என்னும் சிவ க்ஷேத்திரத்தில் 1881-ம் ஆண்டு பிறந்தார்கள் இவர்களது பெரியோர்களெல்லாம் தமிழ் வித்வான்களாகவும், தமிழில் பாண்டித்யமும் பேரும் ப்ரக்யாதியும் பெற்று வாழ்ந்தார்கள். ஸ்ரீ முதலியாரவர்களும் ஆதிமுதல் கம்ப இராமாயணம் படிப்பதிலும் வியாக்யானங்கள் செய்வதிலும் மிகவும் தேர்ந்தவர்கள். சாக்ஷாத் கம்பர்தான் ஸ்ரீ. டி. கே. சிதம்பரநாத முதலியாராய் மீண்டும் அவதரித்து தாம் முன் செய்து முடிக்கத்தவறிய பிரக்கியை பூர்த்திசெய்யவே அவதரித்தார்களோ என்று நான் சந்தேகிப்பதும் உண்டு. எப்போது பார்த்தாலும் அவர்களிருக்கும் இடத்தில் பலர் அவர்களைச் சூழ்ந்துகொண்டு அவர்கள் சாதாரணமாய்ப் பேசுவதையே பிரசங்கமாகக் கருதி அல்லும் பகலும் அனவ்ரதமும் கேட்டுக்கொண்டேயிருப்பார்கள், ஸ்ரீ இராமசந்திரமூர்த்தியின் கிருபா கடாக்ஷத்தினால் அவர்களுக்கேற்ற சற்புத்திரன் பிறந்து உயர்ந்த பரீட்சையில் தேறி உயரிய அந்தஸ்தில் வரக்கூடிய சமயத்தில் வெண்ணெய் திரண்டுவரும்போது பானை உடைந்ததைப்போல் அப் புத்திரன் இறைவனடி சேர்ந்து அவர்களை ஆழ்ந்த துயரத்தில் அமிழ்த்திவிட்டார். புத்திர சோகத்தால் பீடிக்கப்பட்ட இம் மகான் சிறந்த வேதாந்தியாதலால் "ஸ்ரீ ராமர் கொடுத்தார். அவர் கொண்டுபோனர். இதற்காக வருந்துவது மடமை'' என தனக்குத் தானே தேறி எப்போதும்போல் ராமஸ்மரணைசெய்து காலங்கழிக்கிருர்கள்.

இவர்கள் வெளியிட்ட நூல்களில் கம்ப இராமாயணம் முதல் மூன்று காண்டங்கள் (2) கம்பர் யார் (3) இதய ஒலி (4) முத்தொள்ளாயிரம் ஆகிய நான்கும் முக்யமானவை.

இவர்கள் அனேகமாய் திருக்குற்ருலத்தில் வசித்து குற்ருலநாதனைச் சேவித்துக்கொண்டும் ஸ்ரீராமநாமஸ்மரணைசெய்துகொண்டும், அவர்களிடம் வரும் நண்பர்களுக்கு இன்

னமுது அளித்து உபசரித்துக் கொண்டும் எப்போதும் சத்காலட்சேபம் செய்துவருகிறார்கள். இவர்களும் ஸ்ரீ ராஜாஜியைப்போல் எப்போதும் படாடோபமின்றி எளிய வாழ்க்கையே நடத்திவருகிறார்கள்.

வாராந்திரப் பத்திரிகைகளில் வெளிவரும் அவர்களது வியாக்யானங்களைப் படித்தவர்களுக்கு அவர்களது அபார கல்வித் திறமையையும், பாண்டித்யத்தையும் பற்றி நான் சொல்லத் தேவையில்லை.

இன்னும் பல நூல்களை வெளியிட்டு தமிழ் மக்களுக்கு உபகாரம் செய்வதற்காக அவர்களுக்கு நீண்ட ஆயுளைக் கொடுத்தருளுமாறு ஸ்ரீ ராமச்சந்திரமூர்த்தியைப் பிரார்த்திக்கிறேன்.

## 3. ஸ்ரீ வை. மு. கோதைநாயகி அம்மாள்

அம்மையார் அவர்கள் "மறு ஆறும் திருஅல்லிக்கேணி" என்ற பாடல்பெற்ற ஸ்தலத்தில் ப்லவஹு கார்த்திகைமீ அவதரித்தார்கள். அக்கால வழக்கப்படி பால்மணம் மாறாத ஆறுவது ஆண்டில் ஸ்ரீ பகவத் விஷயம் வித்வான் வை. மு. ஸ்ரீனிவாசஅப்பங்கார்சுவாமிகளின் புத்திரரும், தமிழ் பண்டிதர் ஸ்ரீ வை. மு. சடகோப ராமானுஜாசாரிய ஸ்வாமிகளின் தம்பியுமான ஸ்ரீ வை. மு. பார்த்தசாரதி ஐயங்காரவர்களைப் பாணிக்கிரணம் செய்துகொண்டார்கள். இப்பேர்ப்பட்ட பண்டிதர்கள் நிறைந்த குடும்பத்தில் வாழ்க்கைப்பட்ட ஸ்ரீ வை. மு. கோதைநாயகியம்மையாரும் சிறந்த பண்டிதையானதில் ஆச்சரியப்படுவதற்கில்லை. சென்ற ஹுத்திலேயே பண்டிதை ஸ்ரீமதி. வை. மு.கோதைநாயகி அம்மையார் என நான் எழுதியதை அவர்களது அடக்கத்தால் அப்பட்டத்தை அங்கீகரிக்க மறுத்துவிட்டார்கள். ஜகன்மோஹினியை 1925-ம் ஹு விநயக சதுர்த்தி நாளில் ஆரம்பித்து தமிழ்நாட்டுக்குச்செய்துவரும் அரிய சேவை செப்பற்பாலது. இதுவரையில் அம்மையார் அவர்கள் 65 கதைகளைப் பூர்த்திசெய்து இம்மலரில் 66-வது கதையை வெளியிட்டிருப்பது போற்றற்பாலது.

அம்மையார் அவர்கள் ஆசிரியையாகமட்டும் தமிழ்நாட்டுக்கு உபகரித்து வருகிறார்களென்று சொல்வதற்கில்லை. இவர்கள் ராஜீய விஷயங்களிலும் பொதுஜன சேவை புரிந்து வருவதோடு 1931-ம் ஹு ஒத்துழையாமை இயக்கத்திலும் கலந்து சிறையும் சென்றார்கள்.

அம்மையார் சங்கீதக்கலையிலும் தேர்ச்சி பெற்றவர்களாதலின் காங்கிரஸ் கூட்டங்களில் தேசீயப்பாட்டுகள் பாடி மக்களைப் பரவசப் படுத்தி யிருக்கிறார்கள்.

இத்தம்பதிகள் மனதிற்கேற்ற அருமைத் திருக்குமாரரான ஸ்ரீ வை. மு. ஸ்ரீனிவாசய்யங்கார் M. A. B. L. அவர்களும்பொதுஜனசேவை செய்வதே தமது கடமையாகக் கொண்டு மோஹினிக்கு உழைத்து நம்மெல்லோரது மனங்களையும் கவரக்கூடிய விதத்தில் பார்வையிட்டு வருவது தமிழ் மக்களின் அதிர்ஷ்டமென்றே சொல்லலாம்.

பொதுஜன சேவையே தமது கடமையாகக்கொண்டு உழைத்துவரும் இக்குடும்பத்தார் பார்த்தஸாரதியின் கிருபாகடாட்சத்தினால் பல்லாண்டு பல்லாண்டாய் வாழ வேண்டுமென்று எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கிறேன்.

---

குறிப்பு:—"என் பத்திரிகையில் என்னைப்பற்றியே எழுதுவதாவது!" என்று பலமாக நான் ஆட்சேபித்ததெல்லாம் ஸ்ரீ- ரங்கராஜுகாருவிடம் பலிக்கவில்லை. "எப்பொழுது எனக்குத்தெரிந்த தமிழ்மணிகளைப்பற்றி எழுதும்படி ஆக்ஞாபித்துவிட்டீர்களோ, நான் யாரைப்பற்றி எழுதினாலும் உங்களுக்குத் தடைசெய்ய உரிமையில்லை" என்று சட்டம் போட்டுவிட்டார்! இது சம்பந்தமான கடிதப்போக்கே ஒரு மாதத்திற்குமேல் நடந்து, கடைசியில் இவ்ரூபத்தில் கட்டுரை உருவாகியிருக்கிறது. —வை. மு. கோ.

SUPPLEMENT TO JAGANMOHINI OF 1-1-1945



## முனிவரின் கோபமும், முகுந்தனின் சாந்தமும்.

பக்திப் பெருக்கே கோபத்தின் உச்சநிலைக்குக் கொண்டு விட்டுவிடுகிறது ப்ருகு முனிவரை. முக்கண்ண மூர்த்தியையும் மிஞ்சிவிடுகிறார் முனிச்ரேஷ்டர். கோபாவேசத்தில் அன்று அவர் செய்த அதி அஸாதாரணக் காரியம் அன்றும் இன்றும் என்றும் மூவுலகினரையும் பிரமிப்புக் கடலிலாழ்த்தியவாறே இருக்கிறது.

சாதாரணமாக முனிச்ரேஷ்டர்களின் கோபமோ, சாபமோ தேவர்கள் அல்லது அசுரர்கள், அல்லது நரர்கள் மீதுதான் பாய்வது வழக்கம்; ஆனால் இந்த முனிவரோ மும்மூர்த்திகளையும் கோபாவேசத்தோடு தாக்குகிறார். அந்த நிகரற்ற கோபத்தின் அடிப்படையாக, பின்னணியாகயிருப்பது எல்லையற்ற பக்தியே என்பதுதான் இங்கு விசேஷமாகக் கவனிக்கத்தக்கது.



மும்மூர்த்திகளையும் அவரவர் ஸ்தலத்திலேயே சென்று ஸேவிக்கவேணும் என்று பக்திப் பெருக்கால் கிளம்பிய முனிவர் கண்ட காட்சி என்ன? பிரம்மாவும் ஸரஸ்வதியும் ஸல்லாபமாயிருக்கக் கண்டார். ப்ரம்மாவைச் சபித்துவிட்டு, பரமசிவனிடம் சென்றார். அங்கு கண்ட காட்சியோ அவரை இன்னும் அதி ஆவேசத்தில் கொண்டுவிட்டது: அங்கும் ஒரு சாப பாணத்தைத் தொடுத்தார். மூன்றுமிடத்திலும் ஏமாற்றமேற்பட்டால் கோபம் உச்சநிலையை அடைவதில் ஆச்சரியமென்ன?

கோபம் கொண்டது ஆச்சரியமில்லை; அந்த ஆத்திரத் தாண்டவத்தில் அவர் செய்த காரியம்தான் அகில லோகத்தையும் அதிர்ச்சியடையும்படி செய்துவிட்டது! அகிலலோகநாதனைத் தன் திருக்கரலைால் எட்டி உதைத்தார்! முகுந்தனோ, "இந்தப் பாதங்களுக்கு எவ்வளவு சிரமம் ஏற்பட்டுவிட்டது!" என்று வருந்தி, லக்ஷ்மியின் துணையுடன் கோபமூர்த்திக்குப் பாதபூஜை செய்தார் சாந்தமூர்த்தி!

இவ்வாறு உலவும் இதிகாஸம், ஸ்ரீமந் நாராயணன் அடியார்க்கு அடியவன் என்பதைக் காட்டுவதற்கே ஏற்பட்டிருக்கவேண்டுமென்று சொல்லவும் வேண்டுமோ?

—வை. மு. ஸ்ரீ

# வை. மு. ஸ்ரீ
# நவீன பிரஹ்ம தேவன்



## 1 நான்முகனே நடுநடுங்குகிறார்

"நான்முகனே நடு நடுக்குகின்றார் இந்நவீன பிரஹ்மதேவனின் நவநவமான சிருஷ்டிகளைக்கண்டு. பாமன் எழுதிய எழுத்தை பிரமனாலும் அழிக்கமுடியாது என்ற காலம் போய், நினைத்தபடியெல்லாம் தன் சிருஷ்டிகளின் தலையெழுத்தை மாற்றியமைக்கும் ஜகஜ்ஜாலப் புரட்டனாக இருக்கிறானே இந்த நூதன புருஷன்! மும்மூர்த்திகளும், தேவிகளும், சகல சக்திகளும் இவன் சொன்னபடி கேட்கும் காலமாய் விட்டதே! அசுர சக்திகள் கூட உண்டு இந்தப் பேர்வழிக்கு! என்ன வெல்லாம் செய்கின்றான் இவன்!"



இவ்வாறு சிந்தித்துக் கொண்டிருந்தவர் யாரென்று நினைக்கிறீர்கள்? த்ருகாலமும் அறிந்த த்ருலோக சஞ்சாரியான நாரதர்தான்!

"யாரிடம் என்ன கலகம்செய்யலாம்! இன்றைய பொழுதை எப்படிக் கழிக்கலாம்?" என்று யோசித்தவாறே பூலோகத்தில் சஞ்சரித்துக் கொண்டிருக்கையில் நவீன பிரம்ம தேவனைக் கண்டார்; மேற்கூறியவாறு வியப்பு கொண்டார்! உடனே தேவலோகத்தை நோக்கி விரைந்தோடினார்!! அன்னையின் அந்தப்புரத்தை நோக்கி அலையக்குலைய ஓடினார் என்றால் என்ன ஆச்சரியம் பாருங்கள்!

* * * * *



"குழந்தாய்! ஏனப்பா இவ்வளவு பதட்டத்துடன் காணப்படுகிறாய்? விஷய மென்ன? உன்னைக் கூட கலங்கவைத்துவிட்ட அப்பேர்ப்பட்ட சம்பவம் என்ன நிகழ்ந்தது?" என்று அன்புடன் வினவினாள் அன்னை ஸரஸ்வதி தேவி.



"எல்லாம் இந்த அப்பாவின் அசட்டுத்தனத்தினுல் தான்! முதல் தப்பு இவர் பேரில்தான். இவர் சிருஷ்டித்த ப்ரக்ருதி ஒருவன் என்ன அட்டகாஸம் செய்கின்றுன்! அவன் பெயரையும் நவீன ப்ரஹ்ம தேவன் என்று வைத்துக் கொண்டிருக்கிறுன். "ப்ரஹ்மா என்ன செய்ய முடியும் என்னிடம்? என் சிருஷ்டிகளைக் கண்டு நானே திகைத்துப் போகிறேனே ஒவ்வொரு சமயம்!" என்று இறுமாப்பு கொள்கிறுன் அந்தப் பேர்வழி!" என்று ஒரே மூச்சில் புகார் செய்தார்.

"விஷயம் விளங்கிவிட்டது! அவன் அட்டகாஸத்திற்கு அப்பாவின் அசட்டுத்தனம் மட்டும் காரணமில்லே. நானும் ஒரு விதத்தில் பொறுப்பாளிதான். அவனை நான் ரொம்பவும் தட்டிக்கொடுத்து, அவனது வித்தைக்கு வெற்றியையும் அளித்து விட்டேன். அதுதான் அவன் இவ்வளவு தடபுடல் செய்கிறுன்" என்று கூறிக்கொண்டிருக்கையில், இதையெல்லாம் கேட்டுக் கொண்டே வந்த பிரஹ்மா நகைத்துக் கொண்டே "நாரதா! அவன் அட்டகாஸத்திற்கு நாங்கள் இருவரும் எப்படி பொறுப்பாளிகளோ அதேபோல் நீயும் தான் காரணம்!" என்று ஒரு 'போடு' போட்டார்!

"நானு! இதென்ன!" என்று நாரதர் பிரமிப்புடன் கேட்டதற்கு, "உன்னுடைய த்ருகால ஞானத்தையும் ஓரளவு அவனுக்கு அளித்திருப்பதனுல்தான், அவன் இஷ்டப்படி க்ருத, த்ரேதா, த்வாபர யுக மூர்த்திகளை மூதற்கொண்டு தன் இஷ்டப்படி நினைத்த போதெல்லாம் தன்முன் கொண்டுவருகிறுன்!" என்று சொல்லிச் சிரித்தார் பிரஹ்மா.

"முடிந்ததா உன் ஹாஸ்ய நாடகம், நாரதா?" என்று கேட்டவாறே பரபரப்புடன் உள் நுழைந்த லக்ஷ்மீ நாராயண தம்பதிகளைக் கண்ட மூவரும் சாஷ்டாங்கமாக நமஸ்கரித் தெழுந்தனர். அன்றைய பொழுதை ஐவரும் ஆனந்தமாய்க் கழித்தனர்.

* * * * *

## அன்றே நான் உணர்ந்தேன்.

இத்தகைய ஒரு அசம்பாவித கற்பனை இந்தச் சொத்தை மூளையில் உதிப்பதற்கு ஒரு நிகழ்ச்சி ஆதி காரணமாயிருந்தது. ஸ்ரீமான் நவீன ப்ரஹ்மதேவன் பக்கத்திலே உட்கார்ந்து என் வேலையைக் கவனித்துக் கொண்டிருந்தேன். இருவரும் மோகினி ஊழியத்திலே தான் ஈடுபட்டிருந்தோம் என்று சொல்லவேண்டுமோ?

அவ்வமயம் அவர் தனது சிருஷ்டிகளிடமே சில சேஷ்டைகள் செய்ய ஆரம்பித்தார், என் கண்ணெதிரே! ஆக்ஷேபனை சமாதானங்களும், கேள்வியும் பதிலும்; வியப்பும் விளக்கமும் ஒன்றையொன்று அடுத்துப் படையெடுத்தன. அவரது அபூர்வ சக்திகளை நான் அன்றே முழுவதும் உணர்ந்தேன். தேவாதி தேவர்களும், அசுராதி பயங்கரர்களும்,—ஏன், நீங்களும் நானும் கூட,—அவரது திறமையைக் கண்டு திகைத்துப் போகிறோமல்லவா? கேளுங்கள் அன்றைய அபூர்வ நிகழ்ச்சியை!

## 3 அன்றைய அபூர்வ நிகழ்ச்சி

ஸ்ரீமான் நவீன ப்ரம்மதேவர் (இனி அவரை தேவனார் என்றே இக்காலத்திய சம்பிரதாயப்படி குறிப்பிடுகிறேன்) ஜகன்மோகனனின் சுந்தரவதனத்தின் அழகில் ஈடுபட்டிருந்தார். புன்னகை புரியும்படி எவ்வளவு மன்றாடியும் மகா விஷ்ணுவின் மனம் இளகியதாகக் காணவில்லை. "ஒத்துழைப்பு என்ற அம்சம் உம்மிடம் காணவில்லையே! நீர் மகாவிஷ்ணுவானால் எனக்கென்ன? உமது விழிகளும், உதடுகளும் நான் சொன்னபடிக் கேட்கவேண்டும்!" என்று கூச்சல் போட்டார். நான் அப்படியே பிரமித்துப் போய் அவர் பக்கம் திரும்பினேன். தேவனார் திருவாய் மலர்ந்தருளினார்: "பாருங்கள் ஸார்! தான் உலகநாதன் என்பதனாலேயே அவர் ரொம்பவும் தகராறு செய்கிறார். என் பலத்தை அவர் இன்னும் அறியவில்லைபோலிருக்கிறது!"

"வாஸ்தவந்தான்! சங்கு சக்கராதி ஆயுதங்கள் தன்னிடமிருப்பதால் அவர் தன்னை யார் என்ன செய்ய முடியுமென்று இருக்கிறார். கத்தியில்லாமல், ஒரு பொட்டு ரத்தம் சிந்தாமல், ஒரே நிமிஷத்தில் அவர் உடலிலிருந்து தலையைப் பிரித்துவிட உம்மால் முடியுமென்று அவருக்குத் தெரியாதே, பாவம்!" என்றேன்.

மறு நிமிஷமே மகாவிஷ்ணுவின் திருமுக மண்டலம் மறைந்தது. சிறிது நேரம் கழித்து, புன் முறுவலுடன் திரும்பவும் காட்சியளித்தது. என்ன மாயம்!... ஆனந்த வெள்ளத்தில் மிதந்தோம்.

* * * * *

* * *

* *

*

வை, மு. ஸ்ரீ.





# தேவனார் திருவிளையாடல்கள்

4

தேவனார் அவர்களின் திருவிளையாடல்கள் அனந்தம். அவற்றில் சிலவற்றையாவது நீங்கள் அறிய ஆசைப்படுவீர்கள் என்று எனக்குத் தெரியும். அதனால் நானே என்தலையில் அட்சதையைப் போட்டுக்கொண்டு, தேவனார் திருவிளையாடல்கள் என்ற தலைப்பில் சிறியதோர் காலக்ஷேபத்தைச் செய்ய முன் வரலானேன் !



"ஆதௌ கீர்த்தனாரம்பத்திலே, ப்ரஹ்லாத வரதன் ஸ்ரீபாடலாத்ரி நரஸிம்மன் ஸேவைஸாதித்து அருளும் புண்ணியாரண்ய க்ஷேத்திரத்திலே, வைத்த மாநிதிக் குடிசையிலே மோகினி ஊழியருள் திலகமென விளங்கும் நவீன ப்ரஹ்மதேவனின் அரும் பெரும் திறமைகளை உலகத்தோர் உணரும்பொருட்டு கலாஸேவகார்த்தம், இந்த காலக்ஷேபமாகப்பட்டதை செய்ய மூன்வரலானேன், தொதரீ, ந.ஹை ஹஹாய்...

"உங்களில் பலர் சிரிப்பது என் காதில் படுகிறது. அவசரப்படாதேயுங்கள் ! அரிய பெரிய விஷயம் காத்திருக்கிறது. தொதரீ, இ இ...

"கேளுங்கள் விசித்திரத்தை ! ஒரு புதிர் போடுகிறேன்:—



கழுத்தை வெட்டுவான்; ஆனால் கொலைபாதகனல்ல;
இறந்தோரை உயிர்ப்பிப்பான், மந்திரவாதியல்ல;
குரூபியை அழகுறச் செய்வான், மாயாஜாலனல்ல;
கிழவனைக் குமரனாக்குவான், மருத்துவனல்ல;
மதம் விட்டு மதம் மாறச்செய்வான், மதகுருவல்ல;
கள்வனை மூடனாக்குவான், சண்டைக்காரனல்ல;
ஆணைப் பெண்ணாக்குவான், அமரனல்ல;
அளவற்ற ஹிம்ஸை செய்வான், அசுரனல்ல;
சொத்தைப் பறித்துக்கொள்வான், திருடனல்ல,
மூக்கை அறுத்திடுவான், இலக்குமணனல்ல;
ரணகளத்தில் ரத்தவெள்ளமாக்குவான், போர்வீரனல்ல;
நெருப்பின்றி கொளுத்துவான், புரட்சிக்காரனல்ல;
அமைதியை நிலவச் செய்வான், மஹாத்மாவல்ல!
அரிய சிருஷ்டிகள் செய்வான், பிரஹ்மாவல்ல;
தெய்வங்களை அழைப்பான், பூசாரியல்ல;
இஷ்டம்போல் ஆட்டிவைப்பான், அதிகாரியல்ல.



சகல தேவாதி தேவர்களையும், அசுரர்களையும் மனிதர்களையும், மிருகங்களையும், தாவரங்களையும் மற்ற சரா சரங்களையும் ஆட்டிவைக்கும் அற்புத சக்திவாய்ந்த, எதிர்ப்பற்ற ஏகசக்ராதிபதி இவர் யாரோ?... சொல்வீர் சபையோர்களே, சிந்தனை செய்தே ! யதரீ நனேய்...

நவீன பிரஹ்மதேவன்

இதென்ன இவ்வளவு கோஷம்? புரிந்துவிட்டவர்கள் இப்படி சலசலவென்று பேசலாமோ? புரியாதவர்கள் ஏன் இப்படி விழிக்கவேணும்! இதோ இன்னும் விவரமாகச் சொல்கிறேன், கவனியுங்கள்:

"கொலையெனும் கொடும்பாதகத்தைத் கைகூசாது செய்யும் எவனும் மனத்தில் கொடிய எண்ணத்துடனேயே செய்கிறான். ஆனால் நமது தேவனாரோவெனில் கழுத்தை முறித்தாலும் மிகவும் நல்லெண்ணத்துடன்தான் செய்வார்! இவர் செய்யும் கொலையில் மரண அவஸ்தையே கிடையாது! கத்தியோ, கயிறோ, விஷமோ எதுவுமே தேவையில்லை; இவரது ஆயுதமே தனி தினுசு; அபூர்வ சக்தி வாய்ந்தது. கழுத்தை வெட்டிய மறுநிமிஷமே, முன்னிருந்ததைவிட இன்னும் அழகானதோர் சோபைமிக்க முகத்தை ஒட்ட வைத்து உயிர்ப்பித்துவிடுவார் தனது திறமையால்!

இதேபோல், இறந்து மண்ணாய்ப்போனவர்களின் ஜீவகாலத்திய படத்தை முன் வைத்துக்கொண்டு அவர்களைத் திரும்பவும் உயிர்ப்பிக்கும் அரிய திறமை உண்டு நமது தேவனாருக்கு! சுயரூபத்திலோ, விச்வரூபத்திலோ, வேண்டிய அளவில் உருவெடுக்கச்செய்வார். அன்பு கனிந்த முகத்தை என்றென்றும் கண்டு களிக்கும்படிச் செய்வார்.

இதுமாத்திரமா! குரூபியாக தான் சிருஷ்டித்த ஒரு ப்ரக்ருதியையே அழகுப்பிம்பமாக மாற்றிவிடுவார், இஷ்டப்பட்டால். மாயஜால வித்தைகள் அவருக்குத் தெரியாது. நவநாகரிக அழகு முறைகளோ, டாய்லட்டுகளோ, இதர இத்யாதிகளையோ கையாள மாட்டார்!

அடேயப்பா! கிழவனைக் குமரனாக மாற்றிவிடுவார் ஒரு நொடியில். "வாலிபம்! வாலிபம்!" என்று விளம்பரம் செய்துகொண்டேயிருக்கிறார்களே சில மருந்துக்காரர்கள், அத்தகைய் எதையும் இவர் கனவிலும் நினைக்கமாட்டார். மருந்தோ மந்திரமோ இல்லாது, குமரனைக் கிழவனாகவும் மாற்றிவிடுவார். வயதாகவேண்டியதில்லை; மனதில் சோர்வு ஏற்படவேண்டியதில்லை, கவலையும் வேண்டாம், சிரமமுமில்லை! குமரனாயிருந்தவனைத் திடீரென்று முதுமையுடன் காணச் செய்துவிடுவார். இவ்வாறு செய்வதில் அவர் ஒன்றும் வஞ்சத்தைத் தீர்த்துக்கொள்வதில்லை. ஏதாவதொரு நிர்ப்பந்தத்தைக் கொண்டே அவர் இவ்வாறு அற்புதங்களை நிகழ்த்தவேண்டி வருகிறது. உதாரணமாகப் பாருங்கள். கத்தியோ, க்ரீமோ இல்லாமலேயே தாடியை க்ஷவரம் செய்துவிடுவார், அதுவும் இமைப்பொழுதில்! அதேபோல, எந்தவிதத் தைலமுமின்றி மழமழப்பாயிருக்கும் யௌவன முகத்தில் பெரிய தாடியை வளரச்செய்துவிடுவார். மாதங்களாகவேண்டியதில்லை; ஒரு நிமிஷப் பொழுதினிலேயே நிகழ்த்திடுவார் இந்த நூதன விசித்















திரத்தை! டிராமாக்காரர்கள் கட்டிக்கொள்ளும் பொய்த் தாடிகளை ஒட்டவைப்பதில்லை நமது தேவனார். கருப்புதாடி வேண்டுமானாலும் சரி, வெள்ளைத் தாடி வேண்டுமானாலும் சரி, உடனே ததாஸ்து சொல்லி ஸாங்க்ஷன் செய்துவிடுவார் அந்த முகத்திற்கு.

ஒருவிதமானமதப்பிரசாரமுமின்றி, வாய்திறந்து பேசாமலே, ஒருவனை மதம்விட்டு மதம்மாறச் செய்துவிடுவார் நமது தேவனார். ராமன் என்றிருந்தவனை நொடிப்பொழுதில் ரஹ்மான் ஸாஹேப்பாகக் காட்சியளிக்கச் செய்து விடுவார். மறுகணமே அதே ஆசாமியை ரோமேன் துரையாக மாற்றித் திகைத்துவிடும்படிச் செய்வார் நம்மெல்லோரையும். நிமிஷத்திற்கு நிமிஷம் மதாசார சம்பிரதாயப்படி உடை, பாவனைகளை மாற்றி விடுவார்.

நடையுடை பாவனைகளில் செய்யும் மாறுதல்களினால், ஒரு கனவானையே முரட்டுத் தடியனாகக் காட்சி கொடுக்கும்படிச் செய்துவிடுவார். "என்ன கம்பீரம்! பெருந்தன்மை! கனவான் கனவான் தான்!" என்று கூறும்படியுள்ள ஒருவரை, மறுக்ஷணமே, "மூஞ்சியையும் பவிஷையும் பாரு! சோதாப்பயல் மாதிரி இருக்கிறான்" என்று பட்டம் சாற்றும்படிச் செய்து விடுவார் தேவனார்.

ஆணைப் பெண்ணாக்குவார்; பெண்ணை ஆணாக்குவார். மானிட சரீரத்தின் பல பகுதிகளுக்குத் தன் கை போனபடியெல்லாம் அளவற்ற ஹிம்ஸைகள் செய்வார்; ஆனால் நோவே எடுக்காது! நகைகளைப் பிடுங்கிக்கொண்டு 'உரித்த வாழைப்பழம்போல்' நிற்க வைப்பார், ஆனால் ஒருவரும் போலீஸ்கம்ப்ளெய்ண்ட் கொடுக்கமாட்டார்கள் அதைப் பற்றி. ஏனென்றால் நகைகளை அவர் தனக்கென்று எடுத்துக்கொண்டால்தானே? தனக்குமில்லை, வேறொருவருக்குமில்லை. லக்ஷ்மணன் சூர்ப்பனகைக்குச் செய்ததுபோல் மூக்கையே கூட அறுத்துத்தள்ளுவார், ஆனால் ஒருவருக்கும் சிரமமின்றியே! தனக்கு யுத்த தளவாடங்களைத் தொடுவதற்கு நடுக்கமாயினும், போர்க் களத்தில் ரத்த வெள்ளத்தை ஓடச் செய்குவார், போர்க் கருவிகளின்றியே! அசோக வனத்தை அனுமன் அழித்தது போல் இவர், வேண்டிய இடங்களில் ஜ்வாலைகளை சிருஷ்டிப்பார். கண்ணெதிரே எரியும்; ஆனால் அனலடிக்காது, சுடாது! கலவரமாய்க் காணப்பட்ட இடங்களில் சாந்தியை வரவழைப்பார். புயலிருந்த இடத்தில் அமைதியை நிலவச் செய்வார். மப்பு மந்தாரமாயிருந்த வானத்தில் பூர்ண சந்திரனைப் புன்னகை புரியச் செய்வார்.

கனவிலும் கருதமுடியாத அற்புதங்களைக் கண்ணெதிரே செய்துக்காட்டுவார். இவர் நினைத்த மாத்

திரத்தில் ஒரே மேஜையைச்சுற்றி ஹிட்லர், காந்தி, நேரு, சர்ச்சில், ரூஸ்வெல்ட், ஸ்டாலின், சியாங்கேஷேக், சுபாஷ், டோஜோ முதலிய பிரமுகர்கள் ஒன்ருக அமர்ந்து அன்பு மொழிகள் புகலுவர். ஏமரியும் நேருவும் கைகுலுக்குவர்! சர்ச்சிலும் ஹிட்லரும் தழுவிக்கொள்வர்! சவர்க்கார் ஜின்ருவுக்கு மகுடம் சூட்டுவார்! உலகத்தில் சண்டையேது? பூசலேது! பகை ஏது?

நமது பக்தமணிகள் 'பாம்பும்புலியும் மெய்ப்பாடுபட்டுத் தேடிப்பார்த்துப் பகிர்ந்துகொண்டது' என்று கைலாஸநாதரின் திருமேனியை அலங்கரித்த அம்சங்களில் பகையின்மையைப் பாடியிருக்கிருர்களல்லவா? நமது தேவனுரோ, "பகைமையை விட்டொழி மனமே!" என்ற சித்தாந்தத்தை நிலைநாட்டி நிர்மலமான போக்கையுடைய உத்தமசீலர்! மதத்வேஷத்தை த்வேஷிக்கும் பரம சன்மார்க்க சமரஸ குணவந்தர். இவருடைய சத்பக்தியைக்கண்டு மகாவிஷ்ணு உடுக்கையடிப்பார்; பரமசிவன் சங்கநாதத்தை ஒலிப்பார்; ப்ரஹ்மா வேல் எடுப்பார்; முருகன் கதாயுதபாணியாக ஸேவைஸாதிப்பார்! ஹனுமாரின் வாலும் கதாயுதமும் ராமனைச்சார்ந்துவிடும், பக்தனுடன் பகவான் ஐக்கியமாவதைக்காட்ட. வால் அறுந்த ஹனுமான் வில்லும் அம்புமாகக் காட்சியளிப்பார், "நானே பகவான்" என்றுதத்துவம்பேசிக்கொண்டு. பகவான் அடியார்க்கு அடியனன்ரேயென்பார் தேவனுர்!

இவ்வாறு அபூர்வகாரியங்களை அளவற்று செய்யும் இவர் ப்ரஹ்மாவல்ல. ஆனல் ப்ரஹ்மா, விஷ்ணு, சிவன் முதலானோர் முதற்கொண்டு இவரது அழைப்புக்கு இணங்கி வேண்டும்போதெல்லாம் இஷ்டப்பட்ட ரூபத்தில் காட்சியளிக்கிருர்கள். இப்படி எல்லோரையும் தன்னிஷ்டப்படியே ஆட்டிவைக்கும் இவர் யாரென்று இன்னுமா புரியவில்லை?

"ஏன் புரியாமல்? அவரேதான் அவர்! நவீன பிரஹ்மதேவர் உம்முடைய நண்பர்தானே!" என்று உங்களில் சிலர் சொல்லிச் சிரிப்பது எனக்குத் தெரியாதா! வாஸ்தவந்தான். தேவனுர் என்னுடன் நெருங்கிப் பழகுவதாலும், நான் அவருடன் பரம மித்ரனுயிருப்பதாலும், அவர் என் நண்பர்தானே என்று நீங்கள் சொல்வது சரிதான். அவர் உங்கள் நண்பரும் கூட என்பதை நான் சொல்லவும் வேண்டுமோ!

"பாவம்! புரியவில்லைபோலிருக்கிறது. இல்லாவிட்டால் அந்தப்பையன் ஏன் இப்படிக் கோஷம் போடுகிருன்? அவனைப்போல் சிலர் இருப்பார்களோல்லியோ! அவர்களுக்காக விளக்கிக் கூறி இந்தக் காலக்ஷேபத்தை இத்துடன் முடித்துக்கொள்ளவேண்டியது என்னுடைய கடமையாகிவிட்டது. நவீன பிரஹ்மதேவர் நமது சித்திர நிபுணர்தான்! வேறு யாரு











மில்லை! பலவித வர்ண மைகளும், ப்ரஷ்ஷுகளும், பென்ஸிலும், ரப்பருமே அவரது ஆயுதங்கள். அவர் சிருஷ்டிகள்தோன்றும் உலகம் வெள்ளைத்தாள்தான். அவரது கற்பனையும், கைத்திறனும், மனோதர்மமும் சேர்ந்து, தாள்மீது தோன்றச்செய்யும் ரூபங்களைக் குறித்தே இதுவரை நமது புதிரும், விளக்கமும் சொல்லப்பட்டது!

கலைவாணியின் திருவருள்தான் இந்நவீன தேவருக்கு இணையற்ற சக்தியைக் கொடுக்கிறது. கலைக்கும், கலைஞனுக்கும் நாம் எவ்வளவு கடமைப்பட்டிருக்கிறோம் என்பதை வற்புறுத்திவிட்டு நீ நாம நுப மூலது நித்ய ஜெயமங்களம் பாடிவிடுகிறேன்."

## 5 ஐவரும் சேர்ந்து ஆசீர்வதிக்கின்றனர்.

"நாரதா! கவனித்தாயா இன்று பூலோகத்தில் நடந்த காலக்ஷேபத்தை! நீ புகார் செய்துகொண்டு வந்த அதே விஷயத்தைக் குறித்தே இன்று யாரோ ஒரு நரப்பூச்சி அளந்து கொட்டினனே!" என்று ஸரஸ்வதிதேவி ஒரு ஏளனச் சிரிப்புடன் கேட்டாள்.

"அம்மா! நான் என்ன அவ்வளவு அசடாகி விட்டேனா யென்ன? ஒரு குட்டி ஹாஸ்ய நாடகத்தை நடத்தி நாம் ஐவரும் ஒன்று கூடும்படிச் செய்துவிட்டேன். அவ்வளவுதான். த்ருகாலத்தையும் அறியும் சக்தியை எனக்கு அளித்துள்ளதால், இதுபோன்ற ஒரு காலக்ஷேபம் பூலோகத்தில் நடக்கப்போகிறதென்பதை முன்கூட்டியே அறிந்தே. அதை நீங்களும் கவனிக்கவேண்டுமென்பதற்காகவே, இவ்வாறு நடந்தேன், நடித்தேன், அவ்வளவுதான்!

"நாம் ஐவருமாகச்சேர்ந்து கலையையும் கலைஞனையும் ஆசீர்வதித்து, மனிதவாழ்வை உய்வுறச் செய்வோம்!"

வை. மு. ஸ்ரீயின் நூதன நவீனம்
அவசரமூர்த்தியின்
அபூர்வ டயரி
தொகுத்தவர் - ஸ்ரீ. நிதானகீர்த்தி
அச்சகம் - டிலே பிரஸ்
பிரசுரகர்த்தர்கள் - தூங்குமூஞ்சி லிமிடெட்.
விஷயம் - 1. வாழ்க்கையின் மேடு பள்ளங்கள்
2. இலக்கிய ரஸனை
3. பிரயாண அனுபவங்கள்
4. கற்பனை ஊற்று
5. காமெராவில் சிக்கிய காட்சிகள்
6. நவீன பிரம்மதேவரின் சிருஷ்டி
தமிழ்ப் புத்தக உலகில் ஒரு நூதன சிருஷ்டி



## நிகரற்ற தொண்டு

★

கலா ரஸிகர்களான மோகினி அன்பரின் அபிமானத்திற்குப் பாத்திரமான நமது ஓவியப் புலவர்

**ஏ.வி.ராகவன்**

இந்த மலரின் சித்திர அலங்காரங்களுக்கும் ஓவியச் சிறப்புக்கும் மூலகாரணமாக இருந்து நிகற்ற கலைத்தொண்டு புரிந்திருக்கிறார். சித்திர நிபுணரும் பரம ரஸிகருமான இவருக்கு தமது கலையில் உயர்ந்த கற்பனையும் மனோதர்மமும் உண்டு என்பது நேயர்கள் அறிந்ததே. இவை யாவும் ஒருங்கே பிரகாசிக்கின்றன, இந்த மலரில். நீங்கள் 'சபாஷ்' என்று ஆரவாரத்துடன் சொல்வது இதோ கேட்கிறதே எனக்கு!

வை. மு. ஸ்ரீ.





"தாத்தா! எனக்குக் கதை சொன்னால்தான் தூங்குவேன்" என்று குழந்தை குமரேசன் அழுதான். தாத்தா கதை சொல்ல ஆரம்பித்தார்.

காட்டில் ப்ரம்மாண்டமான ஒரு மாமரத்தில் ஒரு கிளி கூண்டு கட்டிக்கொண்டு வாசம் செய்துவந்தது. கிளிக்கு இரண்டு குஞ்சுகள் இருந்தன. தினம் காலையில் தாய்க்கிளி குஞ்சுகளுக்கு ஆகாரம் எடுத்துவரப் போய்விடும். குழந்தைக்கிளிகள் தனியாக இருக்க பயந்து தம் தாயை நோக்கி "அம்மா! நீ எங்களைத் தனியாகவிட்டுப் போய்விடுவதால் பயமாயிருக்கிறது. கரடி, புலி, ஸிம்மம் எல்லாம் கத்தும்போது எங்களுக்கு அழுகையே வருகிறது. நீ போகாதேம்மா!" என்று கிளிக் குழந்தைகள் கேட்டன. அதற்குத் தாய்க்கிளி, "குழந்தைகளே! நீங்கள் அசடு போல் பயப்படக்கூடாது. நான் துணைக்கே உட்கார்ந்திருந்தால் ஆகாரம் எப்படி கிடைக்கும். உங்களுக்கு பயமாக இருக்கும் போதெல்லாம் ரங்கா ரங்கா! கஸ்தூரி ரங்கா! காவேரி ரங்கா! என்று பகவானையே கூவிப் பாடுங்கள். பயம் தெளிந்துவிடும்" என்று தைரியம் கூறிவிட்டுச் சென்றது.

ஒரு நாள் ஒரு குரங்கு கிளிக்கூட்டினருகில் வந்து மிகவும் பயங்கரமாகக் கத்தியதைக்கண்ட கிளிக் குழந்தைகள் நடுநடுங்கிப்போய் தன் தாயார் சொல்லியபடியே ரங்கா! ரங்கா...என்று பாடவாரம்பித்துவிட்டன. குரங்கு இந்த கிளிகளின் பாட்டைக் கேட்டு மிகவும் ரஸித்துத் தானும் கூட பாடவாரம்பித்தது. கிளிகளுக்கு ஒருவிதமான கெடுதலும் செய்யவில்லை. குழந்தைக் கிளிகள் பசியோடிருப்பதை அறிந்து குரங்கு நல்ல மாம்பழத்தைப் பறித்துக் கூண்டிற்குள் கொண்டுகொடுத்து "கிளிகளே! உங்கள் பகவன்நாம பஜனையை நான் கேட்டு மிகவும் சந்தோஷப்பட்டேன். இந்த பழத்தைச் சாப்பிடுங்கள்" என்று சொல்லி போய்விட்டது.

குழந்தைக் கிளிகளின் சந்தோஷம் சொல்லிமுடியாது. தாய்க்கிளி வந்ததும் மாம்பழத்தைக்கண்டு 'இது ஏது' என்று கேட்டது. குரங்கு கொடுத்த அதிசயத்தை குழந்தைக்கிளிகள் சொன்னதும் தாய்க்கிளி மிக்க சந்தோஷமடைந்து "கண்மணிகளே! பார்த்தீர்களா! கடவுள் நாமத்தை சொல்லியதால்தானே உங்களுக்கு இப்போது மாம்பழம் கிடைத்தது. எந்த காலத்திலும் இனி பகவானையே பஜியுங்கள். ஒரு குறையும் வராது" என்று சொல்லியது.

பாப்பா! நீயும் அந்த கிளிக்குழந்தைகளைப்போல் சதா பகவானை பஜனைசெய்தால் உனக்கு ஒரு குறையும் வராது. தெரிந்ததா?...என்றார் தாத்தா!.

—"பேனு"

# ஸ்ரீவைஷ்ணவ அன்பர்களுக்கு

ஸ்ரீமதே ராமானுஜாய நம;

கல்விக் கடலாகிய நம் ஆசார்ய சிகாமணிகள் இருவர் மோகினி அன்பர்களுக்காக அருள்புரிந்தளித்துள்ள திவ்யவியாசங்களுக்கு நீசனேன் —நிறையொன்றுமிலேன்—முன்னுரை எழுதப்புகுவது ஏலாதாயினும், "அவரவர் தாந்தாமறிந்தவாறு" என்று பொய்கையாழ்வார் விதித்துள்ளபடியே இந்தச் சிற்றறிவுக் கெட்டினபடி தைரியத்துடன் முன்வருகிறேன்: க்ஷமித்தருளவேண்டும்,

ஸ்ரீமுதலியாண்டான் வம்சதிலகரான ஸ்ரீ கோ. க. வா. அ. குமார ஸ்ரீ சைலாச்சாரியார்ஸ்வாமிக்கு அபிமான ஸ்தலமாக வாய்த்துள்ள ஸ்ரீபுண்யாரண்ய க்ஷேத்திரமாகிற இந்த சிங்கப்பெருமாள்கோவில், நமது மோகினிக்கு அடைக்கல ஸ்தலமாக வாய்த்தது விசேஷமே. ஸ்ரீ பாடலாத்ரி நரஸிம்மனின் நித்ய கைங்கர்யத்தில் ஈடுபட்டு, தன்மயராகி, ஞான ஸம்ருத்தியோடும் சிஷ்ய சம்பத்தோடும் விளங்கி நிற்கும் ஸ்ரீ. உ. வே. ஆசார்யர் ஸ்வாமி நமது மோகினியிடத்து அபார கருணைகொண்டு ஆசீர்வதித்திருக்கின்றார். அறியவேண்டிய அர்த்தமெல்லாம் அழகாக நிரம்பப்பெற்ற நிகரற்ற திவ்ய சாஸ்திரமான ஸ்ரீ வசனபூஷணத்தின் பெருமையை விளக்குகின்றார் இம்மலரில். "உன்னில் திகழ் வசனபூஷணத்தின் சீர்மையொன்றுக்கில்லை" என்று மணவாளமாமுனியே சாதித்தருளியிருக்கிறார், பிள்ளைலோகாசாரியரின் திவ்யக்கிரந்தத்தைக் குறித்து.

மாமுனிகளின் பெருமைகளை உள்ளபடி அறிந்து, அவருடைய திருவருட் பெருக்கைக் கொள்ளைகொண்டு, ஸ்ரீ வைஷ்ணவத்துக்காக அல்லும் பகலும் அனவரதமும் ஊணுறக்கமின்றி கிரந்தங்களைப் பொழிந்தவாறே உள்ள ஸ்ரீ காஞ்சி உ. வே. அண்ணங்கராசார்யர் சுவாமி, மார்கழியில் மலரும் இம்மலரில் துழாய்வனத்தில் 'மலர்ந்த அத்புதஜோதியாம் பூங்கோதையைக் குறித்த ஸ்துதியை விளக்கியிருக்கிறார். விசேஷார்த்தரத்ன நிதியன்றோ ஸ்ரீமந் நிகமாந்த மகாதேசிகனின் திவ்ய ஸூக்திகள்! கவிதார்க்கிக சிம்மமென்னும் விருதுபடைத்த தேசிகர் இயற்றியருளிய கோதாஸ்துதியின் அரும்பெரும் பொருள்களை அனைவரும் அழகாக அறிந்துகொள்ள இந்த வியாசம் பெரிதும் உதவுமென்பது திண்ணம்.

"தார்மிக உணர்ச்சியுடன் வெளிவரும் பத்திரிகை மோகினி ஒன்றே" என்ற புகழைப் பெற்றுள்ள மோகினியின்பால் இத்தகைய மகான்களின் அன்பு நிறைந்திருப்பது பத்திரிகையுலகம் செய்துள்ள பெரும்பாக்கியமே.

வாசகர்கள் சார்பாகவும் ஸ்வாமிகளுக்குத் தண்டன் சமர்ப்பிக்கின்றேன். வாசகதோஷம் க்ஷமித்தருளவும்.

*வைத்தமாநிதி முடும்பை ஸ்ரீநிவாஸதாஸன்.*

# ஸ்ரீ வசனபூஷணத்தின் பெருமை

ஸ்ரீ. உ. வே. கோயில் கந்தாடை வாதூல
அண்ணுவிலப்பன் குமார ஸ்ரீ சைலாசார்யர் ஸ்வாமி.

நம் தர்சனத்தில் அருளாளப் பெருமாள் எம்பெருமானர் அனுபவித்தியற்றிய "பற்று குருவை பரனன்றென விகழ்ந்து, மற்றோர் பரனை வழிபடுதல், எற்றே" என்ற பாசுரத்தை சித்திரிக்கிறது ஸாங்காகில த்ராவிட ஸம்ஸ்க்ருத ரூப வேதஸாரார்த்த ஸங்க்ரஹ மஹா ரஸவாக்யஜாத வசனபூஷண திவ்ய சாஸ்த்ரம்.

பலபிறவியில் படுகின்ற இவ்வாத்மா உஜ்ஜீவனம் பெற பரம காருணிகரான ஸர்வேச்வரன் உயர்ந்த மானிடப் பிறவி தந்து ஸதா சார்யஸமாச்ரயணீயனாய் ஸ்ரீவைஷ்ணவனாய் ஸதாசார நிஷ்டனாய் வீறு பெறவே தேசிகரையும் அருளிச் செயலையும் அனுக்ரகித்தான். அவைகளில் த்விஜோத்தமரான ஸ்ரீவைஷ்ணவர்களுக்கு பரம ரஹஸ்யார்த்தமாக ஸ்ரீவசனபூஷணம் ஏற்பட்டது.

இதன் பெருமையை "ஆர் வசனபூஷணத்தின் ஆழ்பொருளெல்லா மறிவாரார். அது சொல்நேரில் அனுட்டிப்பாரார்" என்று விசதவாக் சிகாமணியால் கொண்டாடப்பட்டது. இதனால் எந்த சாஸ்த்ரம் வல்லவராலும் இதன்முன் பகல் விளக்கு மின்மினியே.

அப்படியானல் என்ன இதற்கு ஏற்றம்? . ஓர் ஸ்ரீவைஷ்ணவாதிகாரிக்கு ஸ்வஸ்வரூபாதி ப்ரகாசமான ரஹஸ்யத்ரயமும் சதாசார்ய சம்பந்தமும் வேணும். ஆத்ம ஸ்வரூப மறிந்தவனுக்கு தத்வத்ரய ஞானம் வேணும். தத்வத்ரயஞானம் பிறந்து உஜ்ஜீவிக்கும்போது அர்த்த பஞ்சகஞானம் வேணும். இவ்வளவும் பிறந்தபோதிலும் தன்னெஞ்சில் தோற்றினதேயாகாது, ஸ்வார்ஜிதமாகாமல் பைத்ருக தனம்போலே ஆயாஸமில்லாமல் அறிந்து உஜ்ஜீவிக்க பூர்வாசார்யானுஷ்டானுக்திகளோடு வளரவேணும் என்று கிரந்தஸ்தமாக்க அனுக்ரகித்த ஏற்றமிதுக்கேயுள்ளது.

மேலும்பூர்வர்களாசாரத்தை த்ருடீகரிக்கிறதும், இது வல்லவர்களுக்கு ஒரு ஏற்றமும் உண்டு. இதை யதிபுநரவதார விசதவாக் சிகாமணியான ஸ்ரீமணவாளமாமுனிகளும்

"உன்னில், திகழ் வசனபூஷணத்தின் சீர்மையொன்றுக்கில்லை
புகழல்ல யிவ்வார்த்தை மெய்யிப்போது"

என்று சாதித்தார். அதில் சிறிது அனுபவிப்போம்.

எல்லாவத்திலும் ஈச்வரனே உபாயோபேயம் என்று அறுதியிடுகிறது. இதில் ஆசார்யனே என்று அறுதியிடுகிறார். சத்சிஷ்யனாய் முமுக்ஷுவானவனுக்கு ஸ்வரூபானுரூபமான ப்ராப்யம் தனக்கு வகுத்தவனான பெரிய திருமந்திரம் உபதேசித்தவனே. அவனை முன்னிடாமல் வேறு ப்ராப்யம் சித்தியாகாது என்பதை

"தாமரையை அலர்த்த கடவ ஆதித்தியன்தானே நீரைப் பிரிந்தால் அத்தை உலர்த்துமாப்போலே ஆசார்ய சம்பந்தம் குலைந்தால் அத்தை வாடப்பண்ணும்"

என்று சாதித்தார். நமக்கு வகுத்த சேஷி ஈச்வரனேயாகிலும் அவன் நமக்கு சித்திப்பது ஆசார்யன் ப்ராப்யமாக அறுதியான அத்யவஸாயமானுல்தான் அவன் பிரஸாதமும், வைகுந்தமும், கைங்கர்யமும் சித்திகளும். இதை திருவுள்ளம்பற்றியே உலகாரியன் சரமப்ரகரணத்தில் "ஆசார்யாபிமானமே உத்தாரகம்" என்று அறுதியிட்டருளினுர். இதை ஸ்வாமி மணவாளமாமுனிகளும் "சாஸ்த்ர ஸித்தமானபக்த்யாதிகள் ஒன்றுமின்றியிலேநின்றபின்பு நிரதிசயக்ருபாவானுய் நிர்ஹேதுகமாக தன்னை அங்கீகரித்தருளி நிரபாயமாக நோக்கிக்கொண்டு போருகிற ஆசார்யன் இவன் நம்முடையவன் என்று அபிமானிப்பதுவே உத்தாரகம்" என்றும், ரிஷிகளும் "ஸுலபம் ஸ்வகுரும் த்யக்த்வா துர்லபம்ய உபாஸதே ஸித்தம் த்யக்த்வா தனம் மூடோ குப்த மந்வேஷ திக்ஷிதௌ" என்று அறுதியிட்டு இதை இப்படி உத்தாரக ப்ரதிபத்தி பண்ணுமலிருக்கிறுன். அவன் ப்ரத்யக்ஷமான திரவியம் விட்டு மாந்த்ரீகனை நம்பிய புதையலை ஆசைப்படுவதொப்பாகும். ஆனதால் நமக்கு ஏழாட்காலும் பழிப்பில்லாத வகுத்த ஆசார்யனை சர்வமுமாக பாவிக்கவேணும் என்ற அனுஷ்டானத்தை இந்த வசனபூஷணம் காட்டுகிறது. எது பிறந்தாலும் திருமந்திர பூர்வமாக ஸ்வரூப ஞானம் பிறந்து எம்பெருமானை ஆச்ரயித்தவனுக்கு பலப்ராப்தியில் ஈசவரனேடு நில்லாமல், எம்பெருமானை அடைவதற்கு கர்மஞான பக்தி அசாத்தியமாய் ப்ரபத்தியானது எப்படி சௌகர்யமோ? எப்படி ஸ்வரூபாநுரூபமாய் சுகமோ, அதுபோல் பாகவத கைங்கர்யம்வரை வரவேணும். அப்போதுதான ஞானமும் விரக்தியும் சாந்தியும் உடையவனுயிருக்கும் பரமசாத்விகனேடே ஸஹவாசம் பண்ணுகையும் வைஷ்ணவாதிகாரிக்கு அவச்யாபேக்ஷிதம் என்று த்வயப்ரகரணத்தில் முதலில் சாதித்ததை த்ருடீகரித்து இந்த வசனபூஷணத்தில்

"ப்ருப்யத்தில் ப்ரதமபர்வம் ஆசார்ய கைங்கரியம், மத்யமபர்வம் பகவத் கைங்கர்யம், சரமபர்வம் பாகவத கைங்கர்யம்"

என்று நிகமித்தார். இதில் ஆசார்யர்கள் நிர்வாகத்தின் அர்த்தம் அறிந்துகொள்ளவேண்டியது அவசியம். அதாவது

ப்ரதமபர்வம் ஆசார்யகைங்கர்யம் என்பது என்? ஒரு ஜீவனை வன் தனது இச்சாரூபமாயிருந்தவனை அமுதனுர் சாதித்த "திருத்தி திருமகள் கேள்வனுக்காக்கிய பின்" என்றபடி முதலிலே தன்னை அங்கீகரித்து பகவத் விஷயத்துக் காளாம்படித் திருத்தின ஆசார்யனுக்கு உகப்பாகப் பண்ணும் எம்பெருமானின் கைங்கர்யமானது ஆசார்ய கைங்கர்யம் என்கிறது.

மத்யமபர்வம் பகவத் கைங்கர்யம் என்பது? மேல்சொன்னபடி ஆசார்யன் நியமனத்தில் செய்த எம்பெருமான் கைங்கர்யத்தில் அவன் உகந்து பலகால் எதிர்பார்த்த இவனை இப்படி கம்ம கைங்கர்யத்துக்கு பண்ணிவைத்தானே என்று உகப்பால் ஈச்வான் திருவுள்ளம் பற்றியபடி ததேகத்யானமாயிருந்துள்ள தத்பக்தரான

ஆசார்யர்களுக்குப் பண்ணும் கைங்கர்யமானது பகவத்கைங்கர்யம் என்கிறது.

சரமபர்வம் பாகவதகைங்கர்யம் என்பது வடுகநம்பி, அருளாளப் பெருமாள் எம்பெருமானார், அப்பாச்சியாரண்ணா, அண்ணன் முதலானாரைப்போல் தேவுமற்றறியாத ஸ்ரீவைஷ்ணவர்களாய் ஆசார்யவான் என்றாகக்குமவர்களாய் ஆசார்யவைபவக்ஞ்யாபகராய், ஆசார்ய கைங்கர்யத்தின் ஏற்ற மறியுமவர்களான பாகவதர்களெல்லார்க்கும் உகக்கும்படியாக வகுத்த ஆசார்யனுக்குப் பண்ணும் கைங்கர்யம் பாகவத கைங்கர்யம் என்பது. ஆக, ஆசார்ய ப்ரீதி விஷயமான பகவத் கைங்கர்யத்தை ஆசார்ய கைங்கர்யம் என்றும் பகவத் ப்ரீதி விஷயமான பாகவத கைங்கர்யத்தை, பகவத் கைங்கர்யம் என்றும், பாகவத ப்ரீதி விஷயமான ஆசார்ய கைங்கர்யத்தை பாகவத கைங்கர்யம் என்றும் நிர்வாகிக்கப்பட்டது. ஆகையால் பலபடியாலும் ஆசார்ய கைங்கர்யமே ப்ராப்யம் உத்தாரகம் என்னக்குறையில்லை. இந்த •உத்தாரக ப்ரதிபத்தி அதிகார பேதத்தாலே பேதிக்கும். ஆச்ரயித்த சிஷ்யனுக்கு ஸ்வரூபாநு ரூபமாய் யாவஜ்ஜீவம் சர்வமும் அவனேயாக நடத்தினால் பரிபக்வனாய் பரமபதத்தில் மிகவும் உகப்போடே கையிலங்கு நெல்லிக்கனிபோல் ஒன்றுக்கு மஞ்சாதபடி பேறு சித்திக்கிறது. ஆசார்யன், தான் சிஷ்யனாய் வஸ்தவ்யம் ஆசார்யன் சன்னிதியும் பகவத் சன்னிதியும் ஜப்தவ்யம் குருபரம்பரையும் த்வயமும், பரிக்ராஹ்யம் பூர்வாசார்யர்களுடைய வசனமும் அனுஷ்டானமும், என்று சாதித்தபடி ஆசார்யன் உகந்ததாக சிஷ்யனை குளிரநோக்கிச்செய்யும் கிரிசைகள் செய்து அங்குத்தைக்கு மங்களா சாஸனபரனுக்கி பல்லாண்டு பாடும்படிச் செய்து, இவன் நடப்பை தனக்கு செய்வதாக உத்தேசியாமல் ஸ்வாசார்யன் பிரதமமாக நடுநாயகாசார்யன் (எம்பெருமானார்) மத்யமாக பிராட்டி பூர்வக எம்பெருமான் அந்தமாக நினைக்கவும் ஒன்றும் விரோதியாகாமல் இந்த ப்ரதிபத்தி தலைக்கட்டி நாடடங்க எம்பெருமானார் தர்சனம் தலைழத்தோங்கும் என்ற அர்த்தத்தை மிகவும் பரமோதாரரான பிள்ளைலோகாசார்யர் 18 ரஹஸ்யங்களிலும் வைத்து இதை மிகவும் குஹ்யமான அரும்பெருமர்த்தத்தை உபகரித்தருளினர். இதை நினைக்கில் நாம் நாட்டுக்கு செய்வதாக சொல்லியலைவது என்? ஆக இதனால் நமக்கு ஆசார்ய ப்ரதிபத்தி முக்யம். இது ஏற்பட்டால் சகலமும் சித்திக்கும். இதுதான் ஸ்ரீவசன பூஷணத்தின் ஸாரம். இதை அவரவர்கள் அனுக்ரகத்துக்குத் தக்கபடி சாதிப்பார்கள். இதுதான் பூர்வர்கள் சித்தாந்தம் என்பதை அறிந்தவரை எழுதினேன். குணத்தை கிரஹிக்கும்படி பெரியோர்களை பிரார்த்திக்கிறேன்

இந்த அர்த்தம் அறிவதுதான் துர்லபம் என்பதை பல இடங்களில் ஓலைப்படுத்தி "தெருள் தருமாதேசிகனை சேர்ந்து, பூர்வாசார்யர்கள் போதமனுட்டானங்கள், கூறுவார் வார்த்தைகளைக்கொண்டு நீர்தேரி, இருள் தருமாஞாலத்தே இன்பமுற்று வாழும் என்று ஸ்ரீவசனபூஷண கிரந்தத்தின் சரமப்ரகரணத்திற்கே மங்களா சாஸனம் செய்து தாமும் சரமதசையில் ஆசார்யனை பிள்ளையை த்யானித்து அழகியான் சன்னிதியில் "தென்னரங்கர் சீருளக்

SUPPLEMENT TO JAGANMOHINI OF 1-1-1945

இலக்காகப் பெற்றோம் என்று ஆரம்பித்து முன்னவராம் நங்குரவர் மொழிகளுள்ளப் பெற்றோம், பின்னை யொன்றுதனில் நெஞ்சு பெறாமல் பெற்றோம், பிறர் மினுக்கும் பொறாமையில்லாப் பெருமையும் பெற்றோமே" என்று இந்த உத்தாரகத்வத்தையும் தனது நைச்யத்தையும் அனுசந்தித்து பின்புள்ளாரான நாம் இதை அறிந்து நடந்துகொள்ள பாசுரமிட்டு அனுஷ்டித்துக் காட்டினார். இதுவே அல்லாத கிரந்தங்களுக்கும் இதுக்கும் வாசி. பட்டர், நஞ்சீயராகிற வேதாந்திக்கு ப்ரஸ்தாபத்தில் ஸ்ரீவைஷ்ணவரை திருநெடுந்தாண்டகம் என்கிற கிரந்தம் வரும் என்று சொல்லும்படிசாதித்து அனுப்பியது போல் நம் ஸ்ரீவைஷ்ணவர்களுக்கு, தென் ஆசார்யர்களுக்கு இந்த வசனபூஷணம் மிகவும் அவச்யம். அதன்படி அனுஷ்டிக்கவேணும் அல்லாதவை செறுப்புக்குத் தக்கற்றவோபாதி...

கடந்த ஆண்டில் ஜகன்மோகினி ரூபமாய் ப்ரதமபர்வம் "பின்னானார் வணங்கும் ஜோதி" என்று அறிந்தோம். இந்த தாரண ஆண்டில் சரமபர்வதம்தான் தாரணம் என்னும் ஸ்வரூபத்தை பெரியோர்கள்மூலம் வைத்தமாநிதியில் ' பாடலஜகன்மோகினியால் அறிகிறோம். சுபமஸ்து.

# ஸ்ரீ வேதாந்ததேசிகரும், விட்டுசித்தன் கோதையும்

ஸ்ரீ காஞ்சி ப்ரதிவாதி பயங்காம்
அண்ணங்கராச்சாரியார் ஸ்வாமி.

நடைபெற்றுவரும் மார்கழித் திங்களில் எவ்வூரிலும் எவ்விடத்திலும் அஞ்சு குடிக்கொரு சந்ததியாய் ஆழ்வார்கள் தம் செயலைவிஞ்சி நிற்கும் தன்மையளாய்ப் பிஞ்சாய்ப் பழுத்தாளான ஆண்டாளுடைய பெருமையே பெரிதும் பாராட்டப் பெற்றுவருகின்றது. இவளுடைய பெருமையைக் கவிகண்டீரவரான வேதாந்த தேசிகர் வடமொழியில் கோதாஸ்துதியென்னும் மிகச் சிறந்ததோர் தோத்திர நூலினால் அருமை பெருமை பொலிய அநுபவிக்கு மழகு வாசாமகோசரம்.

ஆண்டாளருளிச்செய்த திருப்பாவை 30 பாசுரம். அவ்வாண்டாள் விஷயமாக தேசிகர் அருளிய துதி 29 சுலோகம். 30 பாடினவள் திறத்தில் தாமும் 30 பாடவெண்ணி இந்த ஸ்துதியில் 30 ச்லோகங்கள் அமைக்கவே. எண்ணியிருந்தனரென்றும், ஆனாலும், 'நாம் ஆண்டாளோடு சரிசமமாக நின்று பேசலாகுமோ? சிறிது குறையப் பேசுவதே நமக்கு நலம்' என்று கருதி ஒரு ச்லோகம் குறைவாகத் துதியைத் தலைக்கட்டினரென்றும் பெரியார் கூறுவர்.

பலபல் சாஸ்த்ர நூல்களில் பலகால் பரிச்ரமப்பட்டு மிக வருந்தி அறிந்துகொள்ளவேண்டிய வேதாந்த ஸம்பிரதாயார்த்த ஸாரங்களைச் சிற்றறிவினரும் எளிதிலுணர்ந்து உய்யும்வண்ணம் அருளிச்செய்யப்பட்டவை ஸ்தோத்திர நூல்கள். அவற்றுள், சூடிக்கொடுத்த சுடர்க்கொடி விஷயமாக அருளிச்செய்த கோதாஸ்துதி தேனும்பாலும் நெய்யும் கன்னலு மமுது மொத்ததே யென்னத் தட்டில்லை. இதில் இரண்டாவது

ச்லோகத்தின் முன்னடிகளில்—"ஆண்டாளே! பலபல தேவவாக்குக் களுக்கும் எட்டாததான உம்முடைய வைபவமானது என் போன்றவர் களின் அற்பங்களான அக்ஷரங் களில் அடங்கமாட்டாது" என்றரு ளிச் செய்கிறார்.

"இக்கலியுகத்தில் பெரியாழ்வார் மகளாகத் தோன்றிய ஆண்டாளைப் பற்றி எந்த வேதத்தில் என்ன ஓதி யிருக்கிறது? வேதத்தில் இவளைப் பற்றி ஓதுவதற்கு என்ன ப்ரஸக்தி? இது அஸம்பாவிதமான விஷய மன்றோ?" என்று சிலர் நினைக்க இடமுண்டு. இங்குத்தத்துவமென்ன வெனில், எம்பெருமானுடைய மஹிமை எப்படி வேதங்களினாலும் எல்லை காணமுடியாததோ, அப்படி ஸ்ரீ மஹாலக்ஷ்மியின் வைபவமும் வேதங்களாலும் அளவிடமுடியாத தென்பது ஸர்வஸம்மதம், இதை பட்டரும் ஸ்ரீ குணரத்ன கோசத்தில் 'உத்பாஹுஸ் த்வா முபநிஷதஸா, வாஹ நைகா நியந்த்ரீம்' என்கிற ச்லோகத்தினால் நிரூபித்தார். அந்த ஸ்ரீ மஹாலக்ஷ்மியும் இந்த ஆண்டா ளும் ஒரே தத்துவமாதலால், ஸ்ரீ மஹாலக்ஷ்மியின் மஹிமை வேதங் களினால் அளவிடவொண்ணாத தென்று இசைந்தபோதே ஆண்டா ளுடைய மஹிமையும் அப்படிப் பட்டதேயென்று இசைந்தபடியாகு மன்றோ? நிற்க

இந்தகோதாஸ்துதியிலுள்ளஎல்லா ச்லோகங்களுமே இன்சுவையே வடிவெடுத்தவையாயினும் இங் குள்ள அவகாசத்திற்குத் தக்கவாறு சில ச்லோகங்களையே யெடுத்துக் கொண்டு இன்புறுகிறோம்.

ஆண்டாள் இரண்டுவகையான மாலைகளினால் எம்பெருமானைக் கட்டுப்படுத்திவிட்டாளென்று சாது ரியமாகக் கூறுகின்றார் ஐந்தாம் சுலோகத்தில். அதாவது—சூடிக்கொ டுத்த நாச்சியார் என்று தனக்கு ப்ர ஸித்தமாக வழங்கும் திருநாமத்திற் குரிய ஐதிஹ்யத்தின்படி, தான்சூடிக் களைந்த பூமாலையைத் தந்தும், தொண்டர்க்கு அமுதுண்ணச் சொன்மாலைகளைப் பாடித் தந்தும் ஆக இவ்விருவகையான மாலைக ளாலே எம்பெருமானை உகப்பித்து அவனைத் தன்னளவில் ஸர்வாத்மநா விதேயனாக ஆண்டாள் ஆக்கிக் கொண்டாள்; இது எதற்காகவென் னில், தன்னுடைய குழந்தைக ளான நம்முடைய குற்றங்களைக் கணிசியாமல் எம்பெருமான் நம் மைக் கைக்கொள்வதற்காகவாம். நாம் கோதையின் குழந்தைகளாத லால் அக்கோதையினிடத்துள்ள அன்பே காரணமாக நம்மிடத்திலும் எம்பெருமான் க்ருபை பண்ணும் படியாகின்றதென்க. கொடிய பாவிகளான நாமும் ஆண்டாளு டைய அபிமானத்திலே அந்வயிக்கப் பெறில் எம்பெருமானுடைய திரு வருளுக்குத் தவறாது இலக்காகலா மென்பது பரம தாத்பரியம்.

உலகமெல்லாம் போற்றும் பெரு மை வாய்ந்தது ஸ்ரீ ராமாயணம். அந்த ஸ்ரீ ராமாயணத்திற்காட்டி லும் ஆண்டாளுடைய திருவாக்கே மிகமதுரமானதென்பதை ஏழாவது சுலோகத்தில் மிக அற்புதமாகக் கூறுகின்றார். (எங்ஙனே யென்னில்) "ஆண்டாளே! பூமி ஸ்வரூபையா யிருக்கின்ற உம்முடைய காதாக வுள்ள புற்றில் நின்றும் தோன்றிய வால்மீகி முனிவர் கவிச்சக்ரவர்த்தி யென்று பேர்பெற்றார். அவருடைய பிரபந்தமாகிய ஸ்ரீ ராமாயணம் உலகுக்கெல்லாம் போக்யமாக இருக்கின்றது. [நிலத்தில் தென் படும் புற்றானது பூமிதேவியின் காது என்று நமது யஜுர் வேதத்தில் சொல்லப்பட்டிருப்பதால் புற்றில் நின்றும் தோன்றிய வான்மீகி முனி வரை பூதேவியின் அம்சமான ஆண்டாளுடைய காதுக்கு குரும்பி யாக இங்கு அருளிச்செய்தது வை திகவுலகம் போற்றத் தக்கது] உம் முடைய காதுக்குரும்பியென்னலாம் படியான அம்முனிவரின் வாக்கே அத்தனை மதுரமாயிருக்கும்போது உம்முடைய ஸாக்ஷாத் திருவாக்கில்

னின்றே தோன்றிய ஸ்ரீஸூக்திகள் மதுரங்களாயிருக்கின்றன வென்பதில் என்ன ஆச்சரியம்- உலகத்தில் ஒருவருடையகாதில்நின்றுமுண்டாகும் வஸ்துவுக்கு மஹிமையேற்படுவது அஸம்பாவிதம். உம்முடைய காதில்நின்றுதோன்றின வஸ்துவின் பெருமையோ லோகவிலக்ஷணமாகவுள்ளது. காதினுடையபெருமையே இதுவானல் திருவாக்கின் பெருமையைப் பற்றிப் பேசத்தானவதுண்டோ?

உமது திருவாயோ அரவிந்தம். அரவிந்தத்தில் மகரந்தம் பெருகுவது ஸஹஜமேயாதலால் மகரந்தம் போன்ற திவ்யப்பிரபந்தங்கள்



உமது திருவாக்கில்நின்றும் தோன் றினவென்பதில் வியப்பொன்று மில்லை. வியக்கவேணுமானல் ஸ்ரீராமாயணத்தின் போக்யதை யைப்பற்றி வியக்கவேணுமேயல் லது உமது திவ்யப்பிரபந்தங்க ளுக்கு ஏற்பட்டிருக்கின்ற போக்ய தையைப்பற்றிச் சிறிதும் வியக்க வேண்டியதில்லை யென்றவாறு. இதனல், வால்மீகி கோகிலத்தின் சொற்களினும் கிளிமொழிக் கோதையின் சொற்களே பரமமது ரங்கள் என்று காட்டப்பட்டது.

அடுத்ததான எட்டாவது ச்லோ கம் மிகவினிது. ஆண்டாள் மங் கையாகப் பெண்ணாய்ப் பிறந்தவள்; புருஷனைப் புருஷர்கள் அநுபவிப்ப திற் காட்டிலும் பெண்டிர் அநுப விப்பது பாங்குடைத்தாதலால் புரு ஷோத்தமனை பெருமானை ஸ்த்ரீ ரத்னமான ஆண்டாள் அநுபவிப் பதே பாங்காக அமைந்தது. இதைக் கண்ட ஆழ்வார்கள் தாங்களும் புரு ஷோத்தமனை ஆண்டாளைப்போ லவே அநுபவிக்க ஆசைகொண்டு பெண்ணுடையுடுத்து

"பூண்முலைமேல் சாந்தணியாள் பொருகயற்கண் மையெழுதாள் பூவை பேணுள்"

என்றும்

"என்னையும் நோக்கி யென்னல் குலும் நோக்கி யேந்திளங் கொங் கையும் நோக்குகின்ருள்'

என்றும் ஏறிட்டுக்கொண்ட பாக ரங்களையெல்லாம் பேசத்தலைப்பட்டு விட்டார்கள். இங்ஙனம்பெண்ணுடை யுடுத்துப் பேசினலும் உடனே "குருகூர்ச் சடகோபன் சொன்ன" என்றும் "மங்கையர்கோன் பாகா லன் கலியன் சொன்ன" என்றும் உண்மையான ஆண்மையை வெளி யிட்டுக்கொண்டார்கள். வேஷங் கட்டி ஆடினபடிதானே! என்று ஏசும்படியாகவாயிற்று அவர்களின் அநுராக ரீதி. அப்படியல்லாமல் இயற்கையாகவே பகவதநுபவத் திற்கு மிகவாய்த்தது ஆண்டாளு டைய படி—என்று பேசியுள்ளார் எட்டாவது ச்லோகத்தில்.

பன்னிரண்டாவது ச்லோகத்தில் ஒரு சமத்காரமான உத்ப்ரேக்ஷை காட்டுகிருர். பஞ்சவடியில்ராவணன் ஸீதாபிராட்டியைக் கவர்ந்து செல் லும்போது அவள் கோதாவரியை வணங்கி 'என்னை இராவணன் கவர்ந்து சென்றதாகப் பெருமா னிடம் அறிவிப்பாயாக' என்று வேண்டிக்கொண்டாள். ஆயினும் கோதாவரி இராவணனிடத்து அச் சத்தினல் அதை அறிவியாதொழிந்த தாம். யமுனையோவென்னில் கம்ஸ னுடையமாளிகையின்கீழே பெருகா நின்று தீயபுத்திக்கஞ்சனுக்கு அஞ்ச வேண்டியிருந்தும்அஞ்சாதே, வஸு தேவர் கண்ணனைக் கோகுலத்தில் கொண்டுவிடத் தலைமீது தூக்கிக் கொண்டுசென்றபோது முழங்காலள வாகத் தன்னை வற்றிக்கொடுத்தது. ஆதலால்அது "தூயபெருநீர்யமுனை" என்று ஆண்டாளாலும் சிறப் பித்துக் கூறப்பெற்றுள்ளது. அங்ங னம் கிஞ்சித்கரிக்கும்படியான பாக் கியத்தைக் கோதாவரி இழந்தமை யால் தூய்மையையும் இழந்ததாம். தூய்மை பெறுதற்காகப் பிறகு தவம் புரிந்ததாகவும் தவத்தினல் ப்ர ஸன்னமான தேவதை சிறந்த தூய் மையை வரமளித்ததாகவும் புராண வரலாறு உள்ளது. உண்மையில் கோதாவரிக்கு உண்டான தூய் மைக்கு வரப்ரஸாதம் காரணமல்ல வென்றும், கோதா என்கிற திரு நாமத்தைத் தனது நாமத்தின் ஏக தேசமாக வஹிக்கப்பெற்றிருப்பது தான் காரணமென்றும் ஆசிரியர் காட்டியுள்ள உல்லேகம் நெஞ்சைக் கவர்கின்றது.

இத்தகைய பல சமத்கார மொழி கள் நிரம்பிய கோதாஸ்துதியின் மூல மாக ஆண்டாளுடைய பெரு மையை அநுபவிப்பது சுவைமிக்கது.

# நவரஸ விருந்தளிக்கும் நாரீமணிகள்

“மோகினி மலரில் மிகப் பெரும்பாலான பகுதி மங்கையர்க்குத் தானே” என்ற நம்பிக்கையில் அநேக சகோதரிகள் நவ நவமான கற்பனைகளை அன்புடன் அனுப்பி ஆவலுடன் கடிதமெழுதியிருக்கிறார்கள். அவர்களெல்லோருக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். “யாவும் இருவர்க்கும் பங்கென்போம்” என்பது பற்றி சுவாமி சுத்தானந்தர் பாடியிருப்பதுபோல், மலரின் 200-பக்கங்களைச் சரிசமமாகப் பங்கிட்டுள்ளோம். இந்தப் பக்கத்திலிருந்து, முடிவு வரை, முற்றும் நாரீமணிகளின் நவரஸ விருந்துக்கென்றே நிறுவி, இந்த அளவுக்குள் எத்தனை சகோதரிகளுக்கு இடமளிக்க முடியுமோ அளித்துள்ளோம். வெளியாகியுள்ள பதினைந்து உருப்படிகளும், ஒவ்வொன்றும் ஒருவிதத்தில் சிறப்பு வாய்ந்து, பலவகைப்பட்ட விருந்தையளிக்கின்றன. படித்து மகிழுங்கள். சகோதரிகளனைவருக்கும் வந்தனம்—வை. மு. கோ.

---

# சிக்கல் யாத்திரை

### காயனபடு கீர்த்தனபடு
### ஸி. ஸரஸ்வதீபாய்

நாகப்பட்டினத்திற்கடுத்த சிக்கல் க்ஷேத்திரத்தில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ சிங்காரவேலருக்கு பிரதி வருஷம் ஐப்பசி மீ˚த்தில் கலியாணோற்சவம் நடப்பதும், அந்த வைபவத்தில் பல ஸங்கீதக்கச்சேரிகளும், ஹரிகதைகளும் நடப்பதும் தென்னாட்டில் பிரஸித்தமான விஷயம். அதில் நானும் பல வருஷங்கள் சேர்ந்தாப்போல் கதை செய்து வந்திருக்கிறேன்.

ஒரு வருஷம் அந்தப்படி வழக்கம் போல், நான் அந்த கலியாணோற்சவத்தன்று கதை செய்ய, அத் தேவஸ்தான ஆபீஸர் ஒரு கடிதம் எழுதினார். அந்த ஸமயம் அதே தேதியில் சிவகங்கைக்கடுத்த கீழப் பூங்குடியில், ஒரு நாட்டுக்கோட்டை நகரத்தார் வீட்டில் கதைசெய்ய ஒரு கடிதம் வந்தது. நான் அவர்களுக்கு, என்னுடைய ஸம்பாவனை முதலிய நிபந்தனைகளை எழுதியிருந்தேன். சிக்கல் தேவஸ்தானத்தில் எனக்கு ஸம்பாவனை திட்டமானது. ஆனால் வேறு இடங்களில் கிடைக்கும் ஸம்பாவனைக்குப் பாதிக்குக் கொஞ்சம் கூடுதலாயிருக்கும். அதையே நான் பரம திருப்தியோடு வாங்கிக்கொண்டு, பரம உற்சாகத்தோடு கதைசெய்வது வழக்கம். அந்த அதிகாரிக்கு, இப்படி கீழப்பூங்குடி வர்த்தமானத்தை எழுதி, ‘அந்தக் கதையை அவர்கள் ஒப்புக் கொள்ளாவிட்டால், அவசியம் சிக்கல் உற்சவத்திற்குக் கதைக்கு வருகிறேன். இல்லாவிட்டால் இந்த

ஸ்ரீமதி ஸி. ஸரஸ்வதிபாய்

வருஷம் மன்னிக்கவும்' என்று எழுதிவிட்டேன். அந்த சமயம் சிக்கல் தேவஸ்தானத்தில் மானேஜராயிருந்தவர் ரங்கநாத ராயர் என்பவர். அவர் மஹா ஸமர்த்தர். எப்பேர்ப்பட்ட சிக்கலான காரியத்தையும் ஸாதிக்கவல்லவர். அவர் என் கடிதத்தைக் கண்டதும், அட்வான்ஸாக 100 ரூ. தந்தி மணியார்டர் செய்துவிட்டார். அது எனக்கு வந்ததும் ஏதோ யோசித்து, தந்தி சேவகனை, நான் சொல்லியனுப்பும்போது கொண்டுவா என்றனுப்பி விட்டேன். அதற்கு 1 மணி அவகாசத்தில், கிழப்பூங்குடியிலிருந்து என்நிபந்தனைகளை ஒப்புக்கொண்டதாக கடிதமும் ரூ. 200 மணியார்டரும் வந்தன. அதைப்பெற்றுக்கொண்டு, தந்தி மணியார்டரை சிக்கலுக்கு வாபஸ் செய்தேன்.

இதற்கு இரண்டுநாள் பொறுத்து, சிக்கல் மானேஜர் வீட்டுக்கு வந்து "ஏன் தந்தி மணியார்டரை வாபஸ் செய்தீர்கள்" என்று கேட்டார். "நியாயமாய் முன்னதாகவந்த மணியார்டரைப் பெற்றுக்கொண்டேன். பிறகு உங்கள் தந்தி மணியார்டரை வாபஸ் செய்தேன்" என்றேன்.

"ஸ்வாமி கைங்கரிய விஷயத்தில் இப்படிப் பொய் சொல்லலாமா? நான் எல்லா தகவல்களையும் விசாரித்தேன். நீங்கள் பணம் கூடுதலாய் வருவதைப் பார்க்கிறீர்கள்" என்றெல்லாம் வழக்குக்கு ஆரம்பித்தார். நானும் யோசித்தேன் ஏதோ ஸ்வாமி விஷயம்.' என்ன அபசாரம் வருமோ என்னமோ என்று யோசித்து, சிக்கல் கதைக்கே ஒப்புக்கொண்டு, கிழப்பூங்குடியாரிடம் வாங்கின அட்வான்ஸைத் திருப்பியனுப்பி, அதனல் அவர்களின் நிஷ்டூரத்திற்கும் பாத்திரமானேன். நானே ஸ்வபாவத்தில் கோழை மனதுடையவள். இம்மாதிரி நானே ஒப்புக்கொண்டு, அட்வான்ஸும் வாங்கித்திருப்பினது முதல் மனதுக்குச் சமாதானமே இல்லை. சிக்கல் சிங்காரவேலரிடம் எனக்கு விசேஷ பக்தியும் நம்பிக்கையுமுண்டு. அவரை ஸதா தியானித்தேன். "பகவன், தங்கள் ஸந்நிதியில் கதை செய்ய எனக்கு உற்சாகமிருந்தாலும், இப்படி ஸத்யம் தவறி நடப்பதில் என் மனதுக்கு நீங்கள்தான் ஸமாதானம் செய்ய வேணும்" என்று வேண்டிக்கொண்டேன்.

கதை செய்ய வேண்டிய தினத்திற்கு முதல் நாள் வழக்கம்போல் மதருஸிலிருந்து சிக்கலுக்குப் புறப்பட்டேன். காலை 3 மணி சுமாருக்கு மாயவரம் ரயில் வந்ததும் இறங்கி, 4 மணிக்குப் புறப்படும் நாகப்பட்டினம் வண்டியில் ஏறிக்கொண்டோம். புறப்பட்டது முதலே எங்கும் நல்லமழை. மாயவரத்தில் அபார மழை. (இக் கட்டுரை எழுதும் பொழுதும், மாதம் கார்த்திகையாயிருந்தாலும் அதேமாதிரி மழை கொட்டிக்கொண்டே இருப்பதால், அன்று பெய்த மழையின் அவஸ்தையை இன்று அனுபவத்தோடு எழுதுகிறேன்)

4 மணிக்குப் புறப்பட வேண்டிய வண்டி புறப்படவில்லை. 5 ஆச்சு. 6ம் ஆய்விட்டது. வண்டி நகருவதாயில்லை. இறங்கி விசாரிக்கச் செய்ததில், மாயவரம் திருவாரூர் லயனில் எங்கும் வெள்ளக்காடாயிருக்கிறது என்றும், தகவல் தெரிந்து கொண்ட பிறகே வண்டியை விடவேணும் என்றும் தகவல் கிடைத்தது. இதற்குள் திருவாரூரிலிருந்து 'ஒரு பாஸஞ்சர் வந்தது. அந்த தைரியத்தைக் கொண்டு இந்த வண்டியும் புறப்பட்டு விட்டது. மழை என்னமோ ஓய்ந்த பாடில்லை. இன்னும் ஜாஸ்திதான். எப்படியோ பேரளம் ஸ்டேஷன் தாண்டி பூந்தோட்டமும் வந்தது. அங்கு ஸ்டேஷன் மாஸ்டரும் 'முன்னால்பாதையே தெரியவில்லையே. ரயில் போவது சிரமப்படும்' என்றார். டிரைவர், 'ஒரு வண்டிவந்திருக்கிறதே' நானும் மெதுவாய் போகிறேன்' என்று

ஸ்டேஷனை விட்டுப் புறப்பட்டுவிட்டான். கைக்காட்டி மரம் தாண்டியதும் ஒருஆறு குறுக்கிட்டது, தண்டவாளமாவது பாதையாவது ஒன்றுமே புரியவில்லை. டிரைவர் மெதுவாய்ஒருமனிதனை அனுப்பிப்பார்த்துவரச்செய்தான். அங்கு தண்டவாளத்தையே ஓரிடத்தில் அடித்துக்கொண்டுபோய் விட்டதாய் தகவல் தெரிந்தது. உடனே ரயிலை மெதுவாய் பூந்தோட்டம் ஸ்டேஷனுக்கே பின்தள்ளிக்கொண்டே வந்தான். சற்று யோசித்துப் பின்வாங்குவதற்குள் பின்புறத்திலும் உடைப்பு எடுத்துக்கொண்டது, ரயில் முன்னும் போவதற்கில்லை. பின்னும் போவதற்கில்லை. இருந்தாலும் மெதுவாய் பின் நகர்த்தினான். அநேகமாய் வண்டிகளெல்லாம் ஸ்டேஷனுக்கு ½ பர்லாங்கு தூரத்தில் வந்துவிட்டது. இஞ்ஜின் மாத்திரம் ஓரிடத்தில் கீழே உட்கார்ந்து விட்டது. இதற்குள் காலைமணி 9—இருக்கும். எப்படியோ என்னைச் சேர்ந்தவர்கள் பூந்தோட்டம் ஸ்டேஷனை அடைந்து அங்குள்ள காபி ஹோடலில் எஜமானை வேண்டிக்கொண்டு 4 பங்காய் பணம் கொடுத்து கொஞ்சம் சாப்பாடு தயாரித்து, அதை ரயிலுக்குக் கொண்டுவந்து அதை சாப்பிட்டோம். இந்த சௌகரியம் மற்ற பிரயாணிகளுக்கு இல்லை. மத்தியானம் 3 மணிக்குமேல் இஞ்ஜினைத் தூக்கி'மெதுவாய்மாயவரம்திரும்பிச் சென்றது. பேரளத்திலிருந்து காரைக்கால் நாகப்பட்டினம் மார்க்கம் போகவும் சிக்கலுக்கு வழி கிடையாது. மாயவரம் வந்ததும் மானேஜருக்கு, நாம் இப்படிவந்து ஸாத்தியமில்லாமல். திரும்பிப்போவதைப் பற்றி தந்தி செய்துவிட்டு போட் மெயிலில் மதறாஸ் புறப்பட ஏற்பாடு செய்து கொண்டிருக்கிறேன். இது நடுவில் ஓர் ஆச்சரியமான ஸங்கதி நிகழ்ந்தது. கீழப்பூங்குடியிலிருந்து ஒருவர் ஷை கலியாணவீட்டில் என்னை கலியாணத்தின் 3-வது நாளாவது கட்டாயம் கதை செய்துப்போக சிக்கலுக்கே நேராய் அழைக்க வந்து, தஞ்ஜாவூர் திருவாரூர் மார்க்கமும் உடைப்பாயிருந்ததால் மாயவரம் வழியாகவாவது சிக்கலுக்குப் போவோம் என்று மாயவரத்தில் இறங்கினார். இந்தபாதையும்உடைப்பு என்றுதெரிந்ததும் விசாரப்பட்டுக் கொண்டிருக்கிறார். இந்த ஸமயம் யாரையோ ப்ளாட்பாரத்தில் பார்த்துவிட்டு இரண்டாவது வகுப்பு பிரயாணிகள் தங்குமிடம் வந்தார். "அம்மா! நம்ம தி க.சித. காசிசெட்டியார் தங்களிடம் தெரிவிக்கச்சொன்னார். ஏற்கனவே ஸம்பந்திகளுக்குள் உங்கள் கதையை வைப்பதாய் பேச்சு நடந்திருந்ததாம், உங்கள் கதை அங்கு இல்லாவிட்டால் அவர்களுக்குள் பெரிய மனஸ்தாபம் ஏற்படும்போலிருக்கிறது. நீங்கள் கட்டாயம் சிக்கல் கதையை முடித்துக் கொண்டு, நேராய் இங்குவந்து கலியாணத்திற்கு 3—வது காளாவது கதை செய்துதான் தீரவேணும். இதனால் உங்களுக்கு ஏற்படும் சிரமத்திற்குத் தக்கபடி நமக்கும் நடந்துகொள்ளத்தெரியும் என்று சொல்லச்சொல்லி என்னையே நேரில் அனுப்பினார். நான் எந்தப் பாதையிலும் சிக்கல் போகமுடியாதபடி தவிக்கும்போது ஸ்வாமிதான் உங்களை இங்கேயே கொண்டுவந்துவிட்டிருக்கிறார். காலை 3 மணிக்கு போட்மெயிலில் புறப்பட்டுவிடுவோம். இதற்கு நீங்கள் ஒரு அட்டியும் சொல்லக்கூடாது'' என்று வற்புறுத்தினார். நானும் யோசித்தேன்.

'இந்ததடவை என்னுடையசிக்கல் பிரயாணம் வாஸ்தவத்தில் சிக்கலு பிரயாணமாகவே இருக்கிறது. நியாயமாய் ஒப்புக்கொண்ட கதையையும் விட்டு, ஏதோ குறைச்சல் ரேட்டுக்கு ஒப்புக்கொண்ட கதையும் நடவாமல், உயிர் தப்பி இவ்வளவு வரையில் இங்கு சேர்ந்ததே பெரிய காரியமாகிவிட்டது. பாதையில் உயிர் தப்பிவித்து ஸ்ரீ சிங்காரவேலன் கதைக்கும் ஒரு வழி ஏற்

படுத்தியிருக்கிறார் என்றே தோணுகிறது. இது அவர் ஸம்மதம்தான்' என்று அவர்பேரில் பாரம்போட்டு, கதைக்கு புறப்பட்டுவிட்டேன்.

கீழப்பூங்குடிபோய்ச் சேர்ந்ததும் அங்குள்ள ப்ரமுகர்களின் சந்தோஷத்திற்கு அளவேயில்லை. அதற்குக் காரணம் நான் அடிக்கடி அந்த ஊருக்குக் கதைக்குப்போய் அனைவரும் பழக்கப்பட்டவர்கள். என் கதை என்றால் அவர்களுக்கு ஒரே முகமான நல்ல அபிப்பிராயம். மேலும் நான் வருவதில்லை என்று முடிந்திருந்து, பிறகு நான் வர நேர்ந்து விட்டதால் இன்னும் அதிக ஸந்தோஷம். அதோடு முதல் தினம் அதாவது கலியாணத்தன்று நடந்த கச்சேரி அவர்களுக்கு அவ்வளவு திருப்தியளிக்கவில்லைஎன்பதும் ஒரு காரணம். நான் போனதினம் மற்றொரு கச்சேரி நடந்தது. அதிலும் ஜனங்களுக்கு உற்சாகமில்லை. மறுநாள் நான் கதை செய்தேன். அவர்கள் ஏதேதோ கதை செய்யச் சொல்லி ஒவ்வொருவரும் சொல்லி வந்தார்கள். நான் இப்படி சிக்கல் சிங்காரவேலர் ஸந்நிதியில் கதை செய்ய முடியாமல் போனதைத் தெரிவித்து அவருடைய கலியாண சரித்திரம் அதாவது வள்ளி பரிணயம் செய்வதாய் சொல்லி ஒரு சிங்காரவேலர் படத்தையும் ஸம்பாதித்து எதிரில் வைக்கச்செய்து, அவர்ஸந்நிதியில் கூடுமானவரையில் ச்ரத்தையோடும் பக்தியோடும்கூடக் கதை செய்தேன்.

கதையின் முடிவில் வள்ளிக்கு ஸ்ரீஸுப்ரமணியர் ஸ்வய ரூபத்தோடு ப்ரத்யக்ஷமாகும் கட்டத்தில் மிகவும் உருக்கமாய் சாமாராகத்தில் “முன்னான்கு தோளும்” என்று பாவத்தோடு ஒரு விருத்தம் ஆரம்பித்ததும், என் எதிரில் மிகவும் சிரத்தையோடு ஏகாக்ரமாய் கேட்டுக் கொண்டுவந்த ஒரு விருத்தப் பிராமணருக்கு ஆவேசம் வந்து விட்டது பயங்கரமான கூச்சல் போட்டுக் கொண்டு எழுந்திருந்தார். ஸபை அப்படியே அல்லோல கல்லோலமாகிவிட்டது. பலர்போய் அவரைப் பிடித்துக் கொண்டார்கள்.

அவர் அவ்வளவு ஜனங்களையும் திமிறிக்கொண்டு என் பக்கமாய் ஓடிவந்தார். நான் நடுங்கிவிட்டேன். ‘பயப்படாதே’ என்று தன் விபூதிப் பையிலிருந்து எனக்கு விபூதி கொடுத்தார். “ஒருயோசனையும்வேண்டாம். நான்தான் உன்னை இங்கு கதை நடக்கும்படி ஏற்பாடு செய்தேன்” என்று சொல்லிவிட்டு ஆயாசத்தோடு கீழே உட்கார்ந்துவிட்டார். இது எனக்கு பரம ஆச்சரியமாயிருந்தது. பிறகு பாக்கிகதையை 10 நிமிஷத்தில் முடித்தேன். என் உடம்பெல்லாம் வியர்த்துவிட்டது. கைகால்கள் நடுங்க ஆரம்பித்துவிட்டன. அப்படியே உட்கார்ந்துவிட்டேன். பிறகு அனைவருக்கும் ஆதி முதல் நடந்த வரலாறையும் எனக்கு ஏற்பட்ட சிந்தையையும், பிறகு நிகழ்ந்ததையும், அந்த சிங்கார வேலனே நேரில்வந்து என் சிந்தையைப் போக்கினதையும் சொன்னேன். அங்கும் பேசினதற்கு மேல்கொண்டே துகையும் இதர ஸம்மானங்களும் கிடைத்தன. ஸந்தோஷத்தோடு ஊர்வந்து சேர்ந்தேன்.

ஊருக்குவந்த 2-தினங்களில் எனக்கு சிக்கலிலிருந்து ஒரு கடிதம் வந்தது. “நீங்கள் ஒப்புக்கொண்டபடி அந்த தேதியில்வந்து கதை செய்யாததால், கதையை ஏற்படுத்திய எனக்கும் தேவஸ்தானத்தாருக்கும் ஏற்பட்ட அவமானத்திற்கும், கதைகேட்க ஏராளமாய் கூடியிருந்த ஜனங்களின் ஏமாற்றத்திற்கும் அளவேயில்லை. நீங்கள் பெரிய தொழிலாளியாயிருந்து இப்படிசெய்யலாமா? ஸரி எப்படியாவது இருக்கட்டும். தக்ஷணம் ரூ. 100 அட்வான்ஸ் பணத்தைத் திருப்பிவிடவும்” என்று அதில் கண்டிருந்தது. நான் சிக்கலில் கதை செய்யாமல் கீழப்பூங்குடியில் கதை செய்ததில் நியாயமும் ஈச்வரஸம்மதியும் இருந்ததால், அந்த தைரியத்தால் அவ

ருக்குப் பதில் கடிதம் எழுதினேன். "நான் அட்வான்ஸ் 100 ரூ. வாங்கியது வாஸ்தவம். அந்தப்படி புறப்பட்டுவந்து, தைவிகமாய் பிரயாணம் தடைபட்டிருந்ததால் நான் என்னசெய்வது? எனக்கும் 100 ரூபாய்க்குமேல் சிலவாயிருக்கிறது. நான் கதையின் வருமானத்தையும் இழந்து மேல்கொண்டு என் கைவிட்டு 100 ரூ. சிலவாவது ஈச்வர ஸம்மதமாகுமா? இதை நீங்கள் தீர யோசித்து, அதன் பிறகும் உங்கள் தேவஸ்தானத்தார் நிர்ப்பந்தித்தால் நான் 100 ரூ. கொடுக்கத் தடையில்லை" என்று எழுதிவிட்டேன். அதற்கு 1 வாரம் கழித்து, அக்காலத்தில்டிரஸ்டியாயிருந்த தெக்களூர் அளகப்ப செட்டியாரிடமிருந்து "நீங்கள் தெரிவித்தது நியாயமானது. உங்கள் போக்குவரத்துக்கு 100 க்குமேல் ஏதாவது சிலவாகியிருந்தால் தெரிவிக்கவும். தேவஸ்தானத்தார் கொடுக்கக் கடமைப்பட்டவர்கள்" என்று பதில்வந்தது. என் மனது சாந்தியை அடைந்தது.

வாசகர்களே! தெய்வ ஸங்கல்பத்தை கவனித்தீர்களா? தேவஸ்தான மானேஜர் தன் ஸொந்த ஸாமர்த்யத்தை உபயோகித்து, ஸ்வாமி ஸந்நிதி என்னும் பெயரால் மிரட்டி என்னை சிக்கலில் கதை செய்யும்படி பலாத்காரம் செய்தாரே தவிர, பகவான் தன் ஸந்நிதியில் கதை நடப்பதையா பெரிதாக நினைத்தார். பகவான் அங்கு கோவில்மாத்திரம்தானிருக்கிறாரா? எங்கும் நிறைந்த ஸ்ரீ ஷண்முகன் கடைசியில் மமதையுள்ள இவர்களுக்கே கர்வபங்கம் செய்து, கடிதமும் முதலில் எழுதி, அட்வான்ஸும் முதலிலேயே அனுப்பிய ஸத்யஸ்தலத்திலல்லவா கதையை நடத்தி, அவரையே நம்பின என்னையும் ஸத்யம் தவறாதபடிச் செய்துவிட்டார். ஏன் அவர் இஷ்டப்பட்டிருந்தால் சிக்கலிலும் கதையை நடத்தி, கீழ்ப்பூங்குடியிலும் கதையைச் செய்விக்கலாமே. உத்விருத்தர்களை அடக்குவதும் அவருடைய எண்ணம்.

இது வாசகர்களுக்கு ருசியாயிருக்குமென்னும் எண்ணத்துடன் நான் எழுதவில்லை. என் பிரிய ஸகோதரி என்னை என் ஹரிகதானுபவத்தையே எழுதச் சொல்லி தெரிவிப்பதால், இந்த ஓர் நிகழ்ந்த வரலாறைத் தெரிவித்திருக்கிறேன்—



225665

# உண்மை சங்கீதமா? உதரபோஷண கீதமா?

வித்யாசுந்தரி காளகலா விசாரத
ஸ்ரீமதி பெங்களூர் நாகரத்னம்மாள்.

உலகத்தில் பலவிதமான அக்ரமங்களும் த்வேஷங்களும் தலைகீழான கோளாறுகளும், தெய்வ த்வேஷமும் கலி 5000 வருஷங்களுக்கு மேற்பட்டு ஏற்படுமென்று ஸ்ரீ வ்யாசபகவான் மகா பாரதத்தில் சொல்லியிருக்கிறார். அதே போல் பலவிதத்திலும் நடந்துவருவதை ப்ரத்யக்ஷமாகப் பார்க்கிறோம்; அதில் முக்யமாய், இந்திரஜாலம், மகேந்திரஜாலம் எனக்கூடிய சினிமாக்கள் தோன்றி கடுகளவு நன்மையும் மலையளவு தீமையும் போதிக்கின்றன.

ஸ்வேச்சை ஜாஸ்தியாகி, கண்டவர்களுடனும் ஸ்திரீகள் நடித்துப் பணம் சம்பாதிக்கும்படி ஏற்பட்டுவிட்டது. பணமே பிரதானம்; பதி பிரதானமில்லை. காலானுகுணமாக, தனிகர் தரித்திரராகவும், பணமெனும் பெயர்கூடத் தெரியாதவர்கள், லக்ஷ்மி மித்திரராகும்படியாய்விட்டது. ஆச்சரியப்படும்படியான மோஹாவேசத்திற்கு உட்பட்டு பெண்தன்மையை இழந்து, ஸ்திரீ புருஷனாகவும், புருஷன் புருஷ லக்ஷணத்தை இழந்து கசடனாகவும் மாறிவிடும் விதியமைந்துவிட்டது. இன்னும் அவர்களின் வேஷம் அலங்காரம், வாழ்க்கைச் சீர்கேடு இந்த விபரீதங்களை யெழுதினால் பெரிய புஸ்தகமாகிவிடும். ஆயினும் தர்மத்தை அனுசரித்து பதிபக்தி செய்துகொண்டு, சிசுபோஷணையும் அதிதி பூஜையும் விடாமல் பதிவிரதா தர்மத்தை ரக்ஷித்துக்கொண்டிருக்கும் பாரதமாதாவினுடைய புத்திரிகள்—ஆதர்ச நாரீமணிகள்—அனேகர் இருக்கிறார்கள். அந்த ப்ரபாவத்தினால்தான் சூரிய சந்திராதிகள் காலம் தவறாமல் தங்கள் கடமைகளை நடத்திக்கொண்டிருக்கிறார்கள். அப்பேர்ப்பட்ட சீலவதிகள் சினிமாவுக்குவரமாட்டார்கள். தீராத ஏழ்மையையும் கண்ட கஷ்டங்களையும் அனுபவித்து, தெய்வபலத்தினால் பதிவிரதா தர்மமெனும் வஜ்ர கவசத்தினால் சுகமடைவார்களேயன்றி சினிமாவில் அன்னியருடன் நடிக்க வரமாட்டாரல்லவா? நியான்யாய மறிந்த விமர்சகர்களே! யோசித்துப் பாருங்கள். சத்தியம் மனதிற்கே கோசரமாகும்.

சினிமா காசி கைலாஸத்தை இருந்த இடத்திலிருந்தே காட்டிவிட்டது. கிராமோபோன் இருந்த இடத்திலிருந்து வித்வான்கள் முதல் சகலருடைய பாட்டுகளும் கேட்கும்படிச் செய்துவிட்டது. இன்னும் அதிசயிக்கத்தக்க ரேடியோ வந்து பல்லாயிர மைலிலுள்ள வார்த்தைகளையும், ஸமஸ்த பாட்டுகளையும் கேட்கும்படிச் செய்துவிட்டது. இதனால் நிஜ சங்கீதம் ஸங்கரம சங்கீதமாக ஏற்பட்டுவிட்டது.

நல்ல சாஸ்திர யுக்தமானதும், அர்த்த ப்ரதான உச்சரிப்புடன் கூடியதும் ஸுஸ்வரமான உயர்ந்த சங்கீதம் கேட்பதற்கே அரிதாகிவிட்டது. பஜனை செய்யவும் பாடவும் எல்லோரும் கிளம்பிவிட்டால் மாத்திரம் போதுமா? இதய பூர்வகமான பக்தியின் ஜ்வாலை உண்டாக வேண்டாமா? சங்கீதமென்றால் பாடுகிறவர்கள் உண்மையில் குருகுல வாஸம் செய்து தேர்ச்சிபெற்று சபையை மெச்சச் செய்யுமவர்களுக்கே ராமகடாக்ஷமுண்டாகுமென்று ஸ்ரீ தியாகராஜஸ்வாமிகள் கீர்த்தனையில் சொல்லியிருக்கிறார்

அதுதான் சங்கீதம். மற்றது உதர போஷண கீதமென்பது திண்ணம்.

சங்கீத ஸ்கூல்களும், சங்கீத யூனிவர்ஸிடிகளும் ஏற்பட்டது ரொம்ப முக்யமே, இப்படி ஸ்கூல்கள் ஏற்பட்டு போதனாசாரியர்களாக தகுந்த வித்வான்கள் முன்வர வேணுமென்று நான் அனேக தடவைகளில் உபன்னியாசங்கள் செய்தும், தெலுங்கில் ஸ்ரீ தியாகராஜ சரித்திரத்தில் இதை விவரமாக யெழுதி அக்ஷய வருஷத்தில், பிரசுரம் செய்திருக்கிறேன். அனேக புத்தகங்கள் ஆந்திர தேசத்திலும் தக்ஷிண தேசத்திலும் வாங்கி அனேக் புத்திமான்கள் இதை வாசித்து ஆமோதித்திருக்கிறார்கள். பிறகு சங்கீதம் கற்றுக்கொடுக்கும் பள்ளிக்கூடங்களும் ஏற்பட்டன. சந்தோஷம். ஆனால் சில முக்கிய தனவான்களால் ஏற்பட்டிருக்கும் யூனிவர்ஸிடி, ஸ்கூலில் தமிழே பாட வேணும், தெலுங்கு பாடக்கூடாதென்று பாஷாத்வேஷமும், சைவ சமயத்தை அதிகரித்து ஸ்ரீராமநாம த்வேஷமும் உண்டாக்கி, சில வித்வான்கள் இணங்கி, யாருடையகீர்த்தனைகளைப் பாடி சங்கீத அபிவிருத்தி ஞானம் பெற்று முன்னுக்கு வந்தார்களோ அதை மறந்து, மனச்சாக்ஷிக்கு விரோதமாக பணமே பிரதானமாக கைக்கொண்டுவிட்டார்கள். சரி; இமயமலைபோல் தமிழ் கீர்த்தனைகளும் அப்பர், சுந்தரர், மாணிக்கவாசகர், பட்டினத்தார், தாயுமானவர், ராமலிங்க ஸ்வாமிகள் அருளிச்செய்து குவியல் குவியலாக கிரந்தரூபமாக கிடக்கிறதே, இதை வித்வான்கள் கவி ஆசயங்களுக்குத் தகுந்த ராகங்களினால் கல்லும் கரையும்போல் பாடக் கூடாதா? இன்னும் பாரதியார், சிவன், யோகி சுத்தானந்தர் முதலாகிய அனேகர் கீர்த்தனைகளைப் பாடி ஆனந்திக்கும்படிச் செய்யப் படாதா? ஏன் ஸ்ரீ தியாகராஜ ஸ்வாமிகளுடைய வர்ணமெட்டில் தமிழ் எழுத்துக்களைக் கொண்டு இஷ்டப்பிரகாரம் சேர்த்தும், மார்க்கம் தோன்றாமல் போனால் ஸ்வாமிகளுடைய தெலுங்கு வார்த்தையுடன் தமிழ் வார்த்தைகளைச் சேர்த்து ஸ்ரீ தியாகராஜ ஸ்வாமிகளுடைய சந்தஸ்ஸையும் மாதுர்யத்தையும் கெடுத்துப்பாடினால் புண்ணியமா? புருஷார்த்தமா? அந்த வர்ண மெட்டில் சேர்ந்த தமிழ் கீர்த்தனைகளை நாம் நாதஸ்வர, புல்லாங்குழல் பிடில், வீணை முதலான வாத்தியங்களில் வாசித்தால் தியாகராஜ ஸ்வாமிகள் கீர்த்தனையென்று சொல்லுகிறதா? தமிழ் கீர்த்தனைகளென்று சொல்லுகிறதா? வாய் திறந்தால்தானே தெரியும்? இது தான் பாஷாத்வேஷம். ஸ்ரீராமா யென்றிருந்தால் சிவ நாமத்தைச் சேர்த்துப் பாடுகிறது. இதுதான் தைவத்வேஷம்.

தெய்வத்வேஷம் இம்மியளவும் இல்லாததினால்தான் திருப்புகழில் அருணகிரிநாதர் பேதமின்றி சிவனையும் ராமனையும் பாடியதோடு முடிவில் ஒவ்வொரு பாடலுக்கும் 'பெருமானே' என்று முடித்திருக்கிறார். வேதமும்சாஸ்திரமும் இதேகருத்தை வெளியிடுவதை அனுசந்தித்துத்தான் ஸ்ரீ த்யாகராஜரும் ஆயிரக்கணக்கான கீர்த்தனைகளைப்பாடி லோகோத்தாரணம்செய்திருக்கிறார். இன்று பாஷாத்வேஷமும் தெய்வத்வேஷமும் வந்து தாண்டவமாடிய போதிலும் உலகெல்லாம் வ்யாபித்துள்ள ஐயர்வாள் கீர்த்தனங்களுக்கு ஒருவித குறைவும் பங்கமும் வராது.

கால மஹிமையினால் இந்தப் புது உத்தேசங்கள் ஏற்பட்டு அளவற்ற தனம் தமிழ்ச் சங்கீத அபிவிருத்திக்காகக் குவிந்துகொண்டிருக்கிறது. உண்மை சங்கீதத்தை அபிவிருத்தி செய்ய கொஞ்ச பணம் செலவு செய்து, தெலுங்கு அர்த்தத்தை பண்டிதரால் சங்கீத வித்யார்த்திகள் அறிந்துகொள்ளும் ஏற்பாடுசெய்யக் கூடாதா? அன்னியருடைய இங்கிலீஷ் பாஷையைக் கற்க அளவற்ற பணம் செலவுசெய்து அநேக அதி


காரப் பதவிகளில் ஏறவில்லையா? அது நம்மை ஆளும் ராஜபாஷையென்றால் நம் தியாகராஜ ஸ்வாமி நம் தேசத்தில் பிறந்து தியாகம் செய்து பாடியதெய்வாம்ச கீர்த்தனைகளை பூஷித்தால் க்ஷேமமா? தூஷித்தால் க்ஷேமமா? வர்ணமெட்டுகள் வேறை வேறையாகப் போட்டு கீர்த்தனைகளைச் செய்கிறது நியாயம். வர்ணமெட்டு ஸ்வாமிகளுடையதானால் கீர்த்தனை ஸ்வந்தக்காரர் யார்? வாசக மஹாசயர்களே! யோசித்து அவரவர்களுடைய மனோபாவத்தை ஜகன்மோஹினியில் எழுதி பிரசுரிக்கும்படிச் செய்யவேண்டும்.

மஹனீயர்களே! இந்த பாஷா தூஷணையினால் நாம்கண்டது யாது? அனுபவிக்கிறது எது? பலவித இன்னல்களும், யுத்த பயங்கரங்களும், வறுமையின் கொடிய நிர்த்தூளித் தாண்டவங்களுந்தான் ப்ரத்யக்ஷமாகக் காண்கிறோம்.

அன்பர்களே! இனியாவது வித்வான்கள் இவைகளை சங்கங்களில் பேசி ராமநாமத்வேஷத்திற்கு பரிகாரம் தேடி தியாகராஜ ஸ்வாமிகளுடைய வர்ணமெட்டில் கலந்த தமிழ் கீர்த்தனைகளைமட்டும் பாடாமலிருந்து நல்ல அர்த்தத்துடன் தியாகராஜஸ்வாமிகளுடைய கீர்த்தனைகளை அவற்றிலிருக்கும் ரஹஸ்யார்த்தத்தை தெரியும்படி பண்டிதரால் உபன்னியாஸங்களை வைத்து இந்த த்வேஷாசூயங்களை நிவாரணம்பண்ணும் வழியைத் தேடவேண்டும்.

தெலுங்கு கீர்த்தனைகளை நல்ல அர்த்தத்துடன் சுத்தமாகப் பாடுகிறவர்களுக்கு மெடல்கள் பரிசு கொடுக்கப்படும் என்று ஒரு பரிக்ஷையை வைத்து நடத்த முன்வந்தால் க்ஷீணித்துவிடக்கூடிய நிலைமைக்கு விதிவசத்தால் வந்துவிட்ட சிறந்த பொக்கிஷம் போன்ற தெலுங்கு கீர்த்தனைகள் பழய சோபையுடனும் உயர்ந்த மதிப்புடனும் புத்துயிர் பெற்று ப்ரகாசிக்கும் என்பது இவ் வடிமையின் தாழ்ந்த விண்ணப்பமாகும்.





# இரண சிகிச்சை

## ஜயலக்ஷ்மி ஸ்ரீனிவாஸன்

1

சேலம்,
3-2-38.

ஸ்ரீமான் ரங்கநாத மாமா அவர்களுக்கு அநேக நமஸ்காரங்கள். இப்பவும் தங்கள் செல்வப்புதல்வன் சி. ராஜகோபாலன் உயர்தரப் பரீக்ஷை தேறியவனாய் இங்கிலாந்திலிருந்து நாடு திரும்பியதைச் செவியுற்று மிக சந்தோஷமாகிறது.

என் விண்ணப்பமொன்றை மிகத் தயக்கத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன். நீங்கள் கடந்த வருடம் கூட ஈரோட்டிலிருந்து மாற்றலாகிச் செல்லும்பொழுது சி. ராஜு சீமையிலிருந்து திரும்பி வந்ததும் என் சகோதரியை ராஜுவிற்கு விவாகம் செய்துகொள்வதாக அப்பாவினிடத்தில் வாக்களித்திருந்தீராம். ஆனால் அப்பா இந்த வைபவத்தைக் கண்டு களிக்கக் கொடுத்துவைக்கவில்லை. "தங்கத்தை ராஜுவிற்குக் கொடுக்க தவறாதே!" என்று அப்பா கடைசி மட்டும் சொல்லிக்கொண்டே உயிர் துறந்தார்.

"சுபஸ்ய சீக்கரம்" என்பதுபோல் கூடிய சீக்கிரத்தில் முகூர்த்தத்தை நிச்சயித்து விவாகத்தை நடத்திவிடுவது நல்லதல்லவா? சி. ராஜுவின் தற்பொழுதிய விலாசத்தைத் தயவுசெய்து தெரியப்படுத்தவும். உமது பதிலை அதிக ஆவலுடன் எதிர்பார்க்கிறேன்.

வேணும் நமஸ்காரம்.

இப்படிக்கு, பணிவுள்ள,
E. P. ராமசந்திரன்.

2

திருச்சி,
6-2-38.

சி. ராமுவிற்கு அநேக ஆசிர்வாதங்கள். உன் கடிதம் கிடைத்தது. சி. ராஜுவின் சீமைப் படிப்பிற்காக 7000 ரூ. செலவழிந்துவிட்டது. மேலும் தற்பொழுது அவனுக்கு கல்கத்தாவில் மாதம் 300 ரூ. சம்பளத்தில் ஒரு நல்ல உத்தியோகமும் கிடைத்திருக்கிறது. அவன் அந்தஸ்திற்கு தகுந்த படி 10000 ரூ. வரதக்ஷிணையும் 5000 ரூபாவிற்கு சீரும் செய்வதாகவிருந்தால் கட்டாயம் அடுத்த முகூர்த்தத்திலேயே கலியாணம் நடைபெறலாம்.

இப்படிக்கு,
T. R. ரங்கநாதன்.

3

சேலம்,
5-3-38.

பிரியமுள்ள கமலாவிற்கு,

என் வேதனையால் என் இதயம் வெடித்துப்போய் விடும்போலிருக்கு. நான் என்னடீ செய்வேன் கமலா? நீயோ அடிக்கடி நான் கடிதம்போடுவதில்லையென்று என்னைத் திட்டி எழுதுகிறாய். என் ஜன்மத்திற்கு ஒரு அமைதியுண்டா, சாவதானமாய்க் கடிதம் எழுத?

கமலா! நான் இதுகாறும் என் இதயக் கோயிலில் வைத்துப் பூஜை செய்துவந்த சுவர்ணமூர்த்தி என்னை திரஸ்கரித்துவிட்டார். என் அண்ணாவும் மன்னியின் வார்த்தையை கேட்டுக்கொண்டு மன்னியின் மாமாவினிடம் 2000 ரூ. பெற்றுக்கொண்டு

அந்த கிழத்திற்கு என்னை மூன்றும் தாரமாகக் கொடுப்பதாக நிச்சயித்து விட்டார்கள்! இந்த கிழத்தினிடம் தள்ளுவதைக் காட்டிலும் என்னை ஒரு பாழும் கிணற்றிலாவது தள்ளி விடப்படாதா? சகலமும் நம் மூட ஜன சமூகத்தில் நிலவிவரும் வரதக்ஷிணைப் பேயின் கொடுமையல்லவா? இந்தப் பிசாசு நம் நாட்டிலிருந்து என்றைக்குப் பூண்டோடு ஒழியுமோ அன்றுதான் நம் நாட்டுச் சிறுமிகளுக்கு விமோசன காலம். மேலே எழுதத் தோன்றாத உன் துர்ப்பாக்கிய தோழி.

தங்கம்.

4

கல்கத்தா, 9-4 38.

அப்பாவிற்கு ராஜு செய்யும் சாஷ்டாங்க நமஸ்காரங்கள். அப்பா! உன் கடிதங்கள் ஒன்றொன்றையும் படித்துவிட்டு எனக்கு வியப்புண்டாகிறது. திவான்பகதூர் சங்கர சாஸ்திரிகளின் பெண்ணை பதினாயிரம் ரூபாய் வரதக்ஷிணையுடன் கூட ஐயாயிரம் ரூபாய் சீர் செய்து கொடுப்பதாகவும், புத்தூர் மிராசுதார் சிவசங்கரய்யர் பெண்ணை இருபதினாயிரம் வரதக்ஷிணையுடனும் கொடுப்பதாகவும் என்னவெல்லாமோ எழுதுகிறீர். இந்த வரதக்ஷிணையெல்லாம் யாருக்கு வேண்டிகிடக்கு? எனக்குத் தான் இரண்டு வருடத்திற்கு முன்பே ஈரோட்டு பசுபதி ஐயர் பெண் தங்கத்தை நிச்சயித்து விட்டதை மறந்துவிட்டாயா நான் தங்கத்தைத் தவிர வேறு எவரையும் கனவிலும் நினைக்கப்போவதில்லை. பசுபதி அய்யர் காலமாகிவிட்ட பிறகு தங்கம் தமையனிடத்தில்தானே இருக்காள்? ராமு இப்பொழுது எங்கே வேலையாகவிருக்கிறான்? அவர் விலாசம் என்ன? இப்படி வெட்கமின்றி நான் என் விருப்பத்தைத் தெரிவித்ததற்கு நீங்களும், அம்மாவும் சிரிக்கப்படாது. அம்மாவிற்கு என் நமஸ்காரங்களைத் தெரிவிக்கவும். இப்படிக்கு,

ராஜு

5

திருச்சி
18-4-38

சி. ராஜுவிற்கு அநேக ஆசீர்வாதங்கள். நீ இன்னும் தங்கத்தையே நினைத்துக்கொண்டிருப்பதைப் படித்து எனக்கும் அம்மாவிற்கும் மிகுந்த ஆச்சரியமேற்படுகிறது. தற்பொழுதிய அவர்களுடைய இருப்பிடத்தை நான் அறியேன். மேலும் அவர்கள் நம்ம அந்தஸ்திற்கு ஏற்றவர்கள் இல்லை. நிற்க, தங்கத்திற்குக் கலியாணம்கூட ஆகிவிட்டதாக கேள்விப்பட்டேன். உனக்கென்ன குறைச்சல் சொல்; வேண்டியபடி, தங்கத்தைவிடப் பதின்மடங்கு உசத்தியான இடங்களிலிருந்து அழகழகான பெண்கள் வந்து குவிகின்றன. இத்துடன் ஒரு டஜன் பெண்களின் புகைப்படங்களை அனுப்பியுள்ளேன். உடனே இதில் உனக்குப் பிடித்தமான பெண்ணின் படத்தைப்பொருக்கி அனுப்பு அல்லது நேரிலேயே வந்து பார்க்க வேண்டுமென்றாலும் ஒரு மாதலீவிற்கு எழுதிப் போட்டுவிட்டு உடனே வந்துசேர். இந்த ஆனி மாதத்திற்குள் உன் கலியாணத்தைச் செய்து முடித்துவிடவேண்டுமென்று அம்மா என்னை நச்சரிக்கிறாள்.

இப்படிக்கு
உடனே பதில்
ரங்கனாதன்.

6

கல்கத்தா,
7-5-42.

"அன்புள்ள ராஜுவிற்கு, நீ எப்பொழுது கல்கத்தாவிற்கு திரும்பி வருகிறாய்? அப்பாவிற்கு உடம்பு தேவலையா? ஊருக்குப் போனவன் அப்பா உடம்பைப்பற்றி ஒரு வரி கூட எழுதிப் போடவேண்டாமா? நான் இங்கே நெருப்பில் விழுந்த புழுவாய் துடித்துக்கொண்டிருப்பது உன் கவனத்திற்கு வரவில்லையா?

நித்திய பிரம்மச்சாரியாக இருக்கப்போவதாக சாதித்துக்கொண்டிருந்த நீ போனவிடத்தில் எங்கே

பெண் வேட்டைக்குக் கிளம்பிவிட்டாயோ என்றுகூடச் சந்தேகம்!

உடனே பதில்

ஸ்ரீதரன்''

## 7

சென்னை,
19-5-42.

டியர் ஸ்ரீதர்,

உன் கடிதம் கிடைத்தது. அப்பாவிற்கு இப்பொழுது உடம்பு நன்றாக வாசியாகிவிட்டது. அடுத்த புதன் கிழமையன்று அவரை வீட்டிற்கு அழைத்துச் செல்கிறோம். இத்தனைக்கும் காரணம் ஒரு நர்ஸின் புண்ணிய பலன்தான். கருணை வள்ளலான அந்த பெண்பாவையின் எண்ணிறந்த அன்பும், ஆதரவும், பொறுமையும், திறமையும், கைராசியும் தான் அப்பாவைபிழைக்கவைத்தன.

நீயும் அந்த குணமணியின் பரிதாபகரமான வரலாற்றை அறிவதில் ஆர்வத்துடனிருப்பாயென்று நம்புகிறேன்.

ஏற்கனவே தாயாரை இழந்திருந்த அந்த தாயில்லாக் குழந்தை தனது பதினைங்காம் வயதில் தகப்பனாரையும் இழந்தாளாம். பிறகு தமையனின் இல்லத்தில் 'மதினிக்குக் கீழ்ப்படிந்து வசிக்கையில், கோபிஷ்டையான மதனியிடத்தில் படாத பாடு பட்டாளாம். அவள் தந்தை அவளுக்காக நிச்சயித்திருந்த காதலனின் வருகையை எதிர்பார்த்தவண்ணம் தனது பதினைந்தாம் வயதில் ஸ்கூல் பைனல் பரீக்ஷையிலும் தேறினாளாம். அந்த வேளைக்கு அவள் காதலனும் இங்கிலாந்திலிருந்து வெற்றியுடன்திரும்பி வரவே தன் அபிஷ்டம் நிறைவேறி விட்டதாக இன்பவெறி கொண்டாள் அப் பேதைப்பெண். ஆனால் வரதக்ஷிணைப் பேயானது குறுக்கிட்டு அவளது இன்பக்கனவுகள் அனைவதையும் சுக்கு நூறாக்கின. பிறகு அவள் மதனியின் சதியாலோ சனைப் பிரகாரம் அவள் விருப்பத்திற்கு மாறாக ஒரு கிழத்திற்குக் கொடுத்து விவாகம் ஆகிவிட்டது. அடுத்தமாதம் கைம்பெண்ணும் ஆனாள் அந்த துர்ப்பாக்கியவதி. பிறகு மதினியின் துன்பம் அதிகரிக்கவே, தமையனின் உதவியைக் கொண்டு சென்னையில் வந்து Nurses Training Course-க்கு படித்து, முதன்மையில் தேறினவளாய் போன வருடத்திலிருந்து சென்னை ஜனரல் ஆஸ்பத்திரியில் Apprentice-வேலை பார்த்து வருகிறாளாம். அவள் யார் தெரியுமா? கடந்த ஆறு வருடங்களாக காதல் என்னும் புஷ்பங்களைக்கொண்டு என் இதயகமலத்தில்இருத்தி நான் பூஜித்துவரும் என் இன்பதேவி தங்கம்தான்! தங்கம் என்றால் சாதாரண தங்கம் அல்ல...பத்தரை மாற்றுத் தங்கம்! என் பெற்றோரின் பணத்தாசையால் நாங்கள் இருவரும் இதுகாறும் பிரிந்திருக்க நேரிட்டிருந்தாலும் தெய்வேச்சையால் தற்பொழுது கூடிக்களிக்கிறோம். என் தகப்பனாரின் இந்த காயலா சமயத்தில் அவருக்கு அன்பு, சிரத்தை, ஆதரவு, திறமை, பணிவு என்ற ஆயுதங்களைக் கொண்டு என் கண்மணி என் தந்தையின் 'பணத்தாசை' என்ற இரணத்தை சஸ்திரசிகித்சை செய்து ஆறவைத்து விட்டாள்! தற்சமயம் என் பெற்றோர்களும் என் அருமை தங்கத்தை நான் Registered மணம் செய்துகொள்வதற்கு இணங்கியிருக்கிறார்கள். இன்றைக்கு பதினைந்தாம் நாள் கலியாணம். நீயும் உன் 'மேம் சாகிப்' புடன் கட்டாயம் விவாகத்திற்குப் புறப்பட்டு வரவும். உன் சந்தேகம்இப்பொழுது நிவர்த்தியாகிவிட்டதா! முதன்முதல் ஸ்வேதவஸ்திரதாரியான என் கண்மணியை நான் அடையாளம் கண்டுகொள்ளாமல் போனேன். பிறகுதான் பகவான் கிருபையால் எல்லாம் சுபமாக முடிந்தது. உன் பிரியமுள்ள

ராஜு

P. S.—தங்கமும் உனக்கும் உன் மிஸஸ்ஸிற்கும் இத்துடன் வந்தனத்தை அனுப்பியிருக்கிறாள். R.R.

ஸ்ரீமதி ஜயலக்ஷ்மி ஸ்ரீநிவாஸன்

# பாரதியாரும் கோயில் யானையும்

## தங்கம்மாள் பாரதி

சென்னை, திருவல்லிக்கேணி துளசிங்கப்பெருமாள்கோவில் தெருவில் ஒரு வீட்டிலிருந்தோம். பார்த்தசாரதி கோவில் யானைக்குத்திடீரென மதம் பிடித்துவிட்டது. சன்னிதிக்கு அடுத்தாற்போல் யானையைக்கட்டிப் போட்டிருந்தார்கள். தந்தையார் தினமும் அந்த யானைக்கு தேங்காய் பழம் கொடுப்பது, அதன் பெரிய உடல் முழுதையும் தடவிக்கொடுப்பது, அதன் கண்ணின் அழகை ரசிப்பது முதலியவைகளைச் செய்வது வழக்கம். மதம்பிடித்த பின்பும் அவ்விதமே யானையிடம் பழம் கொடுக்கச்சென்றார். யானையிருக்குமிடத்தைச் சுற்றி இரும்பு அழி போட்டிருக்கிறது. மெதுவாக அதன் மேல் ஏறியதும், மதங்கொண்ட யானையை வேடிக்கை பார்க்கக்கூடியிருக்கும் சிறுவர்கள் "ஐயா! போகாதீர்கள், யானைக்கு மதம் பிடித்திருக்கிறது" என்று எச்சரித்தார்கள்.

அவர்கள் பேச்சைக் கவனியாமல் உள்ளே குதித்தார் தந்தை. சிறுவர்கள் நடுங்கிக்கொண்டே, "ஐயா, ஐயா", என்று கத்திக்கொண்டிருந்தார்கள். சிறுவர்களின் கூக்குரலையும், எதிரே ஒரு மனிதன் வந்து நிற்பதையும் பார்த்த யானை தன் முகத்தை ஒரு அசைப்பு அசைத்தது. இதைச் சிறிதும் எதிர்பாராத தந்தையார், யானையின் கொம்புகள் முகத்திலிடித்ததால் கீழே சாய்ந்தார். அவரது உடம்பு முழுதும் யானையின் 4 கால்களுக்கு நடுவிலும் தலை நேரே துதிக்கையின்கீழும்கிடந்தன. தந்தை விழுந்தவுடன், யானை திக்பிரமையடைந்து செயலற்று நின்றது.

உடனே இரும்புக் கிராதிக்கு வெளியே பெருத்த கூட்டம் கூடிவிட்டது. ஆனால் துணிந்து யார் போய் எடுப்பார்கள்? மதம்பிடித்த யானையிடம் தாங்களும்போய் மிதியுண்டு சாக யாருக்குத்தான் மனம் வரும்? "யார் பூனைக்கு மணி கட்டுவது?" என்று எலிகளின் கூட்டத்தில் கேள்வி பிறந்ததைப்போல், 'யார் யானையிடம் போய் பாரதியைத் தூக்குவது?' என்ற யோசனை எல்லாருக்கும் ஏற்பட்டது.

கோவிலுக்குள் இருந்த தந்தையின் சீடர் ஸ்ரீ. குவளை. கிருஷ்ணனுக்கு இந்த சமாசாரம் எட்டவே, காற்றைப்போல் விரைந்து வந்தார். ரத்தப் பிரவாஹத்தில், யானைக்காலடியில், பிரக்ஞையற்றுக் கிடந்த பாரதியாரைப் பார்த்து அவர் மனம் எண்ணற்ற சிந்தனைகளால் உலப்பப்பெற்றது. ஆனால் நொடியில் தைரியத்தை வரவழைத்துக்கொண்டு சிறிதும் யோசனையோ, தயக்கமோ கொள்ளாமல் வேலியைத்தாண்டி உள்ளே குதித்து தமது குருவை அப்படியே சிறு குழந்தையை எடுப்பதுபோலஎடுத்து மார்பில் அணைத்துக்கொண்டு யானையை விட்டுச்சிறிது தூரம் வந்தவுடன் அவரது தன்னலமற்ற, துணிகரமான செயலைக்கண்டு ஜனங்கள் மகிழ்ச்சி கொண்டு வேலியிலிருந்து பாரதியாரை வெளிப் பக்கத்தில் இறக்க உதவிசெய்தார்கள். நண்பர் குவளை, இந்தக்காரியத்தை நிமிஷப்போதுக்குள் செய்துவிட்டார் மனத்திண்மையினால்!

இதற்குள் தந்தையாரின் நண்பர் ஸ்ரீ. ஸ்ரீநிவாஸாசாரியார் அங்கு வந்து சேரவே, ஒரு டாக்ஸியில் தந்தையை வைத்து ஆஸ்பத்ரிக்குக் கொண்டு சென்றார்கள். அங்கு போனபின் சுயவுணர்வு வந்ததும் காயங்களுக்குக் கட்டு கட்டிக் கொண்டு வீடு வந்துசேர்ந்தார். பின்புதான் எங்களுக்கு விஷயம் தெரியும்.

மறுநாள் "அப்பா, என்ன இருந்தாலும், இந்தத்துணிச்சல் உங்களுக்குக் கூடாது. யானைக்குமதம் பிடித்திருக்கிறதென்று தெரிந்தும் அதனிடம் போவது, மதம் பிடித்த செய்கையல்லவா?" என்றேன்.

தந்தை:—(சிரித்து விட்டு) "இல்லவேயில்லை அதற்கும் மதம் பிடிக்கவில்லை. எனக்கும் மதம் பிடிக்கவில்லை.

நான்:—அப்போ, எங்களுக்குத்தான் மதம் என்கிறீர்களோ ?

தந்தை:—அதுவும் நான் சொல்லவில்லை.

நான்:—அந்தயானை ரொம்ப அறிவுள்ளது என்று புகழ்கிறீர்களே! தினம் அதற்குப் பழம் கொடுக்கும் விளையாட்டுத் தோழனை, தகுந்தபடி நடத்தி விட்டதே.

தந்தை:—அது என்னை வேண்டுமென்று தள்ளவில்லை. நான் திடீரென்று அதன் முன்பு வெகு சமீபத்தில் அதன் கண்ணைப் பார்த்து நின்றேன். சுற்றியுள்ளோர் பயத்தினால் இரைச்சல் இடவும், அது மிரண்டு தலையை யாட்டிற்று. அந்த இடி தாங்காமல் நான் கீழே விழுந்தேன். கீழே கிடந்த கல்லுதான் என்னைக் காய முறுத்தி விட்டது. நீ சொல்வது போல் அது மதங் கொண்டதாயிருந்தால், நான் கீழே விழுந்தவுடன், என்னைக் காலால் மிதித்து துவைத்துக் கொன்றிருக்காதா? அல்லது துதிக்கையால் தூக்கி ஆகாயத்தில் விட்டெறியாதா? நான் கீழே விழுந்தவுடன்தான் அதற்கு இன்னான் என்று தெரிந்திருக்கிறது. அதனால்தான் அது அசையாமல் தன் செய்கைக்கு வருத்தங் கொண்டு நின்று விட்டது.

நம் நாட்டில் ஒரு கெட்ட வழக்கம் சிறிது சித்தப்ரமை அல்லது வியாதி ஒருவனுக்கு ஏற்பட்டு விட்டால், சூழவிருப்போர் தமது சொல்லாலும் செய்கையாலும், முழுப் பைத்தியமாகவும், தீராவியாதிக்காரனாகவும் ஆக்கி விடுவார்கள். உதாரணமாக, நாம் ஒருவரைச் சந்தித்து ஒரு வருஷமானால், மறுபடியும் அவர்களைச் சந்திக்க நேர்ந்தால் முதல் கேள்வி, "ஏதப்பா உன் உடம்பு இளைத்துப் போய்விட்டது?" என்பதுதான். உண்மையில் அந் நண்பன் குண்டோதரன் மாதிரி யிருப்பான். ஆனால் சம்பிரதாயத்திற்காக நாம் இப்படிக் கேட்டதும் அந்தக் குண்டோதரன் கூட மனமிடிந்து "ஐயோ எனக்கு என்னவோ வியாதி வந்திருக்கிறது," என்று அந்த க்ஷணத்திலிருந்து ஏங்க ஆரம்பித்து வியாதியை வருந்திக் கொள்கிறான். ஏக்கம் வியாதியின் வேர். இதேபோல் சிறிது நோயுற்றிருந்த யானையை 50 பேராகச் சேர்ந்து ஏகரகளை பண்ணி, அதைக் கட்டிப் போட்டு, தினம் நூற்றுக் கணக்கான பேர் அதைப் பார்க்க வந்து ஆர்ப்பாட்டம் செய்துகொண்டிருந்தால் அதற்கு மதம் அதிகமாகாமல் வேறென்ன செய்யும்? அது தன் முழுப்பலத்தையும் [illegible]. அவ்வளவுதான் என்றார்.



# ஒட்டுக்கேட்ட சம்பாஷணை

கமலா பத்மநாபன்

"அப்பா! தூங்கறயா, அப்பா?"

"இல்லேடா செல்லம். முழிச்சுண்டுதான் இருக்கேன்.... ஏன்? என்ன வேணும்?"

"நேக்கு தூக்கம் வரமாட்டேங்கிறதே! ஒரு கதை சொல்லப்பா' கேட்டுண்டேதூங்கிப்போயிடறேன்,

"கதையா? என்ன கதை சொல்லட்டும்டா கண்ணு? ராஜா ராணி கதை சொல்லவா?"

"தூ! அது வாண்டாம்பா! பாட்டி, நேக்கு நறய ராஜா ராணி கதை சொல்லியிருக்கா. வேறே ஏதாவது புதிசா சொல்லேன்".

"சரி, அப்படீன்னு மந்திரவாதி கதை ஒண்ணு சொல்றேன், கேளு, ரொம்ப தமாஷா இருக்கும்."

"ஊஹூம்! மந்திரவாதி கதை ஒண்ணும் நேக்கு வாண்டாம்பா. எங்க ஸ்கூல் வாத்தியாரம்மா எங்களுக்கு எப்பவும் மந்திரவாதி கதை தான் சொல்ரு. அது நேக்கு பிடிக்கறதே இல்லே. அம்மா கதை சொல்லேன் அப்பா."

"அம்மா கதையா? அதென்ன அம்மா கதை? நேக்குத் தெரியாதே அந்தக் கதை!"

"போ அப்பா! நீ சும்மா சொல்றே. நோக்கு அம்மா கதை தெரியும். சொல்லப்பா! ஊம்... ஊம்.....உஹூம்......சொல்லமாட்டியா? இருக்கட்டும். நான் ஒங்கூட பேசப்போறதில்லே டு! ஆனே மேலே அம்பாரி மேலே—குதிரை மேலே—கோட்டை மேலே—டு! டு! டு!!"

"கோச்சுக்காதேடா கண்ணு! அம்மா கதைன்னுக்க நேக்கு எப்படடா தெரியும்? யாரோடெ அம்மா கதையைச் சொல்லணும்?"

"எங்க அம்மா கதைத்தான் சொல்லச் சொல்றேன். இதுகூட புரியல்லேயா நோக்கு? இப்ப சொல்லப்பா நேக்கு எங்க அம்மா கதையை. நீ சமத்து அப்பாவோல்லியோ?"

"நோக்கு அம்மாவே இல்லேயேடா ராஜா!"

"ஏன் நேக்குமாத்திரம் அம்மா இல்லே அப்பா? எங்க ஸ்கூல்லே வாசிக்கிற முத்து, சீனு, கோபு, விசாலம் இவாளுக்கெல்லாம் அம்மா இருக்காளே! ஏம்பா, நேக்கு அம்மாவே பொறக்கல்லியா?"

"ஆமா, ஆமா! நோக்கு அம்மான்னு ஒருத்தி பொறக்கல்லேடா தங்கம்! பேசாதே தூங்கு இப்பொ. நாழியாச்சு. நாளைக்கு யோசிச்சு பேஷான கதை ஒண்ணு சொல்லப்போறேன். ஊம். கண்ணே மூடிக்கோ"

"போ அப்பா! நீபொய் சொல்றே. அன்னிக்குப்பின்னே விசாலம் சொன்னுளே-குழந்தைகள் எல்லாம் அம்மா வயத்துலே பொறக்கருன்னும், நானும்கூட எங்க அம்மா வயத்திலே பொறந்தேன்னும் சொன்னுளே. நேக்கு அம்மாவே பொறக்காதபோது நான் எப்படிப்பா பொறந்தேன்? சரியா சொல்லப்பா. முத்து, விசாலம், சீனு, கோபு இவாளுக்கெல்லாம் அவாவா அம்மா இருக்காப்லெ நேக்கும் அம்மா ஒருத்தி பொறந்திருந்தாளோல்லியோ? நான் அவ வயத்திலெதானே பொறந்தேன்.? ஏம்பா சும்மா இருக்கே? பேசு அப்பா!"

"ஹூம்! நோக்கும் ஒரு அம்மா பொறந்திருந்தாடா கண்ணே! பொறந்திருந்தா. அப்பறம் அந்த அம்மா வயத்துலெ நீ பொறந்த அன்னிக்கே ஒங்கம்மா செத்துப் போயிட்டா. அதான் நோக்கு இப்போ அம்மா இல்லே."

"செத்துப்போயிட்டான்னு என்ன அர்த்தம்?"

"உம்மாச்சி (சுவாமி) கிட்டெ போயிட்டான்னு அர்த்தம்."

"ஏதுக்கு உம்மாச்சி கிட்டெ போயிட்டா எங்க அம்மா? மறுபடி எப்பொ நம்பகிட்ட திரும்பிவருவ?"

"இன்னமே ஒங்கம்மா திரும்பி வரமாட்டாடா செல்லம்! நீ பொறந்தப்பறம் அவளுக்கு இங்கே வேலே ஒண்ணும் இல்லேன்னு சுவாமியே பார்த்து ஒங்கம்மாவை தன்னிடம் அழைச்சுண்டுட்டார்."

"என்னப்பா இப்படி சொல்றே? நான் பொறந்தப் பறம் தானே அம்மாக்கு நறய வேலே இருந்திருக்கும்! நேக்கு பால் போட்டணும், குளிப்பாட்டணும், பௌடர் பூசி கண்ணுக்கு மையிட்டு சொக்காய் போட்டு, தூளிலெ போட்டு ஆட்டணும். அழறப்பொ வெல்லாம் எடுத்துத் தூக்கி சமாதானப் படுத்தணும். இதெல்லாம் அம்மா வேலே தானே? கோபுவாத்துலே துளியூண்டு — இக்குனூண்டு — பாபா பொறந்திருக்கு பாரு! அதுக்கு அவாம்மாதான் எல்லாம் செய்யரு. நான் தினம் பாக்கறனே. கோபுவோடெ அம்மா அந்தக் குஞ்சாணி பாபாவுக்கு எப்பவும் ஏதானு வேலே பண்ணிண்டே இருக்கா. அவ அம்மா மாத்திரம் ஏன் செத்துப் போகலே!"

"உச்! அசடு! அப்படியெல்லாம் கேட்கக் கூடாது! நோக்கு பால் போட்ட, குளிப்பாட்ட, மையிட— இதுக்கெல்லாம் பாட்டி யிருந்தாளேன்னு உம்மாச்சி ஒங்கம்மாவை கூட்டிண்டுட்டார். அது அவர் இஷ்டம்."

"கோபுவாத்துலேயும்தான் ஒரு பாட்டி இருக்காளே? அவ அந்த சின்ன பாபாவைப் பார்த்துக் கட்டுமே? கோபு அம்மா செத்துப் போகட்டுமே!

"பாத்தியா? அப்படியெல்லாம் அசடு மாதிரி கண்டபடி பேசக் கூடாதுடா ராஜா! நான் சொல்றத்தை கவனிச்சுக்கோ. உம்மாச்சிக்கு யார் யார் மேலே ரொம்ப இஷ்டமோ அவாளைத்தான் சீக்கிரம் தம்கிட்ட அழைச்சுப்பார். ஏன்னுக்க நம்பளை எல்லாம் சுவாமி தான் இந்த லோகத்துலே வந்து பொறக்கும்படி அனுப்பிச்சார். அவருக்கு எப்பொ இஷ்டம் வறதோ அப்பொ நம்பளை மறுபடியும் தம் கிட்ட கூப்பிட்டுக்கொள்வார். சுவாமிக்கு அம்மாமேல் ரொம்ப இஷ்டம். அதான் அவளை அழைச்சுண்டுட்டார். தெரிஞ்சுதா?"

"நேக்குமாத்திரம் எங்க அம்மா மேலே இஷ்டமில்லேயா! நேக்கு— பின்னெ-இப்பொ அம்மாவேணுமே. வா, அப்பா! நாம்ப அந்தப் பொல்லாத உம்மாச்சிகிட்டப்போய் அம்மாவைக் குடுக்கறயா இல்லேயான்னு சண்டை பிடிக்கலாம்."

"உம்மாச்சி இருக்கற எடமே நம்ப கண்ணுக்குத் தெரியாதுடா செல்லம்! ஒருத்தர் கண்ணுலேயும் படாதெ, எங்கேயோ தூர ஆகாசத்துலே ஒளிஞ்சிண்டிருக்கார். நாம்ப எவ்வளவு தேடினாலும் அவரைக் கண்டுபிடிக்க முடியாது."

"அப்பா, அன்னிக்கு வக்கீல் மாமா ஆத்துலே ஒருபாட்டிசெத்துப் போனளே! அந்தப் பாட்டிகூடவா சுவாமிகிட்ட போயிட்டாள்?"

"ஆமாண்டா, தங்கம்."

"நம்மாத்து பசுமாடு போன மாசம் செத்துப்போச்சே, அது?"

"அதுவும் தான்"

"முந்தானாள் கதவு மூலேலெ செத்துக்கெடந்துதே; அந்தப் பல்லியைக் கூடவா உம்மாச்சி அழைச்சுண்டுட்டார்?"

"ஆமாம் ராஜா! செத்துப்போற மனுஷா, மிருகம், பிராணி, செடி கொடி எல்லாம் உம்பாச்சிகிட்டத் தான் போய் ஆகணும்! உன்னையும் என்னையும் கூட சுவாமி ஒரு நாளைக்கு தன் கிட்ட அழைச்சுக்கு வார். போரும் பேசினது. ரொம்ப நாழியாச்சு தூங்கு. நான் இன்னமே பேசப்போறதில்லே."

"அப்பா, நாம்ப செத்துப்போகச்சே உம்மாச்சி நம்ப கண்ணுக்குத் தெரியுவாரோ?"

"ஓ! நன்னாத்தெரியுவார். நாம்ப செத்துப்போன மறு நிமிஷமே அவர் நம்ப கையைப் பிடிச்சுத் தானே கூட்டிண்டுபோவார்."

"அப்பா, அப்பா! நேக்குத் தெரிஞ்சுபோச்சு அப்பா உம்மாச்சி யாருன்னு இப்பொ! சொல்லட்டுமா?"

"யாரு? சொல் பார்க்கலாம்."

"எங்களுக்கு அன்னிக்கு ஒரு நாள் எங்க வாத்தியாரம்மா ஒரு மாயக்கள்ளன் கதை சொன்னப்பா. அந்தப் பொல்லாத திருடன் வந்து சின்ன சின்ன பசங்களை எல்லாம் யாருக்கும் தெரியாமெ தூக்கிண்டு போய் அதுகள் போட்டுண்டிருக்கற நகைகளை எல்லாம் கழட்டிண்டுடுவானாம். அப்பறம் அந்தப் பசங்களை கண் காணாத எடத்தில் எங்கேயோ ஒளிச்சு வச்சுடுவானாம். தானும் போலீஸ்காரா கண்ணுலே படாமெ ஒளிஞ்சு திரிஞ்சுண்டு இந்தமாதிரி தப்புகாரியம் பண்ணிண்டே இருக்கானாம். இந்தப் பக்காத்திருடனை கண்டுபிடிக்க போலீஸ்காரா ரொம்ப கஷ்டப்படறுளாம். ஆன இன்னும் அவன் ஆப்படவே இல்லேயாம்! உம்மாச்சியும் இந்தப் பக்காத் திருடன் மாதிரியே ஒரு மாயக்கள்ளன் தான் அப்பா! சந்தேகமே இல்லே! நம்ப அம்மாவை, வக்கிலாத்துப் பாட்டியை, நம்மாத்துப் பசுமாட்டை, பாவம் — அந்தப் பல்லியை — இப்படி எல்லாரையும் தனக்கு இஷ்டம் வந்தபோது கூட்டிண்டு போய் ஒளிச்சு வெச்சுட்டு தானும் ஒருத்தர் கண்ணுக்கும் தெரியாதெ எங்கேயோபோய் ஒளிஞ்சிண்டிருக்காரோல்லியோ? சுத்த பயந்தாங்குளி உம்மாச்சி! இந்தப் போக்கிரி உம்மாச்சியைக் கண்டுபிடிக்க நான் ஒரு உபாயம் கண்டுபிடிச்சிருக்கேன் அப்பா! நோக்குசொல்ல மாட்டேனே!"

"வாண்டாம். நீயே ரகஸ்யமாய் வெச்சுக்கோ உன் உபாயத்தை! இப்போ நீ தூங்கணும். இல்லாவிட்டா நேக்கு கெட்ட கோபம்வரும்."

"இல்லேல்லெ! நோக்கும் சொல்றேன். கோச்சுக்காதெ அப்பா. என்னோடெ ஆசை அப்பாவோன்னோ நீ? இதைமாத்திரம் ஒங்கிட்ட சொல்லிட்டு அப்பறம் நான் நிச்சியமாய் தூங்கிப்போயிடரேன், கிட்டவா அப்பா. உன் காதோடெ சொல்றேன். உம்மாச்சிக்கி கேட்டுடப் போறது!"

"சரி, சுருக்க சொல்லு. இதான் கடைசிப்பேச்சு. மறுபடியும் சளசளவென்று பேசக்கூடாது தெரிஞ்சுதா? ஊம், சொல்லு. கேட்கிறேன்" என்று தமது அருகில் படுக்கவிட்டுக்கொண்டிருந்த ஏழுவயது சிறுவன், ராஜாமணியை தழுவிக்கொண்டு அவன் வாயருகில் தம் செவியைப் பொருத்தினர் தந்தை.

இதைக் கவனித்த சுவர்க்கோழியாகிய நான் சட்டென்று, சுவர் மூலையிலிருந்து ஓசைப்படாமல் தாவிக்குதித்து, மாயக்கள்ளனை பரம்பொருளைக் கண்டுபிடிக்கும் உபாயத்தை இச்சிறுவன் வாய் மூலமாகக் கேட்டறியலாம் என்ற ஆவலுடன், அந்த பாலகனின் அடர்ந்த தலைமயிரின்மீது போய் லேசாய் அமர்ந்து அவன்பேசிய ரகஸ்யத்தை ஒட்டுக் கேட்கலானேன்.

"நான் ஒரு நாளைக்கு செத்துப்போவேன் பாரு அப்பா; அப்பா! நெஜமாவே சாகறத்துக்கு கொஞ்ச நாழி முன்னாலே செத்துப்போயிட்டாப்லெ வெறுமனெ கண்ணை மூடிண்டு மூச்சை பிடிச்சிண்டு பாசாங்கு பண்ணுவேன். உம்மாச்டு

வந்து நான் நெஜமா செத்துப் போயிட்டேன்னுக்கும்னு நெனச்சு ஏமாந்துபோய் என்னைத் தன் கிட்ட கூட்டிண்டுபோகக் கையைப் பிடிப்பார். நான்தான் அப்பொ இன்னும் உசிரோடெ இருப்பேனே! அவர் என் கையைப்பிடிச்சவுடன் நான் 'லபக்' குன்னு அவரோடெ கையை கெட்டியாய் பிடிச்சிண்டு 'மாயக் கள்ளா! போக்கிரித்திருடா! எங்க அம்மாவை, அந்த வக்கிலாத்துப் பாட்டியை, இன்னும் எவ்வளவோ பேரை ஏமாத்தி அழைச்சிண்டு போனதுபோல் என்னையும் ஏமாத்தலாம்னு பாத்தாயா? அதெல்லாம் பலிக்காது இந்தராஜாமணிகிட்டெ!' ன்னு கூச்சல்போட்டு உம்மாச்சி தப்பிச்சிண்டு ஓடிப்போயிடாதபடி இறுக்கிப் பிடிச்சுப்பேன். அப்பறம் இந்த பொல்லாத உம்மாச்சியை சுலபமாய் போலீஸார்கிட்ட ஒப்பிச்சுடலாம் இல்லையா? சுவாமியை ஜெயிலுலே போட்டுட்டா அப்பறம் யாருமே செத்துப்போகமாட்டா! நம்ம அம்மாவைக்கூட எப்படியாவது தேடிப்பிடிச்சு அழைச்சிண்டு வந்துவிடலாம். இதை யாருக்கும் சொல்லப்படாது அப்பா. குட்டாய் வெச்சுக்கோ! என்ன?'' என்று சிறுவன் ராஜாமணி—நவீன திருவன்—தன் தகப்பனின் காதைக் கடித்தான்.


''ஆகட்டும் கண்ணு. ஒருத்தருக்கும் இந்த ரகஸ்யத்தைச் சொல்ல மாட்டேன். நீ தூங்கு இன்னமெ, மணி பன்னெண்டு அடிக்கப்போறது'' என்று விம்மல்களுக்கிடையே புகன்றார் தகப்பனார்.

''ஏம்பா அழறே!''

''அழல்லேடா ராஜூ! தொண்டை வலிக்கிறது. கனைச்சுண்டேன், அவ்வளவுதான்,'' என்று மழுப்பிவிட்டு கண்ணீர் சொறிந்தவண்ணம் அந்தத் தாயில்லாச் சிறுவனைத் தட்டி, தூங்கவைத்தார் தந்தை.

நானும் என் யதாஸ்தானத்திற்கு வாபஸ் வந்தேன்.






**ஸர்ப்ப நிர்த்தனம்**

சிங்கப்பெருமாள் கோவிலிலும் ஒரு சைத்திரிகரைக் கண்டு பிடித்துவிட்டோம்! ஸ்ரீ. இப்ராஹிம் தீட்டியுள்ள இந்த உயிரோவியம் முற்றும் பென்ஸிலிலேயே எழுதப்பெற்றது என்பதையும் தெரிவிக்கிறோம்.



## ராதையும் கிருஷ்ணனும்

நவராத்திரியின்போது சிறுமிகளுக்குத் தினுசு தினுசாக அலங்காரஞ் செய்து களிப்பது தாய்மார்களுக்குப் பெருமை. இக்குழந்தை மைதிலியை ஒருதினம் கிருஷ்ணனாகவும், மற்றொருதினம் ராதையாகவும் அலங்கரித்திருக்கும் திறமையைக்கண்டு களியுங்கள். அலங்காரம் செய்துவிடலாம்; அது பொருந்தியிருக்கவேண்டுமல்லவா? இயற்கையழகும் செயற்கையழகுப் பொருத்தமும் சேர்ந்து சோபிக்கிறாள் மைதிலி. நீடூழி வாழ்க

# ஆசீரயம்

## எம். எஸ். கமலா

தை வெள்ளிக்கிழமை உற்சாக மாய் இருக்கவேண்டிய நாள். ஹிந்து நாரீமணிகள் தங்கள் மாங் கல்ய அபிவிருத்திக்காகவும் சர்வ சம்பத்துக்களுக்காகவும் லக்ஷ்மியை ஜோதிரூபமாய் பயபக்தியுடன் ஸேவிக்கும் நாள். வயிற்றிற்கில்லா ஏழைப்பெண்மணியானாலும் சீப்ர மாய் எண்ணெய் தேய்த்து ஸ்னானம் செய்து, காலணா புஷ்பம் சூட்டிக் கொண்டு, வீட்டையும் சுத்தமாய் மெழுகிச் செம்மண் கோலத்துடன் திகழச்செய்து, கனிந்த பார்வையும் களித்த முகமுமாய் இருப்பாள். இப்பேர்ப்பட்ட புனித வெள்ளிக் கிழமையன்று கணேசன் வீட்டில் கொந்தளிப்பு.

கணேசன் குடும்பம் சாதாரண கௌரவமுள்ள ஏழைக்குடும்பம். விதவை தாயார், அவன் தங்கை சாலா (விசாலாக்ஷி), மனைவி சீதா, இரண்டு பெண் குழந்தைகள். தாலுக் ஆபீஸில் ரூ. 50-பெறும் குமாஸ்தா. வெளியழகுப் படைத்த வனல்ல. குணக்குன்று. நல்ல கறுப்பு. ஐந்தரையடி உயரம். உருண்டைமூக்கு. குழிந்த கண்கள். மேடிட்ட நெற்றி. சுமார் நாற்பது வயது. வழுக்கை விழ ஆரம்பிக்கும் தலை. இருப்பதில் திருப்திகொண்ட சாதுப்பேர்வழி. மனைவி சீதாவோ வெனில் உண்மையில் ஓர் ஸதி. பொறுமைசாலி. சிவந்த மேனி. அதிக அழகில்லாவிடினும் குரூபி யல்ல.

எந்த மஹான் எக்காலத்தில் 'ஸம் சார சாகரம் துக்கம்' என்ற சிரஞ் சீவிச் சொல்லைச் சொல்லிச் சென் ருரோ; உலகில் எதற்கு அழிவு ஏற் படினும் இச்சாகரத்திற்கு அழிவு இல்லை. உள்ளத்துயரின் உறுமல் தான் அதன் த்வனி; கோபத்தின் கொந்தளிப்புதான் அதன் அலைகள். சாகரத்தின் அலைகள் அதன் கட்டுப் பாட்டிற்குள் நின்று பருவகாலங் களில் சற்று அதிகமாய் உத்கோ ஷித்துக்கொண்டு கதறும்; சம்சார கொந்தளிப்பலைகளோவெனில் அனி யாயமாய் இன்பத்தைச் சிதைத்து, துன்பத்தைவீசி, மனதைப்பாழாக்கி மமதையின் சிகரத்தில் நிறுத்தி நிலை யில்லாத்துடிப்பில் ஆழ்த்துகிறது.

இதையறியவில்லை கணேசனின் தாயார். பிள்ளையைப் பெற்ற பலனை பெண் வீட்டார் தன்னிடம் வந்து வேண்டும்போதுதான் அறிந்தாள், சம்பாதியின் புகழுரையால் தன் வலிவையுணர்ந்த ஹனுமானைப் போல். அந்தம்மாளின் விருப்பத்தில் முக்காலே மூணுவீசம் நிறைவேற்ற ஒத்துக்கொண்ட ஓர் பெண் கிடைத் ததும் 'மாமியார்' என்னும் மஹா சிங் காதனத்தில் ஏறினள்.

நாட்டுப்பெண் குடித்தனத்திற்கு வந்ததும் அந்தம்மாள் செங்கோல் செலுத்தும் அரசியானதன்றி, அவ சரச்சட்டங்களை சந்தர்ப்பானுசாரம் பிரயோகிக்கும் சர்வாதிகாரரூபியா யும் விளங்கினள். நாட்டுப்பெண் என்ருல் நாக்கசையா யந்திர மென்று நினைத்தாள். படுத்தின ளய்யா படாதபாடு. ஏகபுத்திரனை கணேசன் விவாகமானபின் உலக ரீதியாய் சரிக்கத் (நடக்கத்)தொடங் கினன். தாயாருக்கு வந்துவிட்டது கோபம். என்றும் தன் மைந்தன் சிறுவனாய் தன் சேவையையே செய்துகொண்டு தன்னைவிட்டகலா

மல் இருக்கவேண்டுமென்று நினைத்தாள். ஆனால் கணேசனும் வாலிபன் தானே! மனைவியுடன் இன் சொல்லும் புன்முறுவலுமாயிருப்பான். இது இயற்கையின் சேஷ்டையென்றியவில்லை அக் கிழவி. தன் நாட்டுப்பெண், பிள்ளையை ஏதோ வசியம் செய்துகொண்டாள் என்று நினைத்து, இல்லாததெல்லாம் பிள்ளைக்கு சொல்லிக்கொடுத்து பிள்ளையிடம் அவளுக்கு அடியும் உதையும் வாங்கிவைத்தாள். சீதாவும் பேருக்கேற்றபடி சோக தேவதையாயிருந்தாள். அவள் விசனரூபத்தைக் கண்டு வெறுப்பேற்பட்டகணேசன் அவளை தாய்கம் அனுப்பிவிட்டான். முன்பே தந்தையற்ற சீதாவை தாய் எப்படி ரக்ஷிப்பாள்? கவலையால் காலனிடம் சென்றாள். இப்பொழுது சீதா அனாதை.

* * * *

இனி என்ன செய்யமுடியும்? கணேசன் அவளை அழைத்துவர வேண்டியதாயிற்று. அவள் அனாதரவான நிலையில் கணவன் சற்று இரக்கம்கொண்டான். காலமும் ருதுவும் ஒன்றுசேர்ந்தது. இரக்கம், கருணை, கனிவு எல்லாம் ஒன்று சேர்ந்து கனிந்தது ஒரு கனி. அவனைப்போலில்லாமல் அழகாயிருந்தது அப் பெண் குழந்தை. தன் குரூப ச்ருஷ்டியில் விளைந்த சுரூபத்தை ஆனந்தத்துடன் போற்றினான். அவன் தாய் பெண் புலி... அல்ல... கடும்பசி கொண்ட ஆண் சிங்கம்போல கர்ஜித்துக்கொண்டு ஒவ்வொன்றிற்கும் குறைசொல்லி சண்டைக்குத் தயாராய் நின்றாள். அவன் பொறுமை எல்லை கடந்துவிட்டது. நூறுசொல்லுக்கு ஒன்று பதில் விடுத்தால் சீதாவை ஸஹஸ்ர நாமார்ச்சனை செய்யத் தொடங்கினாள். அச் சிறுமி பேதை, தாய் தந்தையரற்ற அநாதை, மாமியாரின் மனதைத் தகர்க்கும் கடுமையான சொற்களைக்கேட்டு மலைத்து மலைத்து நிற்கத்தொடங்கினாள். சோகம் அதிகமாயிற்று. உள்ளத் துடிப்பு அதிகப்பட்டது. தாயின் பிடுங்கலைத் தாளாமல் அவ்வப்பொழுது மனைவியை மத்தளம் வாசிக்கத் தொடங்கினான். உள்ளத் துடிப்புடன் அடிகளும் சேரவே மிக பலஹீனமாக நின்ற இடத்திலேயே மூர்ச்சையாய் விழத்தொடங்கினாள். அந்தோ பரிதாபம்! அதையும் மாய்மாலம் என்றுதான் அவன் தாய் அவனுக்குப் போதித்தாள். அவனும் நம்பினான்.

ஆனால் உண்மையை எவ்வளவு நாள் மறைக்கக்கூடும்? மெல்ல மெல்ல தாயின் குணம் வெளியாயிற்று. தாயார் சொல்வதற்கெல்லாம் பதில் சொல்லாது மவுனம் சாதித்தான். அது அந்தம்மாளுக்குச் சஹிக்கவில்லை.

"அடே! கணேசா! நீ முன்போவில்லேடா! அவள் உன் தலையில் மிளகைத் தேய்த்து தன் வசம் செய்துகொண்டாளடா! நீயும் அவள் மூஞ்சியைப் பார்த்தே மகிழ்ந்துபோறே. என் சொல்லுக்கு மரியாதையில்லாமல் போய்விட்டது. முந்தி இப்படித்தான் இருந்தையா? அவள் மருந்துவைத்துவிட்டாள். என் குடியைக் கெடுக்க வந்துவிட்டாள்." இப்படியெல்லாம் அளவற்ற சுடுசரங்கள் வீசினாள். எல்லாவற்றிற்கும் ஓர் நியதியுண்டு. அதற்குள் நின்றால்தான் மரியாதை, கௌரவம், அழகு எல்லாம். எதுவும் அளவுக்கு மிஞ்சினால் அருவருப்புதான்.

இப்படி அந்தம்மாள் அளவுக்கு மீறி வசைமாறிப் பொழியவே கணேசன் "போதும். சற்றுவாயை யடக்கிப் பேசு. அவள் என்ன செய்தாளென்று இப்படிக் கண்டபடி பேசுகிறாய்?" என்று சொல்லும்போதே "இவ்வளவிற்கு வந்துவிட்டதாடா? நானென்னடா அப்படிச் செய்துவிட்டேன். வேண்டாமடா! வீணாய்ப்போகாதே! உனக்கு அழிந்துபோக காலம்வந்துவிட்டது. இல்லாவிட்டால் இப்படி வாயால் விழமாட்டாய். அவள் செய்வதெல்

எம். எஸ். கமலா

லாம் மாய்மாலம். அதை நம்பி மோசம் போகிறாய். உலகத்தில் எத்தனை பிள்ளைகளில்லே? நாட்டுப் பெண்களில்லே? இப்படி உன்னைப் போலவா இருக்கிறார்கள்?"

அவனுக்குக் கோபம் மூக்கிற்கு மேல் வந்தது. "போதும் உன்னைப் போன்ற மாமியாரிருக்கிறளா? இதை முன்னே யோசனை செய்"

அடா... என்னடா! 'வளத்த கடா மார்லெ பாய்ந்ததாம்' என்று சொல்வார்கள். அப்படி என்மேல்பாயறே! இதுக்கெல்லாம் பயப்படறவ அப் பாதீக்ஷிதர் பொண்ணல்ல. நினைச்சுக்கோ. அந்த மூளி செய்த உபதேசம் தலெக்கு நன்ன ஏறி யிருக்குன்னு தோண்றது. புருஷனேன்னு வெக்கமிருக்காடா? பொம்மண்டாட்டி கால்மாட்டிலே உக்காந்து...

"ஆம் நான் அப்படித்தான் இருப்பேன். உனக்கென்ன?" என்று தன்னையும் மீறிச் சீறிவிழுந்தான்.

"இவ்வளவிற்கு வந்துவிட்டதா? அடே பாவி! உன்னை எத்தனை கஷ்டப்பட்டு வளர்த்திருப்பேண்டா? நேத்து வந்த அந்த சிறுக்கி அவ்வளவு ஏத்தமாடா? அப்படி என்னடா அவளிடம்..."

"இனி அதிகம் பேசாதே! இப்பொழுதே எனக்குக் கோபம் அதிகமாயிருக்கிறது"

"உன் கோபம் என்னை என்னடா செய்யும்? ஆமாமப்பா! அவள் ஒய்யாரமாய்ப் படுத்திருக்கணும். நான் அத்தனை உழைப்பும் உழைத்து வாயைத் திறக்காமெ இருக்கணும். இல்லையா? ஆகட்டுண்டாப்பா! அந்த தேவி சாஞ்சிண்டிருக்கட்டும். நான் எல்லாம் செய்து வாயெ கையெ பொத்திண்டு சும்மா விழுந்துகிடக்கறேன். உன்னைச் சொல்வதில் குத்தமில்லே. நீயல்ல சொல்வது. உன் வயத்தில் அவ வெச்சிருக்காளே அது செய்த வேலேடா!"

எத்தனை பொறுத்தாலும் கணேசனல் பொறுக்கக்கூடவில்லே. அவன் மாத்திரம் கல்லுப்பிள்ளையாரா வேண்டினாலும் வைதாலும், முக்கூடல் தெருவில் மௌனமாய் வீற்றிருக்க. "ஆமாம், அப்படித்தான்" என்று சொல்லும்போதே சீதா மெள்ள எழுந்தாள். அவள் உடல் கிடுகிடு என்று நடுங்கிக்கொண்டிருந்தது.

"நீ எழுந்திருக்காதே! அப்படியே படுத்துக்கோ!" என்றான்.

"ஏண்டாப்பா அவ்வளவு கரிசனம்? எழுந்தால் அவள் உடம்பில் தங்கம் கரைந்துவிடும்! எழுந்திருக்காதேடீ அம்மா!"

அவன் ஏதோ சொல்ல வாயெடுத்தான். "அய்யோ! ஒன்றும் பேசாதேயுங்களேன். அம்மா கோபித்துக் கொள்ளுகிறாரே!" இது சாதாரணமாய் உண்மையாய் சொன்னாலும் அந்தம்மாளுக்கு விபரீதமாய்ப்பட்டது. "ஆமாம்டீ! அவன் என்னுடன் பேசப்படாது. உன்னிடமே பேசிக் கொண்டு உன்தலேமாட்டில் ஒக்காந்திருக்கட்டும். என் ஒரு பிள்ளைக்கும் எனக்கும் ஆகாமல் பண்ணினையே! அது உன்னை விடாதுடீ! நீ நன்னா அனுபவிப்பே"... இச்சொற்களைக் கேட்டதும் அவள் ஹிருதயம் மறுபடியும் துடிதுடித்து உணர்ச்சியற்ற கட்டையானாள்.

"அவள் என்ன சொன்னாள்? நீ கோபித்துக்கொள்ளலாம். — அதை அவள்சொல்லக்கூடாதோ?" என்று சீற்றத்துடன் தாயைப் பார்த்துக் கூறினான். மயக்கமாய் வீழ்ந்திருக்கும் மனைவியின் மூக்கில் புகை பிடித்தான். முகத்தில் குளிர்ந்த நீரைத் தெளித்தான். சற்று நேரத்திற்குள் அவள் மெல்ல கண் விழித்தாள். அவன் தாய்மாத்திரம் மெஷினைப்போல் வாய்கொண்ட மட்டும் அலப்பிக்கொண்டிருந்தாள்.

"அம்மா! உனக்கு அவளைக் கண்டால் ஆகிறதில்லே. அவளைமுன் போல் அடிக்கவேணுமா? இனிமேல் என்னலாகாது. தள்ளிவைக்க வேண்டுமா? தாய் தந்தையரில்லாத

அநாதை. அவளுக்கு ஆச்ரயம் அளிப்பவர் யார்?''

"அவளுக்கு யாரும் இல்லை...... எனக்கு''... இந்த மூடச்சொல்லுக்கு அவனால் பதில்சொல்லமுடியவில்லை. தாயின் மனம் கடின சிலையைப் போல் அசைந்து கொடாமல் இருக்கவே மனைவியையும் குழந்தைகளையும் அவள் பிறந்தவீட்டில் விட்டு வந்து "நான் பிரம்மசாரியைப்போல் இருந்தால் உனக்குத்திருப்திதானே? என்று கேட்டான்.

* * * *

சஹோதரனிடம் தங்கும் அவளைப் பார்த்து உண்மையறியா ஊரார் "சீதாவை அவ அகமுடையான் தள்ளிவைத்திருக்காண்டீ. சேர்ந்தார்ப்போல் ஒரு மாதம் வெச்சு குடுத்தனம் பண்ணினது கிடையாதேடீ! இவா கொண்டுபோய் விடறது. பின்னேடியே அவன் அழைத்து வந்துவிடுவது. என்ன அதிசயமோ? கேட்டாலோ ஆம்படையான் நல்லவன்னு வேறு சொல்லிக்கிறா. இவமேலே என்ன குத்தமோ? யார்கண்டா?'' இப்படி வார்த்தையை கவிதையாக்கி, அதற்கு அழகுபெற ஆபரணங்கள் பூட்டி ஊர்வலம் செய்தார்கள். கிராமத்தில் கேட்கவேண்டுமா பிரஸ் இல்லாமல் பிரிண்டாவதற்கும், ஏஜண்டில்லாமல் பிரசாரமாவதற்கும்? சீதா உடல் குன்றினாள். ரத்தம் கொந்தளித்தது. தனக்கு ஆச்ரயம் கொடுப்பவர்கள் யார்? புராண சீதைக்கு—கொந்தளித்த அவள் உள்ளத்திற்கு—அடைக்கல மளித்தாள் பூதேவி. தனக்குக் கொடுக்கக்கூடியவர் யார்? புராண சீதைக்கு இரண்டு பிள்ளைகள். தனக்கு இரண்டு பெண்கள். அவளும் வனவாசம் செய்தாள். கணவனால் சிலகாலம் ஒதுக்கப்பட்டாள் (உத்தரகாண்டம்) வண்ணானின் வசைச்சொல்லால். தான் தன் மாமியின் கொடுமையால் ஒதுக்கப்பட்டாள். அப்படி ஒதுக்கப்பட்ட தன் உள்ளக்கொந்தளிப்பை... உலகோரின் வசைச்சொற்களை அடக்க வழி... யோசித்தாள்.

அன்று தை வெள்ளிக்கிழமை; கடைசி வெள்ளிக்கிழமை. முதல் வெள்ளிக்கிழமை தன்னில்லத்தில் நடந்த சச்சரவு. இரண்டாவது வெள்ளிக்கிழமைக்குள் தானிவ்விடம் வந்துவிட்டது. கடைசி வெள்ளிக்கிழமை; தன் கலங்கிய நிலை. சஹோதரன் எவ்வளவோ கரிசனமாய்த்தான் பார்த்துக்கொள்ளுகிறான். தன் பொறுமையை கடவுள் அளவுகடந்து சோதிக்கிறார். தன் கலக்கத்தால் தன் சகோதரனுக்குக் கலக்கம். இவைகளெல்லாவற்றையும் நினைத்து அன்று இரவு படுக்கையில் புரண்டுகொண்டிருந்தாள் சீதா. மாலை கோவிலுக்குச் சென்று வந்த குங்குமம் நெற்றியில் துலங்க, மாவிளக்கு போட்டு தீபத் தட்டின்மேல் சாத்தியிருந்த புஷ்பங்கள் வாடியும் வாடாமல் தலையில் குலுங்க, குழந்தைகளை பக்கத்தில் விட்டுக்கொண்டு படுத்திருந்தாள்.

அவள் சகோதரனும் அவன் மனைவியும்பேசிக்கொண்டது அவள் காதில் பட்டது. "இன்னிக்கு மாவிளக்கு ஏத்தும்போது அக்கா எவ்வளவோ சிரிக்கப் பிரயத்தனப்பட்டார். பாபம். அச்சிரிப்பில் அழுகைதானிருந்தது'' என்றாள்.

"உரத்துப் பேசாதே! அவள் காதில் விழப்போகிறது. பார்க்கப்போனால் ஒன்றையும் காணம். இந்த ஊரார் பற்பலவிதமாய்சொல்வதைக் கேட்டு என் புத்தி பேதித்து விடும்போல் இருக்கிறது. அவளாகக் கண்டு பாவம், பேருக் கேற்றபடி பொறுமையாயிருக்கிறாள்' என்றான்.

"ஆம். பொறுமையாய் இருந்து என்ன செய்வது? இது பொறுமைக் கேற்ற காலமா? மாப்பிள்ளைக்கும் வயதாகிவிட்டது. இன்னும் பச்சைக் குழந்தை யல்ல. இரண்டு குழந்தைகளுக்குத் தகப்பனாகிவிட்டார். ஒட்டியும் ஒட்டாமல் குடித்தனத்தை நடத்தத் தெரியாமல் இப்படி இருந்தா நாம் என்ன

செய்ய முடியும்? ஊர்வாயை மூட முடியுமா? உலைவாயை மூட தட்டுண்டு; ஊர்வாயை மூட..."

"அதற்கு நாம் என்ன செய்யறது? அவள் என்னுடன் பிறந்தாள். நான் பெற்றாலென்ன? அவள் வயிற்றில் பிறந்தால் என்ன? நாம் குடிக்கும் கஞ்சியை ஊற்றிவைத்துக் கொள்வோம். என்றும் இப்படியேவா இருக்கும். சீக்கிரம் விடியும்" என்றான்.

"என்ன விடியுமோ அந்தக்கிழம் இருக்கும்வரையில் ... ...எனக்குத் தோன்றவில்லை!'

வெளியில் இவைகளை கேட்டுக் கொண்டே படுத்திருந்த சீதாவின் ஹிருதயம் கொந்தளித்தது. ஏதேதோ சிந்தித்தாள், சிந்திக்கச் சிந்திக்கக் கங்குக்கரையில்லா சிந்தனையாகிவிட்டது. "அம்மா!" என்று பொருமினாள். உடல் இன்னும் அதிகம் குலுங்கியது. கண்ணீர் வரண்டது. கல்லாயிற்று மனம். கடமையை உணர்த்திற்று புத்தி. தன் இரண்டு பெண்களையும் ஏகாக்கிரமாய் பார்த்தாள். அதில் இரண்டு வயதுள்ள சிறியகுழந்தை தூக்கத்தில் அரும்பைப்போன்ற சிறிய வாயை விரியத் திறந்தது. இவளுக்கு என்னவோ தோன்றிற்று. தான் ஒருத்தி சென்றால் தனக்குப்பதில் தன்னைப்போல் பார்த்துக்கொள்ள இரண்டு பெண்கள். தான் இதுவரை பட்ட சுகமென்ன? ஒன்றுமில்லை. "சீக்கிரம் விடியும்" என்று தன் சகோதரன் சொன்னதற்கு "என்னவிடியுமோ" அவன் மனைவியின் பிரதியுத்தரம். யோசனை செய்தாள்.... மெள்ள எழுந்து சுவாமி படத்தருகில் வந்து என்ன வரம் கேட்டாளோ? அவள் உதடு துடித்துக்கொண்டிருந்தது. மார்பு விம்ம, கண்கள் மூடியபடி நின்றிருந்தாள். ஆசைக்கும் பாசத்திற்கும் த்வந்த் யுத்தம் ஏற்பட்டது. அஞ்ஞானம் நடுவில் வந்து தடுத்தது. வெறுப்பு உச்ச நிலையையடைந்தது எல்லாவற்றையும் உதறித்தள்ளினாள். அவ்விருளில் சரசரவென்று நடந்து மறைந்தாள்.

ஒருகுறைவுமில்லாத அமராவதி எல்லோர் குறையும் தீர்க்க ஆனந்தமாய் பிரவஹித்துக் கொண்டிருந்தாள். சராசரங்களின் துயரைத் தீர்க்க அவள் பிரவஹிக்கும்போது ஓர் அநாதைச்சிறுமியின் துயரையா தீர்க்கமாட்டாள்? வந்து நின்றாள் அக்காடாந்தகார இருட்டில் அமராவதிக்கரையில்.

"தாயே! அமராவதி! குழந்தையாய் இருந்தது முதல் இந்நாள்வரை என் உடையிலிருந்த அழுக்கைப் போக்கினாய். உடலிலிருந்த அழுக்கையும் கழுவினேன். என் உள்ளத்திலிருக்கும் கொந்தளிப்பைப் போக்கடித்து எனக்கு அடைக்கலம்கொடு அம்மா!" என்று சொல்லி அவள் கர்ப்பத்தினுள் நுழைந்தாள். அமராவதியும் அவளுக்கு ஆச்ரயமளித்தாள்.






"உலகத்தோடு ஒத்துவாழ்" என்கிற பழமொழியைக்கூட மதிக்காமல் என் கணவர் தான்தோன்றியாய்த் திரிகிறாரே! வேலையில்லாது அலைந்து தவித்த காலமே மிகவும் மேலாகக் கழிந்ததென இப்போது தோன்றும்படியாகிவிட்டதே! அவருக்கு நான் சொல்கிற ஒவ்வொரு வார்த்தையும் எதனாலோ வேம்பாகப்படுகிறதே; அம்பிகே! ஜகக்ரக்ஷகி! கீதாசாரியா! ஸர்வலோக ரக்ஷகா! நீங்கள் ஒரு நல்வழியைக் காட்டி உஜ்ஜீவிக்கும் மார்க்கத்தில் அவரைத் திருப்பமாட்டீர்களா! கதிர்போல் பெண்ணும் கதிர்போல் மனைவியும் என்பார்கள், என்னுடைய மகள் என்று சொல்வதற்கு முடியாமல் ப்ரமிக்கத்தக்கவிதம் வளர்ந்துள்ள பெண்ணுக்கு உலகத்தவர்களைப்போல் தக்க வரனைத்தேடி விவாகத்தைச் செய்துவைக்க முயற்சி செய்யாமல் இப்படி அலைகிறாரே! இந்த அவமானமும் அபவாதமும் கண்டு உலகம் சிரிக்காதா! அந்த பெண்ணுக்கும் நான் சொல்வது காதிலேயே ஏறமாட்டேன் என்கிறதே. இதுவும் என் பாபமா!" என்று சுமார் 35 வயது மதிக்கத்தக்க அழகான ஸ்திரீ, ஸ்வாமி ஸந்நிதியில் நின்று வேண்டிக்கொண்டிருந்த சமயம் அவள் கணவன் கடினமான குரலில் "கஸ்தூரீ! கஸ்தூரீ! நான் காலையிலேயே சொன்னது மறந்துவிட்டதா! டிப்பன், காபி தயார்தானா! அவர்கள் எல்லாரும் வந்துவிட்டார்கள். உடனே எல்லாவற்றையும் விமரிசையாக வைத்துக் கொண்டுவந்து கொடு" என்று அதட்டிச் சென்றான்.

உண்மையில் எவ்வளவு உத்தமியாயும் பதிசொல் கடவாத பாவையாயுமிருப்பினும் தன் மனத்திற்குப் பிடிக்காத—ஏன்? உலகத்திற்கு ஒவ்வாத-முறையில் கணவன் இறங்கி அட்டகாஸம் செய்கிருன் என்றுல் அவள் மனது கலங்கித் துடிக்கத்தானே செய்யும்?

கஸ்தூரி இயற்கையிலேயே மகா பரிசுத்தவதி. உயர்ந்த குடும்பத்தில் பிறந்த உத்தமி. காசு பணத்திஞல் அதிகம் மகிழவில்லையெனினும், என்றும் அழியாத நற்புகழும் கீர்த்தியும் பரம்பரை பரம்பரையாகப் பெற்று சிலா சாஸனம்போல் பதிந்து ப்ரகாசிக்கும் குலத்திலுதித்தவளாகையால் அவளுக்கு நல்லொழுக்கமும், நல்ல சகவாஸமும், நற்குணமும்தான் ப்ரதானமாகத் தோன்றினவேயன்றி சீர்கேடான முறையில் கால்வைக்க லவலேசமும் இணங்கமாட்டாள். ஸம்பத்து அதிகமில்லையே என்கிற குறையில் சந்தானத்தைமட்டும் ஏராளமாகக் கொடுத்துவிடாத பகவானை அவள் மனதாரத் துதித்து பஜனை செய்து வாழ்த்திஞள். அவளுக்கு 2 பெண் குழந்தைகள்தான். எப்போதும் மனத்தைத் தளரவிடவேமாட்டாள். எத்தகைய கஷ்டத்திலும் தன்னம்பிக்கையும் தெய்வ பக்தியில் முழு நம்பிக்கையும் கொண்டு 'அடியார்க்கு அடியஞன பரந்தாமன் இருக்கிருன்; அவன் சகலத்தையும் நடத்திக்கொண்டுபோகிருன். வீணுக நாம்கவலைப்படுவதால் அணுவளவுப்ரயோஜனம் உண்டா!'' என்கிற மனேவுறுதி அவளது இதயத் தகட்டில் பதிந்துக்கிடக்கும் உண்மையாகும். தன்னிரு பெண்களையும் வெகு கண்ணியமான முறையில் ஒழுங்காக வளர்த்து நல்ல இடத்தில் விவாகத்தைச் செய்து உலகத்தவர்களைப்போல் தானும் நாலு பெயர்களுக்குச் சரி சமானமாக வாழவேண்டுமென்பதுதான் அவளது ஆசை. அதற்கே அவள் பாடுபட்டுவந்தாள். தன் கணவனுக்கு வேலை இல்லாத குறையால் மிகவும் வருந்தி சதா பகவானை வேண்டுவாள். வேலைக்காக அலைந்து திரிந்து மாதம் 150 ரூபாய் சம்பளத்தில் ஒரு வேலை கிடைத்துவிட்டது. இன்னும் அதிகப்படி வருமானமும் வருவதற்கு இடமுண்டு; வெகு உயர்ந்த வேலை, மகத்தான செல்வாக்கு, அபாரமான கீர்த்தி என்றெல்லாம் கூறிக் களிவெறி கொண்ட வாஸுதேவன் அன்றுமுதல் தடபுடலாகப் புதிய வாழ்க்கை நடத்தத்தொடங்கி திடீரென்று ஒரு பங்களாபோன்ற விடுதிக்குக் குடித்தனத்தை மாற்றிஞன். தினம் தினம் பார்ட்டிகளும் விருந்துகளும் நடக்கவாரம்பித்தன. சாப்பிட வருவதற்கு ஒரு வரம்பின்றி ஆணும் பெண்ணும் ப்ரமாதமான நவநாகரீக அலங்காரத்தில் மூழ்கியவர்களாய் வருவதைப் பார்த்த கஸ்தூரிக்கு அருவருப்பும் மனக்கசப்பும் உண்டாகியதேயன்றி விருந்தினரைக் கண்டு சந்தோஷமே உண்டாகவில்லை.

முதலில் இந்த திடீர் நாடகத்தின் காரணமே அவ்வுத்தமிக்குத் தெரியாது. ஏதாவது கேட்டால் சீறிவிழுவானேயன்றி சாந்தமாய்ப் பதில் சொல்வதே வாஸுவிடம்வழக்கமில்லை. வரும்விருந்தாளிகளை உபசரிக்க அவனும் இரண்டு பெண்களான மல்லிகா, சம்பகா இருவருந்தான் முன்னணியில் நிற்பார்கள். கஸ்தூரியையும் கூப்பிடுவான். ஆனல், அவள் வெளியிலேயே தலை நீட்டமாட்டாள்.

மாதங்கள் அதிகமாகவில்லை; இரண்டு மூன்றுதானுகியிருக்கும். அதன் பிறகே கஸ்தூரிக்கு ஒருவாறு விஷயம் தெரிந்து உள்ளம் துடிதுடித்தாள். தனக்கு நற்காலத்திற்கு இந்த உத்யோகம் கிடைக்கவில்லை, ஏதோ அனர்த்தத்திற்குத்தான் கிடைத்திருக்கிறது என்று அவள் மனத்தில் தோன்றியதேயன்றி த்ருப்தி என்பது உண்டாகவே இல்லை.

"மந்தகாஸம் பிலிம் கம்பெனி"யில் நடிகர், நடிகள் சேர்க்கும் மானேஜர் உத்யோகம்தான் கிடைத்திருக்கிறது என்பதையறிந்தும்

அந்த மகா பரிசுத்தையின் உள்ளம் பதைக்காமல் என்ன செய்யும்? என்னை சேர்த்துக்கொள்ளு; என்னை சேர்த்துக்கொள்ளு ;என்று தினம் பொழுது விடிந்தால் அஸ்தமித்தால் வீட்டில் கல்யாணம் படுகிறபாடுதான் படுகிறது.

வருகிற பெண்கள் ஆண்கள் முற்றும் சங்கீதம்பாடிக் காட்டுவதும் நாட்டியமாடிக் காட்டுவதுமாக அசல் கூத்தாடிகளின் வீடாகவே ஆய்விட்டது. இந்தக் காட்சிக்கு வாஸுதேவனின் இருபுறமும் இரண்டு பெண்கள் ப்ரஸன்னமாகி பாட்டைப் பற்றியும், அழகைப் பற்றியும், நாட்டியம் நடிப்பு முதலியவைகளைப்பற்றியும் விமர்சனம் செய்து பிதாவுடன் கும்மாளமடிப்பதுதான் அவர்களின் தொழில்.

இதை அடியோடு வெறுத்த கஸ்தூரி நல்லதனமாயும் கோபமாயும் தன் பெண்களை எவ்வளவோ திருப்ப முயன்றாள். கணவனிடமும் மன்றாடிப் பார்த்தாள். செவிடன் காதில் ஊதிய சங்கநாதத்திற்குள்ள மதிப்பே உண்டாகியது. ஏதோ விபரீதமான அனர்த்தந்தான் வந்துவிட்டது. தன் குடும்பத்தின் சீர்குலைந்து கண்ணியமழிந்து சந்தி சிரிக்கும்படி எங்கே ஆய்விடுமோ! என்கிற எண்ணமே அவள் இதயத்தை வாட்டி வந்ததால் நாம் ஆரம்பத்தில் கூறியபடி அவள் பகவானிடம் ப்ரார்த்தனை செய்து வேண்டிக்கொண்டு பகவத் பக்தியில் ஆனந்தமயமாய் லயித்து நின்றாள். சில வினாடிகள் சாந்தி மனதில் நிலவியது.

## 2

அச் சமயந்தான் கணவன் வந்து முன்பு தெரிவித்தபடி அதட்டிவிட்டுச் சென்றான். கூறத்திறமற்ற மன அருவருப்புடன் முன்பக்கத்து ஹாலில் யார் வந்திருக்கிறார்கள் என்று எட்டிப் பார்த்தாள். என்னே அநியாயம்! உடலில் ஆடை இருக்கிறதா, அன்றி...என்று ப்ரமிக்கும் முறையில் சுமார் 20 வயது மதிக்கத்தக்க வளர்ச்சியுள்ள இரண்டு பெண்கள் கும்மாளமடித்துப் பேசுவதையும் அவர்களது தலையின் வாரலும் தோள் பட்டையுடன் கைவைத்த ரவிக்கை, உதட்டில் ரோஸ்கலர் முதலிய நவ நாகரீக அலங்காரமும் கஸ்தூரியின் அருவருப்பை அதிகப்படுத்தின.

தலைமயிரை பின்னால் கட்செய்து அசல் சோதாவைப்போல் வாரி விட்டு நெத்தியில் ஜவ்வாது பொட்டும் வாயில் உயர்ந்த ஸிகரேட்டும் ஒரு ஸில்கு ஜிப்பா, சரிகை விசிறிமடிப்பு உருமால் முதலிய அலங்காரத்துடன் நான்கு தடியன்கள் புகையை வீடு பூராவும் சூழ வைத்தவாறு பேசும் கண்றாவியைச் சகிக்கமுடியவில்லை.

இந்த தடியன்களுக்கும் தடிச் சிறுக்கிகளுக்கும் மத்தியில் மல்லிகாவும் சம்பகாவும் உட்கார்ந்து ஆரவாரத்துடன் பேசுவதைக் கண்டு அவள் வயிறு கொதிக்கிறது. நேரே சென்று நான்கு அறைகள் விட்டு அவர்களை இழுத்துக்கொண்டுவந்துவிடலாமா என்று ஆத்திரம் பதைக்கின்றது. ஆனால் மகா மூர்க்கனும் அறிவிலியுமான தன் கணவன் இந்தக் கூத்தாடிகளின் முன்னிலையில் என்ன ஆட்டம் ஆடுவானோ! என்கிற பயத்தினால் எதிரே போகாமல் பெண்களைமட்டும் அழைத்தாள். அவள் த்வனியில் ஆத்திரமும் அருவருப்பும் ஜ்வலிப்பதை அந்த மூர்க்கன் எப்படி உணரப் போகிறான்?

டிப்பனைக்கொண்டுவருவதற்காகத்தான் அவள் பெண்களைக் கூப்பிடுவதாக எண்ணி "கஸ்தூரீ! நீயே கொண்டுவா! குழந்தைகள் குசாலாகப் பேசுவதைக் கலைக்காதே!" என்று அவனேபதில்கொடுத்ததும் கஸ்தூரியின் கோபம் கரை கடந்தது. மானத்திற்கு அஞ்சுகிற உத்தமி யாதையால் பலகாரங்களை வேலைக்காரர்களிடமே அனுப்பிவிட்டாள்,



அந்த அபூர்வ ப்ரக்ருதிகள் டிப்பனை எச்சில் செய்து தின்பதையும் அதே தட்டிலுள்ளதைத் தன் பெண்களும் கணவனும் கூடத் தின்று கொட்டமடிப்பதையும் மறைவிலிருந்து பார்க்கும் கஸ்தூரிக்குச் சற்றும் சகிக்கவில்லை. என்ன செய்வாள் பாவம்! பெண்களை மறுபடியும் அழைத்தாள். "வரேன் இரும்மா!" என்று அலக்ஷியமாகப் பதில் சொன்னார்கள்.

வந்துள்ள நாகரீகப் பேய்கள் "ஏன்? உங்கம்மா சாப்பிட வரமாட்டாளோ!" என்றார்கள். வாஸுதேவன் பெரிதாக ஒரு ஏளனச் சிரிப்பு சிரித்தபடியே "அவள் பழய்காலத்துக் கர்னாடகப் பேர்வழி. இதற்கெல்லாம் லாயக்கற்றவள். என் பெண்களையாவது அவள்போலில்லாது இக்காலத்திய நாகரீக முறையில் வளர்த்து ஆனந்தமடைவதற்காகவே இவர்களை நான் ஸ்பெஷலாக எனது கண்காணிப்பில் வைத்து நடக்கிறேன்."

என்று மான அவமானத்தை இழந்து பேசுவதைக் கேட்டு அவர்கள் கொல்லென நகைக்கும் சப்தம் கருநாகத்தின் சீற்றத்தைப்போல் கஸ்தூரியின் இதயத்தைத் தாக்கியது. பல்லைக் கடிக்கிறாள்; கையைப் பிசைகிறாள். எது செய்து என்ன உபயோகம்? "அந்தப் பீடைகள் எழுந்து துலையட்டும்" என்று வெகு கஷ்டப்பட்டுப் பொறுமையை வகித்துவந்தாள்.

டிண்டிக்குப்பின் "பாட்டு, கூத்து முதலியன முடிந்ததும் "சரி; போகலாமா! நேரமாகிவிட்டதே!" என்று வந்தவர்கள் கிளம்பினார்கள். வாஸுதேவன் பல்லைஇளித்துக்கொண்டே "ரொம்ப சந்தோஷம். என்னால் கூடிய வரையில் உங்களிருவரையுமே கம்பெனியில் நிரந்தரமான சம்பளத்தில்

அமர்த்திவிட ப்ரயாஸை செய்கிறேன்" என்று சொல்லும்போது அந்த பெண்களில் ஒருத்தி ஒரு பச்சைநோட்டை வாஸுவின் கைக்குள் வைத்து கையை மூடினாள்.

அதேசமயம் மற்றொருத்தி "ஆமாம்!...நீங்கள் இவ்வளவுமுன்னேற்ற மடைந்திருக்கையில் உங்கள் பெண்களையும் ஏன் ப்ரபல நக்ஷத்திரங்க ளாகச் செய்துவிடக்கூடாது? இவர்களின் முகவெட்டும், கண்களின் விசாலமும், குரலின் இனிமையும் அபூர்வமாயிருக்கிறதே! முதல் அடியி லேயே கதாநாயகிகளாகவே வரலாமே!" என்று தனது அருமையான விமர்சனத்தைக் கொட்டி அளந்துகொண்டே போனாள்.

வாஸுவின் முகத்தில் அசடு வழிகிறது. 'இந்த வார்த்தைகள் எங்கே கஸ்தூரியின்காதில் விழுந்துவிடுமோ!' என்கிற பயமும் சிறிது பாதிப்பதில் அப்படியும் இப்படியும் பார்த்தான்... "ஹி. ஹி. ஹி...அனேக ரஸிகர்கள் அப்படித்தான் சொல்கிறார்கள். ஏன்! எனக்கே அந்தமாதிரி பரிபூரண ஆசையிருக்கிறது... அவா அம்மா...இருக்கிறாளே...அவள் வெறும் நாட்டுப்புறம். இதெல்லாம் பிடிக்காது...ஆனால் நானா அதை லக்ஷ்யம் செய்யப்போகிறேன்? என் குழந்தைகளுக்கு ஏற்றபடி கதையைக்கூட நானே ச்ருஷ்டிசெய்து அவர்களை நடிக்கவைத்து ஒரு லக்கி அடி அடிக்கத் தான் போகிறேன். அதற்காகத்தான் அவர்களைத் தவறாது தினம் சினிமா பார்க்கவும், ஷூட்டிங்குகள் பார்க்கவும் அழைத்துப் போகிறேன். குழந் தைகள் மகா புத்திசாலிகள். இப்போதே அபாரமான நடிப்பு வந்துவிட்டது எனலாம்."

என்று முடிப்பதற்குள் அங்கு வந்திருந்த ஆடவன், "சபாஷ்! ஐயரே! பலே ஜோர்! உங்கள் பெண்ணுக்கு ஏற்ற கதாநாயகனை நானேநடிக்கப் போகிறேன். என்ன மல்லிகா! அப்படிச் சொல்லு... சார்! அந்த பழய கட்டுப்பெட்டிக்கும் திருப்பக்குடலைக்கும் நீங்கள் ஏன் சார் பயப்பட வேண்டும்?...அது தன்பாட்டில் கத்தட்டும். காரியத்தை பஸ்டு க்ளாஸாக முடித்துவிடலாம்.

ஆ!...இப்போதே நினைவு வருகிறது. நமது...மூன...தேன...வின... கன...ரின...சோழமண்டலம் செட்டியாருக்கு திடீரென்று படத் துறையில் இறங்கும் ஆசை வந்துவிட்டது. 5 லக்ஷ ரூபாயை அப்படியே அள்ளி இரைத்து ஒரு முதல்தரமான படத்தைத் தயார் செய்து 5க்குப் பக்கத்தில் ஒரு ஸைபர் சேர்த்து 50 லக்ஷம் ரூபாயை வெகு எளிதில் லாபம் அடிக்கப் போகிறார்; அதற்கான சகல ஏற்பாடுகளும் நடந்துவருகின்றன.

நீர் வெகு சுலபமாய் ஒரு லகாரம் வரையில் எட்டிப் பிடித்து ஒரே படத்தில் உச்சாணிக் கிளைக்கு ஏறிவிடலாம், படத்திற்குக் கதையும் பொருக்கியாயிற்று. இக் காலத்தில் சாதாரணமாய் மனிதர்களின் பெயர் களைக் கதைக்கு வைப்பது ருசிப்பதில்லை. பொதுப் பெயர்களே ஜனங்கள் விரும்புவதால் கைதேர்ந்த ஒரு ஆசிரியர்...அவர்தான் சார்...ப்ரபல எழுத் தாளரான தாந்தோனி என்பவர் "தலைவிதி" என்ற கதையை வெகு அரு மையாய் எழுதியிருக்கிறார். அதற்கான ஆட்களைத்தான்தேடுகிறார். நான் தான் இருக்கிறேனே! உம்மை அவருக்கு அறிமுகப்படுத்திவிடலாம் என்று தீர்மானித்துவிட்டேன், என்ன மல்லிகா! நீ தயார்தானே!" என்று அவள் முதுகில் தட்டித் தாடையைக் கிள்ளினான்.

அந்தோ! என்ன அக்ரமம்! கஸ்தூரியை அப்படியே தூக்கி எரியும் அக்னிக் காளவாயில் போடுவதுபோல் வேதனை உண்டாகியது. அவளால் இந்த வார்த்தைகளைத் தாங்கவே முடியாது தலை சுழன்றதால்

ஆத்திரத்துடன் "மல்லிகா! சம்பகா!" என்று பல்லைக் கடித்துக்கொண்டே கூப்பிட்டாள்.

கணவன் வேகமாக உள்ளே வந்து "வேளை சமயம் தெரியாமல் ஏண்டீ வரட்டுத் தப்பளையைப்போல் கத்துகிறாய்! சனியனே! சினிமாவுக்கு நேரமாகிவிட்டது. நாங்கள் போய்வருகிறோம்" என்று ஒரு அதட்டு போட்டுவிட்டு பெண்களையும் அழைத்துக்கொண்டு போயே போய்விட்டான். கஸ்தூரியின் இதயம் அப்படியே வெடித்துவிடும்போலாயிற்று.

## 3

இரவு 10 மணிக்கு வீதியில் கார் வந்து நின்றது. தகப்பனும் பெண்களும் இறங்கினார்கள். வண்டியில் இருந்த தடியன்களும் "குட்நைட்... குட்நைட்"...என்று கூவிக் கையைக் குலுக்கினார்கள். ப்ரதி வந்தனம் இவர்களும் செய்து "குட்நைட்" என்று கூவிக் கையை ஆட்டி விடை கொடுத்ததும் வந்த பைசாசங்கள் தொலைந்தன.

பெண்களும் தகப்பனும் குசாலாக உள்ளே வரும்போதே "காதலின் வலிமையை கண்டேன் கண்டேன்! கண்டேன்" என்று மல்லிகா பாடியவாறு வந்து தொப்பென சோபாவில் அமர்ந்து "ஏம்பா! இந்த பாட்டு வெகு ஜோராயிருந்தது. இல்லையாப்பா! அடாடா! என்ன சாரீரம்! என்ன ரவை ஜாதிகள் அப்படியே கொட்டுகிறதே! பேஷ்! முதல்தரமான படம் என்றால் இதுதானப்பா! அந்த நடிகையின் நடிப்பு வெகு அழகாக இருந்தது. ஆனால் கோபிக்கும் கட்டத்தில் இன்னும் கொஞ்சம் ஆவேசத்துடன் நடித்திருக்கவேண்டும். இல்லையாப்பா!" என்று கூறியபடியே அந்த பாகத்தைத் தான் நடித்துக் காட்டினாள்.

இந்த அபூர்வ நடிப்பைக் கண்டு ப்ரமித்துப்போன பிதா "ஆகாகா! என்ன ஜீவன் ததும்புகிறது...என்ன தத்ரூபம்! அடாடா! அந்த நடியே இதைப் பார்த்தால் வெட்கித் தலை குனிவாள்" என்று ஆரவாரம் செய்த போது இவர்கள் சொப்பனத்தில்கூட நினையாதவாறு கஸ்தூரி ஒரு குடத்துநிறைய சாணத்தைக் கரைத்துக்கொண்டு அங்குவந்து..."மல்லிகா! கோபத்துடன் நடிக்கும் நடிப்பு அது. அதைவிட இது இன்னும் ஆயிரம் மடங்கு அதிகமாக ஜீவகளைததும்புகிறதா பாரு...உயர்குடும்பத்தில் பிறந்து ஊழல் நாடகமா ஆடப் பார்க்கிறீர்கள்? இந்த கஸ்தூரி உயிருடன் இருக்கும் வரையில் சத்தியமாக உங்கள் தத்தாரித்தனத்திற்கு இடம் கொடுக்க மாட்டேன். என்னுடைய கடைசீ ச்வாசம் உள்ளமட்டும் என் ப்ரதிக்ஞையை நிறைவேற்றியே தீருவேன் என்பது நினைவிருக்கட்டும், ஸம்ஸாரி என்கிற நினைவே மறந்து இத்தகைய விபரீதத்திலா இறங்கிவிட்டீர்கள். காதலாம்! கல்லெடுப்பாம்! பெண் பாடுவதும் அப்பன் தாளம் போடுவதும் வெகு லக்ஷணம். பரம்பரை பரம்பரையாக எடுத்துள்ள புகழும் கீர்த்தியும் நன்றாக நிலை நிற்கும்படிதான் நடக்கிறீர்கள். கப்பல் கப்பலாக ஊழல் சகஸ்ர நாமங்களை ஒரு விநாடியில் சம்பாதித்துவிடலாம். ஒழுக்கமான கீர்த்தியை ஆயுள்பரியந்தம் உழைத்தாலும் சம்பாதிக்க முடியுமா! இனி இந்த ஆபாஸக் குப்பையின் துர்நாற்றத்தை நான் சகிக்கவே மாட்டேன். இக்குடும்பத்தின் தலைவி நான்...இந்தப் பசங்களின் பாதுகாப்பில் முக்கிய பங்குடையவள் நான். எனக்குப் பகவான் கொடுத்துள்ள சுதந்திரமான அதிகாரத்தை நான் இழக்கமாட்டேன். என் கண் முன்பு இத்தகைய கேவலத்திற்கு இடம் கொடுக்கமாட்டேன்" என்று கூறிக்கொண்டே சாணி ஜலத்தை அவர்கள் தலையில் கொடகொடவென்று கொட்டிவிட்டு "இப்போது என்னுடைய நடிப்புக்கூட அபாரமாயிருந்ததா! ஏதாவது சொள்ளை சொட்டை இருந்ததா?" என்று கேட்டாள்.



'கையில் ஏதோ தண்ணீர் குடத்துடன் வந்திருக்கிறாள்' என்று முதலில் மூவரும் எண்ணினார்களேயன்றி சாணித்தண்ணீர் என்றும் தங்களுக்கே அது அபிஷேகம் ஆகப்போகிறதென்றும் அவர்கள் நினைக்காததால் வாஸுதேவன் முகத்தைக் சுளித்துப் பல்லைக் கிடித்துக்கொண்டிருந்தான்.

திடீரென்று தலைமீது கொட்டப்பட்டதும் திக்குமுக்காடித் திணறிப் போய் அடங்காத ஆத்திரம் தலைக்கேறி தக்கத். தை என்று நிர்த்தனம் செய்யும்படிச் செய்துவிட்டதால் "என்ன! என்ன செய்தாய்?"...என்று கூவியபடியே கஸ்தூரியை தடார் புடார் என்று அறைந்தான்.

"ஆம்! மனிதனுக்கு ஏற்படும் ஆத்திரத்தை அடக்குவதற்கு எதிரியை அடிப்பது ஒரு முறைதான். என்னைச் சாமானியமாய் அடித்தாலும் ஸரி; கல்லாலும் கட்டியாலும் அடித்தாலும்சரி; அடித்து மண்டையை உடைத்தாலும் சரி! நான் சற்றும்சளைக்கமாட்டேன்! எனது ப்ரமாணத்திலிருந்து மாறவும்மாட்டேன்! என் ப்ராணன் இதோடு போய்விட்டாலும் சரிதான். நான் உங்களுடைய சதியாலோசனைக்கு ஒருவினாடிகூடக்கட்டுப்பட்டு நடக்கமாட்டேன். பெண்கள் மலைமலையாக வளர்ந்திருப்பதையும் உலகத்தவர்களைப்போல் அவர்களுக்கு விவாகத்தைச் செய்து நியாய மார்க்கத்தில் நடக்கவேண்டுமென்பதையும் அடியோடு மறந்துபோய் கூத்தாடிச் சிறுக்கிகளாக வாழ்வைப் பாழ்ப்படுத்தி வேடிக்கை பார்ப்பதுதான் ஒரு பெத்த பிதாவின் கடமை என்று நினைத்துவிட்டீர்களா! உலக்ம் சிரிக்கும் என்பதும் நினைவில்லையா?"

வை. மு. கோ.

என்று முடிப்பதற்குள் பெண்களிருவரும் பெரிதாக அழுதுகொண்டு சாணிஜலம் போகக் குளிக்கச்சென்றார்கள்.

வாஸுதேவனுக்கு ஆத்திரம் அடங்கவே இல்லை. இப்படியும் அப்படியும் உலர்வுகிறான். மனைவியை அப்படியே பஸ்மீகரம் செய்துவிடுபவன் போல் பார்க்கிறான். தடார் புடார் என்று அறைகிறான். தலைமயிரைப் பிடித்து ஜிம்புகிறான். அவளை வாயில் வந்தபடி திட்டியவாறு "மூதேவி சனியனே! உனக்கிருக்கும் அக்கரை எனக்கில்லையா! குழந்தைகளை காலத்திற்கேற்பப் பழக்கி நாகரிகமுறைப்படி நல்ல கணவனைத் தேடிக் கொடுப்பதற்காகத்தான் நானும் அலைகிறேன்.

தற்காலத்தில் மிகவும் மகோந்நதமான நிலைமையிலுள்ள சினிமாத் துறையில் புகுந்தால் முதல்தரமான பணக்காரவாலிபன் தானாகக் கிடைத்து வலுவில் மணக்க ஓடிவருவான். இந்த தந்திரம் தெரியாமலா நான் நடக்கிறேன்......

என்பதற்குள் கஸ்தூரியின் கோபம் அத்து மீறியது. "தென்னை மரத்தில் ஏறிய திருடன் 'கன்றுக்குட்டிக்குப் புல்லறுக்க ஏறினேன்' என்று சொல்லிய சால்ஜாப்பு போலத்தான் உங்கள் மூளை வேலைசெய்கிறது. துர்நாத்தச் சாக்கடையில் வாஸனைப்பன்னீரைத் தேடுகிறீர்களோ! பேஷ்! வெகு அழகு. என்னை நீங்கள் கொன்றாலும் சரி! என் கடமையை நான் கைவிடமாட்டேன். இனி நீங்கள் இம்மாதிரி இப்பெண்களைப் பழக்கினால் வீண் அனர்த்தந்தான் விளையும். ஜாக்ரதை! என் வார்த்தையை வெறும் சொல்லாக நினைக்காது, ப்ரமாணமானதும் வைராக்ய ப்ரதிக்ஞை போன்றதும் என்பது நினைவிருக்கட்டும்"

என்று கூறும்போது வீதியில் ஒரு கார் வந்து நின்றது. "மிஸ்டர் வாஸுதேவன்! வாஸுதேவன்!" என்று யாரோ கூப்பிட்டார்கள். தன் நிலைமையைக் கண்டு அவனே அப்போதுதான் நடுங்கியபடியே, "இருங்கள்! இருங்கள்! இதோ வருகிறேன்" என்று கூறி ஓட்டமாக ஓடி குளித்துப் பின் வேறு உடையணிந்துகொண்டு வீதிக்கு ஓடிவந்தான்.

இதற்குள் அழுதபடியே பெண்களும் குளித்துச் சாதாரணமான உடையணிந்தார்கள். அவளைப் பார்த்த தாயார் "சனியன்களே! இந்த சாணிகரைத்த அபிஷேகம் உங்கள் தோலுக்குமட்டுமல்ல. உங்கள் புத்தியைச் சாணமிட்டு சுத்திசெய்ததுபோலாகட்டும். உங்கள் புத்தியை மயக்கும் விஷக் கிருமிகளை இந்த சாணம் கொன்று சாம்பாராக்கட்டும். இனி நீங்கள் வீட்டைவிட்டு வெளியே போனாலும் சரி; அல்லது வீட்டிற்கு வரும் கண்ட கழுதைகளுடன் பேசினாலும் சரி; உங்களை நான் என்ன செய்வேன் என்பது எனக்கே தெரியாது. ஜாக்ரதை" என்று கூறும்போது கஸ்தூரியின் பின்னால் நின்று தகப்பன் ஏதோ சைகை செய்தான்.

உடனே பெண்களிருவரும் ஒரே ஓட்டமாக ஓடி வீதிக்குச் சென்று காரில் தாவி ஏறினார்கள். அடுத்த நிமிஷம் வாஸுதேவனும் ஏறினான். ராக்ஷஸ இரைச்சலுடன் காரும் பறந்தது. இமை இசைக்கும் நேரத்தில் நடந்த இந்திரஜாலம்போன்ற செய்கையினால் கஸ்தூரியின் தலைமீது எரி மலையே புரண்டதுபோலாகியது. இன்னது செய்வதென்றே தோன்றாமல் துடித்தாள்.

தன் குடும்பத்தின் கண்ணியம் இப்படியா சிதறிவிடும் என்று நினைக்கும்போது அவளால் விசனம் தாங்கமுடியாது பொங்கிய வேகத்தில் அவள் இதயம் உடைந்தது. "காரில் சென்றவர்கள் அப்படியே ஏதாவதொரு விபத்து நேர்ந்து காரோடு உருட்டியடித்து மோதிக்கொண்டு விழுந்து கை கால்கள் உடையக்கூடாதா? அல்லது அப்படியே கூண்டோடு கைலாஸம்

போய்விடக்கூடாதா ! மானமழிந்து வாழ்வதைவிட ஏன் சாகக்கூடாது ? நானும் சந்தோஷமாய் உயிரை விடுவேனே!'' என்றுகூட அந்த வேகத்தில் தோன்றியது.

அடுத்த நிமிஷம்...''சேச்சே! அப்படி நினைப்பது அதீதமானதன்றோ? உயிருக்கு ஆபத்தின்றிக் கடவுள் காப்பாற்றவேண்டும். நானே உண்மையான உத்தமியாய், பரிசுத்த இதயத்தை உடைய உயர்குலத்துப் பெண்ணாகவிருந்தால் இவர்களைத் திருத்தவேண்டிய முறையில் திருத்தித் தண்டித்துச் சீர்படுத்துகிறேன். என்னுயிர் போவதாயினும் இனி இப் பெண்களை இந்த தகப்பனிடம் விடுவதில்லை. இதுதான் தீர்மானமான ப்ரதிக்ஞை. ஆண்டவனே ! என் குழந்தைகளுக்கு நல்ல புத்தியைக் கொடுத்துக் காப்பாற்று. என் கணவனின் மூளையை இம்மாதிரி சிதறவடித்துக் குடும்பத்திற்கே மாருத இழுக்கையும் ஆருத புண்ணையும் உண்டாக்குவதைவிட அவருக்கு மூளையே கலங்கி பயித்தியமாக அடித்துவிட்டால் குடும்ப கவுரவமாவது நிலைத்து நிற்கும். என்னைச் சேர்ந்தவர்களெல்லாரும் எங்கள் குடும்பத்தின் அவகேட்டைக் கண்டு பரிகஸிப்பதும் கேவலமாகப் பேசி அலக்ஷியம் செய்வதும் சகிக்கவே முடியவில்லையே ! நானும் நாலுபேருக்கு நடுவில் கம்பீரமாகத் தலைநிமிர்ந்து நடக்கும்படிக்குச் செய்து காக்கமாட்டாயா ! தாயே ! ஜகதாம்பிகே !...

என்னருமை சகோதரியை நான்கு நாளைக்கு வீட்டில் கொண்டு வைத்துக்கொள்ளும் ஆசையுடன் அழைத்ததற்கு ''உன் வீட்டில் ஸம்ஸாரிகள் வாஸம் செய்வதற்கு யோக்யதை ஏது? சதா கூத்தாடிகளும் சோதாக்களும் நிரம்பியிருக்கையில் எப்படி அங்கு வரமுடியும்! நீங்கள் உலகத்தையே மறந்து முள்ளும் கல்லும் நிறைந்த பாதையில் போவதால் நாங்கள் வரமுடியாது'' என்று எழுதியதைப் படிக்கும்போது என்னுயிர் துடித்தத் துடிப்பை யாரறிவார்கள்? தாயே! சர்வலோக ரக்ஷகியாகிய நீதான் அறியவேண்டும். என் மனக்குறையை நீதான் மாற்றி அதற்கோர் ஆறுதலையளிக்கவேண்டும்'' என்று தனக்குள்தான் மனவெறிகொண்டு பிதற்றினாள்; வேண்டினாள். அன்னத்தை நாடவில்லை. செய்தவைகள் அப்படியே இருப்பதால் ஒரு நிமிஷம் தயங்கினாள்.

அப்போது வீதியில் ''சந்திப் பிச்சை தாயே! பசியாலே உசிர்போறது. ஒரு கவளம் பழையதாவது கொடுங்க தாயே !'' என்று மூன்றுபேர்கள் சேர்ந்து கத்தும் தீனக்குரல் காதில் பட்டதும் கஸ்தூரியின் மனது சடக்கென்று இளகி மாறியது.

தடதடவென்று உள்ளே சென்றாள். வேலைக்காரர்களுக்கு வேண்டிய ஆகாரம் போக மிச்சத்தை அப்படியே சந்திப்பிச்சைக்குப் போட்டு ''சாப்பிடுங்கள். நன்றாகச் சாப்பிடுங்கள். பசிதீரச் சாப்பிடுங்கள். உங்கள் ஆத்மா சாந்தியானல் என் மனத்திற்கு கடுகளவு சாந்தி வருகிறதோ பார்க்கலாம்'' என்று எண்ணி அவர்கள் புசிப்பதைப் பார்த்தபடியே நின்றாள். அந்த ஏழைகள் லபக்கு ! லபக்கு ! என்று போட்டியிட்டுச் சாப்பிடுவதையும் அவர்களுடைய பரிதாபத்தையும் கண்டு கஸ்தூரியின் மனது உருகியது. ''என்னே புதுமை! ஒருபக்கம் இத்தகைய கோரம்! ஒருபக்கம் என் குடும்பத்தின் பரிதாபத்தைப் போன்ற கோரம்!'' என்று எண்ணி உள்ளுக்குள் வியந்தாள். எதனாலோ அவள் கண்கள் நீரைக் கக்கின. அது கன்னத்தில் வழிந்தோடியது.

## 4

பிச்சைக்காரர்கள் சாப்பிட்டதும் தண்ணீர் குடித்து, ஆயாசத்தினால் சற்று களைத்துப்போனார்கள். அவர்களைக் கண்ட கஸ்தூரி ''நீங்கள் ஒரே



குடும்பத்தினர்களா! அந்தப் பெண் மிகவும் இளமையாக இருக்கிறாளே! அவள் எங்காவது வேலை செய்து ஏன் உங்களைக் காப்பாற்றக்கூடாது?'' என்று கேட்டாள்.

பிச்சைக்காரக் கிழவி வரண்டுபோனதொனியில் ஒரு சிரிப்புசிரித்துப் பின், ''உம்... நாங்கள் ஒரே குடும்பமும் இல்லை, மண்ணுமில்லை. மூன்று பேரும் மூன்று ஜாதிக்காரர்கள். எங்கள் கண்றாவிக்கதையைக் கேட்டால் கல்லும் உருகும், அது எதற்குத் தாயே!'' என்றாள்.

எதனாலோ கஸ்தூரிக்கு அவர்களிடம் பேசவும் அவர்களுடைய வரலாற்றை அறியவும் மனது தூண்டியது; அதனால் மறுபடியும் அக்கிழவியை நோக்கி ''உம்... உலகத்தில் ஏழைகளாயிருப்பினும் கவலைதான்; பணக்காரர்களாயினும் கவலைதான், கவலைக்கும் சமுத்திர அலைக்கும் ஓய்வேது? ஏன்? உங்கள் கதைதான் என்ன சொல்லேன்?'' என்று பிடிவாதமாகக் கேட்டாள்.

அதற்கந்த கிழவி மறுபடியும் லேசாக நகைத்துக்கொண்டே ''அம்மா இதில் என்ன உங்களுக்கு இத்தனை அக்கரை? முன்பொரு நாள் ரயில்வே ஸ்டேஷனில் பிச்சை எடுத்தோம். அப்போது ஒருவன் உங்களைப்போல தான் ஆகாரத்தைக்கொடுத்துவிட்டு எங்களிடம் பேச்சுக்கொடுத்து எங்கள் கதையைக்கேட்டான்.

அதை நாங்கள் சொல்லும்போது அதை அவன் எழுதிக்கொண்டே வந்தான். "ஏன் சாமி என்னமோ எழுதுகிறீர்களே என்னது?" என்று கேட்டேன். அதற்கவன் என் கையில் ஒத்தை ரூபாயைக் கொடுத்துவிட்டு "ஒன்றுமில்லே. இந்த சரித்திரம் உருக்கமாக இருக்கிறது. இதைக் கதையாக எழுதி சினிமாப்படமே பிடித்துக்காட்டினால் நன்றாயிருக்கும் என்று எழுதிக்கொண்டேன்" என்று சொல்லியவாறு கூட்டத்தில் மறைந்தான்.

எங்களுக்குண்டான ஆச்சரியத்திற்கு அளவே இல்லே. பிறகு அடுத்த வருஷம் அதே மனிதனை பீச்சுக்கரையில் பார்த்தோம். அப்போது அவனைச் சுற்றிக்கொண்டிருந்த மனிதர்கள் "பேஷப்பா! சினிமாக்கதை பலே பேஷ்! சினிமாப்படமும் சக்கைபோடு போடுகிறது. படம் பிடித்தவன் லக்ஷலக்ஷமாக வாருகிறான். உனக்கென்னவோ ஐயாயிரம் ரூபாய்தானே கொடுத்தான். அது மிகவும் குறைவு. படத்திற்குச் சரியான ப்ளாட்டு; நல்ல படிப்பினே. முதல் படக் கதையிலேயே பெரும் புகழை அடைந்துவிட்டாய். படமுதலாளியும் லாபமடைந்துவிட்டான்,"

என்று பேசிக்கொண்டிருப்பதைக் கேட்டதும் எங்களுக்கெப்படியிருக்கும் சொல்லுங்கள். எங்கள் கையில் ஒத்தை ரூபாயை வைத்துவிட்டு எங்கள் கதையை எழுதிய அவன் கையில் ஐயாயிரம் ரூபாயைக் கொடுத்த கடவுளின் வஞ்சனையை எண்ணி வயிறெரிந்தவாறு, அவன் எதிரில் சென்று "ஐயா!... எங்களைத் தெரிகிறதா!" என்றேன்.

அவன் எங்களைப் பார்த்ததாகவேகூட நினைக்காமல் "அப்பப்பப்ப! எங்கு போனாலும் பிச்சைக்காரப் பிடைகளின் உபத்திரவந்தானா! பிச்சைக்காரப் பிணங்களே நினவு வைத்துக்கொள்வது வேறேயா! வ்யாதிப் பிண்டங்கள்...போ! போ"...என்று பலமான சீறலுடன் திட்டி ஒரு காலணாவை மணல்மீது வீசி எறிந்துவிட்டு மறைந்தேபோனான்.

"என்ன உலகம்! என்ன நியாயம் பாருங்கள். அன்று ப்ளாட்டு வேண்டியிருக்கையில் ஒத்தை ரூபாய் அளித்த மனிதன் தனக்கு அதனால் பலன் கிடைத்ததும் ஒத்தைக் காலணாவை வீசும்படியாகிவிட்டது. 'உம்... அந்தக் காலணாகூட மண்ணோடு மண்ணாக மக்கட்டும். எனக்கு வேண்டாம்' என்று வந்துவிட்டோம். அதன் பிறகு எங்கள் சரிதையை நான் சொல்வதே இல்லே" என்றாள்.

கஸ்தூரிக்கு இது வியப்பிலும் வியப்பாகத் தோன்றியதால் "அம்மா! நான் கதை எழுதும் ஆசிரியை அல்ல. உலகத்தில் ஒவ்வொரு மனிதரும் கேவல ஸ்திதியை அடைவதற்கு ஒரு காரணம் இருந்தே தீரவேண்டுமல்லவா! உன் புருஷன் குடித்தும், கூத்தடித்தும், தாசிலோலனாயிருந்தும் உன் கதி இப்படியாகிவிட்டதா! என்றுதான் கேட்கிறேன்" என்றாள்.

கிழவி:—உம்...இந்த விஷயந்தான் உலகத்தில் நூற்றுக்கு தொண்ணூற்றென்பது இடத்தில் கண்கூடாகக் காணும்விஷயமாயிற்றே! புருஷன் பாவி எங்கேயோ பட்டாளத்திலே சின்ன வயசிலேயே போய்ச் சேர்ந்துவிட்டான். ஒரு குடி கெடுக்கும் நாய் மனிதன் என் நிலேமை அறிந்து என்னிடம் வந்து 'உன்னே ஆனேயாக்குறேன், பூனேயாக்குறேன், சினிமாவில் சேர்ந்து நடித்தால் ஆயிரக்கணக்கில் சம்பாதிக்கலாம். நீயே மகா பணக்காரியாயிருக்கலாம்'...என்றெல்லாம் ஆசைகாட்டினான். அந்த விபரீத நெருப்பில் பயமின்றிக் காலேவைத்தேன். ஏதோ ஆட்டிய கூத்திற்கு ஆளாகிக் கற்பழிந்து தேகப்பொலிவு குன்றி வ்யாதி பிடித்து வெளியே தள்ளப்பட்டேன். சொந்தக்காரர்களாலும் விலக்கப்பட்டு வ்யாதியும் அதிகரித்ததால் வேலேசெய்து தின்னவகையின்றி இந்த கதியை அடைந்தேன். எனக்கின்னும் 40-வயதுகூட ஆகவில்லே. ஆனல் கிழப்பிணத்திற்கும்

கேவலமாகிவிட்டேன். என் விதி இழுத்து என் வாழ்நாளைப் பாழாக்கியது.

கஸ்:—ஐயையோ ! நடித்து நாசமாய்ப்போனலும் உன் மானத்தைக் கூடவா இழந்தாய்?

கிழவி:—உம். மானத்தைவிட்டு சினிமா ஆடப்போன பிறகு அந்த துறையில் புகழைத் தேடுவதில்தானே முயற்சிக்கவேண்டும். ஆசை முற்றும் அதில்தானே அலையும். படம் பிடிப்பவனுக்கு அடங்காவிட்டால் அவன் உருவத்தையே மோசமாக்கிவிடுவானும். ஒலிப்பதிவுக்காரனுக்கு முகங் கோணினல் அவன் ப்ரம்மராக்ஷஸின் குரல்போல் செய்துடுவானும், வேஷம்போட்டு பவுடர் தடவுகிறவனுக்கு இசையாவிட்டால் அவன் திட்டு திட்டாய் மகா கோரமாயும் பயங்கரமாயும் பூசிவிடுவானும்...ஐயோ! அந்த வயிற்றெரிச்சலெல்லாம் ஏன் கிளப்புகிறீர்கள்? சகலமும் நன்ருக அமைய வேண்டுமென்கிற விபரீத ஆசையால்... இன்று சந்திப் பிச்சைக்காரியாய், பெரிய வ்யாதிக்காரியாய் அலைகிறேன், பாழாய்ப்போன சினிமாவே உலகத்தைவிட்டு ஒழிந்துவிட்டால் போதும் என்று என் வயிறு எரிகிறது. இந்த தொழிலிலும் எங்கோ ஒவ்வொரு கம்பெனி நன்ருக நடக்கிறதாம்...

என்று அவள் கூறுவதைக் கேட்கக் கேட்கக் கஸ்தூரியின் மனது பின்னும் குழம்பித் துடிக்கிறது. "இத்தனை பயங்கரங்கள் நிரம்பிய நரகமா அந்தச் சினிமாப்பீடை?" என்று நினைக்க அவள் தலை சுழன்றது. அதற்குமேல் அங்கு நிற்கமுடியாது உள்ளே சென்ருள். அவளுடைய மனத்தில் சமுத்திரக் கொந்தளிப்புக்குமேல் பன்மடங்காகப் பலவித எண்ணங்கள் போராடிக்கொந்தளிக்கின்றன. "இந்த மகத்தான ஆபத்திலிருந்து எப்படி தப்புவது? என்ன விதம் இந்த பெண்களை அந்த முட்டாள் தகப்பனிடமிருந்து பிரிப்பது? என்னசெய்தால் இச்செய்கையினின்றும் அவர்கள் விடுபடுவார்கள்?" என்கிற யோசனையில் மூழ்கிப்போய் மனது அலைந்து தவிக்கிறது.

இரவு ஏற ஏற அவர்கள் வராததன் பயங்கரம் பின்னும் பாதித்து வாட்டுவதால் அவள் ஏதோ ஒன்றை எண்ணித் தீர்மானமான முடிவைச் செய்துகொண்டாள். நித்திராதேவியும் அவளை நிராகரித்ததால் உள்ளம் துடித்தது. கோபமும் ஆத்திரமும் ஒன்றுகூடி ரத்தக்கொதிப்பை உண்டாக்கின.

## 5

கடியாரம் முறையே தன் கடமையைச் செலுத்தி 5 அடித்துவிட்டது. ஊரெல்லாம் விழித்தாயிற்று. இன்னும் தன் கணவனும் பெண்களும் வராததால் மனது உடைந்தது. காலை 7 மணிக்கு கணவன்மட்டும் கண்கள் கோவைப்பழம்போல் சிவக்க ஆடிவிழுந்தவாறு வந்தான்.

கஸ்தூரி தனது ஆத்திரத்தை அடக்கிக்கொண்டு எதிரேவந்து "குழந்தைகள் எங்கே?" என்று மிக ப்ரயாஸைப்பட்டு சாந்தத்தை வரவழைத்துக்கொண்டு கேட்டாள். கணவனிடம் வீசும் துர்நாற்றத்திலிருந்து அவன் குடிக்கவும் பழகிவிட்டதை அறிந்து வயிறு எரிந்தது. வந்ததும் வராததுமாய் ஒரு முடா வாந்தி எடுத்ததில் ஒரே சாராய நாற்றம் வீட்டையே சூழ்ந்தது.

குடிவெறியில் அறிவிழந்த வாஸுதேவன் கஸ்தூரியை ஒரு முறைப்பு முறைத்துப் பார்த்துவிட்டு...'ஏண்டீ! நீ சும்மா நிக்காமே வீட்டையும் மேஜை நாற்காலியையும் ஆட்டிச் சுத்தித் தலைகீழா நிக்கறே?...ஏண்டி நீ முண்டைடமா இல்லையா! நீ கம்பமா! மேஜை நாற்காலியா...பதில் சொல்லேண்டீ!" என்ருன்.



அதற்குமேல் அவளால் பொறுக்க முடியவில்லை. பல்லைக் கடித்த படியே அவனை தட்டதடவென்று கையைப்பிடித்து இழுத்துக்கொண்டுபோய் கிணற்றடியில் உட்காரவைத்து குடம்குடமாக தண்ணீரை இழுத்து அவன் தலையில் கொட்டினாள். அவனைத் திமிரவிடாது இரண்டுபேர்களை விட்டுப் பிடித்துக்கொள்ளச்செய்து எலுமிச்சம்பழத்தைத் தலையில் தேய்த்துத் தண் ணீரைக் கொட்டித் துடைத்து பின் படுக்கையில் தள்ளினாள்.

அன்று பகல் பூராவும் அவன் சுய உணர்விழந்து மயங்கியே கிடந் தான். மாலை மணி 5 ஆகியும் பெண்கள் வரவில்லையாதலால் கஸ்தூரியின் உள்ளத்துடிப்பின் வேகத்தை அளவிட்டுக் கூறமுடியுமா? அவளுக்கு இன் னது செய்வதென்றே தெரியவில்லை. போயிருக்கும் இடமும் தெரியாததால் தத்தளித்துப் புழுகாய்த் துள்ளும் சமயம் வீதியில் கார் வந்து நின்றது.

சடக்கென்று ஏதோ எண்ணியவளாய் கஸ்தூரி வீதிக்கு ஓடினாள். காரில் யாருமில்லாததால் ட்ரைவரை நோக்கி "என்னப்பா சமாச்சாரம்? குழந்தைகள் வரவில்லையா?" என்று வெகு சாதுவைப்போல் கேட்டாள். இவர்களுடைய வீட்டு விவகாரத்தையறியாத ட்ரைவர், "குழந்தைகளா... ஓகோ! மல்லிகாவும் சம்பகாவுமா! இரவு பூராவும் கண்விழித்ததால் காலை யில் அயர்ந்துதூங்கிவிட்டார்கள். சற்று முன்புதான் எழுந்தார்கள். நடிகை வஸுமதிதேவியின் வீட்டில்தான் இருக்கிறார்கள். செட்டியாரும் அங்கு தான் வந்திருக்கிறார். ஐயாவை அழைத்துவரச்சொன்னார்கள். அக்ரி மெண்டு தயாராகிவிட்டதாம்; வக்கில் வந்திருக்கிறார்: கையெழுத்துப் போடவேண்டுமாம். கூப்பிடுகிறார்கள்" என்றான்.

இடிமேல் இடிவிழுந்தாற்போலும் பூமியே வெடித்துவிட்டதுபோலும் கஸ்தூரிக்குச் சித்திரவதை செய்கிறது. ஆனால் அதை மேலுக்குக் காட்டிக் கொள்ளாமல் "ஓகோ ! அக்ரிமெண்டு தயாராகிவிட்டதா ! பேஷ் ! சந்தோஷந்தான், ஏதோ பணத்தகராறு இருந்ததே... அது எப்படியாயிற்று?" என்று வேண்டுமென்றே சமயோசிதமான ஒரு வெடி குண்டை வீசி எறிந்தாள்.

ட்ரை:—பணத்தகராறு எதுவும் எனக்குத் தெரியாது. மல்லிகாவுக்கு ஒரு படத்திற்கு 5000 ரூபாயும் சம்பகாவுக்கு 3000 ரூபாயும் ஐயாவுக்கு 10000 ரூபாயும் என்று முடிவுசெய்திருக்கிறார்கள் என்று குமாஸ்தாவால் தெரிந்தது. மல்லிகாவின் அழகிற்கும் பாட்டின் வசீகரத்திற்கும் 10ஆயிரம் ரூபாய்கூடக் கொடுக்கலாம்... ஆனால் பரவாயில்லை. முதலில் நல்ல பெயர் வந்துவிட்டால் பிறகு தானேதேடிக்கொண்டுவந்து கொடுப்பார்கள்... சரி... ஐயா எங்கே? கூப்பிடுங்கள்" என்றான்.

"கிணறுவெட்டப் பூதம் கிளம்பியதுபோல் மூவரும் சேர்ந்து கிணற்றில் விழுவதற்கு ஏற்பாடு ஆகிவிட்டதா ! சரிதான் ! இனி நாம் தர்மத்திற்கும் தாக்ஷண்யத்திற்கும் பார்த்துக்கொண்டிருந்தால் இரவு வந்த பிச்சைக்காரியைப்போலத்தான் இவர்களின் கதியும் ஆகும். ஆகையால் சரியான படிக்கு இந்த பேராபத்திலிருந்து தப்ப ஒரு மார்க்கத்தைச் செய்தால்தான் மானத்துடன் வாழலாம்." என்று தீர்மானித்தவளாய் "இருப்பா ! இதோ வருகிறேன்" என்று உள்ளே சென்றாள்.

சில நிமிஷத்திற்குள் வெளியே வந்து "ஐயோ ! ட்ரைவர் ! ட்ரைவர் இப்படி வந்து அந்த அனியாயக்கொள்ளையைப் பாரேன் ! திடீரென்று ஏதோ ஒரு ஆபத்து வந்துவிட்டதே ! என் குடி முழுகிவிடும்போலிருக்கிறதே! வெண்ணெய் திரளும் சமயம் இப்படியா தாழி உடையவேண்டும்" என்று பெரிதாகக் கத்தினாள்.

விவரம் புரியாத ட்ரைவர் எழுந்து அவள் பின்னோடு யந்திரப் பதுமைபோல் நடக்கிறானேயன்றி உள்ளுக்குள் பலமான யோசனை தாக்குகிறது. இரவு பூராவும் ஷூட்டிங்கு பார்த்தபடியே அவன் குடித்த விபரீதத்தை ட்ரைவர் பார்த்திருப்பதால் அந்த அதிர்ச்சியால் இதயம் படார் என்று வெடித்துவிட்டதோ ! அன்று நின்றேபோய்விட்டதோ!" என்று நடுநடுங்கியவாறு சென்றான்.

பின்கட்டு மாடியில் ஒரு அறையின் பக்கம் போகும்போதே "டேய் ! சினிமாக்கார செட்டி ! உன் மண்டை இனிமேல் உன்னுடையதல்லடா ! உடைத்து ஓடு பொருக்கிவிடுவேன்... ஹஹ்ஹஹ ! என்ன சொர்க்கம் ! என்ன நரகம்... என்ன கைலாஸம்... அடாடாடா ! என்ன அருமையான எமபட்டணம். என்ன ஜோர்... ஜோர் ஜோரஜோரனப்யாரி லாவி ஐஸாஹை...

என்று பெரிதாகப் பாடியும் சுவர், கதவு, ஜன்னல் முதலியவைகளை கையினால் இடித்தும் தட்டியும் பெரிதாக ஓசை செய்தும் ஆரவாரிப்பது காதில் கேட்டவுடனே ட்ரைவரின் குலை நடுங்கியது. "என்ன ! ஐயாவா இப்படி கூச்சலிடுகிறார்கள்! என்ன அக்ரமம்" என்று பதறினான்.

உள்ளிருந்து வரும் கூச்சலும் இடிமுழக்கம்போன்ற சிரிப்பும் திடுகிடாய்க்கச்செய்துவிட்டன. கஸ்தூரி பெரிதாக அழுதுகொண்டே "ஐயோ! ட்ரைவர் ! இன்று அவர் வந்ததுமுதல் ஒரு மாதிரியாகவே இருந்தார். இரவு கண்விழித்த அலுப்பாகவிருக்கும் என்று எண்ணினேன். தூங்கிக் கொண்டிருந்தவர் திடீர் என்று எழுந்து சமயல்காரன் வேலைக்காரன் முதலியவர்களை அடித்தும் கிள்ளியும் எச்சில் துப்பியும் திட்டியும் தலைமயிரைப்

பிடித்து இழுத்து ஜிம்பியும் செய்ததால் அவர்களுக்குத் தாளமுடியாத துக்கமும் அவமானமும் உண்டாகிவிட்டதால் நடையைக் காட்டி அழைத்துக்கொண்டே வந்து இந்த அறையில் போட்டுப் பூட்டிவிட்டு என்னிடம் தெரிவிக்க ஓட்டமாக ஓடிவரும்போதுதான் நான் எதிரே சென்றேன். இந்தக் கண்றாவியை வெளியார் அறிந்தால் எங்கள் மானம் போய்விடுமே! என்னசெய்வேன்? ட்ரைவர்! ட்ரைவர்! நீதான் இப்போது எனக்கு உடன் பிறந்த பிறப்பு. வேறு திக்கில்லை. மகா கவுரவமாகப் பழகிவரும் சமயம் இப்படி திடீரென்று வந்துவிட்டதைப் பிறர் அறியாதபடி நீதான் காப்பாற்றவேண்டும். உன்னை வேண்டிக்கொள்கிறேன், இந்தா இந்த 10 ரூபாயை நீ வைத்துக்கொண்டு இதை வெளியாரறியாதபடி மறைத்துவிடு.

நான் எங்கள் க்ராமத்திற்குப்போய் அங்கு ஒரு கெட்டிக்கார வைத்தியன் இருக்கிறான்; அவனிடம் காட்டி வெகு விரைவில் மும்முரமாக வைத்தியம் செய்து அழைத்துவந்துவிடுகிறேன். அதுவரையில் இந்த பரிதாபமும் அவமானகரமும் மூடிவைத்துக் காப்பாற்றவேண்டியது உன் கடமை. அப்பா! தம்பி! நீ அந்த நடிகையின் வீட்டிற்கு அழைத்துக்கொண்டுபோ! நான் ஒருவித விஷயத்தையும் சொல்லாது அந்த பெண்களை அழைத்து வந்துவிடுகிறேன். இந்த உபகாரம் செய்தால் என் ஆயுள் உள்ளவரையில் இதை மறக்கவேமாட்டேன். நீ பெரியவனாயிருந்தால் நான் உன் காலில் விழுந்து ஸேவிப்பேன். நீயும் என்னைப்போல் பிள்ளைகுட்டிக்காரன் என்று நினைக்கிறேன். மான அவமானம் எல்லோருக்கும் ஒன்றுதானேப்பா!" என்று பலமான பீடிகை போட்டுக் கதறினாள்.

ட்ரைவர் வயிற்றுப் பிழைப்புக்காக அந்த செட்டியாருக்கு ஸேவகம் செய்கிறானேயன்றி அவனுக்கு என்னவோ உள்ளூற இந்த ஊழல்கள் சற்றும் பிடிக்காது. ஆனால் பிடிக்காது என்று சொல்லமுடியுமா! கஸ்தூரியின் முகத்தைப் பார்த்தவுடனே மகா பரிசுத்தவதி என்கிற நம்பிக்கை அவன் மனதில் பட்டுவிட்டது. எனினும் அவளும் ஸினிமாவில் தன் பெண்களைச் சேர்க்கத் துணிந்தது வியப்பாகவே இருந்தது.

கஸ்தூரியின் பரிதாபத்தைப் பார்த்து மனமிரங்கியவனாய், "அம்மணீ! இம்மாதிரி ஒரு விபரீதம் நடந்துவிட்டது மிகவும் கஷ்டமாயிருக்கிறது. நானும் பெரிய குடும்பஸ்தன்தான். தாயார் தகப்பனார் வேறு தள்ளாத நிலையில் இருக்கிறார்கள். வயிறு பிழைக்க ஏதோ தொழில் செய்ய வேண்டும். அதுவும் ஒரு நல்ல பெரிய மனுஷ்யரிடம் இந்த வேலை கிடைத்திருந்தால் மிகவும் சந்தோஷப்பட்டிருப்பேன். எனக்கே இந்த இடத்தில் ட்ரைவராயிருப்பது பிடிக்கவே இல்லை. பெரிய குடும்பஸ்தர்களாகிய நீங்களெல்லாம் இந்த துறையில் காலை வைப்பதே என் மனத்திற்குப் பிடிக்கவில்லை. அந்த அவமானத்தைவிட இது ஓர் அவமானமா தாயே!... உம்... காலம் போகிற போக்கு இது. நான் ஏனம்மா வெளியிடப் போகிறேன்? அம்மணீ! தாங்கள் என்னை சகோதரன்போல பாவித்துப் பேசுவதால் நானும் அந்த முறையில் சுதந்திரத்துடன் பேசிவிட்டேன். ஐயாவுக்கு மூளை கலங்கியது நல்லதாயிற்று. இதையே ஒரு சாக்காக வைத்து உங்கள் பெண்களின் வாழ்வைக் குலைக்காதிருக்கலாம். இதுதான் நான் உங்கள் தம்பி முறையில் சொல்வேன்...

என்று கூறியதைக்கேட்டதும் கஸ்தூரிக்கு தேகமே தெரியாத பூரிப்பு உண்டாகிவிட்டது. அவன் அன்னியன் என்றோ, ஜாதிவிட்டு ஜாதிக்காரன் என்றோ! வயதில் சிறியவனென்றோ பார்க்காமல் "அப்பா! ட்ரைவர்! நீ சொல்வது உண்மையானதா! சத்தியமானதா! நான் நம்பலாமா! அல்லது

நீ என்னை சோதிக்கும்பொருட்டுச் சொல்கிருயா !" என்று கேட்டவாறு அவன் காலில் விழுந்து வணங்கினுள்.

ட்ரைவருக்கு மயிர்க்கூச்செறிந்தது. "ஆஆஆ!...தாயே! இதென்ன அக்ரமம்! நான் எவ்வளவோ சின்னவனுயிற்றே! என்னை வணங்கலாகுமா தாயே! நான் கடவுள்மீது ஆணையாகக் கூறுகிறேன். சம்பளம் அதிகமாகக் கிடைப்பதால் இந்த இடத்தில் இந்த உத்தியோகம் செய்கிறேனேயன்றி நான் மனப்பூர்வமாகச் செய்யவே இல்லை.

உண்மையில் உங்கள் பெண்களை நீங்களும் எப்படித்தான் மனமொப்பி இந்தச் சாக்கடையில் தள்ளத் துணிந்தீர்கள் என்று நான் வியந்தேன். ஏனெனில் வெளியில் வதந்தி என்னவென்றுல் நீங்கள் காரியத்திற்கு எதிராக இருப்பதாயும் உங்கள் கணவனும் மற்றவர்களும் உடந்தை என்றும் அந்த வட்டாரங்களில் பேச்சு நடக்கிறது.

இன்னும் கேட்கப்போனுல், உங்கள் கணவர் ஏதாவதொரு சாக்கை வைத்து உங்களை வெளியூருக்கு அனுப்பிவிடுவதாகப் பேசிக்கொள்வதை காரை ஓட்டியபடியே நானே கேட்டேன். கடவுள் 'எல்லாம் நல்லதற்கு' என்கிற பழமொழியை மெய்ப்பிக்கவே இந்தச் சதியைச் செய்து காப்பாற்றினுர் என்றுதான் நான் நினைக்கிறேன். நீங்கள் இசைந்தா உங்கள் பெண்கள் நடிக்க முன்வந்தார்கள்? என்றுதான் தெரியவில்லை"

என்று முடிப்பதற்குள் அவனை கஸ்தூரி தனித்த இடத்திற்கு அழைத்துச்சென்று "தம்பி ! இப்படி உட்காரு. நான்யாரோ ! நீ யாரோ ! கடவுளின் விசித்திரமான லீலாவினேதங்களோ, அளவிட்டுக் கூறமுடியாது. அவற்றுள், உன்னைக் காட்டி தைரியமளித்ததும் ஒரு வினேதந்தான். உன்னிடம் நான் சில உண்மைகளைப் பேசவேண்டும். நீ சற்றுநேரம் இருக்க முடியுமா !" என்றுள்.

இதற்குள் வேலைக்காரன் காப்பி பலகாரங்களைக் கொடுத்தான். ட்ரைவர் அதைப் புசித்தவாறு "தாயே! நான் ஒரு பாபிஷ்டியின் அடிமை அரை மணிக்குள் அழைத்து வரும்படி எனக்கு ஆக்ஞை. இப்போதே முக்கால் மணிக்கு மேலாகிவிட்டதால் யாராவது தேடிக்கொண்டு வந்துவிடுவார்கள். பிறகு விஷயம் வெளியாகிவிடும். நீங்கள் தயவு செய்து இந்த காரில் கூடவந்து, ஏதாவது சமயோசிதமான தந்திரப்ரயோகத்தில் உங்கள் பெண்களைக் கையோடு அழைத்துவந்து விடுங்கள். நான் பிறகு சாப்பாட்டுக்குச் செல்லும்போது வருகிறேன்....இல்லாவிட்டால் இன்றைன்று செய்யுங்கள். இந்த வீட்டிலேயே பேசவேண்டாம். பக்கத்துத் தெருவிலுள்ள கோவிலுக்கு ஒன்பது மணிக்கு வாருங்கள். நானும் வருகிறேன், தாங்கள் என்ன பேசவேண்டுமோ பேசலாம்" என்றுன்.

இதைக் கேட்ட கஸ்தூரிக்கு ஒருபுறம் பரம சந்தோஷமும் ஒருபுறம் பன்றிக்குட்டியுடன் சேர்ந்த கன்றுக்குட்டியும் நரகல் தின்னும் என்பது போல் இவனும் அவர்களுடன் சேர்ந்தே நம்மை ஆழம் பார்க்கிருனே! என்றும் தோன்றியதால் சற்று தியங்கியபடியே, "தம்பி ! நீ பேசுவதெல்லாம் ப்ரமாணமானதுதானே ! நம்பலாமா"......என்றுள்.

"தாயே! சத்யமாக நம்பலாம். நான் எந்த விஷயத்தையும் வெளியிடமாட்டேன் என்று ப்ரதிக்ஞை செய்து தருகிறேன். ஆண்டவன்மீது ஆணையாக என்னை நம்புங்கள். வேண்டுமானுல், நான் அடுத்த பேட்டையில் தானிருக்கிறேன் ; என் வீட்டில்கூட விசாரித்துக்கொள்ளலாம். நான் போகவேண்டும். காரில் ஏறுங்கள் : அந்த பிடைபிடித்த நடிகையின் வீட்டில் உங்கள் பெண்கள் இருப்பது எனக்குப் பிடிக்கவில்லை. அந்த மகா பாவியுடன் சேர்ந்தால் கெட்டுப்போகாமலிருக்கவே முடியாது.



உயர்ந்த குடும்பத்தில் பிறந்து நன்றாக வளர்ந்து அருமையாகப் படித்தும் பாடியும் களித்து பெற்றோருடனும் கணவனுடனும் நல்ல பெயருடன் குடும்பஸ்த்ரீயாய் வாழ்ந்த கண்ணியம் அடியோடு குலைந்துபோய் மானங்கெட்டு ஒரு குபேரனுடன் ஓடிப்போய் பிறகு இந்த சினிமாத் துறையில் சிரிப்பாணி படுகிறாள். பணம்மட்டும் லக்ஷக்கணக்கில் புரண்டாலும் பழய கண்ணியம் வருமா! அந்த கசமலத்திற்கு அது தெரியுமா!... தாயே! நேரமாகிவிட்டது. நீங்கள் வாருங்கள்'' என்று கூறியவாறு காரில்ஏறினான்.

கஸ்தூரியும் தைரியலக்ஷ்மியின் துணையைக்கொண்டு காரில் ஏறினாள். ஆனால் அந்த இடத்திற்குச் செல்லும் அருவருப்பு மட்டும் அவள் இதயத்தை முற்றுகையிட்டது.

## 6

ஒரே சிரிப்பும் கும்மாளமும் கூறத்திறமில்லை. ஒரே தட்டில் பலகாரங்களை வைத்துக்கொண்டு மகா நடிகை வஸுமதியும் இந்த இருபெண்களும் சாப்பிடுவதே அவர்களுக்கு சொர்க்கபோகமாகத் தோன்றியது. பல்லைப் பிளந்துகொண்டு அவர்கள் சாப்பிடுவதை சபாஷ் போட்டு மற்றவர் ரஸிப்பதைப் பார்த்து நடிகையின் தலை தம்பிடியாய் நாறுகிறது.

காரிலிருந்து இறங்கிய கஸ்தூரிக்கு உள்ளே போவதற்கே கால்கள் பின்னிட்டு நடுங்கின. எமலோகத்திற்கு இழுத்துக்கொண்டு போவது போல் தோன்றி மகத்தான சங்கடத்தை உண்டாக்கியது. மெல்ல சமாளித்துக்கொண்டு உள்ளே சென்றாள்.

நின்ற இடத்திலிருந்து ஒரு முழ உயரம் தூக்கிவாரிப்போட்டது. “என்ன! இது உண்மையா! அந்தக் கெட்டுப்போன நாயின் எச்சிலே இந்தப் பிணங்கள் தின்று எக்காளமிடுவதை பரிசுத்த இதயம் படைத்த தாயின் உள்ளம் சகிக்குமா! கண்களில் தீப்பொறி பறப்பதை வெகு ப்ரயாசைப்பட்டுச் சமாளித்துக்கொண்டு அந்த ஆபாஸக் கூட்டத்தின் அலங்கோலத்தைப் பார்த்தவாறு சென்றாள்.

உலகையே மறந்துதின்றுகொண்டிருக்கும் பெண்கள் தாங்கள் கனவிலும் கருதாதவிதமாய் தங்கள் தாயாரே இங்கு வந்து நிற்பதைக்கண்டு தீயை மிதித்தவர்கள்போல் துள்ளி எழுந்து நின்றார்கள். அதற்குள் நடிகையும் மற்றொரு நடிகனும், என்னம்மா! ஏதோ பேயைக்கண்டலறுவது போல் நடுங்குகிறீர்களே! இந்தம்மாளுக்கா இத்தனை பயம்! யாரம்மா நீங்கள்? ஏன் இப்படி விழிக்கிறீர்கள்? நாங்களென்ன கரடியா! புலியா! பேயா பிசாசா!” என்றவாறு அவர்களை இழுத்து உட்காரவைத்தார்கள்.

கஸ்தூரியின் சாந்தத்தைப்பரீக்ஷிப்பதுபோல் கோபம் தலைக்கேறியது. “ஆமாம்! நீ சொல்வது மிகவும் உண்மை! கரடி, புலி முதலிய மிருகங்களிடத்தில் எசகு பிசகாக அகப்பட்டுக்கொண்டால் என்றைக்கும் அழியக்கூடிய உயிருக்குமட்டுந்தான் பயமேயன்றி உயிரினும் இனிய, விலை மதிப்பற்ற, மானத்திற்கு அவைகளால் ஹானி இல்லை. அத்தகைய மானத்தைச் சிதைப்பதற்குத்தான் உங்களைப்போன்ற பரம சண்டாளர்களைப் படைத்திருக்கிறான்......

என்று கூவியவாறு பெண்களின் காதோடு “உங்கப்பாவுக்கு திடீரென்று பயித்தியம் பிடித்துவிட்டது. வீட்டை இரண்டு படுத்திக் குதிக்கிறார். உங்களைக் கொன்றுவிடுவேன். கிழித்துவிடுவேன், வீட்டிற்கே நெருப்பு வைத்துவிடுவேன் என்று ஹதம் செய்வதால் எங்கே என்ன நடந்துவிடுமோ! அந்த அவமானம் எங்கே பிறருக்குத் தெரிந்துவிடுமோ என்கிற பயத்தால் ஓடி வந்தேன். உடனே வாருங்கள்.”

என்று ரகஸியமாகக் கூறியதைக் கேட்டதும் பெண்கள் அப்படியே அலறிப்போய் ‘ஹா!... உண்மையாகவா!’ என்று ஒரு துள்ளு துள்ளியபடி “இதோ வீட்டிற்குப் போய் உடனே வருகிறோம்.” என்று கூறிவிட்டுத் தாயாரின் பின்னால் தலைதெறிக்க ஓடிவந்து காரில் ஏறினார்கள். ட்ரைவரும் வெகுவிசையாகக் காரை ஓட்டினான்.

வீட்டு வாசலில் வந்து இறங்கியதும் பெண்கள் பதைக்கப் பதைக்க உள்ளே ஓடினார்கள். கஸ்தூரி ட்ரைவரை இரவு வரும்படியாகக் கூறிவிட்டு பெண்களின் பின்னாலேயே சென்று அவர்களை நோக்கி, “அம்மா! நீங்கள் இப்போது அப்பாவின் கண்முன்பு போகாதீர்கள். அவருக்குள்ள ஆத்திரத்தில் உங்கள் மண்டையை உடைத்தாலும் உடைத்துவிடுவார். நீங்கள் வந்ததுதெரியாமல் இவ்வறையிலேயே இருங்கள். இதோ வருகிறேன்.” என்று கூறி வெளியே போனாள். போகும்போது கதவை வெளிப்புறம் சாத்திப் பூட்டிய சத்தத்தைக் கேட்டு இருவரும் துள்ளிக் குதித்தார்கள். அம்மா சற்றுமுன்பு சொல்லியது முற்றும் பொய்தான். இதில் ஏதோ சூதும் ரகஸியமும் இருக்கிறதென்று தோன்றியதால் இருவருக்கும் மனது துடித்துத் தம்பித்துவிட்டது.

## 7

உடம்பு தெரியாது படுத்துத் தூங்கிப் பின் கண்விழித்த வாஸுதேவனுக்கு முதலில் சற்று ஒன்றுந் தெரியாது கலவரம் உண்டாகியது. சற்று நேரத்திற்குப் பிறகுதான் தான் ஓயாது குடித்து ஆடி வழிந்தவாறு வந்ததும், தன் பெண்கள் நடிகை வஸுமதியின் வீட்டிலேயே இருப்பதும்,

தன் மனைவி மகா மூர்க்கத்தனம் செய்வதால் தான் பெண்களை உடனே அக்ரிமெண்டு செய்து பணத்தை வாங்கிவிடவேண்டும்; அதற்காக முதலில் மனைவியைக் கண் துடைத்துவிட்டு வரவேண்டுமென்கிற எண்ணத்துடன் கிளம்பியவன் குடிவெறியால் சகலத்தையும் மறந்து ஒரேயடியாய் மயங்கி விட்ட முட்டாள்தனமும் எண்ணி உடனே கண்களைக் கசக்கிக்கொண்டு எழுந்து, "கஸ்தூரீ! கஸ்தூரீ!" என்று அதிகாரத்துடன் கூப்பிட்டான்.

கஸ்தூரி பெரிதாக அழுதுகொண்டே "ஐயோ! இப்போதாவது உங்களுக்குத் தெளிவு ஏற்பட்டதா! ஐயையோ! குழந்தைகள் இருவரும் அந்த நடிகையின் காரில் எங்கேயோ போகையில் பலமான விபத்துக்கள் உண்டாகி அப்படியே காருடன் கவிழ்ந்து மகத்தான சேதமும் ஆபத்தும் உண்டாகிவிட்டதாமே! குழந்தைகளுக்கு ப்ரக்ஞையே இல்லை. மண்டை உடைந்தேபோய்விட்டதென்று சிலர் சொல்கிறார்கள். ப்ராணன் போய் விடும் என்று சிலர் சொல்கிறார்கள். ஐயோ! என் வயிறு கொதிக்கிறதே. நான் வேண்டாம், வேண்டாம், என்று சொன்னேனே கேட்டீர்களா! இரு கண்மணிகளையும் இழக்கும்படியாகிவிடுமோ என்று துடிக்கிறதே! அவர்களை ஆஸ்பத்திரிக்குத் தூக்கிக்கொண்டு போய்விட்டார்கள். உங்களை எழுப்பிப் பார்த்தேன். ஒன்றுமே உபயோகமில்லை. இப்போதே என்னுடன் கிளம்புங்கள்; ஆஸ்பத்திரிக்குப்போய் பார்க்கலாம்' என்று கதறியழுவதைக் கேட்டதும், அவன் "ஐயையோ! என் மனக்கோட்டை முற்றும் இடிந்து பொடிசூரணமாகிவிட்டதே!" என்று பெருங்குரல் பாய்ச்சி, தலையிலும் வயிற்றிலும் அடித்துக்கொண்டு அழுவதையும் கஸ்தூரியின் முன் ஏற்பாட்டின்படி அவளுடைய பெண்களை வேலைக்காரி ஜன்னல்பக்கம் தூர நிற்கவைத்துப் பார்க்கச்செய்தாள்.

இவள் "குடிமுழுகிவிட்டதே. கொள்ளை போய்விட்டதே! கிளிகள் பறந்துவிடப்போகிறதே! என் கதி இப்படியா ஆய்விட்டது! மண்டையா உடைந்தது...என்ன அக்ரமம்!" என்று கத்தியவாறு ப்ரபலாபிப்பதைத் தூரவிருந்து கண்ட பெண்கள் "ஐயையோ! நிஜமாகவே அப்பாவுக்குப் பயித்தியம் பிடித்துவிட்டதே! ஐயோ! நாம் எண்ணிய எண்ணமெல்லாம் இப்படியா நாசமாகிவிடும்! நமக்குப் புகழ்தேவதை பரிபூரண கடாக்ஷம் செய்யவிருந்ததெல்லாம் இப்படியா உடைந்துச் சிதறவேண்டும்?" என்று கண்ணீர்விட்டவாறு கதறுகிறார்கள். "அப்பா! அப்பா! இப்படியா உங்கள் கதியாகவேண்டும்." என்று அவர்கள் கதறும்போது கஸ்தூரி கணவனிருக்கும் கதவைப் பூட்டிக்கொண்டு வெளியேவந்து பெண்களை அடக்கி "அம்மா! அழாதேயுங்கள். அழுது இந்த ரகஸியத்தை வெளியிட்டுவிட்டால் நம் மானம் போய்விடும். ஆகையால் அவர் எதிரிலேயே நீங்கள் வர வேண்டாம். அவரை நாம் உடனே நமது கிராமத்து வீட்டிற்கு அழைத்துப் போய்விடவேண்டும். அங்கு வேங்கத்தம்பிரான் என்ற ஒரு கெட்டிக்கார வைத்யன் இருக்கிறான். அவனிடம் காட்டி ஒரே மாதத்தில் குணப்படுத்தி மறுபடியும் அழைத்துவந்துவிடலாம். பேசாமல் நீங்கள் மேல்மாடியிலேயே இருங்கள். நாம் இரவோடிரவாய் போய்விடலாம்." என்று சமாதானப்படுத்தி அவர்களை ஒரு அறையில் போட்டுப் பூட்டினாள்.

மணி தனது கடமையைச் செலுத்தி ஒன்பதுமுறை அலறியது. அவளுக்குத் தான் ட்ரைவரை கோயிலில் சந்திக்கும்படி ஏற்பாடு செய்திருந்தது நினைவிற்கு வந்ததும் தடதடவென்று கோயிலுக்குச் சென்றாள். வீட்டிலுள்ள வேலைக்காரர்களின் ஒத்துழைப்பு அவளுக்கு மிகவும் உதவியாயிருந்தது.

கோவிலுக்குச்சென்று ஸ்வாமி தரிசனம் செய்துகொண்டு குறித்த இடத்தில் வந்து காத்திருந்தாள். அரைமணி நேரமாகியும் அவனைக் காணாததால், தான் அவன் வார்த்தையில் நன்றாக ஏமார்ந்துவிட்டதாயும் அந்த தடியனும் சினிமாக்காரக் கழுதையாகத்தானிருப்பானே! நம்மையும் அவன் வாயைக் கிளறி வேடிக்கைப் பார்த்திருக்கிறானேயன்றி உண்மையாகத் தோன்றவில்லையே! சொன்னால் சொன்னபடி வரக்காணவில்லையே'' என்று எதேதோ எண்ணமிட்டவாறு இடிந்துபோய் அப்படியே உட்கார்ந்துவிட்டாள்; தான் தனது வேலைக்காரர்களின் உதவியினால் இத்தனை ச்ரமப்பட்டு ஜோடித்த நாடகம் வீணாகிவிடுமோ! என்கிற பெரிய பயம் உண்டாகி அவள் தேகத்தை நடுங்கச்செய்தது.

## 8

கஸ்தூரியே ப்ரமிக்கும் வண்ணம் பதை பதைக்க ஓடிவந்த சமையல்காரன் "தாயே! மோசம்போய்விட்டோம். உங்கள் வீட்டிற்குள்ளேயே ஒரு எமன் வேலைக்கார உருவத்தில் வந்திருப்பதை நீங்களறியவில்லைபோலும், அந்த மகாபாவியான வேலைக்காரனை எப்படியாவது சினிமாவில் சேர்த்துவிடுவதாக உங்கள் கணவர் வாக்களித்திருக்கிறாராம். அந்த ஆசையால் அவன் தங்கள்கணவர் இருந்தகதவைத்திறந்துவிட்டதோடு பெண்கள் இருந்த கதவையும் திறந்து காட்டி, நடந்த சகலமும் வெறும்புரட்டு, பொய் நாடகம். நீங்களே வேண்டுமென்று செய்த சதியாலோசனை என்பதை பட்டவர்த்தனமாக விளக்கிக் காட்டிவிட்டானும்.

அந்த செட்டியாருக்கு இரண்டு மூன்று கார்கள் உண்டு. அந்தப் பாவி மனிதனும் ஏதோ ஒருவிதமான சந்தேகத்துடன்தான் இன்னொரு காரில் நம் வீட்டிற்கு வந்தான். அந்த சண்டாள வேலைக்காரன் நான் மேல் குறித்தவாறு செய்து மூவரையும் விடுவித்து எஜமானருடன் காரில் தானும் ஏறிக்கொண்டு போய்விட்டான். இவ்விஷயம் தங்களுக்குத் தெரிவிக்கவே நான் ஓட்டமாக ஓடிவந்தேன். அவர்கள் உங்கள்மீது கொண்டுள்ள ஆத்திரத்திற்கு எல்லையே இல்லை. கண்டவாறு திட்டியும் ஏளனமாகக் கறம் வைத்தும் சென்றார்கள். என்ன செய்வதம்மா?'' என்று மிக்க விசனத்துடன் கூறினான்.

அக்கோவில் கட்டடமே அவள் தலைமீது இடிந்து விழுந்துவிட்டதாக அவ்வுத்தமிக்குத் தோன்றியதேயன்றி சாமானியமாகத் தோன்றவில்லை. "என்ன! அந்த குருசாமியா அப்படிச் செய்தான்! ஐயையோ! நான் உன்னைக் கொண்டு நடித்துக்காட்டியதெல்லாம் வீணாகிவிட்டதே! இப்போது அவர்கள் எங்கு சென்றார்கள் என்று உனக்குத் தெரியுமா! அந்த குடிகெடுக்கும் நாய் வந்தவன் என்ன சொன்னான்?'' என்று கேட்டாள்.

சமை:—அம்மணீ! நான் என் வாயால் சொல்லக் கூசுகிறது. "உங்களைப் பயித்தியக்காரன் என்று கூறிய அந்தம்மாளுக்கே பயித்தியம் பிடித்துவிடும்படி நாம் செய்துவிடலாம். ஊமத்தங்காயைக் கொண்டுவந்து ஒருவிதமான பதம்செய்து அதை அவர்கள் சாப்பிடும்படிச் செய்துவிட்டால் இனி இத்தகைய தொந்தரவே இருக்காது. ஒரு பெண்பிள்ளை செய்கிற காரியமா அவர்கள் செய்திருக்கிறார்கள்!'' என்று வாய்கூசாது கூறியதை உங்கள் கணவரும் பெண்களும் ப்ரமாதமாக ஆமோதித்து "ஆம்! ஆம்! அப்படி ஏதாவதொன்று செய்யாவிடின் நமது எண்ணப்படி நடக்கவிடமாட்டாள்... சரி... நேரமாகிறது, வக்கீல் இன்னமும் காத்திருக்கிறார். அக்ரிமெண்டை முடித்துவிடலாம்'' என்று கூறியபடியே போய்விட்டார்கள்.

கஸ்தூரியின் இதயம் சுக்கலாக வெடித்துவிடும்போலாகிவிட்டது. எழுவெடுத்த வீடு கிட்டவா இருக்கிறது. 15-மைல் தூரமுள்ள இடத்திற்குக்

காரில் சென்ருல்கூட அரைமணிநேரமாவது ஆகும். அந்த ட்ரைவர் ஏதோ நம்மை ஏமாத்தித்தானிருக்கிறன். அவனே ஒருவேளை சொல்வியிருப்பானே! என்கிற சந்தேகங்கூட அவளுக்கு உண்டாகிவிட்டது. கோயிலிலுள்ள கடவுளின்மீது அடங்காத ஆத்திரமே உண்டாகியது "அல்லும் பகலும் அன்வரதமும் துதிக்கும் பக்தர்களைப் பரிசோதித்துக் கலக்குவதுதான் உனக்கு விளையாட்டோ! கடவுளாம் கடவுள். என் குடும்பத்தின் மானத்தைக் காற்றில்சிதறவடித்து மவுனம்சாதிக்கும் நீயா கடவுள்?" என்று ஆத்திரமாகக் கூவியவாறு வெளியே வந்தாள்.

அவளுக்கு பளிச்சென்று ஒரு யோசனை தோன்றியது. உடனே சமையல்காரனை நோக்கி; "நாராயணு! நீ உடனே ஒரு காரியம் செய்ய வேண்டும். அதாவது ஒரு டாக்ஸிகாரை இந்த கோவிலுக்குக் கொண்டு வரும்படி டாக்ஸிகம்பெனிக்கு டெலிபோன் செய்துவிட்டு, அடுத்தது அந்த படுபாவி செட்டியாருக்கு நான் சொல்லுகிறபடியே போன் செய்...

அதாவது :—அவனுடைய சினிமாதியேடரில் திடீரென்று தீவிபத்து உண்டாகிவிட்டதாயும் ஜனங்கள் தத்தளிப்பதாயும் சொல்லு. இரண்டு நிமிடத்திற்குள் வேறொருவர் செய்வதுபோல் அதேவிஷயத்தைச் சொல்லு. அந்த கலவரத்தில் அக்ரிமெண்டு கையெழுத்து ஆகாமல் நிற்கட்டும். டாக்ஸியில் உடனே ஓடலாம். எப்படியாவது அந்த பெண்களை மட்டுமாவது இழுத்துக்கொண்டு அதே நெட்டில் என் தம்பியின் வீட்டிற்குப் போய்விடுகிறேன். நீதான் இந்த உபகாரத்தைச் செய்யவேண்டும்" என்று கெஞ்சினுள்.

உடனே சமையல்காரன் அவ்வாறே டாக்ஸிக்கு டெலிபோன் செய்ததும் அடுத்த நிமிடமே அது வந்து நின்றது. சமையல்காரன் இரண்டு மூன்றுமுறை செட்டியாருக்கு தீவிபத்து என்ற செய்தியை போன் செய்துவிட்டு கஸ்தூரியுடன் காரில் சென்ருன். காரும் நடிகை வஸுமதியின் வீடுதேடிப் பறந்தது.

நடிகையின் வீட்டில் பலத்த ஆரவாரம் மட்டுமின்றி கஸ்தூரி செய்த சூழ்ச்சியைக்குறித்து ஒரே பேச்சும், அந்த உத்தமியை இளப்பமாகத் தாக்கி விமர்சனங்களும் ப்ரமாதமாக நடக்கின்றன. வாஸுதேவன் தன் மனைவியைச் சரியானபடி பழிதீர்க்கவும் அவள் கண்முன்பு தனது இரு பெண்களையும் அபாரமான புகழுடன் ப்ரபல நக்ஷத்திரங்களாக்கி அவள் கர்வத்தை அடக்கிவிடவேண்டுமென்றும், இனி தன் பெண்களை வீட்டிற்கே அழைத்துப்போகாமல் இங்கேயே விட்டுப் பழக்கப்போவதாகவும் பெருமையடித்துப் பேசுகிறன்.

"இப்படியுமா ஒரு மனுஷி சொல்லுவாள்! கட்டிய கணவனுக்குப் பயித்தியமென்றும், தான் பெற்ற மக்களுக்கு விபத்து என்றும் வாய் கூசாது பேசிய இவளா உத்தமி! இவளா சினிமாவின் உயர்ந்த லக்ஷ்யத்தைத் தாக்கிப் பேச முன்வந்துவிட்டாள்? சீச்சீ! இவளை இனி நீங்கள் நம்பவே கூடாது. இவளுக்குள்ள ஆத்திரத்தில் உண்மையில் உங்களைக் கொலை செய்தாலும் செய்துவிடுவாள். இம்மாதிரி மூளைகெட்ட குருட்டு நம்பிக்கைக்காரர்களை ஒரு நிமிடம்கூட நம்பக்கூடாது.

இதற்கு நிதர்சனம் நமது நளினுக்ஷியின் சரிதமே போதும். அவளது தாயாருக்குத் தன் பெண் பெரிய நடிகையாக ப்ரகாசிக்கவேண்டுமென்று ஆசை. அவளுக்குத் தகப்பன் கிடையாது. மாமன் வீட்டில் வளர்ந்தாள். மாமனும் பாட்டியும் இதற்குச் சம்மதப்படாமல் நளினுக்ஷியையே கொலைசெய்யப் பார்த்தார்களாம். நல்ல வேளையாக அவள் தப்பித்துக் கொண்டு தாயாருடன் ஓடியே வந்துவிட்டாளாம். இப்போது பாருங்கள்,



'ஆகா! நளினகுமாரியா! என்ன அத்புதமான நக்ஷத்திரமாய் விளங்குகிறாள்! அப்படியல்லவா இருக்கவேண்டும்!'' என்று கொண்டாடப்படுகிறாள். நடிப்புக்கலையில் உச்ச நிலைக்குவரவேண்டுமென்று நாம் எப்போது ஆவல் கொண்டுவிட்டோமோ அப்போதே அதற்கான தைரியம் நமக்குப் பூரணமாக இருக்கவேண்டும்.

அவ்வளவுதூரம் எதற்கு? என்னைப் பாருங்களேன். எனக்கும் என் தாயாருக்கும் அவ்வளவு தைரியம் இல்லாவிடில் நாங்கள் இன்று இந்த உயர்ந்த ஸ்தானத்திலிருக்கமுடியுமா! உலகமெல்லாம் பறவைபோல் பறந்து பார்த்துக் களித்து ஆனந்தச் சிகரத்தில் அகமகிழ்ந்திருக்கமுடியுமா! உலகமே என்னைக்கொண்டாடி என் காலடியில்கிடந்து பூஜைசெய்திருக்க முடியுமா! கட்டுப்பெட்டிகளின் கட்டுக்கு உட்பட்டுக்கிடக்கும் கோழைகளாக நாங்கள் இருந்திருந்தால் சாக்கடைப் புழுகைப்போலத்தான் இருந்திருப்போம். மல்லிகா! சம்பகா! என்னைப் பார்த்து நீங்களும் தைரியசாலிகளாக முன்னுக்கு வாருங்கள். தெரிந்ததா!''

என்று நடிகை வஸுமதி ப்ரமாதமாகப்பேசி சத்குருவைவிட உத்தம ஆசாரியன்போல் புத்திமதியும் தைரியமும் கூறித் தட்டிக்கொடுப்பதைக் கேட்ட இரு பெண்களின் உள்ளங்களும் தேன் குடித்த நரியைப்போலாகியது. அந்த நடிகையின் கைகளைப் பிடித்துக்கொண்டு ''அக்கா! நீங்கள் சொல்வதுதான் மிகவும் உண்மை! இனிமேல் நாங்கள் வீட்டுவழியே போகப்போவதில்லை. உங்களிடமே இருந்து உச்சநிலையை அடைந்தபிறகு



ப்ரதிக்ஞை

என் தாயாரே என்னை வந்து கட்டித் தழுவுவாள். தான்செய்த தவறை தானே உணர்ந்து வருந்துவாள். தெரிந்ததா!...ஏம்பா நீங்கள்கூட வீட்டிற்கே போகவேண்டாம்பா!"

என்று முடிப்பதற்குள் வாஸுதேவன் கைகளை பலமாகத் தட்டிக் கொண்டு, "உம். வீட்டிற்குப்போகாமல் ஏன் அந்த ராக்ஷஸிக்குப் பயந்தது போல் நடுங்கவேண்டும்? இனி அவள் வார்த்தையை நம்புவது இந்த ஜென்மத்திலில்லை. இதோ பாரு, அவளுடைய தம்பிக்கு அத்யாபத்தான உடம்பு. உடனே வந்தால் முகத்தில் விழிக்கலாம் என்று ஒரு கடிதத்தைக் கொடுத்து இங்குள்ள ஆட்களில் ஒருவனை அனுப்பி அவளை ஒரு கலக்கு கலக்கி அப்படியே கொண்டுபோய் அங்கு சேர்த்துவிடுகிறேன். பிறகு பாரேன் வேடிக்கையை" என்று கூறியதை ப்ரமாதமாக எல்லோரும் ரஸித்துக் கொல்லெனச் சிரித்து "பலே பேஷ்! அப்படி சொல்லுரா சாமி! மலையை விழுங்குகிற மாமியாருக்கு அவளையே விழுங்குகிற மருமகள் வந்தாளாம். அதுபோல இருக்கிறது இந்த யோசனை! சபாஷ்! உடனே செய்து முடித்துவிடுங்கள். நினைத்தவுடனே செய்தால்தான் பலன் கிடைக்கும்" என்று தமது ஆமோதிப்பைத் தெரிவித்தார்கள்.

அதே சமயம் வாஸுதேவன் கடிதமெழுதி நடிகையின் டாபர் மாமாவிடம் கொடுத்தனுப்பிவிட்டு "செட்டியார்வாள்! உடனே கையெழுத்து ஆய்விட்டால் தேவலை" என்றான். "அதைத்தான் நானும் நினைத்தேன்!" என்று கூறியபடி செட்டியாரும் வக்கீலும் மூன்று அக்ரிமெண்டு காகிதங்களிலும் இம் மூன்றுபேரிடம் முறையே கையெழுத்தை வாங்கிக்கொண்டார். அடாடா! கையெழுத்துப் போட்டவுடனேயே அம் மூவருக்கும் ஏதோ மகத்தான சொர்க்கப்பதவி கிட்டிவிட்டதுபோன்ற ஆனந்தமும் தாங்கள் இந்த நிமிஷமே ப்ரபல நக்ஷத்திரங்களாகி சினிமா வானத்தில் ஜ்வலிப்பது போன்றதுமான உணர்ச்சியும் அப்படியே ஆகாசத்தில் தூக்கிக்கொண்டுப் போவதுபோன்ற சந்தோஷமும் உண்டாயின.

## 9

வாயுவேகம், மனோவேகமாகப் பறந்துவரும் காரின் வேகங்கூட கஸ்தூரிக்கு மிகவும் மெல்லப் போவதாகத் தோன்றி வேதனை செய்கிறது. இவளது பொறுமையை சோதிப்பதுபோல் ரயில் கேட்டு மூடுவதும், வீதியில் ரிப்பேர் செய்வதால் எதிரில்வரும் வண்டிகளுக்காக ஒதுக்கி ஓட்டுவதுமாகச்செல்வதால் கஸ்தூரியின் மனோ வேதனை அதிகரித்தது. பகவானை ப்ரார்த்தித்தபடியே சென்றாள்.

கையெழுத்து ஆகிய உடனே செட்டியார் பரம சந்தோஷத்துடன் மல்லிகாவின் கைகளைக் குலுக்கிக் கொடுத்துக் கன்னத்தைத் தடவி நிமிண்டி "மல்லிகா! வஸுமதிக்கு நிகராக நீயும் வந்துவிடுவாய்! நன்றாகத் திறம்பட நடித்து அடுத்தபடத்திற்கு இந்த தொகையைப்போல் மூன்று பங்கு வாங்கவேண்டும்." என்று கூறினார். இந்த செய்கையைக் கண்ட வஸுமதியின் முகம் சற்று சுருங்கியது. செட்டியாரை விரைத்து ஒரு பார்வை பார்த்தாள்.

அதே சமயம் அவள் பின்னால் நின்ற மாமா உதட்டைப் பிதுக்கிக் கொண்டு "உம்...ஒரு செடியில் பல புஷ்பங்கள்தான் பூக்கும். தோட்டக்காரன் ஒரே புஷ்பத்தைமட்டும் பார்த்துக்கொண்டிருப்பானா! பல புஷ்பங்களையுந்தான் பார்ப்பான்; பறிப்பான். முகர்ந்து மணத்தை யனுபவிப்பான். கசக்கியும் போடுவான். மாலைகட்டி விற்கவும் விற்பான்... உலகமும் இப்படித்தான்... என்று ஒரு குட்டிவேதாந்தத்தை இலேசாகப் பேசி நடிகையின் முகத்தைக் குறும்பாகப் பார்த்தான்.

அதேசமயம் டெலிபோன் மணியடித்ததும் குமாஸ்தா ரிஸீவ் செய்தான். மறுகணமே..."ஐயையோ! படுமோசம் வந்துவிட்டதே! எசமான்! நம்ம தியேட்டரில் தீப்பிடித்துவிட்டதாம். ஜனங்கள் தவிக்கிறார்களாம். என்ன செய்வது?' என்று அலறினான்.

இதைக்கேட்ட அருகிலிருந்த வக்கீல் "ஐயையோ! என் வீட்டில் குழந்தைகுட்டிகள் எல்லோரும் போயிருக்கிறார்களே!...என்ன விபரீதம்!" என்று அலறியவாறு தலைதெறிக்க எழுந்து ஓடினார். நடிகையின் சினேகிதைகள் சிலர் அபூர்வமாய் வந்திருப்பதால் அவர்களை அழைத்துக் கொண்டு நடிகையின் தாயாரும் நடிகையின் குழந்தையும் அதே தியேட்டருக்குப் போயிருப்பதால் "ஹா...தீயா! தியேட்டரிலா! ஐயோ! எங்கம்மாவும் குழந்தையும் அங்கு போயிருக்கிறார்களே!" என்று கதறியவாறு, தான் ஒரு ப்ரபல நக்ஷத்திரம் என்பதையும், இதுபரியந்தமிருந்த வீண் ஜம்ப கௌரவத்தையும் மறந்து, வீதிக்கு ஓடிவந்து காரில் ஏறிக்கொண்டு ஓடினாள். லக்ஷக்கணக்கான பணத்தைச் செலவிட்டு உயர்ந்த முறையில் மேல்நாட்டு தியேட்டர்களைப்போல் இந்த தியேட்டரைக்கட்டின செட்டியாரின் தலைமீது வானமே இடிந்து விழுந்துவிட்டதுபோல் "என்ன! தியேட்டரில் தீ விபத்தா!" என்று ஒருகர்ஜனை செய்தார். அவ்வளவுதான். இந்த அதிர்ச்சியால் அப்படியே மூர்ச்சைபோட்டு விழுந்துவிட்டார்.

இதற்குள் இன்னும் இரண்டு மூன்று முறை டெலிபோன் செய்தி வந்து அங்கிருந்தவர்களை அப்படியே கலக்கிக் குழப்பிவிட்டது. செட்டியார் 'ஹா!' வென்று சாய்ந்த விபரீதத்தைக்கண்ட குமாஸ்தாவின் குலை நடுங்கியது. "ஐயோ! செட்டியார் மூர்ச்சித்துவிட்டாரே!" என்று அலறினான். கேட்க வேண்டுமா! நடிகையின் வீட்டில் இருப்பவர்கள் அப்படியே கூடிவிட்டார்கள். வேலைக்காரர்களின் உதவியால் செட்டியாரை சரியாகத் தூக்கிக் கிடத்திவிட்டு டாக்டருக்கு போன் செய்தான். உடனே தியேட்டர் மானேஜருக்கு போன் செய்து விஷயத்தை விசாரிக்கையில் இவர்களின் போதாக் காலக் கொடுமையோ அன்றி கஸ்தூரியின் நல்ல காலமோ மின்சார விசை கெட்டுப்போய் படமே பார்க்கமுடியாது நின்றுவிட்டதால் பதிலே இல்லை. தீவிபத்தில் போன் கெட்டுவிட்டதாகவே குமாஸ்தா எண்ணி நம்பிக்கையான ஆளைப் பார்த்துக்கொள்ளச் செய்துவிட்டு தானும் தியேட்டரை நோக்கி மற்றொரு காரில் ஓடினான்.

அந்த சமயந்தான் கஸ்தூரி அங்குவந்து சேர்ந்தாள். ஏற்கனவே அங்கு தத்தளித்து நிற்கும் வாஸுதேவனும் அவன் பெண்களும் கஸ்தூரியின் திடும்பிரவேசத்தைக்கண்டு உண்மையில் கதிகலங்கிப்போய் துள்ளினார்கள்.

அத்தனை அலங்கோலத்தில் நிற்கும்போதுகூட வாஸுதேவனுக்குத் தன் மனைவியைப் பார்த்தும் பழைய ஆத்திரமும் தன்னை ஏமாற்றித் தன் குழந்தைகளையும் வஞ்சித்த சதிக்குக் கடுஞ்சினமும் பொங்கிவந்ததால் இரு பெண்களையும் இரு கைகளுக்குள்ளடக்கிக் கட்டிக்கொண்டு "குழந்தைகளே! சற்றும் பயப்படவேண்டாம். இந்தப் பிசாசினிடம் இனி பயந்து நடுங்கி ஏமாறுவதற்கு இந்த வாஸுதேவன் அத்தனைமடையனில்லை. தைரியமாக இருங்கள்." என்றுகூறிவிட்டு "உம்! கஸ்தூரி இன்னும் யாருக்கு பயித்தியம் பிடித்திருக்கிறது அல்லது மோட்டார் விபத்து வந்திருக்கிறது என்று சொல்ல வந்திருக்கிறாய்! ஊம்! பயித்தியக்காரன் என்ன செய்வான் தெரியுமா! இப்படித்தான் செய்வான்" என்று ஆக்ரோஷத்துடன் காலாலும் கையாலும் எட்டி எட்டி உதைத்து புட்பால் அடித்தள்ளுவது போல் தள்ளினான்.

அங்குள்ள மகானுபாவர்களுக்காகப் பலவிதமான உயர்ந்தகுடிவகைகள் ரகம்வாரியாக அங்குள்ள பெரிய டேபில் மீது வைக்கப்பட்டுப் பக்கத்திலேயே கண்ணாடிக் கோப்பைகளும் அலங்காரமாக வீற்றிருந்தன. கஸ்தூரியை இவன் தள்ளிய வேகத்தில் அவள் உருட்டியடித்துக்கொண்டு மேஜைமீது தடார் என்று விழுந்தாள்; அந்த அதிர்ச்சியில் பாட்டில்களும் கோப்பைகளும் கலகலவென்ற சப்தத்துடன் பூமாதேவியிடம் சரணம் புகுந்தன.

என்னதான் சினிமா மோகம் இருப்பினும் பெற்ற தாயை இவ்வாறு தந்தை உதைத்துத் தள்ளுவதைக் கண்ட பெண்கள் தம்மையறியாமல் கூவென்று கத்திக் கண்களைப் பொத்திக்கொண்டார்களேயன்றி தாயாரைத் தூக்க முன்வரவில்லை.

கஸ்தூரி எண்ணி வந்தது ஒன்று. இங்கு நடப்பது ஒன்றாக ஆய்விட்டது. எனினும் அவள் தனது தைரியத்தைச் சிறிதும் விடாமல் "ஆம்! இப்போதும் உங்கள் குடும்பத்திற்கு வந்துள்ள பேராபத்தை விளக்கிக் கூறி அதிலிருந்து உங்களைக் காப்பதற்காகத்தான் நான் வந்தேன். கடைசீ முறையாகச் சொல்கிறேன். என் வயிற்றெரிச்சலும் சாபமும் வீண் போகாது. பெத்த பிதாவே பெண் குழந்தைகளைப் பாழாக்கிச் சாகவடிக்க வேண்டாம்! மரியாதையாக அவர்களை அனுப்பிவிட்டு நீங்கள் எக்கேடு வேணுமாயினும் கெட்டுப் போங்கள்! என் உயிர் போனாலும் சரி! நான் இவர்களை விடமாட்டேன்! நீங்கள் என்னைப் பலரறிய மானபங்கம் செய்தாலும் சரி; கொன்றுதான் போட்டாலும் சரி! இனி நான் இவர்களை அழைத்துப்போகாமல் தண்ணீர்கூட குடிப்பதில்லையென ப்ரதிக்ஞை செய்து சத்யமும் பண்ணுகிறேன்! மரியாதையாக வந்துவிடுங்கள்! பெத்த தாயாருக்கு அந்த அளவாவது மனத்ருப்தியைக் கொடுங்கள்!" என்று பெண்களை நோக்கிக் கெஞ்சினாள்.

மண்டையில் கொட்டும் ரத்தத்தின் பரிதாபமும் அவள் இதயம் கொதிக்கும் வேகமும் மூடனுக்கு எள்ளளவும் தெரியவில்லை. அவளை எப்படியாவது அடித்து விரட்டவேண்டும் என்று நினைப்பதற்குள், அலறியடித்துக்கொண்டு ஓடிய நடிகை ஒய்யாரமாயும் அபரிமிதமான சந்தோஷத்துடனும் தனது மகனைத் தூக்கிக்கொண்டு வந்தவாறே, "சார்! என்ன அநியாயம் பார்த்தீர்களா! அரைமணிக்கு முன்பு என்னுயிரே போய்விடும் போலாகிவிட்டதே! எல்லாம் வெறும் பொய்: பித்தலாட்டச் சரடு. யாரோ வேண்டுமென்று கயிறுதிரித்திருக்கிறார்கள்! பாவிகள்! இதை நன்றாக விசாரிக்காதிருக்கவே கூடாது...... அட!... இந்தம்மாள் வந்திருக்கிறார்களா!... ஏன்! இன்னும் யாருக்காவது பயித்தியம் பிடித்துவிட்டதென்று சுபசமாச்சாரம் கொண்டுவந்திருக்கிறார்களா?' என்றுகூறி கடகடவென்று சிரித்தாள்.

அடுத்தநிமிடமே எதையோ நினைத்தவள்போல், "ஏன் சார்! ஒரு வேளை இந்த சூழ்ச்சியைக்கூட இந்தம்மாளேதான் செய்திருப்பாளென்று எனக்குத் தோன்றுகிறது. கட்டிய கணவனுக்குப் பயித்தியம் பிடித்துவிட்டதென்று வாய்கூசாது கூறிய மகா பதிவ்ருதையாகிய இந்த மகாதேவி கட்டாயம் இதையும் செய்திருப்பாள்...என்ன ரத்தம் வழிகிறது!...... இதென்ன பாட்டில்களின் அலங்கோலம்... ஆமாம்! செட்டியாரெங்கே?... ஐயையோ! அவருக்கு மூர்ச்சையே போட்டிருக்குதே... என்று பதறினாள்.

கஸ்தூரிக்கு கோபம் அளவு கடந்துவிட்டதால் "குடிகேடி! கிராதகி! உன் பவிஷுக்குப்பிறரைப்பற்றிப்பேசுவதற்கு வெட்கமில்லையா! பேமானி! நீயும் ஒரு மனுஷி என்று சொல்லிக்கொண்டு வெளியில் வருகிறாயே! தூத்

து"...என்று காறியுமிழ்ந்த சமயம் செட்டியாரின் குமாஸ்தாவும் டாக்டருமாக ஓடிவந்தார்கள்.

எதிரில் ரத்தம் வழிய நிற்கும் கஸ்தூரியைப்பார்த்ததும் டாக்டர் ப்ரமித்துப்போய் 'இதென்ன கோரம்? இந்தம்மாளுக்கென்ன விபத்து?'என்றவாறு அவளருகில் வந்தார். பார்த்தாள் கஸ்தூரி. அவளுக்கு வயிறும் மனமும் கொதிக்கும் கொதிப்பில் அவளால் சகிக்கமுடியாத வேதனை உண்டாகியதோடு அந்த மானங்கெட்ட நடிகையின்முன் நிற்கவும் பிடிக்காத வெறுப்பும் அவமானமுமே உண்டாயின. 'இவளுக்குப் பதில் சொன்னால் வீணாக வார்த்தைதான் வளரும்; உபயோகம் எதுவும் இருக்காது.' என்று தோன்றியதால் அந்த நடிகையின் முகத்தைக்கூட பார்க்காமல் அந்த டாக்டரே ப்ரமிக்கும் வண்ணம் அவர் காலில் விழுந்து,

"ஐயா! நீங்கள் மகோன்னதமான தொழிலை மேற்கொண்டு பல்லாயிரக்கணக்கான உயிர்களைக் காப்பாற்றி என்றும் அழியாத இன்பத்தைத் தருகின்றீர்கள். அந்த புண்ணியம் உங்களை ஏழேழு தலைமுறைக்கும் காக்கும். ப்ராணனைவிட மானமே மக்களுக்குப் ப்ரதானமென்னும் நீதி நீங்களறியாததல்ல. தனது தேகத்திலுள்ள ஒரு ரோமம் உதிர்ந்தாலே உயிர் வாழாத கவரிமானைப் பார்த்தும் மானிட ஜன்மங்கொண்ட சில பாபிகள் உணராது விலைமதிப்பற்ற மானத்தை விலைக்கு விற்று கேவலம் அல்பத்திலும் அல்பமான கேடுகெட்ட வாழ்க்கையை மிகவும் கண்ணியமாக எண்ணி நடத்துகிறார்கள். இதுவும் நீங்களறியாததில்லை.



டாக்டர்! தாங்கள் யாரோ நான் யாரோ! என் உயிருக்கு இப்போது எவ்விதமான ஆபத்துமில்லை. அப்படி ஆபத்து நேர்ந்துபோய்விடுமாயின் நான் சர்வசம்மதத்துடன் உயிர் நீப்பேன்! ஆனால் என் குடும்பத்தின் மானம் சிதறிச் சந்திசிரிக்கப் போவதை என்னால் கண்டு சகிக்க முடியவில்லை. அதற்கு நான் ஒருக்காலும் ஒப்பவேமாட்டேன்! அப்படி வாழ்வதைவிடக் கூண்டோடு கைலாஸம் போக ஒரு பாழும் கிணற்றில் விழுந்து சாகலாம். இதோ! இந்தப் படுபாவியின் போதனையால் என் கணவன் மதியிழுந்து மானத்தைவிற்கத் தமது இரண்டு கண்களுக்கொப்பான பெண்களை மனந்துணிந்து சந்தைக் கடைக்குக் கொண்டுவந்து விலை கூறும் அனியாயத்தை என்னால் சகிக்கமுடியவே இல்லை.

டாக்டர்! நல்லதனமாகவும், ஆணையிட்டு ப்ரதிக்ஞை செய்தும், சாணியைக் கரைத்துக் கொட்டி ராக்ஷஸத்தனத்திலும் சொல்லிப் பார்த்ததெல்லாம் வீணாகிவிட்டன. உலகானுபவம் நிரம்பப் பெற்றுள்ள தாங்கள்தான் எங்கள் குலதெய்வமாகவிருந்து இவருக்கு நல்ல புத்தி சொல்லி என் பெண்களின் மானத்தைக் காக்கவேண்டும்.''

என்று கூறுவதற்குள் நடிகையொருபுறம் முறைக்கிறாள். வாஸுதேவன் ஒருபுறம் பல்லைக் கடிக்கிறான். மற்றவர்கள் பலவிதமாகப் பேசுகிறார்கள்.

டாக்டருக்கோ விஷயம் விளங்கிவிட்டது. இந்த தர்ம சங்கடமான தம்பதிகளின் ப்ரச்னையை எப்படித் தீர்க்கமுடியும் என்று தியங்கினார். எனினும் அவருக்கும் நல்ல உத்தமமான குலப்பெண்கள் அனியாயமாய் இந்தச் சாக்கடையிலிறங்கிக் கெட்டுப்போவது சற்றும் பிடிக்காது.

எத்தனையோ சினிமாக்காரர்கள் தங்களின் ஊழல் நாடகத்தின் விளைவால் உண்டாகிய அநேகவிதமான துர் வ்யாதிகளுடன் இவரிடம் சிகிச்சை பெறுவதற்கு வருவதால் அவைகளைப் பார்க்கப் பார்க்க அவருக்கு சினிமா என்றாலே பிடிக்காது. சினிமாத்துறையில் இறங்கிய எவரும் நூற்றுக்குத் தொண்ணூற்றொன்பது பேர்கள் படுகுழியில்தான் வீழ்ந்து கெட்டுப் பாழாகிவிடுகிறார்கள். எங்கோ ஒருவர் அந்த சாக்கடையிலும் விழுந்து உழலாமல் நீந்திக் கரை சேருகிறார்கள். இது நாளடைவில் உலகம் பகிரங்கமாக அறிந்த உண்மையாகிவிட்டது.

ஆகையால் அவர் கஸ்தூரியின் புலம்பலைக் கேட்டு உள்ளூர வருந்தி அவளது பெண்களையும் நடிகை வஸுமதியையும் பார்த்தார். வாஸுதேவன் கல்லடிசித்தன்போல் நிற்பதைக் கண்டு "என் சார்! அந்தம்மாளின் இஷ்டத்தையும் கலந்துகொண்டு...என்று அவர்கூறி முடிப்பதற்குள், யாரோ முதல் தாம்பூலம் வைத்து அழைத்ததுபோல் நடிகை வஸுமதி முந்திரிக்கொட்டைபோல் முந்திக்கொண்டு கட்கடவென்று ஒரு சிங்காரச் சிரிப்பு சிரித்துவிட்டு 'டாக்டர்! வெகுவெகு ஜோராக ஏமாந்தே போய்விட்டீர். இவ்வளவுதானா நீங்கள் கண்டுபிடித்தது? உம்...அந்தம்மாளுக்கு ஒரு மாதகாலமாகப் பயித்தியம் பிடித்து இதே ஆட்டமல்லவா ஆடுகிறார்கள்! இந்தம்மாளே புத்தி ஸ்வாதீனத்துடன் இருக்கையில் என்காலில் விழுந்து கெஞ்சிக் கூத்தாடி இந்த பெண்களைச் சரியான முறையில் தயார்செய்து என்னைப்போலவே ப்ரபல நக்ஷத்திரமாக்கி விடவேண்டுமென்று கெஞ்சினார்கள். பெண்களின் அழகையும், பாட்டையும் கண்டு நான் ஒருவாறு இசைந்தேன். பிறகு தானே தினம் இங்குவந்து முக்காலமும் எங்களுடன் சுற்றவாரம்பித்தார்கள். நடிகைகளின் ப்ரதாபமும் சினிமாத் தொழிலின் வசீகரமும் கம்பீரமும் காணக்காண அந்தம்மாளுக்கே பரமத்ருப்தியும் ப்ரீதியும் உண்டாகிவிட்டன. தானும் நடிக்கவேண்டும், ஏதாவதொரு

பார்ட்டுதனக்கும் வேண்டுமென்று என்னையும் முதலாளியையும் நச்சரித்து விட்டாள். இவளும் வாட்டசாட்டமாய் அழகாயிருப்பதால் நாங்கள் எடுக்கப்போகும் தலைவிதி என்கிற படத்தில் தாசி தளுக்குசுந்தரியின் தாய்க் கிழவியாக வேஷம் கொடுப்பதாக நிச்சயித்தோம்.

அதற்கு அவள் மிகவும் மகிழ்வுடன் சம்மதித்தாள். நாங்கள் எல்லோருமாக ஒரு தினம் உல்லாஸமாக ஏரோப்ளேனில் சிறிது தூரம் பறந்து வருவதற்காகக் கிளம்பினோம். இவள் அதற்கும் போட்டியிட்டு முந்திக் கொண்டாள். ப்ளேனில் சிறிது தூரம் போவதற்குள்ளேயே இவளுக்கு திடீரென்று மூளை கலங்கிவிட்டது. அதுமுதல் இப்படியே யார் வந்தாலும் சரி. யாரைப் பார்த்தாலும் சரி, இதே பல்லவியைத்தான் ஒப்பிக்கிருள்" என்ருள். இந்த அண்டப்புளுகும் அக்ரமமானதுமானவார்த்தைகளைக்கேட்கக் கேட்க கஸ்தூரியின் உடம்பே தீப்பிடித்து எரிவதுபோல் கட்டுக்கடங்காத ஆவேசம் உண்டாகிவிட்டதால் தன்னையும் மறந்து ஓரே பாய்ச்சலாகப் பாய்ந்து நடிகையின் கன்னம் புடைக்க படார் படார் என்று அறைந்து பல்லைக் கடித்து ஆத்திரத்துடன் "அஹ்ஹ்ஹா...சண்டாளி! பாதகி! என்ன சொன்னுய்? மானத்தை விலைக்கு விற்று துர்நாற்றச் சாக்கடையை மணம் நிறைந்த கேணியாக எண்ணி உழலும் படுபாவி நீயா எனக்கு ஒரு களங்கத்தை உண்டாக்கி உளறுகிருய்! பகவான் ஒருவன் உண்டு அவன் இருக்கிருன் என்பது உண்மையானுல் என்னைப் பற்றிய இழிவான கட்டுக்கதையை அளந்த நாக்கு அழுகி வாயடைத்து நீ உதவாக்கரைப் பிண்டமாகி சந்தி சிரிக்கச் செய்யவேண்டும். நானே கண்ட உத்தமியாயிருந்தால் என் வயிறு எரியும் சாபம் வீண் போகாது. என் குடியைக் கெடுத்த குடி கேடியாகிய நீ நாசமாய்ப் போய் விடுவாய்! என்னைப் பயித்திய மென்று கூறிய நீ பயித்தியம் பிடித்துப் பாயைப் புராண்டி உன்னைக் கண்டோர் சிரித்துக் காரியுமியச் செய்யக் கடவுள் தியங்கமாட்டார். ஜாக்ரதை. இந்தப் பயித்தியக்காரியின் உளறல்—பிதற்றல்—ஒருகாலம் இல்லாவிட்டால் ஒரு காலத்தில் பலித்தே தீரும்." என்று கூறிக் காரி உமிழ்ந்தவாறு தன்னிரு பெண்களை கையைப் பிடித்து இழுத்தாள்.

நடிகையை அடித்து வைத நிமிடமே இவள் மண்டையில் ஓங்கி ஒரு அறை விழுந்தது. அதையும் சமாளித்துக்கொண்டு மேலேமேலே பேசும் போது வாஸுதேவன் தன்னைப் புடைப்பதை அவள் லக்ஷ்யமே செய்யவில்லை. டாக்டர் எத்தனை தடுத்தும் கேளாததால் அவர் என்ன செய்வார் பாவம்! தர்மசங்கடத்தில் தவித்தார்.

இதற்குள் கஸ்தூரி "சரி; இனி எனக்கு இந்த உலகத்திலேயே இருக்க வேண்டிய அவசியமில்லை. உங்கள் மூவர்மீது கொலைக்குற்றம் சாட்டும்படியான வழியைத் தேடிவிட்டுப் போகிறேன் என்பதை பெண்களின் காதுகளில் மட்டும் கேட்கும்படி கூறிச்சடக்கென வெளியே போய்விட்டாள்.

மல்லிகா இதைக்கேட்டு அலறினுள். தங்கையிடமும் தகப்பனுரிடமும் சொல்லித் தவித்தாள். "ஆம்; நம்மை பயமுறுத்த இதோர் வழி! நீ பேசாமலிரு. இன்று இரவு நாம் வீட்டிற்கே போகாதிருந்தால் தானுக மறுபடியும் வருவாள். பார்த்துக்கொள்ளலாம். அவளாவது சாகவாவது? அப்படியொன்றும் நேர்ந்துவிடாது பயப்படாதே; இன்று அவள் செய்திருக்கும் காரியத்திற்கு அவளை சும்மாவிட்டதே அவளுடைய அதிர்ஷ்டம்" என்று வாஸுதேவன் பெண்களை வெகு தைரியமாகத் தேற்றிச் சமாதானம் செய்துவிட்டான். ஆயினும் பெண்களின் மனதுமட்டும் அதைக் கேட்டும் சாந்தியடையாது வருந்தியது.

# 10

நாட்கள் ஒன்றாகி இரண்டாகி ஒரு வாரமாகிவிட்டது. கொலை என்று பயமுறுத்தினாலாவது வருவார்களோ என்று கஸ்தூரி சொல்லியதற்கும் லக்ஷயம் செய்யாது போய்விட்டதனால் அவளுக்கு ஆத்திரம் முக்கண்ண மூர்த்திக்குமேல் பொங்குகிறது. பொங்கி என்ன பயன்? தானோ அபலை. அதிலும் ஒண்டி. கட்டிய கணவனே இக்கதியாயின் யார்தான் என்ன சொல்லமுடியும்?

வக்கீல்களிடமும் போலீஸ் உத்யோகஸ்தர்களிடமும்போய் யோசனை கேட்டாள். 'நீ சட்டப்பிரகாரம் அவன்மீது வழக்குத் தொடுத்து ஏதாவது செய்தால் உபயோகமேயன்றி மற்றபடி எதுவும் சொல்லமுடியாது. சிலரறிந்த இந்த விஷயத்தை உலகமறிந்து சிரிக்கச் செய்வதில் என்ன உபயோகம்? ஏதோ வாயா வார்த்தையாய் பாரு. பெண்களின் புத்தியே கெட்டுவிட்டதால் அதற்கு யார் என்ன செய்வது?" என்று சொல்லி விட்டார்கள்.

"பாழாய்ப்போன வழக்கு தொடுத்தால்மட்டும் அது இன்று நாளை முடியும் காரியமா! அதற்குள் இவர்கள் குட்டிச்சுவராகிப் பாழான பிறகு எதுதான் செய்து என்ன லாபம்? ஐயோ! கடவுளே! திடீரென்று என் கணவருக்குப் புத்தி வரும்படி ஏதாவதொன்று செய்யமாட்டாயா!" என்று வேண்டித் தவித்தாள். தற்கொலைக்கு ஒரு சமயம் துணிவாள். ஒரு சமயம் "ஏன் நான் சாகவேண்டும்? எப்படியாவது இந்த ஊழல் குப்பையை வெளிக் கிளப்பிப் பலரறியச் செய்வதற்கு நான் சாகாமலல்லவா இருக்க வேண்டும்? ஆம்! கெட்டவர்களை நல்வழிப்படுத்தும் உரிமை எவருக்கும் ஒன்றுதான். கட்டிய கணவனானால் என்ன! பிறந்த பசங்களானால் என்ன! மார்க்கம் தவறிவிடின் தக்க முறையில் திருத்தவேண்டிய கடமையைக் கைவிடக்கூடாது. என்னுயுளுக்குள் அவர்களை நல்வழிப்படுத்தி புத்திவரச் செய்யாவிடில் என் பெயர் கஸ்தூரியல்ல.

ஆடவர்களுக்குமட்டும் "சற்று ஏறுமாறாக இருப்பாளேயாமாயின் கூறாமல் சன்யாசம் கொள்" என்கிற நியாயத்தை எந்த மகானுபாவர்கள் வகுத்தார்களோ தெரியவில்லை. அதே பாட்டை ஏறுமாறாக இருப்பானே யாமாயின்" என்று திருத்திக்கொண்டு சன்யாசினியாகி ஏன் ஹாய்யாய் இருக்கக்கூடாது! உம்... அப்படிப் போய்விட்டால் பற்று அற்ற நிலைமை யல்லவா அடையவேண்டும். வேண்டாம்! இதே நிலையில் இருந்து எனது ப்ரதிக்ஞையை நிறைவேற்றுவதையே கடமையாகக் கொள்கிறேன். எத்தனை தூரந்தான் ஆட்டம் ஆடுகிறார்களோ பார்க்கலாம்." என்று தனக்குள் முடிவு கட்டிக்கொண்டு பகவானை பஜித்தவாறிருந்தாள்.

வைராக்யத்தை பலமாக வரவழைத்துக்கொண்டு எத்தனைதான் தைரியமாகவிருப்பினும் நாட்கள் கணக்கில் தன் பெண்கள் வீட்டு வழியே வராதிருப்பதும், அவர்கள் நடிக்கப்போகும் படத்தைப்பற்றிய விளம்பரங்களும், பெண்களின் விதவிதமான தோற்றங்களில் படங்களும் பத்திரிகைகளில் வரத்தொடங்கியதும் கண்டு கஸ்தூரியின் வயிறு எரிகிறது.

"பாழாய்ப்போன பணத்தாசைகொண்டு உயர்ந்த குலத்து மனிதர்கள் எல்லாம் இப்படியா நாசமாவதற்கு வழிகாட்டியாக முன் வருவது? ஐயோ! கடவுளே! இந்த அவமானத்தைச் சகிப்பதைவிட என் கணவனுக்கு உண்மையிலேயே பயித்யம் பிடித்துவிட்டது என்றால் எனக்கு மிகவும் பெருமையேயன்றி சிறிதும் கவலையே கொள்ளமாட்டேன்... ஆம் 'ஒரு உத்தம பதிவ்ருதைகூட இப்படி கணவனுக்குப் பயித்தியம் பிடிக்க வேண்டுமென்று கோருவாளா!' என்று உலகம் என்னைப் பழிக்கும்.

கட்டாயம் பழிக்கும். நன்ருகப் பழிக்கட்டும். அதே உலகத்திற்கு நான் சரியானபடி பதில் சொல்கிறேன். ஒரு மனைவியானவள் கணவனுக்கு மந்திரிபோன்றிருந்து, திருத்தக் கடமைபட்டிருக்கிறேன் என்பதையும் நிரூபித்துக் காட்டுகிறேன். முதலில் என் தம்பியை வரும்படி கடிதம் எழுதுகிறேன். அவன் வந்த பிறகு இன்னொருவிதம் முயற்சி செய்யலாம்'' என்று எண்ணிய சமயம் ஒரு கடிதம் வந்தது.

" அம்மணீ ! என்னை நீங்கள் நம்புவதற்கே பயந்து நடுங்கியதையும் நான் உறுதி கொடுத்ததையும் நீங்கள் மறந்திருக்கமாட்டீர்கள். 'நினைத்தபடி நடந்தால் நினைப்பரோ கடவுளை !' என்கிறபடி என் கதியாகிவிட்டது. நான் தங்களிடம் அன்று கோயிலுக்கு வருவதாகச் சொல்லிச்சென்ற உடனே என் வீட்டிலிருந்து என் வாழ் நாளையே பாழாக்கி என்னைப் படுகுழியில் தள்ளும் ஒரு விபரீதச் செய்தி வந்திருந்தது. என் மனைவி தாய் வீட்டில் விபத்தான நிலைமையிலிருக்கிருள் என்பதேயாகும். உடனே தங்களிடம்கூடத் தெரிவிக்க அவகாசமின்றி நான் ஒரே ஓட்டமாக இரவோடிரவாய் ஓடினேன். என் சக்திக்கு மீறி பல வைத்தியர்களைக் கொண்டு வைத்தியம் செய்தேன். என் துரதிருஷ்டம் என்னைச் சோதனைச் சுழலில் சிக்கவைத்து என் மனைவியின் உயிரைப் பறித்துக் கொண்டுபோய்விட்டது. துக்கசாகரத்தில் மூழ்கிக்கிடக்கும் என் மனது ஒரு நிலைகொள்ளாது தவித்ததால் உலகையே மறந்தேன். நாட்கள் சென்றுகொண்டே இருப்பதால் தாங்கள் என்னைப்பற்றி என்ன நினைக்கிறீர்களோ என்கிற எண்ணத்தால் இதை எழுதுகிறேன்.

அந்த மகாபாவி செட்டியாருக்கு என் நிலைமையை விளக்கி எழுதி எனக்கு ஒருமாத லீவும் 100ரூபாய் பணமும் கொடுத்து உதவ வேண்டும் என்று கேட்டேன். பெண்களைக் கற்பழித்தும், அனியாய வழியில் பித்தலாட்ட பிழைப்பு பிழைத்தும் மானங் கெட்டு வாழும் அந்த மனிதனுக்கு எனது பரிதாபம் கண்ணில் படுவதற்கு நியாயமேது? நான் கேட்டபடி கொடுக்கமுடியாதென்றும் சம்பளத்தையும் ஒருமாதம் சேர்த்துக்கொடுத்து வேலையைவிட்டு நீக்கி விட்டதாகவும் கடிதம் வந்தது. சனியன் விட்டதென்கிற எண்ணத்துடன் நானும் த்ருப்தியே அடைந்துவிட்டேன். 'மரம் வைத்தவன் தண்ணீர் வார்க்காமலா போவான் !' என்கிற நம்பிக்கையை நான் இழக்கவில்லை. அந்தப் பரம் பொருள் எனக்கு என்ன விதமான வழியைக் காட்டுவானே தெரியவில்லை.

தாயே ! உங்கள் விஷயம் என்னவாயிற்று ? உங்கள் கணவரும் பெண்களும் தப்பினார்களா ! என்று அறிய ஆவலாக இருக்கிறேன். இந்த ஏழைமீது தயவுசெய்து எழுதவும். ஏதாவதொரு உதவி வேண்டினால் தெரிவிக்கவும். வித்தியாஸம் வேண்டாம். இங்ஙனம், ட்ரைவர்,

கனகசபை.''

என்கிறதைப் படித்ததும் கஸ்தூரியின் மனது உருகியது. "அடாடா! நடந்தது ஒன்றும் ; நான் நினைத்தது ஒன்றுமாகவா ஆய்விட்டது ! ஐயோ பாவமே ! அவனுக்கு இத்தகைய விபத்தா வரவேண்டும்? உம். மகாபாவி எனக்கு உபகாரம் செய்வதாக முன்வந்ததனால்தான் அவனுக்கே விபரீதமாக நேர்ந்துவிட்டது. அவன் மகாயோக்யனாகவிருப்பதால்தான் இத்தனை துக்கம் ஏற்பட்டிருக்கும்போதும் என்னை மறக்காது கடிதம் எழுதியிருக்கிறான். உடனே அவனுக்குப் பதில் எழுதி விட்டுத்தான் மறுகாரியம் செய்யவேண்டும்.'' என்று எண்ணி உடனே கடிதமெழுதத் தொடங்கினாள்.

"அன்பு மிக்க தம்பிக்கு ! பழியோரிடம் பண்டமோரிடம் என்கிறபடி உன் கடிதம் பார்க்கும் வரையில் நீ என்னை வேண்டுமென்றே நம்பிக்கை

மோசம் செய்துவிட்டதாகத்தான் எண்ணி உன்னைச் சபித்துக்கொண்டிருந்தேன். உனக்கு நேர்ந்துள்ள துக்கத்தைக் கேட்டு மிகவும் விசனிக்கிறேன். எல்லாம் சோதனை. என் குடும்பத்தின் சிதைவை எழுதவே முடியாது அத்தனை விபரீதமாகிவிட்டது. அன்று உன்னிடம் நான் எத்தனையோ தந்திரம்செய்து அவர்களை அழைத்து வந்தும் உடனே மீண்டும் அவர்க்ள் என்னைஏமாற்றிவிட்டு அதே இடத்திற்கு ஓடிவிட்டார்கள் ; இன்னும் வரவில்லை. என் விதியை எண்ணிப் புலம்பிப் புலம்பிக் கண்ணும் மங்குகிறதேயன்றிப் பலன் இல்லை. ஆண்டவன் என்ன எண்ணியிருக்கிருனோ தெரியாது. நீ வேறு நல்ல இடத்தில் சீக்கிரம் வேலைக்கமர்ந்து, மறு மணத்தையும் செய்துகொண்டு சுகமாக்விரு. நான் உன் உண்மையறியாது தப்பிதமாக எண்ணிவிட்டதற்கு மன்னிப்புக் கோருகிறேன். நீ எப்போதாவது இந்த ஊருக்கு வந்தால் கட்டாயம் என்னை மறக்காது இங்கு வந்து போ! ஒரு வேளை நல்லகாலம் பிறந்து நான் வெளியூர் போனல் உனக்குத் தெரிவிக்கிறேன்.

உன் சகோதரி

கஸ்தூரி''

என்று எழுதித் தபாலுக்கு அனுப்பினாள். அதற்குப் பிறகே அவள் மனத்திற்குச் சற்று ஆறுதலும் சாந்தியும் உண்டாயின. ''இச்சமயம் அவன் இங்கிருந்தால் எத்தனையோ உபகாரமாயிருக்குமே! என்னுடைய துரத்ருஷ்டந்தானே இப்படி ஆய்விட்டது'' என்றும் அவள் மனத்தில் தோன்றியது.

## 11


இரவு சுமார் பத்துமணி இருக்கும். கஸ்தூரி நித்திரையேகொள்ளாமல் புரண்டுகொண்டிருந்த சமயம் வீதியில் யாரோ படபடப்பாய் கதவைத் தட்டும் சத்தம் கேட்டு ''யாரது?'' என்று சற்று அதட்டிய குரலில் கேட்டாள். ''அம்மா! கதவுதிறவேன்! சீக்கிரம் திறவேன்'' என்று ஒரு குரல் புலம்பியபடியே கேட்டதும் கஸ்தூரி திடுக்கிட்டாள். ''என்ன! சம்பகாவின் குரல்போலிருக்கிறதே!'' என்று அலறியவாறு எழுந்துவந்து கதவைத் திறந்தாள்.

என்னே விபரீதம்! என்னே கோரக்காட்சி! கஸ்தூரி அப்படியே தீயை மிதித்தவள்போல் நடுங்கி ''என்ன! யாரது சம்பகாவா! உண்மையில் சம்பகவல்லியா!'' என்று அலறினாள். இதற்குள் வீதியில் நின்ற மாட்டுவண்டியிலிருந்து ஒரு மனிதனை இருவராகத் தூக்கிக்கொண்டுவந்து வழியில் கிடத்திவிட்டுப் போயேபோய்விட்டார்கள்.

கஸ்தூரிக்கு ஒன்றுமேபுரியவில்லை. உற்றுப்பார்த்ததில் தன் கணவன் தானென்றறிந்து பதறிப்போய் ''ஐயோ! உயிர்போய்விட்டதா என்ன! ஏன் இப்படி கிடத்திவிட்டு ஓடுகிறார்களே!'' என்று கதிகலங்கியவாறு கவனித்துப் பார்த்தாள்.

உயிர் இருக்கிறது என்பதை அறிந்த பிறகுதான் அவள் இதயம் ஓடவாரம்பித்தது. வாயிலிருந்து நுரையும் நொப்புமாகத் தள்ளுகிறது. ஐஸ் கட்டியைப்போல் உடம்பு சில்லிட்டுக் கிடப்பதைக் கண்டதும் ''ஐயோ! இதென்ன பரிதாபம்! இவருக்கு என்ன வந்துவிட்டது? சம்பகா! ஏன் இப்போது இங்கு வந்தீர்கள்? நடந்ததென்ன சொல்லேன்!'' என்று கதறியவாறு கேட்டாள்.

சம்பகா கேவிக்கேவி அழுதவாறு தாயாரின் காலில் விழுந்து கால்களை கெட்டியாகக் கட்டிக்கொண்டு ''அம்மா! அம்மா! என்னை மன்னித்து ஆட்கொள்ளவேண்டும். கண்கெட்டபிறகு சூரிய நமஸ்காரம் செய்வது போல் எங்கள் கதியாகிவிட்டது. அப்பா இன்று காலை திடீரென்று பாரிசு



வாயுவு கண்டு விழுந்துவிட்டார்! ஒரு டாக்டர் வந்து பார்த்ததும் "அவருக்குப் பாரிசவாயுவு; உட்னே சரியான வயித்தியம் செய்தால்தான் பிழைப்பார்" என்று கூறிவிட்டார்.

அந்தப் பாழாய்ப்போன செட்டியார் விஷயமறிந்து ஓடிவந்தான். "இது எங்கே இனி தேறப்போகிறது? இதை வைத்துக்கொண்டு நாம் ஏன் சாகவேண்டும்? ஒரு மாட்டுவண்டியில் போட்டுக்கொண்டு போய் வீட்டில் தள்ளிவிட்டு வாருங்கள்" என்று நடிகை சொல்லிவிட்டாள். 'பாரிசவாயுக்காரன் பிழைப்பதேது? அவன் அக்ரிமெண்டுப்படி நடிக்கப்போவதேது! இனி எல்லாம் வீண் டம்பந்தான். நேற்று ஒருவன் வந்தானே அவனே இந்த பாத்திரத்திற்குச் சரியான பேர்வழி. ஆகையால் இவனை அனுப்பிவிட்டு அக்ரிமெண்டைக் கிழித்தெறியுங்கள்.' என்றான் செட்டியார்.

அப்பாவுக்கோ நினைவே இல்லை. மல்லிகாவோ—சொல்ல வெட்கமாயிருக்கிறது! வேறு ஒரு படத்திற்கு வெளிக் காட்சிகளைப் படம் பிடிக்க நடிக கோஷ்டி வெளியூருக்குப்போயிருக்கிறது. அதோடு அக்காவை அப்பாவே அனுப்பினர். என்னையும் போகும்படிச் சொன்னா. எனக்கு எதனாலோ மனதுக்குப் பிடிக்கவில்லை, நான் போக மறுத்துவிட்டேன். பகவான்தான் எனக்கந்த புத்தியைக் கொடுத்தார். நானும் போயிருந்தால் அப்பாவின் கதி என்னவாகி இருக்கும்? அப்பாவின் அக்ரிமெண்டைக் கிழிக்கும்போது என்னுடையதைக்கூட நானே கிழித்து விடும்படிக்கூறினேன்.

முதலில் நடிகையும் செட்டியாரும் மறுத்தார்கள்: அப்பாவை மட்டும் வண்டியிலேற்றி அனுப்பிவிட ஏற்பாடு செய்தார்கள். நானும் கூடத்தான்



போவேன் என்று பிடிவாதம் செய்து அழுதேன். முதலில் விடுவற்குச்சற்றும் சம்மதிக்கவில்லை. பிறகு செட்டியார் ஒருமாதிரி அலக்ஷிய பாவத்தோடு "சரி. வஸுமதி! இந்த சனியனை வைத்துக்கொண்டு நாம் மாரடிப்பதில் படம் கெட்டுத்தான் போகும். இதுகாறும் வாங்கிய அட்வான்ஸ் பணத்தை உரிஞ்சிக்கொண்டு துரத்தி விடு" என்றார்.

அப்பாவிடம் அந்த செட்டியார் கொடுத்திருந்த ஆயிரம் ரூபாய் அட்வான்ஸை நடிகையின் வசமே கொடுத்திருந்தார். அது எனக்குத் தெரியுமாதலால் "அட்வான்ஸ் உங்களிடந்தானே இருக்கிறது. எடுத்துக் கொள்ளுங்கள்" என்றேன்.

அதற்கந்த நடி ஒரேயடியாக "என்னிடம் கொடுக்கவே இல்லை. இந்த வீண் அதிகப்ரஸங்கி வார்த்தைக்கு இங்கு இடமில்லை. அந்த ஆயிரம் ரூபாய் தணிகையான உனது நகைகளை மரியாதையாக கழட்டிவைத்து விட்டு ஓடு நாயே!" என்று அலக்ஷியமாகக் கூறியவாறே தானே கபகபவென்று நகைகளைக் கழட்டிக்கொண்டு காலால் எட்டி உதைத்தாள்.

அம்மா! நற்புத்தி புகட்டவந்த அன்னையை அவமதித்த நான் இனி அழுவதில் உபயோகமென்ன இருக்கிறது? என் மதிமழுங்கிய வேகத்தைப் போலவே மதி திருந்தியதும் ஆயிற்று. முதலில் அப்பாவை கவனிக்காவிட்டால் அவர் இறந்துவிடுவார்." என்று அழுதாள்.

கஸ்தூரிக்கு ஒருபுறம் துக்கம் இருந்தபோதிலும் ஒருபுறம் பரம சந்தோஷமும் கூறத்திறமற்ற ஆனந்தமும் உண்டாயின. பகவான் தனது

வேண்டுகோளுக்கிணங்கி அருள்புரியும்பொருட்டுத்தான் இம்மாதிரி ஒரு சம்பவத்தை உண்டாக்கியிருக்கிறார் போலும். அடாடா! இனியாவது இந்த ஊழல் நாற்றத்தில் காலை வைக்காதிருக்க மனது திடமாக இருக்க வேண்டுமே!... சம்பகா!... புத்திவந்தது என்று கூறும் நீ வந்த புத்தியை விரட்டியடிக்காமல் வைத்துக் காப்பாற்றினால் அதுவே போதும். உனது நகைகள் போய்விட்டதே என்று நான் கவலைப்படவில்லை. பெண்களுக்கு முக்யமாக உள்ள உத்தம குணம், ஒழுக்கம் முதலிய நகைகளை என்றும் வைத்துக் காப்பாற்றினால் போதும். சம்பகா! நான் உன்னை சற்றும் கோபிக்கவோ, வெறுக்கவோ இல்லை. கடைசி நிமிஷத்திலாவது உனக்கு புத்திவந்து நீ ஒருத்தியாவது என் மனோபிஷ்டத்தையும் ப்ரதிக்ஞையையும் காப்பாற்றி நிறைவேற்றவந்ததானது மெத்த சந்தோஷம். நீ வீணாக அழாதே. அந்தப் பாழாப்போன சினிமா மோகத்திலிருந்து நீ விலகி வந்ததுபோல் உன் அக்காவும் ஒருவிதமான அவமானப்பட்டாவது புத்திதிருந்திவந்தால் போதும். பகவான் அந்த க்ருபை செய்துவிட்டால் உன் தகப்பனாரையும் அழைத்துக்கொண்டு நமது கிராமத்திற்குப்போய்விடலாம். இந்த ஊருக்கே கொஞ்சநாளைக்குத் தலைகாட்டாதிருந்து நமக்கு இப்போது ஏற்பட்டுள்ள அவமானத்தைப்போக்க வழிதேடலாம். இப்போது நாம் முதலில் டாக்டரை அழைத்துவந்து காட்டவேண்டும். மற்றதைப் பிறகு பார்க்கலாம்'' என்று கூறிவிட்டுச் சமையல்காரனை அனுப்பி டாக்டரை அழைத்துவரச்சொன்னாள். டாக்டரும் வந்து பார்த்து தற்கால சாந்தியாக மருந்துகொடுத்தார். 'எல்லாம் நல்லதற்குத்தான் இம்மாதிரி பகவான் செய்திருக்கிறார்' என்ற நம்பிக்கையே அவள் மனத்தில் உதித்தது.

## 12

மறுநாள் சாயங்காலம், வெளிக்காட்சிகளை எடுக்கச்சென்றிருந்த கோஷ்டி திரும்பிவந்தது. அதில் மிகமிக அட்டகாஸத்துடன் மல்லிகா வந்தாள் என்று கூறவேண்டுமா! ஆனால் இங்கு வந்த உடனே முதல் நாள் நடந்த வரலாற்றினை அறிந்து மனம் உடைந்துத் துள்ளினாள். ''என்ன! அப்பாவுக்கு பாரிசவாயுவு வந்துவிட்டதா! இருவருடைய அக்ரிமெண்டும் கிழித்தாகிவிட்டதா! ஐயையோ! அப்படியென்றால்...'' என்று மல்லிகா இழுப்பதற்குள் நடிகை வஸுமதி ஏளனமாகச் சிரித்துக் கொண்டே...''உம்...'அப்படி என்றால் என் கதி என்ன?' என்று கேட்க வந்தாயல்லவா! இதோ! உன்னுடைய அக்ரிமெண்டும் பனால் சுக்கல் நூறு ஆகிவிட்டது. உன்னுடைய பாத்திரத்திற்கு உன்னைப்போன்ற வேறொரு உயர்ந்த குலத்துப் பெண்ணை நியம[illegible]கிவிட்டது.''

மல்லி:—என்ன! வேறுபெண்[illegible]மித்[illegible]கிவிட்டதா! ஏன் என்னுடைய அக்ரிமெண்டையும் கிழித்தாக[illegible]! [illegible]வர்கள் இல்லாவிட்டால் எனக்கென்ன?...

நடிகை:—உனக்கென்னவா! ஏன்! உன் தாயாராகிய பத்திரகாளி யம்மனின் புராணமும் மகிமையும் எனக்குத் தெரியாதோ! அப்பனும் பிழைப்பானே! சாவானே! அதுதான் த்ராட்டில் இருக்கிறது. மைனர் நீங்காத உன்னைமட்டும் வைத்துக்கொள்ள எங்களுக்கென்ன அத்தனை மூளைக்கோளாறு என்று நினைத்தாயா? உன்னை நாங்கள் வலுவில் இழுத்துக்கொண்டதாக உன் தாயார் மைனர் வழக்குப்போட்டு எங்களை ஆட்டுவதற்கு நாங்கள் இடங்கொடுக்கமாட்டோம். இந்தா உன் துணி மணிகள். தூக்கிக்கொண்டு ஓடு. உனக்கும் நல்ல புத்திவந்து மைனர் நீங்கிய பிறகு என்னிடம் வந்தால் முதலில் ஏதாவதொரு தோழிபார்ட்டு கொடுக்கிறேன். பிறகு உனக்கு யோக்யதை இருந்தால் முன்னுக்கு வர



ப்ரதிக்ஞை

லாம்... என்ன! தெரிந்ததா! ஓடு! ஓடு...நிக்காதே..." என்று கழுத்தைப் பிடித்துத் தள்ளமாட்டாத குறையாய் அலக்ஷியத்துடன் கூறினாள்.

இதைக்கேட்ட மனந்தாங்காத மல்லிகா கோவெனக் கதறியழுதாள். ஏதோ தனக்கு வலுவில் வந்த ச்வர்க்கப்பதவி திடீரென்று நழுவிப்போய் தன்னை பாதாளத்தில் தள்ளிவிட்டதுபோன்ற ஒரு மன அதிர்ச்சி உண்டாகியதேயன்றி தன் பிதாவுக்கு இத்தகைய ஆபத்து வந்துவிட்டதே! இனி குடும்பத்தின் கதி என்னவாகும். தாயார் என்ன செய்வாள்? என்கிற உத்தம எண்ணமே உதிக்காது இருள் மூண்டது.

"என் தாயார் அழைத்தால்கூட நான் போகவில்லை. இங்கேயே இருந்து நடிக்கிறேன்" என்று கெஞ்சினாள். வஸுமதி ஒரே பிடியாய் மறுத்து "உம்...உன் தாயார் அன்று செய்த அவமானத்திற்கு உங்களைப் படத்திலேயே பழிக்குப்பழி வாங்கி உங்கள் நடிப்புக்கு முற்றுப்புள்ளி வைத்து நாசம்செய்ய நினைத்தேன். நல்லவேளையாய் உங்களுக்கு நேர்ந்த கதியால் இதோடு தப்புகிறீர்களே அது உங்கள் அதிர்ஷ்டம் என்று தேறி வீட்டிற்கு ஓடு... உம்... இனி இந்த அழுகைக்கு இடமில்லை. நீ நடிக்கவில்லை என்பதை பத்திரிகைகளில்கூட மாற்றியாயிற்று. வீண் வார்த்தை பேச எனக்கு நேரம் கிடையாது. அடேய்! இவளை வெளியே அனுப்பிக் கதவைப் போடு என்று சேவகனுக்கு உத்திரவிட்டு உள்ளே சென்றாள்.

அடாடா! என்ன பரிதாபம்! மல்லிகாவின் நெஞ்சம் வெடித்துவிடும் போலாகிவிட்டதால் தலைசுழன்றது. அப்படியே சுவரில்சாய்ந்தாள். இதைக் கண்ட அந்த வேலைக்காரன் "உம்! ஏம்மா உங்களுக்கெல்லாம் இந்த தலையெழுத்து? உயர்ந்த ஜாதிக்கேற்ற உயர்ந்த புத்தி இல்லாமே இந்த குப்பெ தொட்டியிலே நாத்த சாக்கடையிலே உழல ஓடிவரணும். நாங்க வயித்துக்கு இல்லாட்டி தவிச்சாகூட இம்மாதிரி மானங்கெட்டு பொழெக்க கனவிலேகூட சம்மதிக்கமாட்டோம். என் கொழந்தெ மூணு வயசுதான் ஆவுது. "கொழந்தைக்கு என்னடா வந்தது? வெகு அழகாயிருக்கிறதால் நடிக்கவிடு. நான் பணம் ஏராளமா தருகிறேன்" என்று இந்தம்மா என்னை எத்தனைதரம் கேட்டாங்க தெரியுமா! ஊஹூம். எனக்கு அந்த சமாச்சாரமே வேண்டாம்னு தைரியமா சொல்லிபுட்டேன். ஏன் தெரியுமா? இந்த ஆபாசத்தின் உள்ளேயே இருந்து பாத்தபிறகுகூடவா மனசு துணியும்? நீங்கல்லாம் இந்த அக்ரமத்தெ பாக்காமெ ஏதோ இங்குதான் சொர்க்கம் இருக்குன்னு ஏமாந்துவந்து விழுந்துட்டீங்க. கொழந்தையானு மட்டும் இப்போது குடுக்கற பழக்கந்தானேம்மா கடைசிவரைக்கும் வரும். ஒரு கதை சொல்வாங்களே, அது தெரியுமா!

பெத்ததாயாரே குழந்தை சிறுவயதில் திருடுவதைப் பழக்கினாளாம். அவனுக்கு அந்த தொழிலே இந்திரப் பதவியாகத் தோன்றியதாம். வயது வந்த பிறகும் திருடி அகப்பட்டுக்கொண்டபோதுதான் அவனுக்குப் புத்தி வந்ததாம். தன் தாயாரால்தானே தான் இந்தநிலையை அடைந்தோம். பெத்த தாயாரா இப்படிச் செய்வாள் என்று கண்கலங்கினனாம். அப்புறம் கேடி. திருடன். அயோக்யன் என்கிற பெயர்களைச் சம்பாதித்த பிறகு என்ன தான் வருந்தி என்ன பயன்?. அதுமாதிரிதானே என் குழந்தையின் கதியும் ஆகும். உங்கப்பா உங்களை அழைத்து வரும்போதே நான் இந்த கதையைத் தான் நினைத்துக்கொண்டேன். ஏதோ உங்கம்மா செய்த புண்ணியந்தான் நீங்கள் இம் மட்டுடன் தப்பியது... அழாதேம்மா! போ! வீட்டுக்குப் போ! உன்னைப் பிடித்த சனி தொலைந்ததென்று போ...

என்று சொல்லச் சொல்ல மல்லிகாவின் உள்ளம் இன்னதென்று விவரிக்க வியலாத குழப்பத்தை யடைந்து தவித்தது. மறுபடியும் உள்ளே

ஓடி நடிகையின் காலில் விழுந்து கெஞ்சலாமா என்று ஒரு சமயம் நினைத்தாள். அவள் வெகு துச்சமாய் தூக்கி எறிந்தது போல் பேசியதை எண்ணிச் சற்று தயங்கிய சமயம் நடிகை மீண்டும் அங்கு வந்து "ஏண்டா! இன்னும் நீ அனுப்பாமல் என்ன ராமாயணம் பேசுகிறாய்...ஏண்டீ! நீலித்தனம் செய்து அழுது சாகசம் பண்ணுகிறாய்! சீச்சீ! வெளியேபோ! மூதேவி! நீ கம்பெனியில் கால்வைத்த வேளை செட்டியாருக்கு எதிர்பாராத பெருத்த நஷ்டம் உண்டாகி ஒரு படத்தின் அசல் நெகட்டிவில் நேற்று தீப்பிடித்து எரிந்துவிட்டதாம். அவர் அதை இப்போதுதான் டெலிபோனில் சொல்லி அழுகிறார். அன்று உன் தாயார்தான் தியேட்டரில் தீப்பிடித்துவிட்டதாகப் பொய் வதந்தி கிளப்பியிருக்கவேண்டும். அதற்கு அவள்மீது வழக்குத் தொடுத்து அந்த அல்ப நாயை சந்தியில் இழுத்துச் சிரிக்கவடித்து சிறைச்சாலையிலடைக்க செட்டியார் துடிதுடித்தார். நீங்கள் ஏதோ நடித்துப் புரட்டப்போவதாக எண்ணிப் பேசாமலிருந்தார். உங்கள் பவிஷுக்கு அழுகையும் ஆர்ப்பாட்டமும் வேறு! போ!...முதலில் இந்த இடத்தை விட்டுப் போய்விடு உம்...என்று கூறியவாறு அவள் கழுத்தைப் பிடித்துத் தள்ளிக்கொண்டு வந்து வீதியில் தடாரென்று தள்ளினாள் "அடாடா! இத்தனை பரிசுகளைப் பெற்ற மல்லிகா அப்படியே தீயில் குதித்தது போன்ற அதிர்ச்சியும் மனக்கொதிப்பும் துடிப்பும் உண்டாகி தள்ளாடித் தடுமாடி நடக்கவாரம்பித்தாள், அவளுடைய அயோமயமான நிலைமையை வர்ணிக்கச் சாத்தியமேது?



## 13

மறுநாள் இரவு எட்டுமணி சுமாருக்கு டெலிபோன் மணியடித்தது, கஸ்தூரியே ரிஸீவ் செய்தாள். அன்று செட்டியார் வீட்டில் கஸ்தூரி பார்த்த டாக்டர் டெலிபோனில் கூப்பிட்டு, தான் இன்னார் என்பதை அறிவித்துப் பேசவாரம்பித்ததைக் கேட்டு கஸ்தூரி வியப்புடன் “ஆம்! தங்களை மறக்கவில்லை. என்ன சமாச்சாரம்?” என்று பதறியவாறு கேட்டாள்.

டாக்டர் “அம்மணீ! எந்த விஷயமும் ஒரு பக்கம் நன்மையும் ஒரு பக்கம் தீமையுமாக அமைவதுதான் உலகத்தில் பெரும்பாலும் நடக்கும் விஷயமாகும். உங்கள் மனத்தின் விருப்பப்படி நடக்க மறுத்த உங்கள் மூத்த மகள் மல்லிகாவை பகவானே உங்கள் விருப்பப்படி நடத்த முன் வந்திருக்கிறார். இன்று நான் காரில் ஒரு தெருவு வழியாக வரும்போது உங்கள்பெண் நடுத்தெருவில் விழுந்துகிடந்தாள். அவளைச்சுற்றி வேடிக்கை பார்க்க கூட்டம்கூடி கார் போக இடமில்லாதிருப்பதைக் கண்டு காரை நிறுத்திப் பார்த்ததில் உங்கள் பெண்தான் என்பதையறிந்தேன்.

உங்கள் வீடு விலாஸம் எனக்குத் தெரியாததால் உடனே அவளை ஆஸ்பத்திரிக்குக் கொண்டுபோய் சிகிச்சை செய்து மயக்கம் தெளிய வைத்து விசாரித்ததில் அவளை அலக்ஷியப்படுத்தி தள்ளிவிட்டதால் இப்படி மூர்ச்சையாகிவிட்டதாகக்கூறிப் புலம்புகிறாள். ப்ராணபயம் ஏதும் இல்லை. தாங்கள் “மீனாக்ஷி” ஆஸ்பத்திரிக்கு ஒரு டாக்ஸியுடன் வந்தால் பெண்ணை அழைத்துப்போகலாம். அவள் மனது இன்னும் திரும்பவில்லை. நடிக்கவேண்டுமென்கிற பிடிவாதந்தானிருக்கிறது. போகப் போக பார்க்கலாம். உடனே வரவும்.”

என்று சொன்னதைக் கேட்டதும் கஸ்தூரியின் இதயத்தில் அவளையறியாத ஆனந்தம் தேங்கியது. உடனே தனது சமைல்காரனின் உதவியால் டாக்ஸி யமர்த்திக்கொண்டு ஆஸ்பத்திரிக்கு ஓடினாள். டாக்டர் மிகவும் மரியாதையாக வரவேற்று மல்லிகா படுத்திருக்கும் இடத்திற்கு அழைத்துச் சென்றார். தாயாரைப் பார்த்த உடனே மல்லிகா குப்புறப்படுத்து கேவிக் கேவிப் புலம்பவாரம்பித்தாளேயன்றி வந்தவளைப் பார்க்கக்கூட இல்லை.

கஸ்தூரிக்கு மல்லிகாவிடம் வற்புறுத்திப் பேசவும் அவளைப் பின்னும் கலங்கவைக்கவும் பிடிக்காததால் டாக்டரிடம் தனித்துச் சென்று சகல விஷயங்களையும் கூறினாள். இது கேட்ட டாக்டர் வியப்படைந்து, “ஹா... கடவுளின் திருவருள் ப்ரகாசத்தை என்னென்பேன்? தாயே! மகா மானியும் குலவதியுமான உங்கள் மனம் குளிரும் பொருட்டே இத்தகைய சோதனையை பகவான் உண்டாக்கியிருக்கிறார். பாரிசவாயுவு சம்மந்தப் பட்டமட்டில் இங்கிலீஷ் வைத்தியத்தைவிட நாட்டு வைத்தியம்தான் அதிக சீக்கிரம் குணப்படுத்தும். நீங்கள் இதையே ஒரு முகாந்திரமாகக்கொண்டு அவரைக் கிராமத்திற்கு அழைத்துச் சென்று சரியானபடி வைத்தியம் செய்து, முடிந்தால் அங்கேயே சிலகாலம் தங்கிவிடுங்கள். பெண்களுக்கும் சரியான இடத்தில் தாமதிக்காமல் உடனே விவாகத்தைச் செய்து புத்தியை மாற்றிவிடுங்கள். நான் உங்களுக்குத் தெரியாத விஷயத்தை உபதேசம் செய்வதாக நினைக்கக்கூடாது.

என்னுடைய இந்த வைத்தியத் தொழிலில் நானும் என் மனைவியும் அறிந்துகொண்ட அனுபவம் கூறத்திறமில்லை. எத்தனையோ உயர்ந்த நோக்கத்துடன் கொண்டுவந்த சாரதாசட்டத்தின் மகிமையறியாது சிலர் கல்யாணத்தை வேண்டுமென்றே 14–வயது சட்டத்தையும் தாண்டி 20–25...என்று தள்ளிப்போட்டுச் செய்வதில் அப்பப்ப! வாயினால் சொல்வதற்குக்கூடக் கூசுகிறது. அத்தகைய விபரீதங்கள் அனேகமாகப் பணக்

காரர்களின் வீடுகளில்தான் அதிகம் நடக்கின்றன. போதாத குறைக்கு பொன்னியம்மன் குறையாய் இந்த எழுவெடுத்த சினிமாவும் ஒன்று புகுந்து உலகத்தையே நாசம் செய்கின்றது. இத்தகைய பேராபத்துக்களில் அகப்படாமல் தப்பித்துக்கொள்பவர்களுக்குத்தான் நல்ல காலம்' என்று ப்ரஸங்கம்போல் கூறினர்.

இதைக்கேட்ட கஸ்தூரியின் உள்ளம் பூரித்தது. "டாக்டர்! முன் பின்னறியாத என்மீது இத்தனை க்ருபைசெய்து உதவியதற்காக நான் என் மனமார்ந்த வந்தனத்தைச் செலுத்துகிறேன். நான் என்றென்றும் இந்த உதவியை மறக்கமாட்டேன்! நான் போய்வருகிறேன்" என்று வந்தனம் செய்துவிட்டு உத்திரவு பெற்றுப் பெண்ணையும் அழைத்துக்கொண்டு வீட்டிற்கு வந்தாள்.

## 14

இளைய குமாரி, தாயைப் பார்த்தவுடனே அடக்காத துக்கத்துடன் அழுது மன்னிப்பு கேட்டதுபோல் மல்லிகா ஏதும் கேட்கவோ பேசவோ இல்லை. தகப்பனரைக்கூட தனித்துப் பார்க்க மனதுசகிக்கவில்லை. படுத்த வள் படுத்தவளேதான். கஸ்தூரியும் "அம்மா! தாயே!" என்று பேச வில்லை. முற்றிலும் மவுனமும் புலம்பலுமாக அன்று கழிந்தது.

வாஸுதேவனுக்கு கை கால்கள் விழுந்துவிட்டன. நினைவும் சரி யாக இல்லை. ஏற்கெனவே கடிதமெழுதியதற்கும் தன் தம்பி பதில் போடாததால் கஸ்தூரியின் மனது வருத்தத்தால் முறிந்தது. இச்சமயம் நாம் கனகசபைக்குக்கடிதமெழுதினல் மிகவும் உபகாரமாயிருக்கும்என்று தோன்றியதால் 10 ரூபாய் மணியார்டர் செய்து விவரமாகச்செய்தியை விளக்கி உடனே வரும்படி எழுதினள்.

வாஸுதேவனுக்குப் பாரிசவாயு வந்துவிட்டது; பிழைப்பானே போய் விடுவானே என்கிற விஷயம் காற்றுபோல் பரபரப்பாய் ஊரெல்லாம் பறந்த க்ஷணமே முதலில் வீட்டுக்காரன் விஜயம்செய்து 'குடித்தனம் வந்தது முதல் இன்னும் குடிக்கூலி ஒருமாதங்கூட் கொடுக்கவில்லை. ஏதோ பெரிய மனுஷன். பெரிய இடத்து சகவாசமாயிற்றே வராமலா போகும் என்று நம்பி இருந்துவிட்டேன். இப்போதுதான் சகல ஆடம்பரமும் வெறும் போல் என்று தெரிகிறது. முதலில் குடிக்கூலிப்பணம் 300 ரூபாயைக் கீழே வைத்துவிட்டு மறுகாரியம் பார்க்கலாம்" என்று வீதியில் கட்டுப் பாடுடன் கூட்டம் கூடிவிட்டான்.

ஏரியிலோ, ஆற்றிலோ உடைப்பே இல்லாதவரையில் தண்ணீர் அப்படியே தேங்கி நிற்கிறது. சிறு த்வாரமோ, வெடிப்போ, உடைப்போ உண்டாகிவிட்டால் தண்ணீர் மடமடவென்று வெளிக்கிளம்பிவிடுவது வெகு சகஜமல்லவா! அதே போலத்தான் வாஸுவின் குடும்பமும் பல ஓட்டைகள் எடுத்துக்கொண்டு குடும்பத்தின்குட்டும் கண்ணியமும் மானமும் வெளியேறலாயிற்று.

நடிகை வீட்டில அட்டகாஸமாய் நிமிடத்திற்கு ஒருவிதமான பக்ஷண பலகாரங்களையும், பானவகைகளையும் வரவழைத்துக்கொடுத்து அந்த நடிகையையும், செட்டியாரையும், காக்காய்பிடிக்க எண்ணித் தடபுடல் செய்ததெல்லாம் ஓட்டல்காரன் மேல்பூச்சில் மயங்கிக் கொடுத்துவந்தான். இந்த நடிகக்கூட்டத்தினரே இந்த புரசலை ஓட்டல்காரனிடம் தெரிவிக்க உடனே அவன் தனது பில்சகிதம் கஸ்தூரியின்மீது படை எடுத்தான். தொகை என்ன சாமான்யமா! 250-ரூபாய் வரையில் அவர்கள் வயிற்றில் கரைந்திருக்கும் வயிற்றெரிச்சலைக்கண்டு கஸ்தூரியின் இதயம் கொதித்தது.

கால் சறுக்கிவிட்டதென்பதை யறிந்தவுடனே பலசரக்கு கடைக்காரன் லாண்ட்ரிக் காரன், பெரிய டெய்லர்ஷாப்புக்காரன், துணிக்கடைக்காரன், மின்சாரம், டெலிபோன், அப்பப்பா! கேட்கவேண்டுமா! ஒரே முஸ்தீப்புடன் பலத்த ஆக்ரோஷத்துடன் படையெடுத்துவிட்டார்கள்.

ஏற்கெனவே வீட்டில் வேலைசெய்யும் சிப்பந்திகளுக்குத் தக்க வேலையும் இல்லை. குறித்த சம்பளமும் கொடுக்கவில்லை. அவர்களே நாளடைவில் கஸ்தூரியை நச்சரிக்கவாரம்பித்தார்கள். சமையல்காரன்மட்டும் சற்று நிதானமாகவே இருந்து கஸ்தூரியின் கஷ்டத்தை அறிந்து நடந்துவந்தான் மற்றவர்களும் சமயம்பார்த்து தடபுடல்செய்யவாரம்பித்தார்கள். இத்தனை அலங்கோலத்திற்கும் மூல புருஷன் நினைவு நீச்சில்லாமல் படுத்துக்கிடக்கையில் கஸ்தூரி பாவம்! எந்தவழியில் இந்த பொத்தல்களை அடைக்க முடியும்? மொத்தத் தொகையைப் பார்த்தால் கிட்டத்தட்ட இரண்டாயிரம் ரூபாயிக்கு கடன் இருப்பதைப் பார்த்ததும் அப்படியே இடிந்துபோய் கதிகலங்கிவிட்டாள். இந்த ஆபத்தான நிலைமைக்கு என்ன செய்வதென்றே தெரியாது அவள் இதயம் துடித்தது.

## 15 .

"இத்தகைய ஒரு காலம் என்றைக்காவது வரும்! வரும்!" என்று அவள் மனத்திற்குள்மட்டும் ஏதோ ஒன்று ப்ரதிதினமும் சொல்லிக்கொண்டிருந்ததால் இப்போது நேர்ந்துள்ள விபத்து அவளை உயிர் போகும்படித் திடுக்குறச் செய்யவில்லை. இத்தனை ஆட்டங்களை ஆடும் மனிதன் நல்லதாக நகைகளாவது மனைவியின் உடம்பில் செய்துபோட்டிருக்கிறனா என்றால் அதுதான் இல்லை. இன்றைக்கெல்லாம் இருந்தால் ஒரு நூறுரூபாய் பெறுமான நகைகூட அவள் உடம்பில் கிடையாது. அவள்தான் அந்த ப்ரகஸ்பதிக்கு மிக்க எதிரியாயிற்றே!

கஸ்தூரிக்கு ஒன்றுமே புரியவில்லை. விசனமும் ஆத்திரமும் நெஞ்சை அள்ளுகின்றன. "முற்றும் நனைந்தவர்க்கு ஈரமுண்டோ!" என்பதுபோல் மானம் முற்றும் ஆகாசத்தில் பறந்துவிட்டபிறகு இனி வெட்கமாவது மானமாவது! எல்லாம் வெட்டவெளிச்சமாகிவிட்டது. இந்த மனிதனோ நினைவற்று வாயும் அடைத்துப் படுத்துக்கிடக்கையில் இனி அவரால் என்னதான் நடக்கப்போகிறது? புண்பட்ட கண்ணில் குச்சியும் விட்டாட்டுவதுபோல் அவருக்கு ஒருவேளை உள் நிலைவு இருந்தாலும் இவ்விஷயத்தைக் கேட்டு அலறுவார். அது ஆபத்தில்தான முடியும்...

என்று மிகவும் ஆழமாக யோசனைசெய்தாள். வாசலில் தலைகாட்ட முடியாது ஜனங்கள் இருப்பதைக்கண்டு மனம் உடைந்தவாறு நேரே மீனாக்ஷி ஆஸ்பத்திரி டாக்டருக்கு டேலிபோன்செய்து உடனே வரும்படி கேட்டுக்கொண்டாள். சற்று நேரத்திற்கெல்லாம் டாக்டர் வந்து வீதியிலுள்ள கூட்டத்தைக்கண்டு ப்ரமித்தவாறு அவர்களிடமே விஷயத்தையறிந்துகொண்டு வருத்தத்துடன் உள்ளேவந்தார்.

அவரைப் பார்த்ததும் மிகவும் வருத்தத்துடன் கஸ்தூரி தனது சகல நிராதரவான நிலைமையைக்கூறிக் கண்ணீர்விட்டுக் கதறி "எனக்கு இந்த ஆபத்திலிருந்து தப்பிப்பிழைக்கத் தாங்கள்தான் என்னை உடன்பிறந்த சகோதரி என்று எண்ணி இச்சமயம் ஆதரிக்கவேண்டும். கடன்காரர்களிடம் நான் காலணவுக்கு கையை நீட்டி வாங்கவில்லை. பாழாய்ப்போன நாகரீகமும் ஆடம்பரமும் ஒன்றுசேர்ந்த விபரீதத்தில் அவர் செய்துவிட்ட சதி எனக்கு ஒன்றுமே தெரியாது என்று நான் ஒரே சாதனையாக சாதித்துவிடலாம். ஆனால் என் கணவனும் பெண்களும் செய்த இக் காரியத்திற்காக வீணாக அவர்களை வாயிலடித்து வயிறெரியச்செய்தால் என் குடும்பம்



மின்னும் நசித்துவிடும். என் மனச்சாட்சி என்னைக் குத்துகிறது. ஆகையால் தங்களிடம் நான் கோருவது ஒரே ஒரு உதவிதான். இதோ! இந்த நகைகள் என்னிடமிருக்கின்றன" என்று கூறியவாறு அவள் உடம்பிலிருந்த நகைகளை அலக்ஷியமாகக் கழட்டி அவர் காலடியில் வைத்தாள்.

எதையோ எண்ணியவளாய் மல்லிகாவிடம் போனாள். அவள் சம்மதத்தைச் சற்றும் எதிர்பாராமல் அவள் உடம்பில் இருந்த நகைகளை தடதடவென்று உரிஞ்சிக்கொண்டுவந்து அதையும் டாக்டர் காலடியில் போட்டாள். உள்ளே பெட்டியிலிருந்த வெள்ளிப்பாத்திரங்கள், புதிய உடைகள் முதலிய சகலத்தையும் அவர் முன்பு கொண்டு போட்டுவிட்டு "டாக்டர்! இத்தனைதான் என்னிடமிருப்பது அந்த மகாபாவி கடிகை அக்ரமமாக இந்த சின்ன பெண்ணின் நகைகளைக் களவாடுவதற்கொப்பப் பறித்துக்கொண்டாள். வேணும்! வேணும்!! நன்றாகவேணும்!!! இவர்களாடிய நாடகத்திற்கு இதுதான் தக்கபரிசு, எனது ப்ரதிக்ஞையின் ப்ரதிபிம்பம் அதுதான். இம்மாதிரி ஒரு அதிர்ச்சி வந்தாலன்றி இவர்கள் உருப்படமாட்டார்கள் என்பது என் மனமறிந்ததுதான். ஆகையால் இந்த பொருள்களை அவர்களிடம் கொடுத்து ஒருவிதமாக மத்யஸ்தம் செய்து எங்கள் மானத்தைக் காப்பாற்றவேண்டும்!" என்று காலில்விழுந்து கெஞ்சினாள்.

இதைக்கேட்ட டாக்டரின் மனது உருகியது. "என்னதான் இருப்பினும் மதிகெட்டுப்போய் குருட்டு நம்பிக்கையில் இப்படிப்பட்ட காரியத்தை புருஷன் செய்துவிட்டால் ஒருபெண் எப்படித்தான் சமாளிக்கமுடியும்?



ப்ரதிக்ஞை

இதே சங்கடங்களை இன்றும் அனேக வீடுகளில் காண்கிறோம். சிலர் புருஷன் செய்துவிட்ட அக்ரமத்திற்கு என்னை ஏன் கேட்கவேண்டும் என்று கண்டிப்பாய்க் கூறிவிடுகிறார்கள். சிலர் மானத்திற்கும் மனச்சாட்சிக்கும் அஞ்சிப் பயந்து நடக்கிறார்கள். இதே கதியில் பல குடும்பங்கள் அதோ கதியாகிவிடுகின்றன. உம்." என்று எண்ணியவராய் கீழே வைத்துள்ள சொத்துக்களைக் கவனித்துப் பார்த்தார்.

"கடன் தொகைக்கும் இதற்கும் கால்பங்குகூட ஈடாகாதே! எப்படி இதை ஒப்புக்கொள்ளச் செய்வது?" என்று கலங்கினார். அவர் மயங்குவதை முகஜாடையாலறிந்த கஸ்தூரி, "டாக்டர்! தாங்கள் தியங்குவதை நானும் உணர்கிறேன். இதோ! இந்த பத்திரத்தைத் தங்களிடம் ஒப்படைக்கிறேன். எனது தாயார் எனக்கு மஞ்சள் காணியாகக் கொடுத்தது இது. இதில் வரும் வருமானத்தை வருஷா வருஷம் எனக்கு என்தம்பி அனுப்பிவந்தான்.

என் கணவர் செய்யும் அக்ரமங்கள் அவர்களுக்குப் பிடிக்காமல் வரும்படியைக் கொடுக்காமல் நிறுத்திவிட்டார்கள். நான் எப்படியாவது என் தம்பியின் காலில்விழுந்து கெஞ்சி இந்த நிலத்தை அவனுக்கே விக்ரயம் செய்து பணத்தைவாங்கி உங்களுக்கு அனுப்புகிறேன். அதுவரையில் இந்த பொருள்களைப் பங்கிட்டுக்கொடுத்து சற்று பொறுத்துக்கொள்ளும்படிக்குச் சொல்லி சமாதானம் செய்யவேண்டும்." என்று வேண்டினாள்.

மிகவும் பெரிய மனிதரும் தாராள சிந்தையையுடையவரும் மகா ஒழுக்கமும் சீலமும் உடையவருமான டாக்டர் சமயோசிதம்போல் பேசி கடன்காரர்களுக்குத் தான் முன்நின்று கடனைத் தீர்ப்பதாயும் அதுவரையில் பொறுத்துக்கொண்டு மன்னிக்கும்படியும் கேட்டுக்கொண்டு இந்த பொருள்களை விற்று சிறுசிறு தொகையைக் கொடுப்பதாயும் கூறி அவர்களைச் சமாதானப்படுத்தினார்.

அவ்வூருக்கே அந்த டாக்டர் மிகவும் முக்யஸ்தராகையால் அவருடைய தயவும் சிநேகமும் அத்யாவச்யமாகத் தோன்றி எல்லோரும் அவருடைய வார்த்தைக்குக் கட்டுப்பட்டு ஒப்புக்கொண்டு சென்றார்கள். கடவுள் தான் இந்த சமயம் டாக்டர் மூலமாகத் தனக்கு உதவி புரிந்தார் என்கிற ஆச்சரியமும் ஆனந்தமும் கஸ்தூரியின் இதயத்தில் பொங்கின. அதே உணர்ச்சியில் அவள் உள்ளம் மெய்மறந்தது.

## 16 .

மேலும் இரண்டு நாட்களாகிவிட்டன. டாக்டரின் உதவியால் கஸ்தூரி நோயாளி கணவனையும் பெண்களையும் அழைத்துக்கொண்டு முன் கூறியபடி க்ராமத்திற்குக் கிளம்பினாள். சினிமா ராணிகள், ராஜாக்கள் ஆகியவர்களின் படங்களை பெரிய பெரிய அளவில் ரோட்டுகளிலும் சுவர்களிலும் கம்பங்களிலும் ரயில்வேஸ்டேஷன்க்ளிலும் நிறுத்தியிருப்பதைக் கண்ட கஸ்தூரி அவைகளைத் தன்னிரு பெண்களுக்கும் காட்டி "மூடப் பெண்களே! இதோ சந்திசிரிக்கும் கண்ராவிகளைப் பாருங்கள். நன்றாகப் பாருங்கள். வண்டியை நிறுத்தச் சொல்லிப் பாருங்கள். "மானமற்று நடிக்கவந்த பிணங்களே!...மானத்தை விலைக்கு விற்கும் அற்பப் பேய்களே!"...என்று படத்தின் மேலேயே எந்த சோதாவோ கரியால் எழுதியிருப்பதை நன்றாகக் கண்ணைத் திறந்து பாருங்கள். அதோ! உங்களைக் குட்டிச்சுவரடித்த சண்டாளி, வஸுமதியின் படத்தில் என்ன அலங்கோலம் பாருங்கள். சாணி உருண்டையை அதன்மேல் அறைந்திருக்கிறது. ஒரு கண்ணை நோண்டி பொத்தலாக்கி அதிலும் சாணியை உருட்டிவைத்திருக்கும் வயிற்றெரிச்சலைப் பாருங்கள். என் வயிற்றெரிச்சல் தீரப் பாருங்கள். அதோடா விட்டார்கள்? அடி பேமானீ! நீ உயர்ந்த குலத்தில்

பிறந்ததென்ன ! இப்படி அரை நிர்வாண உடையில் சந்தி சிரிப்பதென்ன தூத்து ! நாக்கைப் பிடுங்கிக்கொண்டு சாகலாமே... என் ராசாத்தி என்ன அழகா நிக்கரா !... என்றெல்லாம் கறியாலும் கலர் சாக்குகளாலும் எழுதி யிருப்பதைப் பார்த்தீர்களா !

அதோ பாருங்கள் ! இன்னொரு நடிகையின் படத்தில் முகம் பூராவும் கரியைப் பூசியிருக்கிறது...போதுமா! மானபங்கம். நானும் ஒரு காலத்தில் சினிமாவைப்பற்றி சற்று உயர்வாகத்தான் எண்ணி அது ஒரு உயர்ந்த கலை என்றும் ஒரே குடும்பத்திலுள்ளவர்கள் விரஸமின்றி ஆபாஸமின்றி கண்ணியமாக நடித்தால் என்ன ? உத்தமமான கம்பெனி முதலாளியும் ஒழுக்கமுற்ற தொழிலாளிகளும் அமைந்தால் இஷ்டமிருப்பவர்கள் நடிப் பதில் குற்றமென்ன !" என்றுகூட எண்ணினேன்.

நாளடைவில் நான் எண்ணியது மிகவும் முட்டாள்தனம் என்பதை வெகு தெளிவாகத் தெரிந்துகொண்டேன். விஷத்தைத் தெரிந்து குடித் தாலும் மரணம். தெரியாது குடித்தாலும் மரணந்தான். அதேபோலத்தான் சினிமாவின் இன்றைய கதியும் ஆகிவருகிறது. அதிலும் எங்கோ நூற்றுக்கு ஒன்று ஒழுங்காக நடப்பதாகத் தெரிகிறது. அதுவும் எம்மட்டும் நிஜமோ !

சினிமாவில் நடித்தவர்கள், சம்பந்தப்பட்டவர்கள், வாயினுலேயே அதன் ஊழல்களை நான் நேருக்குநேர் அறிந்த பிறகுதான் அதை இத்தனை மும்முரமாக வெறுத்து எதிர்த்தேன். ஏதோ எனது நல்லகாலந்தான் உங் களுக்கு இம்மட்டுமாவது விமோசனம் கிடைத்தது. நீங்களும் நடித்திருந் தால் உங்கள் கதியும் இப்படித்தான் சந்தி சிரிக்கும். மல்லிகா இன்னமும் மவுனமே சாதிப்பதால் அந்த ஆபாஸ ஆசை இன்னமும் விட்டொழிந் ததாகத் தெரியவில்லை. இந்த கோராமையைப் பார்த்த பிறகாவது தெரி யட்டும்."

என்று பெரிய ப்ரஸங்கம்போல் வண்டி நெடுகலும் இதே வார்த்தை களைக் கூறியவாறு வந்தாள்... இதற்கு எந்த பெண்ணும் பதில் சொல்ல வில்லையென்றாலும் முகத்தில்மட்டும் பலவிதமான மாறுதல்கள் உண்டாகி யதை கஸ்தூரி அறியாமலில்லை. உள்ளுக்குள்மட்டும் நினைவு சிறிது இருக் கும் வாஸுதேவனின் மனம் கலங்குகிறது. ஆனல் சொல்வதற்குப் போதிய சக்தியுமில்லை, வாயும் இழுத்துவிட்டது. தான் மிகவும் முட்டாள்தனம் செய்து மனைவியை வெகு கடுமையாகத் தாக்கிவிட்டோம் என்கிற உணர்ச்சி அடி இதயத்தில் லேசாகப் படரவாரம்பித்த வேகத்தில் கண் ணீர் தானகே உதிர்ந்தது. அதைக் கண்ட கஸ்தூரியின் இதயமும் கலங்கியது.

கிராமத்தில் சிறிய ஓட்டு வீட்டில் கஸ்தூரி குடியேறினுள். அவள் மகா முன்யோசனைக்காரியாகையால் தான் சேர்த்துவைத்திருந்த 25 ரூபாயைக்கொண்டு புதிய குடித்தனமும் கணவனுக்கு நாட்டுவைத்தியமும் ஆரம்பமாயிற்று. கனகசபை இவர்களின் கஷ்டகாலத்தையறிந்து ஒரு மூட்டை அரிசியும் புளியும் கொடுத்து உதவினுன்.

அன்னியரான டாக்டரும் ட்ரைவரும் தனக்கு உதவிசெய்யும் அளவு கூடத் தன்னுடன் பிறந்தவன் செய்யவில்லையே ! அவன் மனமென்ன கல்லா ! இரும்பா ! என்று வெறுத்தாள். இருப்பினும், தான் நேராகச் சென்று அவனிடம் உள்ள நிலைமையைக் கூறி உதவியைக் கோரிப் பார்த்துவிடுவது என்று எண்ணியவளாய் கனகசபையை இங்கு காவ லுக்கு வைத்துவிட்டுத் தான்மட்டும் வெகு தைரியமாகத் தம்பியின் ஊருக் குப் பிரயாணமானுள். தான் தனித்துச் செல்வதை எண்ணி அவள் மனமே வியப்புற்றது.

# 17

இத்தனை துன்பங்கள் வந்தபிறகு சம்பகாவின் மனம் அணுவணுவாக முற்றிலும் மாறுபட்டுத் தன் தாயின் தவிப்பையும் உணர்ந்து தங்களால்தானே இவ்வாறு உண்டாகியது என்கிற மகத்தான துக்கமும் உணர்ச்சியும் உண்டாகி வருத்தவாரம்பித்தன.

தன்னால் நொந்துபோன தாயாரின் மனத்தை எப்படித்தான், தான் திருப்பமுடியும்? என்ன விதமான பாடுபட்டால் அந்த தூய உள்ளத்தின் துடிப்பை மாற்றிக் களிப்பை யூட்டலாம் என்கிற போராட்டம் அவள் உள்ளத்தில் ஊடுருவிப்பாய்ந்து மகத்தான மல் யுத்தம் செய்யும் சமயம் இவர்கள் சற்றும் எதிர்பாராத விதம் கஸ்தூரியும் அவள் தம்பியும் வந்து சேர்ந்தார்கள்.

மாமன் முகத்தில் விழிக்கவே வெட்கித் தலைகுனிந்த சம்பகா வெளியே வரவேயில்லை. மல்லிகா ஒரே மவுனயோகத்தை அனுஷ்டிப்பதைத் தவிர வேறு பேச்சே கிடையாது. ஒரு வேளை சித்தப்ரமைபிடித்துவிட்டதோ அல்லது அழுமூஞ்சுப்பிசாசு பிடித்துவிட்டதோ என்று மகத்தான சந்தேகம் உதிக்கும் வண்ணம் வெறும் உணர்ச்சியற்ற கட்டைபோலிருந்தாள்.

கஸ்தூரி தம்பியின் உதவியால் டாக்டருக்கு முதலில் பணத்தையனுப்பிவிட்டு மறுகாரியம் செய்தாள். கஸ்தூரியின் தம்பி கந்தஸாமிக்கு ப்ரமாதமான உத்யோகம் எதுவுமில்லை யெனினும் அவன் தன் ஊரில் மிகவும் கண்ணியமான முறையில் மதிக்கப்பட்டு வந்தான். அக்காவின் குடும்பத்தின் சிதைவைக்கண்டு மனமுருகியபோதிலும் தன் தமக்கையின் புருஷனுக்கு இத்தகைய கடுந்தண்டனை வேண்டும் ! வேண்டும்! என்றே நினைத்தான்.

"அக்கா ! போனதுபோகட்டும். இனிமேல் புதிய ஜென்மமெடுத்தது போல் புதிய வழியைத்தேடி நடப்போம். நீ என்னிடமே வந்துவிடு. இனி இந்த பெண்களை அரைக்ஷணங்கூட விவாகமில்லாது வைக்கக்கூடாது. எனது மைத்துனன் கண்ணனுக்கு ஒருத்தியையும் நம்ப குமாரஸாமிக்கு ஒருத்தியையுமாகக்கொடுத்து எப்படியும் விவாகத்தை உடனே செய்துவிட வேண்டும். இருவரும்இரண்டாந்தாரக்காரர்களாயிருப்பினும் பரவாயில்லை. இந்த மூதேவிகளின் ஊழல் ஊரில் பரவுவதற்கு முன்பு கட்டிவிட்டால் பிறகு பார்த்துக்கொள்ளலாம். நான் இப்போதே அதற்கான ஏற்பாட்டைச் செய்கிறேன். என்ன சொல்கிறாய் ?" என்று ரகஸியமாகக் கேட்டான்.

"உனக்கு முன்பே இம்மாதிரி முடிவு செய்துவிட்டேன் தம்பி ! நான் மகாபாவியாகையால் உலகத்தவரைப்போல் நல்ல ப்ரம்மச்சாரிக்கு கன்னியாதானம் செய்துகொடுத்துச் சந்தோஷமடையக் கொடுத்து வைக்கவில்லை. இரண்டாந்தாரமோ மூன்றாந்தாரமோ எந்த மகானுபாவனாவது வந்து கட்டிக்கொண்டு போனால் போதும். என்னைப்பிடித்த சோதனை காலத்தின் இருள் இதோடு நீங்கி ஒரு திவலைப்ரகாசமாவது வாழ்வில் உண்டான பிறகுதான் நான் இரு வேளையும் போஜனம் செய்வது, அதுவரையில் ஒரு வேளையே புசித்து விருதம் அனுஷ்டிப்பது என்கிற ப்ரதிக்ஞை செய்துகொண்டிருக்கிறேன். ஆகையால் நீ எதற்கும் இனி யோசிக்காமல் விவாகத்தை முடித்துவிடு." என்று அழுத்தமாகக்கூறினாள்.

அன்றே வரனுக்குக் கடிதம் பறந்தது. இரண்டு நாட்களுக்கெல்லாம் "சினிமாச்சாக்கடையில் விழுந்து புரண்ட நாற்றக்குப்பையை மணக்க நான் தயாராயில்லை." என்கிற பதில் சுடச் சுட வந்ததைக்கண்டு கஸ்தூரியின் மனது துடித்தது. "இதற்குள்ளாகவா இத்தனைதூரம் பரவிவிட்டது என்று நினைக்கும்போது அவள் இதயம் வெடித்துவிடும்போலாகியது. கஸ்

தூரியின் மனக்கலக்கத்தையறிந்த கனகசபை தானாகவே வலியச்சென்று "சகோதரீ! நாம் இருவரும் அன்னிய ஜாதிக்காரர்களல்ல. ஒரே ஜாதியான தால் உங்கள் மனக்கவலையைத்தீர்க்க நான் சம்பகாவை எனதுவாழ்க்கைத் துணைவியாக ஏற்றுக்கொண்டு என்னாலான உதவியைச் செய்கிறேன். மூத்தமகளையும் நானே எனது மாமனுக்கு நிச்சயம் செய்கிறேன். இது சம்மதமா !" என்று கேட்டான்.

பிறவிக்குருடனுக்குத் திடீரென்று கண்தெரிந்ததுபோன்ற ஆனந்த மும் சந்தோஷமும் கஸ்தூரிக்கு உண்டாயின. "என்னப்பனே! உன்மூலம் என் குடும்ப கண்ணியத்தைக் காப்பதற்காகத்தான் பகவான் அன்று உன்னை அனுப்பினார்போலிருக்கிறது. உன்னைக்கேட்கவும் நினைத்தேன்; ஆனால் அச்சத்தால் பின்னடைந்தேன். இதோ ! இப்போதே உன்னிஷ்டப் படிச் செய்துவிடு' என்றாள்.

கனகசபை பரம த்ருப்தியுடன் மாமனைக் கண்டு பேசி முடித்து அழைத்துவருவதாகச் சென்றான். கஸ்தூரியின் இதயத்தையழுத்திவந்த பெரும் மலைபோன்ற கனம் சற்று குறைந்ததாக அவளுக்குத் தோன்றியது.

## 18

நடிகையின் வீட்டைவிட்டு வந்து இத்தனை நாளாகியும், குடும்பத்தில் இத்தகைய பரிதாபச்சம்பவங்கள் நடந்திருந்தும் மல்லிகாவின் மவுனம் கஸ்தூரியின் வியப்பைக் கிளறியது. இதுபரியந்தம் அவளைப்பற்றி அக் கரையாகக் கவனிக்காமல் வெகு அலக்ஷியமாயிருந்தவள் இப்போது மிக வும் அக்கரையுடன் கவனிக்கத் தொடங்கினாள். தானாக வலுவில் பேச்சுக் கொடுப்பதும், தானே ஆகாரத்தைப் போடுவதுமாகவாரம்பித்து சில தினங்கள் கவனித்த கஸ்தூரியை அப்படியே அக்கினி குண்டத்தில் தூக்கி எறிந்ததுபோன்ற சகிக்கமுடியாத சங்கடம்உண்டாகியது..."ஐயோ! தலைவிதியே ! நான் எதை நினைத்து இடிந்துபோனேனோ, அதே பாம்பு தன் முழுபலத்துடன் கடித்து விஷத்தைப் பூராவையும் கக்கிவிட்டதே...கட வுளே! எனக்கும் விமோசனம் உண்டாகும் காலம் வந்துவிட்டது என்று நினைத்து மகிழ்வதற்குள்ளேயே அதை அடியோடு வெட்டி வீழ்த்தி ஆழ மான பள்ளந்தோண்டிப் புதைத்துவிட்டாயே ! இதுதானா ! உன் கருணை ! இதுதானா உன் தயாளம் !...ஐயோ ! பாவிப்பெண் தலையில் பாறையைப் புரட்டிவிட்டாளே !"...என்று அப்படியே துள்ளிப் புரண்டு மூர்ச்சையாகி விழுந்தாள். இதைக்கண்ட சம்பகாவுக்கு ஒன்றுமே தோன்றாது தலை கிறு கிறுத்தது. தாயாருக்கு முகத்தில் ஜலத்தைத்தெளித்து மூர்ச்சை தெளியச் செய்து "அம்மா ! ஏம்மா திடீரென்று இப்படியாகிவிட்டாய் ! என்ன நடந் தது?" என்று கண்கலங்கக் கேட்டாள்.

தெளிந்தெழுந்த கஸ்தூரி மனிதத்தன்மையையேஇழந்து ஒரு காளிகா தேவியைப்போல் ஆவேசத்துடன் எழுந்து..."என்ன நடந்ததா !...பூமி பிளந்துவிட்டது, ஆகாயம் இடிந்துவிட்டது. அக்ரமக்காரப் பாவிகளான சில சினிமாக் கம்பெனிகளின் ஆபாஸமான ஊழல் அம்பு என்னிதயத்தில் தாக்கிவிட்டது.... எங்கே அந்த படுபாவி? எங்கே அந்தக் குலத்ரோகி?"... என்று கர்ஜித்தவாறே மல்லிகாவிடம் சென்று, தலைமயிரைப் பிடித்து இழுத்து அவள் கன்னங்கள் புடைக்க பளார் பளார் என்று அறைந்த வாறே "சண்டாளீ ! பன்றிக்குட்டியுடன் சேர்ந்த கன்றுக்குட்டியும் நரகல் தின்ற கதையைப்போல் உன் கதியும் ஆகிவிட்டதா ! கற்பை இழந்து காரியுமிழும் நிலைமையில் உன்னை நரகக்குழியில் தள்ளிக் கொண்ட மர்மந்தான் இந்த மவுனத்திற்குக் காரணம் என்பதை இப் போது உணர்ந்தேன். சண்டாளீ! கொள்ளிக்கட்டையால் தலையைச்



சொறிந்துகொண்டவர்களின் கதியாகவே உன் கதியும் முடிந்தது...கொலை பாதகி! மானத்தை இழந்த மாயக்கள்ளி! இந்த விஷமூட்டையைத் தாங்கி எத்தனை நாளாகிறது? உண்மையை ஒளிக்காமல் சொல்கிறாயா! உன்னை எத்தனையோ அன்பும் ஆவலும்கொண்டு பெற்றுவளர்த்த இக் கரத்தினாலேயே கொன்றுவிடட்டுமா! ஆம்! கொன்றால் என்ன குற்றம்? மானமழிந்து, மதியிழந்து, கண்ணியமிழந்து சமூகத்தை இழந்து சகலத்தையும் இழந்து பின் இனி நீயும் நானும் வாழ்வதைவிட உன்னையும் கொன்று நானும் சாவதுதான் எனது முடிவாகும். அற்பப்பேயே! என்ன விழிக்கிறாய்! என் சரீரம் பற்றி எரிகிறது. இம்மாதிரியான ஆபத்தும் பயங்கரமும் அவமானமும் இக் கலியின் கொடுமையால் அனேக இடங்களில் நடப்பதாய்க் கேட்டுவந்த எனக்கு இன்று ப்ரத்யக்ஷமாய் பார்க்கும்படி பகவான் செய்துவிட்டார். மகா பாவி! எந்த குடிகெடுக்கும் நாயிக்கு நீ பலியானாய்! உடனே அதைச் சொல்லவில்லை என்றால் ஒரே குத்தில் உன்னைப் பரலோகம் அனுப்பிவிடுகிறேன்...என்னடீ! மவுனம்!! மவுனம்...மாயக் கள்ளிக்கு இனியும் மவுனமா! சண்டாளீ!...

என்று கர்ஜித்தபடியே அருகிலிருக்கும் சம்பகாவை நோக்கி "என் வயிறு செய்த பாபக்கொடுமையால் நீயும் மானங்கெட்டுவிட்டாயா! உண்மையைச் சொல்லு...கடவுளறிய சத்தியமாகச் சொல்லு" என்று சம்பகாவின் தலைமயிரைப் பிடித்து ஜிம்பியவாறு கேட்டாள். சம்பகா மிகவும் அதிர்ச்சியால் தாக்கப்பட்டுப் புலம்பிக்கொண்டே 'அம்மா! கடவுள்

மீது ஆணையாக நான் எவ்விதமான துர்க்ருத்யமும் செய்யவில்லை. அக்காள் என்னையும் தன் வயப்படுத்த எத்தனையோ முயற்சித்தாள். நான் எந்த தெய்வத்தின் கருணையாலோ இணங்காது பிழைத்தேன்' என்று கதறினாள்.

வாயடைத்து பாரிசவாயுவால் விழுந்துகிடக்கும் மனிதனுக்கு இந்த விபரீதங்கள் உள்ளுக்குள் தெரியாமலில்லை. பேச வாயில்லை. எழுந்திருக்க சரீரம் ஸ்வாதீனமில்லை. ஆனால் அவன் மனத்திற்குள் ஆயிரம் வாள் கொண்டறுக்கும் வேதனை செய்கிறது. குமுறுகிறான். தத்துபித்தென்று விழிக்கிறான். மனைவி காளிகாதேவிபோல் தாண்டவம் செய்வதையும் இரு பெண்களும் கொலைக்கைதியைப்போலும் திருட்டுக் குற்றவாளியைப் போன்றும் நிற்பதையும் தலையை நிமிர்ந்து பார்த்தான். உலகமே சுழல்வது போல் தோன்றியதால் மீண்டும் கீழே சாய்ந்தான்.

இந்த நிமிஷந்தான் வாஸுதேவனுக்கு மனதிற்குள் ஒரு புதிய ஞானமும் தீரமான எண்ணங்களும் உண்டாகி அவன் செய்த குற்றங்களை பளிச்பளிச்சென்று எடுத்துக்காட்டின. சினிமாவின்மீது அவன் கொண்டிருந்த மோகத்தின் வேகமும், சில சினிமா என்னும் பெயரால் உள்ள ரௌரவாதி நரகத்தின் பயங்கரங்களும் அக்ரமங்களும். பணம்ஒன்றுதான் ப்ரதானம்; மற்றபடி மானம் கண்ணியம் காற்றில் பறப்பதும் முதலாளிகள் இளம் நடிகைகளின் கற்பை உறிஞ்சும் அட்டைப் புழுகாக விளங்குவதும் நடிகைகளும்நடிகர்களும் ஏதோ மேல் பூச்சாக எழும் ஆசைக்கு அடிமையாகித்தீராத நரகத்தில் விழும் கோரக்காட்சிகளும் அவன் உள்ளத்துக்குள் ஒரு சினிமாப் படம்போலவே ப்ரகாசித்து அவனைப் பின்னும் பலமாகத் தாக்கியது. தன் மனைவியின் ஒவ்வொரு வார்த்தையும் அவன் காதில் கணீர் கணீர் என்று ஒலிக்காமலில்லை. எது ஒலித்து என்ன பயன்? தான் செய்த அக்ரமத்திற்கு பகவான் உடனே பழிவாங்கி வாயை அடைத்துவிட்டது ஒன்றே போதுமே! உத்தமி வயிறெரிந்து இட்ட சாபமும், அவளது ப்ரமாண வார்த்தையின் வீர சக்தியும், அவள் பகவான் முன்பு செய்துகொண்ட ப்ரதிக்ஞையின் கூக்குரலும் தன்னைச் சரியானபடி தண்டித்துவிட்டன... ஆம்! வேணும்! நன்றாக வேண்டும்'' என்று தனக்குள் உணர்ந்து குமுறினான். பேந்தப் பேந்த விழித்தான்.

ஆனால் மகா மானவதியும் சீலவதியுமான கஸ்தூரியின் ஆவேசம் அடங்கும் வழியே இல்லை. தடதடவென்று எதையோ எழுதினாள். அதை உறையிலிட்டு ''இதைக் கனகசபை வந்ததும் கொடுத்துவிடு. சம்பகா! இந்த ப்ரமாதமான அவமானத்தை என்னால் தாங்கமுடியாது. என் அங்கமே அனலாய் எரிகிறது. நீ அவனை மணந்துகொண்டு இனியாவது ஒழுங்காக உலகத்தில் வாழு. உங்களைக் கண்ணால் பார்த்துக்கொண்டே பாழும் கிணற்றில் தள்ளிய உன் தந்தையை நீ கைவிடாது காப்பாற்று. இந்த பாவியின் கர்ப்பத்தைச் சிதைக்கவும் அல்லது பெற்றுவளர்க்கவும் அப்பப்ப! பெண்குலத்திற்கே அழியாத அவமானத்தையும் மாறாத களங்கத்தையும் உண்டாக்கி உயிர்வாழவும் நான் நினைக்கவில்லை.

எந்த கையால் அமுதத்தைப் பருக எண்ணினேனோ! அந்தக் கையால் விஷத்தைச் சந்தோஷமாகப் பருகுகிறேன். ஏதோ கால் தவறி விழுந்ததாக உலகம் நினைக்கும்படி எங்கள் காலத்தை இதோடு முடித்துவிடுகிறேன். உம் தடுக்காதே... இனி இம்மாதிரி ஊழல் குப்பையை மனத்திலும் நினைப்பதில்லை என்று ப்ரதிக்ஞை செய்துகொள்ளு. அந்த ரௌரவாதி நரகத்தைச் சொர்க்கமென்று எண்ணி காலை வைக்க ஆசைப்படுகிறவர்களையும் நீ உன்னுயுள் உள்ளவரையில் தடுத்து இந்த அக்ரமக்

கூட்டத்தின் அடாத செய்கையை பகிரங்கப்படுத்தி அவர்களை உலகம் சிரித்து விலக்கித்தள்ளும்படிக்குச் செய்வேன் என்று ஆண்டவன் முன்பு ப்ரதிக்ஞை செய்துகொள்ளு'' என்று கூறிவிட்டு ரணபத்திரவீர சண்டியைப்போல் வெகு உக்ரகத்துடன் மல்லிகாவின் கரத்தைப்பிடித்து இழுத்துக்கொண்டு தறதறவென்று புறக்கடைப்பக்கம் ஓடினாள்.

அதுவரையில் மவுனம் சாதித்தவள் திடீரென்று "அம்மா! வீணை ப்ரயாஸைப்படவேண்டாம். நான் ஏற்கெனவே விஷம் குடித்துவிட்டேன். இன்னும் சில நிமிஷங்களில் என்னுயிரே போய்விடும். அதுவரையில் கூட இந்த முகத்தில் நீங்கள் விழிக்கவேண்டாம்.'' என்றுகூறி தடாரென்று கிணற்றில் தானே வெகு துணிபுடன் குதித்தாள். உலகம் தலைகீழாகச் சுற்றும் நிலைமையிலுள்ள கஸ்தூரி, "ஆகா! சாப்பிட்டாயா! அத்தகைய சிறந்த புத்தியைக்கூட பகவான் உனக்குக் கொடுத்தாரா!... ஆண்டவனே! இதோ உன் சன்னிதியில், முன்பு நான் என்ன ப்ரதிக்ஞை செய்தேன்? மானம் காத்தால் என் உயிரையும் காத்துவிடு. இல்லையேல் அதையும் ஏற்றுக்கொள்ளு, பலியிடுவேன். என்று ப்ரதிக்ஞை செய்தேனல்லவா! இந்தா! இந்தா! இனி உலகத்தில் இத்தகைய அல்ப நாய்களை ச்ருஷ்டித்து கற்பைக் குடிக்கும் ராக்ஷதப்பதர்களைப் படைத்து குடும்பத்தின் மானத்தைச் சிதறவடிக்காதே...என்று கூறிக்கொண்டே தடாரென்று தானும் குதித்தாள். தண்ணீரில் குமிழிகள் "களக்களக்'' என்ற ஓசை. அவ்வளவுதான். கஸ்தூரியின் மனதும் சாந்தியடைந்தது.

## 19

வருடம் ஒன்றாகிவிட்டது. கனகசபையின் பாதுகாப்பில் வாஸுவுக்கு சற்றுச் குணமடைந்து அரைகுறையாகப் பேசவும் ஒரு கையால் சாப்பிடவும் எழுதவும் சிறிது ஸ்வாதீனம் உண்டாகியது. அவன் வயிறும் இதயமும் குமுறும் குமுறலை பகவான்தான் அறியக்கூடுமேயன்றி மனிதரால் அறியமுடியாது. அவனது மனத்தில் போராடும் பெரும் பாறையை எப்படியாவது இறக்கிச் சற்று பாரம் தீரும் வழியைத் தேடினான்.

முதலில் கஸ்தூரிக்கு உதவிபுரிந்த டாக்டரையழைத்து அவருடைய மகத்தான உதவியால் "ப்ரதிக்ஞை'' என்கிற பெயரில் ஒரு பத்திரிகை ஆரம்பித்தான். கனகசபையும் வாஸுவும் சில சினிமாக்கம்பெனிகளின் ஊழல்களை உள்புகுந்து பார்த்துவந்தவர்களாதலால் தங்கள் மனத்தில் கொழுந்துவிட்டு எரியும் ஆவேசங்களை எழுத்தில் கொட்டியளந்து தமது தாபத்தைத் தணித்துக்கொள்ள ஆரம்பித்தார்கள்.

பத்திரிகையின் வளர்ச்சி முதல் இதழிலேயே தெரிந்து விட்டது. குட்டுப்பட்டுத் தேறியபிறகு புத்தி வருவது எல்லோருக்கும் இயற்கைதானே! அம்மாதிரியானவர்கள் எத்தனைபேர்கள் உண்டோ அத்தனை பேர்களின் உண்மைச் சித்திரங்களுடனும் புகைப்படங்களுடனும் உதவி கிடைத்த பிறகு கனகசபையின் முயற்சி பலமாகச் செழித்தது. சம்பகாவின் ரஸமான அனுபவக்கட்டுரைக்கும் வாஸுவின் அனுபவங்களுக்கும் பொதுமக்களின் ஆதரவும் உத்ஸாகமும் ஏராளமாகப் பெருகியதைக் காண நடிகை வஸுமதியின் வயிறு எரிந்தது. ஆனால் அவள் அன்று பார்த்த ஸ்வர்ணப்பதுமைபோலில்லை. தேகமேங்கும் வியாதியால் பீடிக்கப்பட்ட விகாரத்தோற்றங்கள் ஆஸ்தியாக நிரம்பிவிட்டதால் அவள் இப்போது இருக்கும் இடமே தெரியவில்லை.

'எத்தகைய ஊழல்களையும் பத்திரிகைக்காரர்களும் அரிய ஆசிரியர்களும் சாட்டையடி கொடுத்துக் கண்டிக்க முன்வந்தால் அதற்கே ஒரு தனிமதிப்பும் பெருமையும் உண்டல்லவா! இந்த புனித கைங்கர்யத்தினால்

கூடுமானவரையில் இளம் பெண்களின் கற்பு காக்கப்பட்டு நற்பயனளிக்காதா !'' என்கிற லட்சியத்தையே வாஸு மேற்கொண்டாள். தான்செய்யும் இந்த சேவைதான் தன் தர்மபத்தினி, உத்தமபதிவ்ரதையாகிய மனைவி தெய்வப்பெண்ணுக்கு ஆத்ம சாந்தியை அளிக்கும் என்கிற நம்பிக்கை அவனுக்குப் பரிபூரணமாக உண்டாகிவிட்டது.

ஆயிரக் கணக்கில் அச்சடித்தும் பத்திரிகை போதாமல் 'எனக்கு உனக்கு' என்று ஜனங்கள் பறக்கவாரம்பித்ததே பத்திரிகையின் வளர்ச்சிக்கும் பொது மக்களின் மனத்தைக் கவர்ந்துவிட்டதென்பதற்கும் அத்தாட்சியாயிற்று. உண்மையான விஷயத்தை மேல்நாடுகளைப்போல் தமக்கு நேருக்கு நேராக உரைத்து உண்மையில் சினிமாவினால் சங்கடப்பட்டுப் பிழைப்பே பாழாகி வயிற்றிற்கு இல்லாது தத்தளிக்கும் அனாதைகளுக்கு "கஸ்தூரி அனாதாச்ரமம்'' என்கிற பெயரில் நிலவி, பத்திரிகையின் அபரிமிதமான வருவாயிலிருந்து ஒரு பங்கு அதற்குத் தனியாக ஒதுக்கி அதை வெகு உத்ஸாகத்துடன் தர்மம் செய்வதை உலகம் அபாரமாகக் கொண்டாடத் தொடங்கியது.

பின்னும் சில காலத்திற்குள் பொதுஜனங்களுக்கு அறிவும் ஆற்றலும் உண்டாகக்கூடிய உயரிய ப்ரசாரப்படங்களை வெகுமேன்மையான முறையில் தயாராக்க கனகசபையே முன்வந்து வெகு ஒழுங்கான முறையில் சினிமா உலகையே ப்ரமிக்கச்செய்ய முற்பட்டதைப் பாராட்டி காருண்ய சர்க்காரும் அவன் முயற்சிக்குப் பேராதரவும் உதவியும் அளித்தார்கள்.

சில சினிமாக்கார விஷக்கிருமிகளால் முற்றிலும் வஞ்சிக்கப்பட்டும் ஏமாற்றப்பட்டும் வயிறெரிந்து வாழ்வு இழந்து நடைச்சவங்களுக்குச் சமானமாய்விட்ட அனேகர் இப்போது கஸ்தூரி அனாதாச்ரமத்தில் வந்து பேராதரவுபெற்று இவர்களை வாயார வாழ்த்துகிறார்கள். இத்தனைபேருக்கும் ஒரு தொழிலைக் கொடுப்பதற்கும், தமது பத்திரிகைக்கும் மிகவும் உபயோகமாயிருப்பதற்காகவும் "கஸ்தூரி கைத்தொழிற் காகிதசாலை''யை நிறுவி அதில் எல்லோருக்கும் வேலை கற்றுக்கொடுத்து மிகவும் சிறந்த முறையில் பேப்பர்கள் தயார் செய்யவாரம்பித்தார்கள். சிலர் பத்திரிகை ஆபீஸிலேயே பலவிதமான துறைகளிலும் வேலை செய்துவருகிறார்கள். நேருக்கு நேர் குட்டுப்பட்ட சிலர் தாமே அந்த விஷயங்களை ரஸமாகப் பத்திரிகையில் எழுதி அழகுக்கு அழகு செய்வதைப் பொதுஜனங்கள் மிகவும் ரஸித்தார்கள்.

பத்திரிகையில் தினே தினே பல ஊழல்களின் துர்நாத்தங்களைக் கண்டித்து ப்ரமாதமாக எழுதவாரம்பித்தைக் கண்ட அந்த ஊழல்புராணத்தில் சம்மந்தபட்ட அனேகம்பேர்கள் வாஸுவையும் கனகசபையையும் கண்டவிடத்தில் அடிக்கவும் ஏன்? கொலைசெய்து விடுவதற்குக் கூடத் துணிந்துவிட்டார்கள். ஆனால், தாம் செய்துகொண்ட ப்ரதிக்ஞையைநிறைவேற்றுவதில் அவர்களுக்கிருக்கும் ஆனந்தத்தில் எதிர்ப்புகளைச் சிறிதும் பொருட்படுத்தாமல் ஆண்டவன்மீது பாரத்தைப் போட்டுக் காரியத்தில் கண்ணாகவிருந்தார்கள். அந்த ஒரு சிறந்த எண்ணமே, உயர்ந்த லட்சியத்தின் நோக்கமே, அவர்களுக்கு நித்தியகல்யாண வைபவசுகமாக விளங்கியது. அதைவிடச் சிறந்த மகிழ்ச்சி வேறு என்ன இருக்கிறது.

மங்களம்.



# டயரி

எஸ். அம்புஜம்மாள்

என் பெயர் சுப்பன். நான் வசிப்பது மேரு பங்களாவிலே.

மனிதர்கள்,—சர்ச்சில், லாயிட் ஜார்ஜ் போன்ற பெரியமனிதர்கள், —டயரி எழுதுவது வழக்கமாமே! நான் ஏன் எழுதக்கூடாது? என் எஜமானியம்மாகூட ஜனவரி பிறந்தவுடன் ஒரு புது டயரி வாங்கி எழுதத் துவக்குவார். இதோ! நாளைமுதல் நானும் டயரி எழுதி விடுகிறேன்.

**1-8-44** இன்று காலை **4.30** மணிக்கே அம்மா (என் எஜமானி) எழுந்துவிட்டார். ளொக்கு ளொக்கு என்று சதா இருமுகிறார். முன்பெல்லாம் காலை எழுந்தவுடன் எவ்வளவு சுறுசுறுப்பாய்ப் பூஜை புனஸ்காரம் நடக்கும்! பூஜை அறையின் உள் வாசல்படியிலிருந்துகொண்டே அந்த கீதாபாராயணம் கேட்பேனே நான்! இப்போதெல்லாம் மறுபடியும் போர்த்துக்கொண்டு ஸோபாவிலே படுத்துவிடுகிறார். வழக்கம் போல் போய்க் காலை நக்கினேன். "ஏண்டா சுப்பா! உன்வரவை அறிவிக்கிறாயா?" என்றார் அம்மா. காலாலேயே மெல்லத் தடவிக்கொடுத்தார் என்னை. அப்படியே அவர் காலின்கீழ் ஸோபா அருகில் படுத்துக்கொண்டு ஒரு குட்டித் தூக்கம் போட்டேன்.

* * * *

என்ன காதைத் துளைக்கும் மணியோசை! ஸைகில் என்றாலே எனக்கு எரிச்சல் வரும். அதிலும் அந்தப்பொய்மூட்டைகளான தினப் பத்திரிகைகளைக் கொண்டுவரும் ஸைகிள்! 'வள்' என்று குலைத்துக் கொண்டே ஒரு பாய்ச்சல் பாய்ந்தேன் அந்தப் பேப்பர்க்காரன்மீது. அந்தப் பயல் நான் காரியத்தில் அஹிம்ஸா தர்மப் பேர்வழிதான்!' என்று தெரிந்துகொள்ளாமலே நடுநடுங்கிவிட்டான்.

"ஏய் சுப்பா! போ உள்ளே! எத்தனை தரம் சொல்லுகிறது, பேப்பர்க்காரனை மிரட்டாதே!" என்று அம்மா அதட்டிக்கொண்டேவந்து என்னைப் பிடித்துக் கொண்டாள்.

**2-8-44** இன்று அம்மா காரில் ஏறிக்கொண்டு டாக்டர் வீட்டுக்குப் போனாள். எனக்குக் கார் என்றால் பைத்தியம். அம்மா காலைச்சுற்றிச் சுற்றி வருவேன். காரைச் சுற்றி சுற்றிப்ரதட்சிணம்செய்வேன். என் கண்-பாஷையாலேயே பேசுவேன் அம்மாவுடன். அம்மாவும் புரிந்து கொள்வாள். மனிதர்கள் வாயால் பேசுவதெல்லாம் எனக்கு விளங்காது என்று சிலர் நினைக்கிறார்கள். எனக்கு எங்கம்மா சொல்லுவதெல்லாம் நன்றாய்ப் புரியுமே!

"ஏய் சுப்பா! நீ வரக்கூடாது; அங்கே நாயிருக்கிறது" என்று சொல்லிவிட்டு அம்மா காரில் போய் விட்டார். நான் பேசாமல் முகத்தைத் தொங்கப்போட்டுக்கொண்டு நின்றுவிட்டேன்.

**3-8-44** இன்று அம்மாவுடன் காரில் போனேன். முன் ஸீட்டில் நின்றுகொண்டு ஜன்னல் வழியாகத் தலையை நீட்டி வெளியில் பார்த்துக் கொண்டே போவது வழக்கம். ஒருசமயம் அப்படிப் போகும்போது ரோடில்போன ஒரு நாயைப்பார்த்துக்கோபத்துடன் குதித்துவிட்டேன் வண்டியிலிருந்து. அவ்வளவு சுஜாதி அபிமானம்!

"நல்ல வேளை, நீ சாகாமல் பிழைத்தாய்!" என்றார் அம்மா அந்தத் தடவை.

அதன் பிறகு எப்பொழுதும் என் மேல் ஒரு கண் இருக்கும் அம்மாவுக்குக் கார் சவாரியின்போது.

"டேய்! காரில் நாயைப் பாருடா! என்ன ஜோராய் உட்கார்ந்திருக்கிறது!" என்று கூச்சலிடுவார்கள் வழியில் என்னைப் பார்க்கும் பிள்ளைகள். எங்கம்மாவை ஒருவரும் கவனிக்கமாட்டார். அவரென்ன? நரைத்தலை, நகை நட்டு இல்லை, பட்டுப்புடவை தான் உண்டா! ஊம்! எங்கம்மாவே ஒரு பைத்தியக்காரிதான்! நான் ரொம்ப அழகாம், அடிக்கடி சொல்லுவார். சுத்த வெள்ளைநிறம், குழகுழ என்ற சரீரம், காதுகள் 'பிரௌன்' கலர். முதுகிலும் நெற்றியிலும் அழகான பிரௌன் பொட்டு. என் கண்கள்தான் ரொம்ப அழகாம்: கழுத்தில் பளபளப்பான பூண் போட்ட பட்டை. ஓசைப்படும் சலங்கை, அந்த ஓசையோடு ஓடி வரும்போதே எனக்கு ஒரு குஷி; அம்மாவுக்கும் ஒரு குதூகலம்.

**4-8-44.** வீட்டில் அம்மா ரொம்ப வேலையாக இருக்கிறார். அடிக்கடி வெளியிலும்போய்வருகிறார். அம்மா என்னை இன்று கவனிக்கவேஇல்லை. அவரது முகம் சந்தோஷமாகவே இல்லை. எனக்கு என்னமோபோல் இருக்கிறது.

அண்ணாமலை சாப்பிடக்கூப்பிடுகிறான். அவனைக் கண்டாலே பிடிக்காது எனக்கு. சும்மா அதட்டுவான். இவனா என்எஜமான்? அம்மாதானே அரிசி, காசு எல்லாம் கொடுக்கிறார் எனக்குச் சோறு பொங்கிப்போட. இவன் வேலைக்காரன்தானே? இவன் கூப்பிட்டால் நான் போவது கிடையாது. அம்மா வந்து சொன்னால் தான் போவது.

**5-8-44.** இன்று காலை ஜானம்மா வந்தார். எதிரகத்து அம்மா. அவ்ரகத்தில்தான் நான் பிறந்தேனாம். என்னைப் பெத்த லில்லி அம்மா—நினைவிற்கு வருகிறது: என்னைப் பெற்ற புதிசில் எனக்குப் பால் கொடுக்கும்போதும், தனியாகவும் மோகினி அன்பர்களுக்குக் காட்சியளித்தாளாம் 1942ல். அந்த போடோவில் கண்ட குட்டி தான் நான்—என்னைப்போலவே கொழுகொழுவென்று வெள்ளையாக இருப்பாள். 'லில்லி' சரியான துரைசானி என்பார்கள் அவளைப் பார்த்தவர்கள்: அவ்வளவு நாஸுக்குக்காரி. ஜானம்மாவுக்கு அவளிடம் ரொம்பப் பிரியம். அவளைப்பற்றி மோகினியில் கட்டுரைகூட எழுதினார்! அவள் செத்துப் போனபோது அழுதாராம். எனக்குத் தீட்டு என்று அண்ணாமலை என்னை அன்று குளிப்பாட்டினான். நான் அடிக்கடி ஜானம்மாள்வீட்டுக்குப் போவேன். பீரோவிலிருந்து பிஸ்கத்துக் கொடுப்பார்.

**6-8-44.** எங்கம்மா இன்று தாம்பரம் போகிறார்.

"சுப்புவை என்ன செய்யப் போகிறாய்?" என்று ஜானம்மா கேட்டார்.

"சுப்புவைத் தாம்பரத்திற்குக் கூட்டிக்கொண்டுபோக முடியாது. இங்கேதான் விட்டுவிட்டுப் போகிறேன்" என்றார் அம்மா. எனக்குத் தூக்கிவாரிப்போட்டது. அம்மாவைப் பரிதாபமாக நோக்கினேன்.

அம்மா காரில் ஏறிக்கொண்டுவிட்டார் தாம்பரத்திற்குப் போக. அப்பொழுது என்னைக் கட்டிப்போட்டிருந்தார்கள். "அடே அண்ணாமலை! சுப்பு ஜாக்கிரதை" என்றார் அம்மா. அவர் குரலைக்கேட்டு, நானும் வருவதாக 'ளொள் ளொள்'-பாஷையில் தெரிவித்தேன்.

"அது முடியாது சுப்பு!" என்று சொல்லி அம்மா போய்விட்டார்.

**7-8-44** எனக்கு வீட்டில் இருப்பே கொள்ளவில்லை. ஏன் அம்மாவைத் தேடிப் போகக்கூடாது? எதிரகத்துக்கு ஓடினேன். அங்கே இல்லை அம்மா. பின்புறம் பி. ஸ்ரீ. அகத்துக்கு ஓடினேன். உள் உள்

ளாக் நுழைந்து புறப்பட்டேன். "ஐயோ, பாவம். சுப்பு தன் அம்மாவைக் காணுமல் அலேகிறது. சின்னபொன்ணு! நெய் தடவிய இட்லி போடு ஒன்று!" என்ருர் ஸ்ரீ. அகத்துத் தங்கம்மா. எனக்கு நெய் மணம் ரொம்பப் பிடிக்கும். யாராவது நெய்ப் பண்டம் சாப்பிட்டால் 'எம்பி எம்பி'க் கேட்பேன்.

இன்று அதைச் சாப்பிடவேணுமென்றுகூட இல்லே. மரியாதைக்குக் கொஞ்சம் மோந்து பார்த்தேன்.

**8-8-44** இன்று பெரிய பங்களாவுக்கு ஓடினேன். அம்மா அங்கே தினம் போவது வழக்கம். நாள் பூராவும் கூட இருப்பதுண்டு. அங்கே வேலே ஆட்கள்தான் இருந்தார்கள். பெரியம்மாவைக்கூடக் காணேம். மாடி எல்லாம் தேடினேன். "அம்மா இல்லேயடா சுப்பா! தாம்பரம் போயிட்டாங்க" என்ருள் வேலேக்காரி பொன்னி. அவள்மீது விழுந்து என் வருத்தத்தைத் தெரிவித்துக்கொண்டேன்.

**10-8-44** நேற்று நான் டயரி எழுதவில்லே. எழுத என்ன இருக்கிறது? அம்மா இருந்தால் யாராவது வந்துகொண்டிருப்பார். எனக்குத் தெரிந்தவர்களானல் மேலே விழுந்து வரவேற்பேன். பேப்பர்க்காரனேயும் தபால்காரனேயும் குலேத்து விரட்டுவேன். இருட்டிவிட்டால் ரோடில் யாரும் போகக்கூடாது, குலேப்பேன். திருடனுக இருந்தால்? என் கடமையை நான் செய்யவேண்டாமா? அந்தரோடெல்லாம் என் ராஜ்யம்தானே!

**11-8-44.** நான் இனிமேல் ஏன் டயரி எழுதவேணும்? அம்மாதான் இல்லேயே!

**12-8-44.** இன்று மோட்டார் மாமா வந்தார். அவரைக் கண்டால் எனக்கு ரொம்ப ரொம்பப் பிடிக்கும். தலேகால் தெரியாமல் மேல் விழுந்து வரவேற்பேன். "மாமா! சுப்பனுக்கு என்னேவிட உன்மேல் தான் ஆசை!" என்பார் அம்மா. ஏனே தெரியவில்லே. அவரைக் கண்டால் எனக்கு அவ்வளவு ஆசை. அம்மாவைக்கூட மறந்துவிடுவேன் அவர் முன்பு,

"அண்ணமலே! சுப்புவின் சங்கிலியைக் கொண்டுவா! மோட்டார் திருட்டுப்போய்விட்டதாம் தாம்பரத்தில். காவலுக்கு அழைத்துக் கொண்டு போகவேணும் சுப்புவை தாம்பரத்திற்கு" என்ருர் மாமா.... எனக்குச் சொல்லமுடியாத சந்தோஷம். சங்கிலியைக் கட்டமுடியாதபடி சுற்றிவந்து குதித்து அலக்கழித்தேன் மாமாவை, அரைமணி நேரம் அந்த ஆனந்தப் பெருக்கிலே.

**13-8-44.** தாம்பரம்

நேற்று மாலே வந்தேன் இங்கே. குதிரைவண்டிசவாரி, பிறகு ரெயில் சவாரி. எல்லாம் புதுசு எனக்கு. அப்பாடி, ஸ்டேஷனில் என்ன கூட்டம்! ரொம்ப பயமாக இருந்தது. மாமாவின் காலே ஒட்டிக்கொண்டே நடந்தேன்.

ரொம்பதூரம் நடந்துபோனதும் ஒருவீடு வந்தது. அம்மா உள்ளே இருந்தார். ஓடிப்போய் மேல் விழுந்து கத்தினேன். அம்மா ரொம்ப அன்புடன் தட்டிக்கொடுத்தார். 'சுப்பா! நீ இருந்திருந்தால் கார் திருட்டுப்போயிருக்குமாடா?" என்ருள். பலமாய் வாலே ஆட்டினேன்! 'போயிருக்காது' என்பதற்கு என் பாஷை. இங்கிலீஷில் 'எஸ்' என்பதற்குத்தான் அப்படி வாலே ஆட்டுவது நாங்கள்!

**14-8-44.** எனக்கு ஊரே பிடிக்கவில்லே. 'ரொம்ப வெட்டவெளி. 'அம்போ' என்று இருக்கிறது: எங்கும் நிசப்தம். நகர வாசம்தான் எனக்குப் பிடிக்கிறது.

**15-8-44** அம்மா ஏன் இந்தப் பொட்டல் காட்டுக்கு வந்தார்?

**16-8-44** அம்மாவைப் பார்க்க ஜானம்மாள், சாவித்திரியம்மாள் வந்தார்கள். எனக்கு ரொம்ப சந்தோஷம். கார் திருட்டுப்போன கதையை அம்மா அவர்களிடம் சொன்ஞர். வெள்ளிக்கிழமை

ராத்திரி 2-30-மணிக்குக் காரை காணோமாம். திறந்த 'ஷெட்'டாம். யாரோ நாலுபேர் வந்து காரைத் தள்ளிக்கொண்டு போய்விட்டார்களாம்- மறுநாள் காலை ஒரு மைல் தூரத்தில் எங்கேயோ 'டிச்'சில் விழுந்து கிடந்ததாம் கார். என்ன பேஷான கார் எப்படிப் போச்சு! தடிமுட்டாள் ஆட்கள் குறட்டை விட்டுத் தூங்கினார்கள். நானாக இருந்தால் சத்தம்போட்டு எல்லோரையும் எழுப்பி ஒரு ரகளை பண்ணியிருக்க மாட்டேனா?

**19.8-44** இன்று ரொம்பப் பிடிவாதம் பண்ணினேன். அம்மா 'வாக்' போகும்போதுகூடச் சங்கிலி கட்டி அழைத்துப்போனார்.

சேலையூர்ப்பக்கம் போனோம். அப்பப்பா! ஒவ்வொரு குடிசை வாசலிலும், ஒரு 'சோணங்கி' என்னைப் பார்த்து என்ன இரைச்சல் போட்டதுகள்! அம்மாவுக்கு பயமாகப் போய்விட்டது. அத்தனையும் என்மேல் பாய்ந்தால்? கற்களைப் பொறுக்கிக் கையில் வைத்துக்கொண்டார். எனக்கும் உள்ளுக்குள்ளே பயம்தான். ஆனாலும் அந்த நாட்டுப்புறத்துச் சோணங்கிகளிடம் அதைக் காட்டுவதா? பதிலுக்குப் பதில் பலமாகக் குலைத்தேன். "போதும், உன்னை இழுத்துக்கொண்டு போனது!" என்று அம்மாவீட்டுக்கு திரும்பினார்.

"டேய் அப்பா! ரொம்ப உயர்ந்த ஜாதி. நம்ப நாய்கள் எல்லாம் ஒரே பைசலாகிவிடும்" என்று பேசிக்கொண்டார்களாம் அந்த முட்டாள்கள். நான் என்ன அப்படி ஓசந்தவன்? அல்ஸேஷியன் கில்ஸேஷியன் ஏதுமில்லை. சும்மா வெளிவேஷம் போடறது என் வழக்கம். பயங்கொள்ளிகள் பயந்து ஓடினால் விரட்டுகிறது.

31-8-44 ஒரே அடியாக டயரி எழுதவில்லை. எப்படியோ விட்டுப் போச்சு. அம்மாவைப் பார்க்கத் தினம் யாராவது வருகிறார்கள் பட்டினத்திலிருந்து. இப்பதான் ஊர் கொஞ்சம் பிடித்துவருகிறது.

1-9-44. இன்றுதான் தாம்பரத்தில் ...பக்கத்துவீட்டிலிருக்காப் போலிருக்கிறது. அந்தப் பெண்ணும் என்னையேகவனித்தாள். நானைக்குச் சரியாகத் தெரியும் யார் என்று.

**2-9-44.** இன்று அந்தப் பெண் வீட்டுக்குப் போயிருந்தேன் மெள்ள. அம்மாவுக்குத் தெரியாது. ரோஸியாம் அவள் பெயர். என்னுடையது போல சுதேசிப் பெயர் இல்லைதான்.

**3-9-44.** என்ன அழகு! என்னைப் போலவே சுத்த வெளுப்பு. மொழுமொழுவென்று இருக்கிறது உடல். என்னைப்போலப்பணக்கார வீட்டுப் பெண் அல்லவா?

**4-9.44.** என்னை அம்மா கட்டிப் போட்டுவிட்டாள். நான் அடிக்கடி ரோஸி வீட்டுக்கு ஓடிவிடுகிறேனாம். மற்ற ஊர் நாய்களுடன் சண்டைப் பிடிக்கிறேனாம்.

10-9-44 நேற்று நல்ல நிலா. ரோஸியும் நானும் உலாவப் புறப்பட்டோம். பின்னே எங்களைத் துரத்தி வந்தன சில சோணங்கிகள். பெரிய போர் தொடங்கிவிட்டது. அம்மா எனக்காகத் திகில் கொண்டார். மாடியில் தூங்கிக்கொண்டிருந்தவர் கீழே இறங்கி வந்து என்னைப் பிடித்துக் கட்டும்படி, கண்ணன், டிரைவர் திருவேங்கடம் எல்லாரையும் அனுப்பினார்.

14-9-44 இரண்டு மூன்று நாட்களாக என்னை இரவில்கூடக்கட்டிப் போட்டிருக்கிறார்களே? ரோஸியைப் பிரிந்து...'ஊள் ஊள்' என்று அழுது பார்த்தேன். அம்மா கல்மனஸுக்காரி. 'அவிழ்க்கக் கூடாது' என்று உத்தரவு போட்டுவிட்டார்.

15-9-44 அம்மாமேல் எனக்கு ரொம்ப கோபம்- கூப்பிட்டால் போகவில்லை. எவ்வளவு தான் கெஞ்சி வேண்டிக் கொள்ளட்டும், பால் குடிக்கிறேனா பார்? என்னை ஏன் கட்டிப்போட்டா? சாப்பிடவும் போகிறதில்லை!

16-9-44 அம்மா பிஸ்கத்துக் கொண்டு வந்தாள். எனக்கு பிஸ்

கத்து என்ருல் ரொம்பப் பிடிக்கும். மேரு பங்களாவில் ஒரு அறையில் பிஸ்கத்து டப்பா இருக்கும். அந்த அறையைத் திறக்கும் ஓசைகேட்டதும் ஓட்டமாக ஓடிப்போய், ரொம்ப பயபக்தியுடன் வாசற்படியருகில் படுத்துக்கொள்வேன். அம்மா என்னைப் பார்த்துச் சிரிப்பார்; 'பிஸ்கத்து வேணுமோ?' என்று ஏளனமாய்க் கேட்பார். இன்று அம்மா போட்ட பிஸ்கத்தை மோந்துகூடப் பார்க்கவில்லை நான். 'என்ன உடம்பு சுப்பனுக்கு?' என்று அம்மா கவலைப் பட்டார். வேணும் நன்ருக அம்மாவுக்கு!

18-9-44. நேற்றுப் பகல் எப்படியோ பட்டையைக் கழற்றிக் கொண்டு ஓடிவிட்டேன். அன்று பகலும் இரவு பூராவும் வீடுதிரும்பவில்லை. ரோஸியும் நானும் என்ன சந்தோஷமாக விளையாடினேம்!

23-9-44. சில நாளாக டயரி எழுதவில்லை. சோம்பேறித்தனம் தான். சதா தூக்கம் வருகிறது.

24-9-44. இந்த ரோஸிக்கு இவ்வளவு மிகு ஆகாது. அம்மாவைப் பார்க்க என்னுடன் வரமாட்டேன் என்கிருளே? அம்மாவுக்குச் சொல்ல வேண்டாமா என் 'புதுக் கல்யாணத்தை?

**25-9-44** இன்று ரோஸியை மறுபடியும் வீட்டுக்குக்' கூப்பிட்டேன். 'வரமாட்டேன்' என்று சொல்லிவிட்டாள். அவளுக்கு, தான் 'பணக்காரச்சி' என்ற கர்வம்.... பாவம் என் மதராஸ் மனைவி கறுப்பி! எத்தனை தரம்' என் கட்டுச் சாதத்தை அவளுக்காக மீத்தி வைத்திருக்கிறேன்! அம்மா போட்ட ரொட்டித் துண்டத்தை எத்தனை தடவை புதைத்துவைத்திருக்கேன்.

ஆனல் கறுப்பி நாலு ஐந்து குட்டி போட்டுவிட்டது. காப்பாற்றமுடியாமல் தவித்தாள். ஒருநாள் அந்தக் குட்டிகளுடன் என்னைத் தேடிக் கொண்டே மேரு பங்களாவுக்குள்ளே வந்துவிட்டாள். அவளை எனக்குத் தெரியாதுபோல முறைத்துப் பார்த்தேன், உறுமினேன், 'உள்ளேவராதே' என்பதற்கடையாளமாக. அம்மாவுக்கா தெரியாது? 'அப்பாவைத் தேடிக்கொண்டு பிள்ளைகள் வந்துவிட்டதுபார்!' என்ருர் அம்மா. எனக்கு வெட்கமாயிற்று.

26-9-44 இப்போதெல்லாம் ரோஸியைக் கண்டால் எனக்குப் பிடிக்கிறதில்லை. சிவனே என்று வீட்டிலேயே கிடக்கிறேன். அம்மாவும் இப்போது என்னைக் கட்டிப் போடுவதில்லை. அவர்மேல் எனக்கு எவ்வளவு ஆசை தெரியுமா?

முன்னே பட்டணத்தில் ஒருசமயம் ரொம்பக் காயலாக இருந்தார். எனக்கு யாரும்சொல்லாவிட்டாலும் தெரிஞ்சு போச்சு. ரொம்ப விசனமாக இருந்தது. அம்மா கட்டிலின் கீழேயே படுத்துக்கொண்டேன். அம்மா அதட்டினலும் வெளியே போகவில்லை. மூன்றுநாள் கழித்து அம்மா சற்று எழுந்து நடந்தார். அப்புறம்தான் நான் விளையாடப் போனேன்.

29-9-44 இன்று மோட்டார் சவாரிசெய்து பழையபடி மேரு பங்களாவுக்கு வந்தோம். ரோஸி என்னை நினைத்துக்கொண்டு வருந்துவாள். அவளிடம் சொல்லிக் கொள்ளாமலே வந்துவிட்டேன்.

30-9-44 'மேருவை' மறுபடியும் பார்த்தபோது எப்படிக் குதித்தேன் தெரியுமா? வீடெல்லாம் சுற்றிச் சுற்றிவந்து கூப்பாடு போட்டேன். தங்கம்மா ஜானம்மா எல்லார் மேலேயும் விழுந்து வரவேற்றேன். எல்லாரும் என்னைத் தட்டிக் கொடுத்தார்கள். 'சுப்பன் பாவம் இளைத்துவிட்டான்!' என்ருர்கள். ஆம், நாட்டுப்புறவாசமேமோல்லையோ? ...கறுப்பியைப் பார்க்க ஓடினேன். என்னைப் பார்த்து அவளுடன் வாலைக் குழைத்துக்கொண்டு வந்தாள். 'சீ, நீ எங்கே! ரோஸி எங்கே?' என்று சொல்லிவிட்டு வந்துவிட்டேன். முதலில் கொஞ்சம் பிகுவாகத்தானே இருக்கவேணும்.?

# சில விருக்ஷங்கள்

தாவரங்களிலும் ஜாதி, வம்சம், குடும்பம் முதலியவைகள் உண்டு. விருக்ஷங்கள், செடிகள், கொடிகள், பூண்டுகள் இவை பல ஜாதிகள். விருக்ஷ ஜாதியில் அரசு, ஆல், அத்தி இவைகள் ஒரு இனத்தைச் சேர்ந்தவை. இவற்றில் எத்தனையோ அதிசயங்கள் இருக்கின்றன. அவற்றைப்பற்றி ஒரு கட்டுரை எழுதுகிறேன்.

பூவாதே காய்க்கும் மரமுளை. ஆனல் இதற்கு உதாரணம்:—ஆல், அரசு, அத்தி அல்ல—உண்டாகும் போதே காய்போல் காணப்படும் பெட்டிபோன்ற அறைக்குள் ஆரம்பத்தில் அநேகம் புஷ்பங்களிருக்கின்றன. அடியில் குட்டையான காம்பு—காம்பினல் கிளையில் இணைக்கப்பட்டிருக்கிறது. மேல் பாகத்தில் ஒரு சிறிய துவாரம். துவாரத்தை அடுத்து அநேகம் வெண்மையான ரோமங்கள் அறையின் உட்பாகத்தில் சுற்றிலும் ஆண் பூக்கள்—அடியில் பெண்பூக்கள்—ஆண் புஷ்பத்தில் சிறிய 3 இதழ்களும், 3 மகரந்தப்பெட்டியும்—பெண் புஷ்பத்தில் மூன்று இதழ்களும், நடுவில் கர்ப்பாசயம் அல்லது விதைப் பெட்டிஒன்றும்உண்டு. கர்ப்பாசயத்திலுள்ள "கரு" விதை பிடிப்பதற்கு, மாற்று மகரந்தப் பொடி தேவை—செடிகள் இடத்துக்கிடம் போகமுடியாதல்லவா? ஆகவே, மகரந்தத்தைப் புஷ்பத்திற்குப் புஷ்பம் கொண்டுபோவதற்கு பிறர் உதவி வேண்டியிருக்கிறது. தேனீ, வண்ணத்திப் பூச்சி, குளவி, பக்ஷிகள் இவைகள்தான் இந்த உதவியைச் செய்வது—ஆனல் சும்மா செய்யுமா? செய்யா. புஷ்பங்களில் ஒருவிதத் தேன் உண்டாகிறது. இதை உண்டாக்கி புஷ்பங்கள் தங்கள் வாசனையுள்ள பல நிறமுள்ள இதழ்களை விரித்து, தேனீ முதலான ஜந்துக்களைக் கவர்ந்து, தேனைக் கொடுத்து, அதற்குப் பிரதியாக அவைகள் அறியாமல் அவற்றின் ரோமம் நிறைந்த உடலில்ஒட்டிக்கொண்டுள்ளமாற்று மகரந்தத்தைப் பெறுகின்றன.

"அத்திக்காயை விண்டால் அத்தனையும் புழு" என்பது நமக்கெல்லாம்தெரியும்—புழுக்கள்எங்கிருந்து வந்தன? குளவிகளில் எத்தனையோ வகையுண்டு. அதில் அத்திக்குளவி ஒன்று—அத்தி, ஆல் இவற்றின் பழத்தை விண்டு பார்த்தால் இந்தக் குளவிகளை அங்கு பார்க்கலாம். அத்திக் குளவி ஒன்றை எடுத்துக்கொள்வோம். அத்திப்புஷ்பங்கள் உள்ள அறையின்மேலுள்ள துவாரத்தின் வழியாய் அது உள்ளே சென்று அடிப்பாகத்தின் பெண் புஷ்பங்களின் கர்ப்பாசயத்தில் சிலவற்றில் ஒவ்வொரு முட்டையிட்டுப் பிறகு புஷ்ப அறையைவிட்டு வெளியே போகும்போது சுற்றிலுமுள்ள ஆண் புஷ்பங்களிலுள்ள மகரந்தப்பொடி அதன் உடலில் ஒட்டிக்கொள்கிறது. இதுடன் வேறு ஒரு புஷ்ப அறைக்குள் சென்று அங்கு சில முட்டைகளை இடும்போது இதன் உடலிலுள்ள மகரந்தப்பொடி அங்குள்ள புஷ்பங்களில் விழுந்து விதை பிடிக்க உதவுகிறது. காலக் கிரமத்தில் முட்டைகள் பொரிந்து அவற்றிலிருந்து சிறு சிறு புழுக்கள் வெளிவந்து, கர்ப்பாசயத்திலிருக்கும் கருவைத் தின்று வளர்ந்து, சில நாட்களுக்குப் பிறகு கூட்டுப்புழுக்களாகி (Cocoon), பிறகு சில நாட்களில் குளவிகளாக மாறி வெளிவந்து மேலுள்ள துவாரத்தின் வழியாய் வெளியில்பறந்துபோய்விடுகின்றன இந்தக் காலத்திற்குள் புஷ்பங்களும்

காய்களாகி, அநேகம் காய்கள் சேர்ந்த தொகுதியே அத்திக்காய், அத்திப்பழம் என்று பரிணமிக்கின்றது. ஆகவே அத்திக்காய்க்கும் அதன் தோழியாகிய குளவிக்கும் பரஸ்பரம் கூட்டுறவு இருக்கிறது. குளவியின் குழந்தைகள் வளருவதற்கு ஏற்பட்டுள்ளது அத்திக்காய் அறை, அத்திக்காய்கள் விதை பிடிப்பதற்கு மாற்றுமகரந்தப் பொடியைக் கொண்டுவந்து கொடுத்து உதவுவது அத்திக்குளவி. இப்படித்தான் இயற்கையிலுள்ளவற்றைப் பரிசீலனை செய்துபார்த்தால், ஒரு பெரிய கூட்டுறவு சங்கத்தைப்போல் ஒன்றுக்கொன்று உதவியாயிருப்பதைக் காண்போம்.

இதற்கு இன்னும் ஒரு அழகிய உதாரணம்:—"மரம் பழுத்தால் வெளவாலை வாவென்று கூவி இரந்தழைப்பார் யாவரும் இங்கில்லையாம்"—தப்பு — ஆலமரம் தன் குழந்தைகள் பருத்துப் பக்குவமானவுடன், வெளவாலை மாத்திரமல்ல, பச்சைக்கிளி முதலிய பக்ஷிகள், அணிற்பிள்ளை, குரங்கு முதலிய ஜீவராசிகளையெல்லாம் விருந்திற்கு அழைக்கின்றது. ஒரு ஆலம் பழத்தில் எத்தனையோ குழந்தை விதைகள் — இம்மாதிரி எத்தனையோ பழங்களில் ஆயிரக்கணக்கான குழந்தைகள் ஒரு வருஷத்தில் ஒரு ஆலமரத் தாய்க்கு உண்டாகின்றன. ஆலந்தாய் இடம் விட்டு இடம்போக முடியாது-அதன் ஆயிரக் கணக்கான குழந்தைகளும் "அம்மா"வின் நிழலிலேயேவிழுந்து முளைக்க ஆரம்பித்தால்,அவற்றுக்கு வேண்டிய ஆகாரம், ஜலம், காற்று, இடம் எல்லாம் போதாமல் ஓங்கி செழுமையாய் வளர முடியாமல், இறந்தேபோகும்.ஆலங்குழந்தைகள் பல இடங்களுக்குச் சென்று பரவி, வம்ச விருத்தியாகவேண்டும். பெற்றோர்களது, பெண்கள் பிள்ளைகளுக்கு விவாகம் ஆனால் எல்லோரும் ஒரே வீட்டிற்குள் அடைபட்டிருப்பதில்லை. தங்கள் தங்களுக்கு வெவ்வேறு வீடுகள்கட்டிக்கொண்டு பரவிப் பல்கி வாழ்கின்றனர். அவ்விதமே தான் தாவரங்களாகிய ஜீவராசிகளும்.

ஆலங்குழந்தைகள் தாயைவிட்டுப்பிரிந்து செல்லும் பக்குவம்வராதவரைக்கும், அந்தக் குழந்தைகள் வசிக்கும் அறையின் சுவர் பசுமையாய் இலைகளுக்கிடையில் மறைந்து, பிறர் கண்ணுக்குத் தெரியாமலும், உள்ளிருக்கும் விதைகள் பக்குவமாகவில்லையென்று பிறர்அறியும்படியுமிருக்கிறது—உள்ளிருக்கும் குழந்தைகள் தாயைவிட்டுப்பிரிந்து தனித்திருக்கும் பக்குவத்தையடைந்ததும், இயற்கையன்னை, ஆலம் அன்னை, விதைக் குழந்தைகளின் அறையின் சுவருக்குக் கண்ணைக் கவரும்படியான அழகிய சிவந்த வர்ணத்தைப் பூசி விடுகிறாள்—எதற்காக? வெளவால், பக்ஷிகள், மிருகங்களையெல்லாம் "வா" என்று மௌனமாக அழைத்து அவர்களைக் கேட்டுக் கொள்ளுகிறாளாம்—என்ன கேட்டுக்கொள்கிறாள்?" இதோ என் குழந்தைகள்உள்ள பழங்கள். மிக வும் ருசியாயிருக்கும். என்னுடைய விருந்தினர்களாய் நீங்கள்வந்து, இதை உண்ணுங்கள். இதற்குப் பிரதியாக என்னுடைய சில குழந்தைகளையாவது ஆங்காங்கு வசதியான இடங்களில் போட்டுவிடுங்கள்—அவைகள் அங்கு சௌக்கியமாக வளர்ந்து "அம்மா" மரங்களாகி, குழந்தைகளைப் பெற்று என் வம்சம் விருத்தியாகும்" என்கின்றதாம் —இப்படியே பழங்களின் ருசியும், வாசனையும் நம்மையும் மற்றஇனங்களையும் கவர, அவற்றை நாம் சாப்பிட்டு அவற்றில் ஜாக்கிரதையாக மூடிவைக்கப்பட்டு இருக்கும் குழந்தை விதைகளையோ கொட்டைகளையோ வேறு இடங்களில் போட்டுவிடுகிறோம். மனிதனுக்கும், தாவரங்களுக்கும் உள்ள பரஸ்பர உதவி எத்தனை ஆச்சரியமானது பாருங்கள்!

(தொடரும்)

ஸ்ரீமதி ஆர். எஸ். சுபலக்ஷ்மிஅம்மாள்


கணவனின் நிழல்

# சமூகமும் ஸ்திரீ எழுத்தாளர்களும்

கீ. ஸாவித்திரி அம்மாள்

"ஜகன்மோகினி" நந்தவனம் மலர் ஒன்றைப் பிரித்தேன். எனக்கு ஒரு கணம் ஒரே திகைப்பு உண்டாயிற்று. ஏனெனில் அதில் கட்டுரைகள் கதைகள் எழுதியிருந்தவர்கள் எல்லோரும் பெண்மணிகள்! மருந்துக்குக்கூட ஒரு ஆண் பிள்ளையின் பெயர் கிடையாது. திடீரென்று இத்தனை ஸ்திரீ எழுத்தாளர்கள் நம் நாட்டில் எப்படித் தோன்றினார்கள்? இவ்வளவு நாள் அவர்கள் தம் சக்தியை எங்கு ஒளித்து வைத்திருந்தார்கள் என்றெல்லாம் நாம் வியப்பு அடைந்தால் அது நியாயமே அல்லவா?

ஆம்; நம் நாட்டிலும் இப்பொழுது பெண்கள் தைரியமாய் எழுதத் தொடங்கியிருக்கிறார்கள். கொஞ்ச காலத்திற்கு முன்புகூட ஸ்திரீகள் எழுதுவது அவ்வளவு சாதாரண விஷயம் அல்ல. அவர்களுக்கு இயற்கையில் நல்ல கருத்துக்கள் இருக்கலாம்; அரிய கற்பனைத் திறமை இருக்கலாம். ஆனால் அவைகளைச் சொற்கள் மூலம் வெளியிடுவதற்கு வேண்டிய கல்வியும் எழுத்துத் திறமையும் அவர்களுக்கு ஏற்படவில்லை. அப்படி அவை இரண்டும் இருந்தாலும் 'நாமும் எழுதலாம்' என்ற துணிவு அவர்களுக்கு இருக்கவேண்டும் அல்லவா? அதுவும் அரிதாகவே இருந்தது. சில வருஷங்களுக்குமுன் பெண்கள் படிப்பது எவ்வளவு இயற்கைக்கு விரோதமாகவும் அனுவசியமாகவும் நம்சமூகத்தில்கருதப்பட்டது என்பதை நினைத்தால் இப்படியும் ஒரு சமூகம் இருக்க முடியுமா என்று தான் நமக்கு ஆச்சரியம் உண்டாகின்றது,

பிறந்த வீட்டில் ஏதோ சொற்பக் கல்வி அளிக்கப்பட்டிருந்தாலும் விவாஹமாகிப் புருஷன் வீட்டிற்குச் சென்றால் பிறகு தாம் கற்றதை எல்லாம் ஒரு பெண் மறக்கவேண்டியதுதான். ஏனெனில் கையில் புத்தகத்துடன் நாட்டுப் பெண்ணைக் கண்டுவிட்டால் அப்பெண் ஏதோ பெருங்குற்றம் செய்துவிட்டதாகவே மாமியார் கருதுவாள். அத்தகைய மனப்பான்மையற்ற மாமியார் இருந்தால் அவளை உலக மகா அதிசயங்களில் ஒன்றாகச் சொல்ல வேண்டியதுதான்.

"வீட்டுக்காரியங்களை அப்படியே போட்டுவிட்டு படித்துக்கொண்டு உட்கார்ந்திருக்கிறாள் பார்த்தாயா? என்ன துணிச்சல்!" என்று அவள் தூற்றத் தொடங்கிவிடுவாள். கொண்ட• கணவனே அதைக் காணப் பொறுக்காமல் அசூயைப் படுவான் என்றால் பிறகு கேட்க வேண்டுமா? இப்படிப்பட்டவர்களின் மூத்தியில் வாழும் ஒரு பெண்ணின் உள்ளத்தில் "நாமும் படிக்கவேண்டும், எழுதவேண்டும்" என்ற ஆசை எவ்வண்ணம் உதிக்கும்?

எழுதுவதும் படிப்பதும் புருஷனைச் சேர்ந்தவை. கையில் கரண்டி பிடித்து அடுப்பூதும் பெண்களுக்கு அவைகளைப்பற்றி என்ன கவலை?" என்ற மனப்பான்மை மேலோங்கி நின்றகாலத்தில் பெண்களுக்குப் படிப்பு குதிரைக்கொம்பாயிருந்ததில் ஒன்றும் வியப்பில்லை அல்லவா? இந்த நிலையில் ஏதேனும் ஒரு விஷயத்தைப்பற்றி ஒரு பெண் எழுதுவாளாயின் அதை மதித்து ஒரு புருஷன் படிப்பதுகூட அரிதுதான்.

• ஸ்ரீமதி கே. ஸாவித்ரிஅம்மாள்

தெய்வாதீனமாய் அத்தகைய மனோ நிலை தற்காலம் மாறிவிட்டது. பெண்களும் கல்வியறிவுடன் ஆடவர்களுக்கு தக்க துணையாகும் அந்தஸ்து பெற்றிருந்தால்தான் தேசம் முன்னேற்றம் அடையும் என்ற உண்மை எல்லோர் மனதிலும் பட ஆரம்பித்துவிட்டது: ஆயினும் படிப்பு என்ற விஷயத்தில் மேல் நாட்டாருடன் ஒப்பிட்டுப்பார்க்கும் பொழுது நம் ஸ்திரீகள் இன்னும் எவ்வளவு தாழ்ந்த நிலையில் இருக்கிறார்கள் என்பது தெரியவருகின்றது. அங்கு வெளியாகும்பத்திரிகைகளும் புஸ்தகங்களும் லக்ஷக்கணக்கில் இருக்கின்றன. அமெரிக்காவில் பிரசுரமாகும் தினசரிகள் வாரப்பத்திரிகைகள் இவைகளின் எண்ணிக்கையைக் கேட்டால் நாம் அப்படியே மலைத்துப்போய்விடுவோம். அவைகளில் புருஷர்களுக்குச் சரியாய் ஸ்திரீகளும் கட்டுரைகள் கதைகள் எழுதுகின்றார்கள். ஆடவர்களுக்கு மேற்பட்ட திறமையோடு எத்தனையோ ஸ்திரீகள் பத்திரிகைகள் தினசரிகள் நடத்துகிறார்கள். அமெரிக்கா இங்கிலாந்துபோன்ற நாடுகளில்மட்டும் எப்படிப் பெண்கள் இவ்வளவு சக்தி வாய்ந்தவர்களாயிருக்கிறார்கள் என்றால் அதன் காரணத்தை அறிவது பெரிய சிரமம் அல்ல. அந்நாடுகள் செல்வமும் சுதந்திரமும் மிகுந்த நாடுகள். உயர்ந்த நோக்கங்களை மேற்கொள்வதற்கு வேண்டிய வசதிகள் கொண்ட நாடுகள். எங்கு மக்கள் சௌக்கியமும் சந்தோஷமும் நிரம்பிய வாழ்க்கை நடத்துகிறார்களோ, அங்குதான் அருங்கலைகளும் வளர்ச்சிபெற்று விளங்கும். அப்படிப்பட்ட மக்களின் மனதில்தான் சிறந்த உணர்ச்சிகள் மேலோங்கி நிற்பதற்கும் இடமுண்டு. அவர்களே பெண்களைப் போற்றிப் பாராட்டும் மனப்பான்மையுடையவர்களாயிருப்பார்கள்.

சமீபத்தில் இதன் சம்பந்தமாய் ஒரு ருசிகரமான விஷயம் பிரபல தினசரி ஒன்றில் வந்திருந்தது' Newyork பட்டணத்தில் ஒரு பெண்மணி பஸ்ஸில் ஏறினாளாம் பஸ் கிளம்பியதும் அவள் பின்னிக்கொண்டிருந்த பூநூல் பந்து அவள் கைகளினின்றும் நழுவி நூல் அவிழ்ந்தபடியே ரோட்டில் உருண்டு ஓடிற்றாம். அதைப் பார்த்து உடனே பஸ் கண்டக்டர் பஸ்ஸை நிறுத்தச் செய்துக் கிழிறங்கி அதை எடுக்கச் சென்றானாம். இதற்குள் ஒன்றன் பின்னொன்றாய் வந்த அநேகம் கார்கள் இதனால் தடைப்பட்டு நின்றனவாம். இவ்வளவும் கீழே விழுந்த ஒரு பெண்மணியின் நூற்பந்தை எடுத்து அவளிடம் கொடுப்பதன் பொருட்டு நேர்ந்தது! இதனால் பெண்களைப் போற்றும் அரிய உணர்ச்சி மக்களிடையே இன்னும் அடியோடு அழிந்து போகவில்லை என்று தெரிகின்றது அல்லவா? என்று சிறிது தமாஷாய் அத்தினசரி எழுதிற்று. எது எப்படி இருந்தாலும் இதனால் நாம் அறிந்துகொள்வது செல்வமும் சுதந்திரமும் மிகுந்த நாட்டில்தான் மாதர்கள் மேன்மையாய் வாழமுடியும் என்பதே. அத்தகைய ஸ்திரீகள் தாம் ஆடவர்களுக்குச் சரியாய் வாழ்க்கையில் எல்லாத் துறைகளிலும் பிரவேசிக்க முடியும் என்பதில் என்ன ஆச்சரியம்?

அடிமைத்தனமும் ஏழ்மையும் மிகுந்து ஜீவித்திருப்பதே அரிதாயிருக்கும் நம் நாட்டில் மேற்கூறிய நிலைமையை மாதர்கள் விஷயத்தில் நாம் காணமுடியுமா? நாள் முழுவதும் உழைத்து மாதம் முப்பது ரூபாய் சம்பாதிக்கும் ஒரு ஏழைக் குமாஸ்தா, எழுத்தாளனைப்பற்றியும் அவன் அடையும் புகழைப்பற்றியும் எவ்வாறு அறிவான்? அப்படிப்பட்டவனுடைய மனைவியைப்பற்றியோ கேட்கவே வேண்டாம். அவள் தன் புருஷனுக்குச் சமைத்துப்போட்டுக் குழந்தைகளையும்கவனித்துக்கொண்டாலே பெரிய காரியம் அல்லவா? இந்த நிலையில் இலக்கியப்பற்றும்

கலையுணர்ச்சியும் போன்ற மேன்மைக் குணங்கள் அவளிடம் எங்கிருந்து உண்டாகும்? அப்படி உண்டாயிருந்தாலும் அவைகள் வளர்ச்சி பெற வசதியற்று உடனே பயந்து போக வேண்டியதுதான் அல்லவா? எழுத்துத்துறையில் ஆர்வம்தோன்றுவதற்குச் கற்பனைசக்திமட்டும் இருந்தால் போதாது. வாழ்க்கையில் ஒரு ஆர்வமும் அபிருசியும் இருக்க வேண்டும். அவைதாம் சாதாரண வாழ்க்கையைவிட்டு மனிதனை மேம்பட்ட லக்ஷ்யங்களைக் கைக்கொள்ளும்படிச் செய்யக்கூடியவை.

நம் நாட்டிலும் இப்பொழுது எழுத்தாளர்களின் தொகை அதிகரித்துவருகிறது. அதற்கு பத்ரிகைகளின் தூண்டுதலும் உற்சாகமுமே காரணமென்று சொல்லலாம். அவ்விதமே மேன்மேலும் பத்திரிகைகள் தோன்றி நல்ல ஊக்கம் அளித்தால் பெண்களும் தமக்குள்ளே புதைந்து கிடக்கும் அரிய கருத்துக்களையும் கற்பனைத் திறமையையும் வெளிக் கொண்டுவர முற்படுவார்கள். அப்பொழுது மேல்நாடுகளுக்கு நிகராய் இங்கும் சிறந்த நூல்கள் எழுதி இலக்கியச் செல்வத்தைப் பெருக்கும் ஸ்திரீ எழுத்தாளர்கள் அநேகர் தோன்றுவார்கள் என்பதில் என்ன தடை?



# என் தியாகு

கிரிஜா

“ கங்காஸ்நானம் ஆச்சா?” என்று கேட்டுக்கொண்டே, அம்புஜாவின் வீட்டிற்குள் நுழைந்தேன். அவளது முகத்தைப் பார்த்தபோது, என் மனம் துணுக்குற்றது. “அம்புஜா! ஏன் ஒரு மாதிரியாக இருக்கிறாய்? உன் கணவர் சௌக்கியந்தானே?” என்றேன்.

“ஓ! என் சௌக்கியத்திற்கென்ன?” என்றுகூறிக்கொண்டே வந்த அவளது கணவர், அம்புஜாவிடமிருந்து குழந்தையை வாங்கிக்கொண்டு வெளியே சென்றார். அவரும், அவள் குழந்தை அலமுவும் புதிய வஸ்திரம் அணிந்துதானிருந்தனர். ‘ஆனால், அம்புஜாமட்டும் ஏன் புதுப்புடவை கட்டிக்கொள்ளவில்லை?’ விஷயம் விளங்காமலே அம்புஜாவின் முகத்தை நோக்கினேன். அவள் கண்கள் கலங்கியிருந்தன.

“அம்புஜா! உன் மனத்துன்பத்திற்குக் காரணமென்ன? அதை என்னிடம் சொல்லக்கூடாதா?” என்றேன்.

அதற்கு அவள், “உன்னிடம் சொல்லாமல், வேறு யாரிடம் சொல்வேனடி? ஆனால், அதைச் சொல்லி உன்னையும் சஞ்சலத்திற்குள்ளாக்குவானேன் என்றுதான் யோசிக்கிறேன்” என்றாள்.

நான், “பாதகமில்லை; சொல்லு” என்றதும். அவள் சொல்லலுற்றாள்:

அப்பொழுது என் தந்தை பள்ளிக்கூட உபாத்தியாயராக இருந்தார். அவரது சொற்ப சம்பளத்தில் எங்களது குடும்பம் கோமியமாகவும், சந்தோஷம் நிரம்பியதாகவுமே இருந்தது. எங்கள் சந்தோஷத்தில் காலனின் பாசக்கயிறு குறுக்கிடும் என்று யாரும் நினைக்கவில்லை. ஊரில் ஏற்பட்ட ‘நிமோனியா’ ஜுரத்திற்கு என் தந்தையே முதல்பலியானார்! அவரது அகால மரணத்திற்குப்பின் எங்கள்குடும்பம் மாமாக்களின் ஆதரவை நாடவேண்டியதாயிற்று. ‘என் அண்ணா, அம்மா, கைக்குழந்தை பாலு இம் மூவரும் என் பெரிய மாமாவிடம் இருப்பதென்றும், நானும் என் தம்பி தியாகுவும் சின்ன மாமாவிடம் இருப்பதென்றும் முடிவாயிற்று. அப்போது எனக்கு வயது 13; என் தம்பி தியாகுவுக்கு 6.

அம்மா என்னை அருகிலழைத்து “சமத்தாய் இருக்கிறாயா அம்மா? மாமா, மாமி மனம்போல் நடந்துகொள்ளு; குழந்தை தியாகுவை வையாமல், அனுசரணையாகப் பார்த்துக்கொள்ளு” என்று சொல்லும்பொழுதே அம்மாவின் குரல் கம்மியது. நான் ‘கோ’ வென்று கதறிவிட்டேன்.

அம்மா என்னை அணைத்து “அழாதே கண்ணே, எல்லாம் இன்னும் கொஞ்ச நாள்தான். முத்தா (என் அண்ணா) சம்பாதிக்க ஆரம்பித்தவுடன் எல்லோரும் ஒன்றாக இருக்கலாம்; அதுவரை சமத்தாக இரு” என்றுசொல்லித் தேற்றினாள். எங்கள் வண்டி வெகுதூரம் வரும் வரை அம்மா வாசலிலேயே நின்றிருந்தாள்.

நாங்கள் இருவரும், சேலத்திலுள்ள என் சின்ன மாமாவின் வீட்டையடைந்தோம். மாமியும்,

அவள் குழந்தைகளான கிட்டு, மணி இருவரும் எங்களிடம் வெகு பிரியமாக இருந்தார்கள். ஆனால், இது கொஞ்ச நாட்கள்தான். வரவர அவர்கள் அன்பு குறைந்ததுடன், எங்களை அலட்சியமாகவும் நடத்தத் தொடங்கினர்; அவர்கள்தான் அப்படி நடத்தினார்களோ, அன்றி எங்கள் மனத்திற்குத்தான் அவ்விதம் தோன்றியதோ அறியேன். மணி, கிட்டு முதல், வேலைக்காரி பூனைக் குட்டி வரை எல்லோரும், "நீங்கள் எங்களிடம் அண்டிப் பிழைக்கவந்தவர்கள்தானே?" என்று அலக்ஷியமாக எண்ணுவதுபோலிருந்தது.

கொஞ்ச நாள்வரை, என் தம்பி தியாகு மாமாவின் குழந்தைகளுடன் எல்லாவற்றிற்கும் போட்டியிட்டு அழுவான். வரவர அவர்களது அலக்ஷியமும், என் உருக்கமான வார்த்தைகளும் தியாகுவைப் படிமானத்திற்குக் கொண்டுவந்தன!

"ஏன் அக்கா! எனக்கு அப்பா இல்லாததால் நானும் மணி மாதிரி எல்லாவற்றையும்கேட்கக்கூடாதா" என்று கேட்டுக்கொண்டே சோர்வுடன் என்மேல் சாய்ந்துகொள்வான். என் இருதயம் துடிக்கும். அப்படியே தியாகுவை அணைத்துக் கொண்டு விம்முவேன்.

பொழுது விடிந்தால் தீபாவளி! அன்று மாலை மாமியும், அவள் குழந்தைகளும் மாமாவின் வருகையை எதிர்பார்த்துக்கொண்டிருந்தனர். மாமா வரும்பொழுதே, "அடியே! அந்தப்பயல் மணி எங்கே? அவனுக்குத்தான் பட்டுக்கரை போட்ட வேஷ்டி!" என்றார்.

சமயலறையில் பட்சணம் சாப்பிட்டுக்கொண்டிருந்த மணி, அப்படியே எல்லாவற்றையும் வாயில் திணித்துக்கொண்டு ஓடி வந்தான். மாமா மூட்டையைப் பிரித்து அவரவர்களுக்கு வாங்கிவந்த புதிய துணிகளை எடுத்துக்கொடுத்தார். கிட்டுவும், மணியும் தங்கள் 'சொக்காய்', 'வேஷ்டி', 'பட்டாசுக்கட்டுகள்' எல்லாவற்றையும் தூக்கிக்கொண்டு ஆனந்தக் கூத்தாடினர். இதையெல்லாம் வியப்புடன் பார்த்துக்கொண்டு நின்ற தியாகு, மெள்ள மாமாவிடம் போய், "நேக்கு ஒன்னும் கிடையாதா மாமா?" என்றான். உடனே கிட்டுவும், மணியும், "இந்தா! உனக்கு அப்பா செத்துப்போய் விட்டதால், நீ புதுசு கட்டிக்கொள்ளக் கூடாது!...ஏனப்பா! தியாகு புதுசு கட்டிக்கக்கூடாதோன்னோ?" என்று முகத்தில் வெற்றிக்குறி தோன்றக் கேட்டார்கள்.

"சீ! போக்கிரிகளா! பேசாதிருங்கள்" என்று மாமா கிட்டு, மணி இருவரையும் அதட்டிவிட்டு தான் மேலுக்குப் போட்டுக் கொள்ள வாங்கியிருந்த சவுக்கங்களில் ஒன்றை தியாகுவிடம் கொடுத்தார். தியாகு அதைத் திரும்பிக்கூடப் பாராமல் ஓடிவந்து என் மடியில் தன் முகத்தைப் புதைத்துக்கொண்டு விம்மினான்.

"இதோ பார்! தியாகு! அசடு மாதிரி அழுவாளா? அடுத்த தீபாவளிக்கு முத்தா உனக்கு பட்டுச் சொக்காய், பட்டாஸ் கட்டு எல்லாம் நிறைய வாங்கித் தருவானே!" என்று நான் அவனைச் சமாதானம் செய்து, தூங்கச் செய்தேன்.

பட்டாஸ் வெடிக்கும் சப்தம் கேட்டு, வாரிச் சுருட்டிக்கொண்டு எழுந்தான் தியாகு. மத்தாப்பின் ஒளி கூடம்முற்றும்சிகப்பாக்கியிருந்தது. கிட்டுவும்,மணியும் எண்ணெய் ஸ்நானம் செய்து, புதிய வஸ்திரமணிந்து, பட்டாஸ் சுட்டுக்கொண்டிருந்தனர். தியாகு என் பாவாடைத் தலைப்பைப் பிடித்துக்கொண்டு, அப்படியே கண்ணையிமைக்காமல் பார்த்தான். தன் குழந்தைகளின் விளையாட்டைக்கண்டு மகிழ்ந்து கொண்டிருந்த மாமா, தியாகுவைக் கண்டதும், "அடியே! அந்தத் துண்டைக் கொண்டாடி, தியாகுவுக்குக் கொடுக்கலாம்!" என்றார்.

அம்மாமி, "ரொம்ப நன்னாயிருக்கு! அப்பன் செத்து இன்னும் ஆறுமாதங்கூட ஆகவில்லை! அதற்

குள் புதுசு கட்டிப்பதா? ஆகவே ஆகாது'' என்று சொல்லித் தன் கின்னத்தைத் தோளில் இடித்துக் கொண்டாள்.

நான் மெள்ளத் தியாகுவை அப்பால் அழைத்துச் சென்றேன்.

''ஏன் அக்கா! அம்மா எப்ப வருவாள்? முத்தா பட்டுச் சொக்காயும், பட்டாஸ் கட்டும் எப்ப வாங்கிண்டு வருவான்? அம்மா எனக்கு எண்ணெய் தேய்த்துவிட்டு, பட்சணம் கொடுப்பாளா?'' என்றான் தியாகு ஆவலுடன்.

நான் அவன் மனம் குதூகலம் அடையும்வகையில் பதில் சொன்னேன். ''முத்தா கொண்டுவரும் பட்டுச் சொக்காய், மணி சொக்காயைவிட அழகாயிருக்குமோன்னோ?'' என்றான்.

நான், ''ரொம்ப அழகாய் இருக்கும்! மணி உன் சொக்காயைப் பார்த்ததும் பிரமித்துப்போவான்!'' என்றேன். உடனே அவன் முகம் மலர்ந்தது. சிறிதுநேரம் சும்மா இருப்பான்; மறுபடியும் அவன் முகத்தில் ஏக்கம் தோன்றும்; மறுபடியும் அதே கேள்விதான். இப்படியே அன்று முழுவதும் கேட்டுக்கொண்டிருந்தான்.

மறுநாள் மாலை தியாகுவுக்கு எக்காரணத்தாலோ ஜுரம் கண்டது! ''கண்டபடி பட்சணத்தைத் தின்றிருக்கும்; லங்கணம் போட்டால் எல்லாம் சரியாய்ப் போய்விடும்!'' என்று சொல்லிப் போனாள் மாமி.

இரவு பத்துமணிவரை ஜுரவேகத்தில் தன் நினைவின்றிப் படுத்திருந்தான் தியாகு. எல்லோரும் தூங்கிவிட்டார்கள். எனக்கு மட்டும் தூக்கமே வரவில்லை. மன வேதனையுடன் தியாகுவருகில் உட்கார்ந்தேன். ''அக்கா!'' என்ற குரல் அந்நிசப்தத்தைக் கலைத்தது. நான் தியாகுவை அணைத்துக்கொண்டு, தியாகு! கண்ணைத்திற; கொஞ்சம் கஞ்சி சாப்பிடுகிறாயா?'' என்றேன்.

தியாகு கண்களைத் திறந்து எதையோ தேடுபவன்போல் சுற்றுமுற்றும் பார்த்தான். மறுபடியும் அவன் வாயிலிருந்து, ''அக்கா!'' என்ற சொல் கிளம்பிற்று.

''ஏண்டா! கண்ணே! என்ன வேண்டும்?''

''அக்கா! அம்மா வந்துவிட்டாளா?''

''வந்துவிடுவாள். நீ கஞ்சி சாப்பிடுகிறாயா?''

''முத்தா, சொக்காயும், பட்டாசுக் கட்டும் கொண்டுவருவானா?''

''கொண்டுவருவான்! கஞ்சி சாப்பிடுகிறாயா?''

''எனக்குக் கஞ்சி வேண்டாம்; அம்மா எப்ப வருவாள்?''

''நீ கஞ்சி சாப்பிடவேண்டாம்; தூங்கு''

''அக்கா!''

''பேசாமல் தூங்கமாட்டாயா?'' என்று அதட்டினேன். அவன் முகத்தில் ஏமாற்றம், ஏக்கம் எல்லாம் ஏககாலத்தில் தோன்றின. பொழுது விடிவதற்குள் பலமுறை அக்கேள்விகள்தான்.

மறுநாள் தியாகுவுக்கு ஜுரம் சற்றுக் குறைந்திருந்தது. ஆனால் ஆகாரமே செல்லவில்லை. அவன் என்னைப் பார்க்கும்பொழுதெல்லாம், 'அம்மா வந்துவிட்டாளா? முத்தா...பட்டாசுக்கட்டு?'' என்ற கேள்விகள்தான். அன்று மாலை என் வேலை முடிந்தது. தியாகு வருகில் வந்து உட்கார்ந்தேன்; அவன் உடம்பைத் தொட்டபோது நான் திடுக்கிட்டேன். அவன் உடம்பு அல்லித்தண்டுபோல் 'ஜில்' லென்று இருந்தது! என் கைப் பட்டதும் தியாகு கண்ணைத் திறந்தான். நான் அவன் கேள்வியை எதிர்ப்பார்த்தேன். ஆனால், அவன் ஒன்றும் கேட்காமல் கண்களை மூடிக்கொண்டுவிட்டான். பயத்தால் என் உடம்பு நடுங்கிற்று. மெள்ள மாமாவிடம் விஷயத்தைச் சொன்னேன். என் பயத்தைக்கண்ட மாமா, சிரித்தார். ''அட அசடே! ஏன் இப்படி பயப்படுகிறாய்?'' என்று சொல்லிக்கொண்டே வந்து

தியாகுவைத் தொட்டுப்பார்த்தார். அவர் முகம் கவலையைக் காட்டியது. உடனே போய் டாக்டரை அழைத்துவந்தார். தியாகுவை பரிசோதித்துவிட்டு டாக்டரும் உதட்டைப் பிதுக்கினர்! மாமாவிடம், "உடனே பையனின் தாயாரை வரவழையுங்கள்; என் மனதிற்கு ஒன்றும் பிடிபடவில்லை! இரவு முற்றும் இந்த மருந்தைக் கொடுங்கள்; காலையில் வந்து பார்க்கிறேன்" என்று சொல்லிப் போய்விட்டார்.

என் மனம் திக்திக் என்று அடித்துக்கொண்டது. "மாமா! அம்மாவுக்குத் தந்தி கொடுங்கள்" என்றேன் கெஞ்சும் குரலில்.

"ஒன்றுமில்லையம்மா! பயப்படாதே. அவனுக்கு அம்மாவைப் பிரிந்த ஏக்கம்; நாளையே கடிதம் எழுதினல் உடனே அம்மா வந்துவிடுவாள்" என்ருர்.

எனக்குத் துக்கம் பொங்கிக் கொண்டுவந்தது. தந்தியே கொடுத்துவிடும்படி, மாமாவைக் கெஞ்சினேன். அவர் அரை மனதுடன் தந்தியைக் கொடுத்துவிட்டு வந்தார்.

இரவின் நிசப்தம் என் பயத்தை அதிகமாக்கிற்று. தியாகுவின் அருகில் உட்கார்ந்து, அவன் முகத்தையும், கடிகாரத்தின் முள்ளையும் மாறி மாறிப் பார்த்துக் கொண்டிருந்தேன் தியாகு கண்ணைத் திறக்கவேயில்லை. என் மனம் பல எண்ணங்களால் குழம்பியது. 'ஐயோ! நேற்றெல்லாம் அவன் கேள்விகளுக்குப் பதில் சொல்ல அலுத்துக்கொண்டேனே; குழந்தையைக் கோபித்துக் கொண்டேனே; ஏன் அப்படிச் செய்தேன்? நாளைக் காலை எட்டுமணி வண்டியில் அம்மாவும், முத்தாவும் வந்துவிடுவார்கள்! அப்புறம் எனக்குக்கவலையில்லை. அம்மாவைப் பார்த்தால் தியாகுவுக்கும் உடம்பு குணமாகிவிடும்' என்றெல்லாம் எண்ணினேன். அம்பிகையின் படத்தைப் பார்த்து, "தாயே! பராசக்தி! என் தியாகுவுக்கு உயிர்ப்பிச்சை கொடு!" என்று கைகுவித்து வணங்கினேன்.

அந்நிசப்தத்தைக் கிழித்துக்கொண்டு மணியும் பன்னிரண்டு அடித்தது. தியாகு கண்ணைத் திறந்தான்! நான் பரபரப்புடன் மருந்தை எடுத்து, வெகு பிரயாசையுடன் அவன் வாயில் ஊற்றினேன். தியாகு சற்றுத் தெளிவுடன் காணப்பட்டான். "அம்மா வந்துவிட்டாளா?" என்ற அவன் கேள்வி எனக்குச் சற்று ஆறுதலளித்தது.

"வந்துவிடுவாள்! கண்ணே! அலட்டிக்கொள்ளாமல் தூங்கு" என்றேன். அவனும் தன் கண்களை மூடிக்கொண்டான். என்னையறியாமல்நானும்சற்று கண்ணயர்ந்தேன்.

"அக்கா!" என்ற குரல் என்னை விழிப்படையச் செய்தது. வாரிச் சுருட்டிக்கொண்டு எழுந்தேன். தியாகுவின் முகத்தில் வியர்வை அரும்பியிருந்தது. தலைப்பால் அவன் முகத்தைத் துடைத்துவிட்டு, "காப்பி சாப்பிடுகிருயா?" என்றேன்.

தியாகு தலையை அசைத்தான். "அம்மா வந்துவிட்டாளா? பட்டாசுக் கட்டு...முத்தா...?" அவன் குரல் தெளிவாயிருந்தது.

நன்ருகப் பொழுதுவிடிந்து, மணியும் எட்டு ஆயிற்று. 'ஆச்சு; இன்னும் சற்று நேரத்தில் அம்மா வந்துவிடுவாள்!' வண்டியின் சப்தம் கேட்டால், உடனே வாசற்பக்கம் ஆவலுடன் பார்ப்பேன்.

வண்டியும் வந்து நின்றது! அதிலிருந்து அம்மாவும், என் முத்தாவும் இறங்கி பதை பதைக்க ஓடிவந்தார்கள். பொங்கிவரும் என் துக்கத்தை அடக்கிக்கொண்டு, அவர்களைத் தியாகு இருக்கும் இடத்திற்கு அழைத்துச் சென்றேன்.

"தம்பி! தியாகு! இதோ பார் அம்மா!" என்று கத்தினேன். தியாகு தன் கண்களை அகல விழித்து அம்மாவைப் பார்த்தான். அவன் கைகள் தாயின் ஆதரவை நாடி மேலெழுந்தன. "அம்மா!... சொக்கா...முத்தா ... பட்டாசு..." என்ற சொற்கள் திணறிக்கொண்டு தியாகுவின் வாயிலிருந்து வெளி

வந்தன. ஆச்சரியத்தால் விரிந்த அவன் கண்கள் விரிந்தபடியே நின்றுவிட்டன! "ஐயோ! அம்மா! தியாகு!" என்று வீறிட்டேன்!

"ஐயோ! அடி ஜானகி! எங்கள் கஷ்டம் விடிந்து பல தீபாவளிகளும் வந்துவிட்டன. ஆனால், "என் தியாகுவை, உயிர்ப்பிக்க முடியுமா?" என்று கூறிக்கொண்டே, என்மேல் சாய்ந்தாள் அம்புஜா.

நான் அவள்கண்ணீரைத் துடைத்தேன். வெளியே சென்றிருந்த அவளது கணவரும், குழந்தையும் வந்துவிடவே, தள்ளாடிக்கொண்டு எழுந்தாள் அம்புஜா.



# தாயின் அன்பு

குமுதினி

நமது புராணங்களிலும் சரித்திரங்களிலும் பார்த்தாவிற்காக எத்தனையோ தியாகங்கள் செய்திருக்கும் இலக்ஷியப் பெண்மணிகளைப்பற்றின கதைகள் இருக்கின்றன. ஆனால் தமது மக்களுக்காகத் தியாகம் செய்த பெண்மணிகளின் கதைகள் அதிகம் இல்லை. வினதை தன் பிள்ளை உயர்ந்தவனாக இருக்க வேண்டுமென்று விரும்பினாள். ஆனால் அது தாய் அன்பு மாத்திரமல்ல; சக்களத்தியுடன் போட்டியும் அதில் இருந்தது.

ஏன் நமது முன்னோர்கள் தாயின் அன்பை அதிகம் சிலாகிக்கவில்லை? இயற்கையாக ஏற்படும் அதை உயர்வாகச்சொல்வானேன் என்றா? அது இயற்கையாக ஏற்படுவது என்று சுலபமாய்ச் சொல்லிவிட முடியாது. மொகலாய அரசர் பாபர் தமதுபிள்ளை பிழைத்து எழுந்திருக்க வேண்டுமென்று தமது உயிரைக் கொடுத்தார். யயாதி தன்னுடைய மகனின் வாலிபத்தைத்தான் வாங்கிக் கொண்டான். சந்தனு தான் விவாகம் செய்துகொள்ளவேண்டுமென்று தனது பிள்ளையை பிரம்மசாரியாக இருக்கவிட்டான். ஸ்த்ரீகளிலும் தமது குழந்தைக்காக உயிரைக் கொடுப்பவர்களும் இருக்கிறார்கள். "தமது நலத்திற்காகக்குழந்தைகளின் இரத்தத்தை உறிஞ்சுபவர்களும் இருக்கிறார்கள்" என்ற வார்த்தை வியாகரண உதாரணத்திற்காக ஏற்பட்டது மாத்திரமல்ல. பாம்பைப்போல் தன் குட்டிகளை விழுங்கும் பெண்களும் இருக்கின்றனர். அருசியான அவ்விஷயத்தைப் பற்றி பேசுவானேன்.

தாயின் அன்பை சிலாகித்து மேல் நாடுகளில் பல கதைகள் இருப்பது மாத்திரமல்ல, தற்காலத்திலும் தாயின் அன்பை அங்கே, முக்கியமாய் அமெரிக்காவில், மிகவும் கொண்டாடுகிறார்கள். ஒரு தாயாரின் ஐந்து பிள்ளைகளும் மிகவும் திறமைசாலிகளாய் முன்னுக்கு வந்து கீர்த்தி பெற்றிருக்கின்றனர் என்ற ஒரு காரணத்திற்காக ஒரு அமெரிக்க யூனிவர்ஸிடி அந்தத் தாயாருக்கு டாக்டர் என்ற கௌரவப்பட்டம் அளித்தார்களாம். அந்த அம்மாளின் அன்பும்போஷணையுமே அந்தப் பிள்ளைகளின் முன்னேற்றத்திற்குக் காரணம் என்று கொண்டாடினார்களாம்.

நான் படித்த மற்றொரு தாயின் அன்பு மிகவும் உருக்கமானதாக இருந்தது. மிகப்பெரிய தியாகமல்ல. இருந்தும் தினம் தினமும் செய்த தவம் என்றே அதைச்சொல்லலாம். காத்லின் நாரிஸ் என்ற அமெரிக்க நாவலாசிரியை அந்த சம்பவத்தை தாம் நேரில் கண்ட உண்மை விஷயம் என்று வர்ணித்திருக்கிறார்.

"இது பலவருஷங்களுக்கு முன்பு நடந்தது. எனக்கு அப்பொழுது வயசு பதினான்கு. என் தாயாரும் நானும் என் தம்பிகளுடன் விடுமுறைக்காக ஒரு கடற்கரை பிரதேசத்திற்குச் சென்றிருந்தோம். அங்கே ஒரு தினம் சமுத்திரக்கரையில் ஒரு அழகான அம்மாளையும் இரண்டு குழந்தைகளையும் பார்த்தோம். பெரியபிள்ளை நெல்ஸனுக்கு பத்து வயசு இருக்கும். மிகவும் நுட்பமான தேகம். சமீபத்தில் ஏதோ உடம்பு அசௌக்யமாக

இருந்து இப்பொழுது தேறிக் கொண்டு வந்தான். அவன் சதா காலமும் அம்மாவின் பக்கத்திலேயே இருப்பான். அவள் அவனுக்கு பொழுது போக்கிற்காக மணிக் கணக்கில் புத்தகங்கள் வாசிப்பாள்.

அந்தோனி என்கிறவன் நெல் ஸனைவிடச் சிறியவன். அவனைப் பார்க்கிறவர்களெல்லாம் அவனிடம் வசப்படுவார்கள். ஒரு விளையாடும் சிம்மக்குட்டியின் கம்பீரமும் லாவண் யமும் அவனிடம் காணலாம். செம் பொன்நிறமான சுருட்டை மயிரும் நீலோற்பலம் போன்ற கண்களும் உடையவன். மற்றெல்லாப் பையன் களைவிட இன்னும் வேகமாய் அவ ஞல் ஓடவும், தாண்டவும் முழுகவும் முடியும், முன்பின் தெரியாதவர்க ளெல்லாம் அவனைக்கண்டால் சற்று நின்று பேசிவிட்டுப் போவார்கள் ஏதாவது விளையாட்டுக் கருவி கொண்டுவந்து கொடுப்பார்கள்.

ஒரு தினம் நாங்கள் மண வில் உட்கார்ந்திருக்கையில் என் தம்பி, "அம்மா, அந்தோனி வளர்ப் புப் பிள்ளையாம், அம்மா" என்ருன். நாங்கள் ஆச்சரியப்பட்டு ஒருவர் முகத்தை ஒருவர் நோக்கையில் அந் தோனியின் முகத்தில் மிகத் திருப்தி யான சந்தோஷம் தோன்றிற்று.

"அது நெஜம்தான், இல்லையா அம்மா?" என்று அவன் பெருமை யுடன் தன்னுடைய தாயாரைப் பார்த்துக் கேட்டான். பிறகு எங்க ளிடம், "அம்மாக்கும் அப்பாக்கும் இன்ஞெரு குழந்தை வேணும்போல இருந்தது. அவா ஒரு பெரிய வீட் டுலே போய் நிறைய கொழந்தைக ளெல்லாம் பார்த்தா. அப்பறம் ஒரு கொழந்தையைப் பார்த்து இது எங்களுக்குத்தான்வேணும், இதைக் கொடுன்னு கேட்டா.

ஆனு அன்னிக்கே அந்தக் கொழந் தையை அம்மாகிட்ட கொடுக்க மாட்டேன்னு சொன்னு. (அவன் இந்தக் கதையை பலமுறை கேட் டிருக்கிறமாதிரி இருந்தது.) ஆத் துக்கு போகச்சே அம்மா, "அந்தக் கொழந்தை கிடைக்கணுமே"ன்னு சொல்லிண்டேபோனு, இல்லையா, அம்மா! அப்பறம் ரொம்பநாள் கழிச்சு அந்தக் கொழந்தையை கொடுத்தா. அதுதான் நான், இல் லையா அம்மா?" என்று தன் கதை யைச் சொல்லிவிட்டு அவன் விளை யாட ஓடினுன்.

"இந்தமாதிரிக் குழந்தையை யார் அநாதையாக விட்டு விட்டுப் போனுர்கள்!" என்று என்தாயார் ஆச்சரியப்பட்டுவிட்டு, "தான்வளர்ப் புப் பிள்ளை என்பது அவனுக்குக் குறைவாயில்லையல்லவா' என்ருள்.

அதற்கு மிஸஸ் வெப்ஸ்டர் என்ற அந்த அம்மாள், "ஆமாம் முதலில் இதைச் சொல்வதற்கே நாங்கள் பயந்தோம். என் கணவர் இஞ்சினீராக இருந்தார். நாங்கள் ஊர் ஊராகப் போய்க்கொண்டிருந் தோம். எல்லோரும் இரண்டும் எங்கள் குழந்தைகள் என்று நினைத்தார்கள். ஆறு மாசத்திற்கு முன்ஞல், நான் விதவையான சில நாட்களுக்கெல்லாம் என்னைப் பார்க்க ஒரு சிநேகிதி வந்தாள். பல வருஷமாய் நாங்கள் ஒருவரை ஒருவர் பார்க்கவில்லை. அவள் குழந்தைகளைப் பார்த்ததும், "எது வளர்ப்புப் பிள்ளை?" என்று கேட்டாள். நான் அவள் காலை அழுத்தினேன். உடனேயே அவள் பேச்சை மாற்றிவிட்டாள். ஆனுல் குழந்தைகள் கேட்டுவிட்டார்கள். அவள் போனதும் என்னைப் பிடித் துக்கொண்டு நிஜத்தைச் சொல்லும் படி வற்புறுத்தினர்கள். நான் கூடியவரை நயமாய் சொன்னேன், அதுதான் இந்தக் கதை." என்ருர்.

"தோனி எதற்கும் சளைக்கமாட் டான்." என்றேன் நான்.

"நெல்ஸன் அம்மாவின் பிள்ளை." என்ருள் என்தாயார். அவளுடைய நான்கு பிள்ளைகளில் ஒருவன் அந்த மாதிரி குணமுள்ளவன்.

மிஸஸ் வெப்ஸ்டர் ஊருக்குப் போவதற்கு முந்தினதினம், அம்மா, அவர், நான் மூவரும் தனித்து மண

வில் உட்கார்ந்திருந்தோம். அப்போது அம்மா அவரை நோக்கி நெல்ஸனைப்போல் தாயாரிடம் அன்பும் பாசமும் கொண்டு ஒட்டிக் கொண்டு, தாயாரேதெய்வம் என்று நினைக்கும் பிள்ளையைத்தான் பார்த்ததே இல்லை என்றாள்.

'நான்முயன்றகாரியத்தில்வெற்றி பெற்றிருக்கிறேன் என்று உங்கள் வார்த்தையால் தெரிகிறது.'' என்று அந்த அம்மாள் சொல்லிவிட்டுஇதன் அர்த்தத்தை விளக்கி மேலும், ''தோனிதான் என்னுடைய பிள்ளை. நெல்ஸன் வளர்ப்பு'' என்றார். ''நீங்களும் அனுதாபத்துடன் நுட்பமாயும் குழந்தைகளின் மனப்பான்மையை அறியும் தாயாராகையால் உங்களிடம் உண்மையைச்சொல்லுகிறேன். குழந்தை நெல்ஸனுக்குத் தான் அநாதை என்று தெரிந்தால் அவன் ரொம்பவும் ஏங்கிவிடுவான். நெஞ்சமே வெடித்துவிடும்; ஆகையால் இந்தமாதிரி சொன்னேன். இதனால்தான் அவன் ஒரு தன்மதிப்பும் வாழ்க்கையில் ஒரு பாதுகாப்பும் பெற்றிருக்கிறான். தோனி திடசித்தமும் தன்னம்பிக்கையும் உள்ளவன். அவனுக்கு எதுவும் மனக்கலக்கத்தை உண்டாக்காது.'' என்றார்.

இதெல்லாம் பல வருஷங்களுக்கு முன்பு நடந்தவை. போனவருஷம் ஒரு இடத்தில் தற்செயலாக ஒருவரைக் கண்டேன். அவருடைய வசீகரமான முகத்தை சற்று உற்று நோக்கினதும் எனக்கு ஞாபகம் வந்தது. ''நீர் அந்தோனி வெப்ஸ்டர் அல்லவா?'' என்று கேட்டேன்.

அவர் அந்தோனிதான். முன்பு கடற்கரையில் நாங்கள் விளையாடினது அவருக்கு ஞாபகம் இருந்தது. பிற்பாடு எங்கள் வீட்டிற்கு அவர் வந்த சமயம் நெல்ஸன் ஒரு விஞ்ஞானியாக மிகவும் திறமையுடன் வேலை செய்ததையும் 28-வயதிலே மரித்துவிட்டதையும் சொன்னார்.

''நெல்ஸனுக்கு அம்மா உண்டு; தன் லேப்ரடரி உண்டு. அவனுடைய தேகம் பலஹீனமாக இருப்பதை உத்தேசித்து அம்மா அவனை மெக்ஸிகோவிற்கு அழைத்துக் கொண்டு போனாள். அங்கேயும் அவன் தன்னுடைய வேலையைச் செய்துகொண்டே இருந்தான். மரிப்பதற்கு அரைமணி முந்திகூட அவனுடைய ரஸாயனக் குழாய்களில் ஈடுபட்டிருந்தான். அம்மா மடியில் உயிர்விட்டான்'' என்றார் அந்தோனி.

''அம்மா உங்களிடம் எப்போது சொன்னார்?''

''உங்களுக்குத் தெரியுமா?

''ஆமாம். என் தாயாரிடமும் என்னிடமும் சொன்னார். ஆனல் அதை நாங்கள் வெளியே சொல்லவில்லை.''

இதைக்கேட்டு அவர் வெகுநேரம் மௌனமாக இருந்தார். பிறகு அவர் கண்களில் நீர் நிறைந்தது. ''நான் ஏற்கனவே அம்மாவிடம் வைத்திருந்த பிரியத்தைவிட அதிகம் வைக்கமுடியாதென்று நினைத்திருந்தேன். ஆனல் இந்த விஷயத்தை அவள் சொன்னதும்—உம்—என் நெஞ்சம் உருகிவிட்டது. அப்போது எனக்கும் ஒரு பிள்ளை இருந்தான், ஆகையால் ஒருவளர்ப்புக் குழந்தை மனம் நொந்துவிடக் கூடாதென்று தன்னுடைய பிள்ளையின் ஸ்தானத்தை அவனுக்குக் கொடுத்து இத்தனைவருஷங்களும் காலந்தள்ளுவது அவளுக்கு எப்படி இருந்திருக்குமென்று நான் ஊகித்தேன்.'' என்றார்.''





பாம்பைப் புஷ்பமாக்கும் கற்பின் வலிமை

# பழமொழிக் கோவை

ஸ்ரீ. ஜானம்மாள்

"ச்சு. ச்சு. அந்த "பழமொழிகளும் கிழமொழிகளும்" இப்ப யாருக்குத் தெரிகிறது. நானோ கிழமும் இல்லை. குமரியும் இல்லை. ஒரு நடுங்கட்டானாக இருக்கிறேன். அது தெரியாமல் மோஹினி ஆசிரியர் 'பழமொழிகளைத் தொடுத்து ஒரு மாலைகட்டி அனுப்பு அதை மலரில் சாத்த வேண்டும்' என்ற உத்தரவை அனுப்பிவிட்டார். என்ன சொல்கிறது என்று திருதிரு வென்று விழித்தேன். வந்துவிட்டது பழமொழிக்குப் பிரமாத கோபம். "பழம் கிழங்களுக்கு இருக்கும் சக்தியும் அறிவும் பலஹீனங்களான உங்களுக்கேது?" என்று கூறிக்கொண்டே என் மூளையை முட்டித்தள்ளிக் கொண்டு என் கண்கள் முன்பு "வல்லவனுக்குப் புல்லும் ஆயுதம்" என்று காட்சியளித்து மேலும் கூறத் தொடங்கியது. "பார்த்தால் பூனை பாய்ந்தால் புலி அந்த எழுதுகோல். அதற்கு "ஹரிஹரர்களின் சக்திகளான ஆக்கவும் அழிக்கவும்" அவ்விரண்டு கலைகளிலும் பூரண பாண்டித்தியம் உண்டு. தெரிகிறதா! அக்கூரிய முனையில் ஒன்று அகப்பட்டுக் கொண்டுவிட்டாலோ மறுபடியும் மீண்டுவருவது இரண்டாம் பட்சம்! அந்த ஆயுதத்தை ஆச்ரயித்தால் நீ கட்டாயம் கடைத்தேறுவாய் "கடுக் செத்தாலும் அதன் காரம் எங்குப் போகும்? பேனாவைக் கையில் எடு. நான் உனக்கு ஒத்தாசைசெய்கிறேன். ஒருகதை சொல்லப் போகிறேன் நீ அதை பேசாமல் எழுதிக் கொண்டேபோ" என்று சொன்ன பிற்பாடுதான் பெரிய கவலை என்னை விட்டது. அது சொல்லிய கதைதான் உங்களுக்கு நான் எழுதியிருக்கிறேன்.

நாகமய்யர் என்று ஒரு பிராமணர் இருந்தார். அவருக்கு மனமொத்த மனைவியும் மூன்று தங்கமான குமாரர்களும் இருந்தார்கள். அவர் ஒரு பெரிய ஜமீன்தார். "ஐந்தும் மூன்றும் அடுக்காக இருந்தால் அறியாத பெண்ணும் கறி சமைப்பாள்" என்பதைப் போல பணமும் மற்ற சுகபோகங்களும் ஏராளமாக இருக்கையில் எதைத்தான் செய்ய முடியாது? காலை 8மணிக்கு ஒரு மூக்குக் கண்ணாடியை மாட்டிக் கொண்டு கஜானாஅறையில் புகுந்தாரானால் கணக்கு வட்டிகளின் புள்ளிகளைப் போட்டுப் பட்டுவாடா செய்து வருவதற்குள் மூச்சு திணறிவிடும். ஆற்றில் போட்டாலும் அளந்துபோடு. பாம்புடன் விளையாடினாலும் பணத்துடன் விளையாடலாகாது" என்று பெரியோர்கள் தெரியாமலா சொல்லியிருக்கிறார்கள்? என்கிறபடி பிறர் பொருளை கபளீகரம் செய்யாமல் ஊராரின்

நகைகளையும் நிலங்களையும் வைத்து நல்லபடி காப்பாற்றி திருப்பிக்கொடுப்பதானது சாமானியமா! தலைநோயும் சங்கடமும் தான்பட்டால்தான் தெரியும்" பாவம். அவருக்கோ வயது 55 க்குமேல் ஆகிவிட்டது எனினும் "மீசை நரைத்தாலும் ஆசை நரைக்கவில்லை. எல்லாவற்றையும் யோசனை செய்து பார்த்தார். மூட்டையைச் சுமப்பானேன் முதுகு வலிப்பானேன். இனி தன் குமாரர்களிடத்தில் அந்த லேவாதேவிக் கணக்குகளையும், சொத்துக்களையும், ஒப்பித்துவிட்டு "சாகிறகாலத்தில் சங்கரா என்று காலத்தைக் கழிக்கத் தீர்மானித்தார்.

"வயிற்றை அலம்பி மாணிக்கத்தைப் பெற்றதுபோல்" ஐயரவாளின் பிள்ளைகள் உயர்ந்த படிப்புடன் ப்ரகாசிப்பதோடு பண விஷயத்தில் "உருட்சிக்கு நீட்சி புளிப்புக்கு அவாளப்பன்"என்கிறபடி தகப்பனுக்குமேலான புத்திசாலிகளாய் "இட்டுவா என்றால் சுட்டுவரும் சாமர்த்தியசாலிகள்'

அச் சமயம் அவருடைய தர்ம பத்தினியான தர்மாம்பாள் அவர் அருகில் வந்து உட்கார்ந்து "என்னா! ஏழைச்சொல் அம்பலம் ஏறுமோ? நானும் தினம் சொல்றேன். நம்ம பசங்களென்ன அல்ப சொல்பமானவாளா! "குத்தி எடுத்தாலும் சம்பா; குப்பையில் போட்டாலும் மாணிக்கம்" அத்தகைய புத்திசாலிகளிடம் இந்த பாரங்களை ஒப்பிக்க இன்னும் மனசு வரவில்லையா! பிள்ளைகளுக்கும் இப்போது முதல் பழகினால்தானே! "வீட்டைக் கட்டிப்பாரு, கல்யாணத்தைச் செய்துப்பாரு" என்கிறபடி அதனதன் கஷ்டநிஷ்டூரம் தெரியும். கடைசீ காலத்துலே நாம் ஹாய்யா! ராமா கிருஷ்ணான்னு போதுபோக்கலாமே!" என்றாள்.

"பழம் நழுவிப் பாலில் விழுந்தது அதுவும் நழுவி வாயில் விழுந்தது; கும்பிடப்போன தெய்வம் குறுக்கேவந்ததுபோலவும், தேடப்போன மூலிகை காலில் சுத்தியதுபோலவும் ஆச்சு. உன்னைத்தான் கூப்பிட எண்ணினேன். உனக்கு நூறாயிசு. சகலமும் தீர்மானமாய் விட்டது. "ஐந்திலே விளையாதது ஐம்பதிலே விளையுமா" "விளையும் பயிர் முளையிலே" என்பார்கள். அதுபோல் நம்ப பசங்கள் வெகு கெட்டிக்காரர்கள் என்பதில் சந்தேகமே இல்லை. அதனால் தான் நான் "செய்வன திருந்தச்செய்" என்றபடி சகலத்தையும் விவரமாகப் பிள்ளைகளிடம் இப்பவே சொல்லிவிடப் போகிறேன். "அடுத்து முயன்றாலும் வேளை வரவேண்டாமா" நீயும் இத்தனைநாள் சொல்லியதை நான் கேட்காமல் "செவிடன் காதில் ஊதிய சங்கு"போல் அலக்ஷியம் செய்ததாக எண்ணினாய். "குருவியின் தலையில் பனங்காயை வைப்பது"போல் சிறிசுகள் தலையில் சுமையை ஏத்தலாமா! காலம் போகும் வார்த்தை நிற்கும்" பதமறியாத வேலையும் பழுது பார்க்காத வீடும்" நிற்காது. நான் சும்மா தூங்கவில்லை. "பணம் என்றால் பிணமும் வாய் திறக்கும்" "உலகத்திலோமோசம் நாசம் கம்பளி வேஷம்" பசுத்தோல் போர்த்த புலிகள்தான் அதிகம். இந்த உளவெல்லாம் தெரிந்து நடந்தால்தானே ப்ரயோஜனம் உண்டு. பிள்ளையாண்டான்களுக்கு இப்போதுதான் வியவகார ஞானம் உண்டாகி "தனக்கு தனக்கு என்றால் தள்

ளாமையும் தெரியாது" என்கிற படி மன உறுதி வந்திருக்கிறது. நானும் தீர்மானித்துவிட்டேன்'' என்றார்.

கணவனின் தீர்மானத்தை யறிந்த மனைவி சந்தோஷமடைந்து 'சரி! இப்பவாவது தீர்மான மானது பற்றி சந்தோஷம். நமக்கோ வயதாச்சு.காடு வாவா! என்கிறது. வீடு போபோ என்கிறது. கண்ணிருக்கும்பொழுது காக்ஷி கண்கேட்ட பிறகு சூரிய நமஸ்காரம் செய்யமுடியுமா! "கலப்பால் கறக்கலாம்; உழக்குப் பால் எத்தமுடியுமா! அதுபோல் போன நாட்களை இனி காண முடியாது. நாம் பகவானே என்று யாத்திரை செய்யப்புறப் படலாம்'' என்றாள்.

2

ஐயர்வாள் பிள்ளைகளை நோக்கி "சிரிப்பும் புளிப்பும் சிலகாலம் தான்'' என்பது உங்களுக்கு நன்ருகத் தெரியும். இனி நீங்கள் சிறு பிள்ளைகளாக இருக்க லாகாது. "குலத்தையும் கோத்திரத்தையும் வளர்ப்பவன் புத்திரன்தான். சொத்துக்குடையவனும் அவன்தான். மாதா பிதாவின் ஈமக் கடனைத் தீர்ப்பவனும் அவனே'' "வயிற்றுப் பிள்ளை பிழைக்கவும் வகையாகக் குடும்பம் செழிக்கவும்'' பிதா தன் கடமையைச் செய்தாகிவிட்டது. இனிமேல் நீங்கள் தம் தம் கடமைகளைச் செய்வதற்கு முன் வரவேண்டும்'' என்றார்.

அப்பா பேசியதைக் கேட்ட மைந்தர்கள் திகைத்துப்போனார்கள். சோழியன் குடுமி சும்மா ஆடுமா? ஏதோ அதிசய மிருக்கிறதாக எண்ணினார்கள்.

"கரும்பு தின்னக் கூலியா கேட்பார்கள்'' சக்கரைப் பந்தலில் தேன்மாரி பொழிந்ததாக சந்தோஷப்பட்டுப் பின்னர் சில தீர்மானங்கள் செய்தார்கள்.

(1) கணக்கு வழக்குகளை தாங்கள்ஏற்று,பிறகு கொதுவையில் இருக்கும் நகைகள், நிலங்கள் யாவையும் வட்டியைத் தள்ளிவிட்டு சொந்தக்காரர்களிடத்தில் முதலைமட்டும் வாங்கிக்கொண்டு திருப்பிக்கொடுத்து விடவேண்டும்.

(2) ரொம்ப ஏழைகளாக இருக்கும் பட்சத்தில் முதலையும் தள்ளிவிடவேண்டும்.

(3) ஆண்டிமாண்டின் மீது பணம் வாங்கியிருப்பவர்களிடமிருந்து வரக்கூடிய பணத்தை மட்டும் வசூலித்தால் போதும். இந்த லேவாதேவி விவகாரத்தை முதலில் குழிவெட்டி மூடிவிட்டு ரொக்கப்பணத்தை பேங்கியிலோ அல்லது வீடு, நிலங்களிலோ போடவேண்டும்.

அதன் பிறகு அம்பி ஒரு பிரேரணையைக் கொண்டுவந்தான். அதாவது பையன்களுக்கு காலேஜில் இடம் கிடைப்பது ரொம்ப கஷ்டமாக இருக்கிறது இப்போது. ஆதலால் பையன்கள் காலேஜுக்காக ரூ 15 லக்ஷம் அப்பாவின்பெயரில் நன்கொடை அளிக்கவேண்டும் என்றதும் மற்ற இருவரும் அதை ஏக மனதாக அங்கீகரித்தனர்.

பிறகு அம் மூவர்களும் பிதாவினிடம் சென்று ஒரு நிபந்தனையின் பேரில்தான் தாங்கள் அதை ஏற்றுக்கொள்ள முடியும் என்பதைத் தெரிவித்தனர். அது என்னவென்று பிதா வினவ, நாங்கள் விரும்புவது—"நீங்கள் நடுவில் ஒன்றிலும் வந்து குறுக்கிடக்கூடாது. எங்கள் இஷ்டத்தைப் பேரல எதையும் நடத்த

விட்டுவிடவேண்டும் என்பது தான்." என்றவுடனே அவரும் அதற்கு உடன்பட்டு "வாயுள்ள பிள்ளை பிழைக்கும் வலிவுள்ள மாடு உழைக்கும்" என்பதுபோல் நீங்கள் புத்திசாலியாய் நடத்தினுல் போதும். தேளுக்கு இடம் கொடுத்தால் ஜாமத்திற்கு ஒரு முறை கொட்டுவதுபோல் அதிகாரம் பெற்ற பிறகு நீங்கள் சண்டை போடாமல் தேனும் பாலும்போல் நடத்துங்கள்." என்று குமாரர்களிடத்தில் பாரத்தைப் போட்டுவிட்டார். உடனே மூவரும் சேர்ந்துகொண்டு தங்கள் தீர்மானங்களின்படி, சுபஸ்ய சீக்கிரம் என்றபடி சகல காரியங்களையும் நொடிப் பொழுதில் செய்து முடித்தனர்.



3

அலங்காரமாக நானுவித ரங்குகளைத் தீட்டியிருக்கும் வானத்தில் கீழ்க்கடலைக் கிழித்துக்கொண்டு அருணன் கிளம்புவதைப் பார்த்தால் இன்று ஏதோ விசேஷம் இருக்கிறது என்றுதான் ஊகிக்கவேண்டியிருக்கிறது. அருணேதயமாகிவிட்டது. குவிந்திருந்த நயன கமலங்கள் எல்லாம் புவியில் மலர்ந்தன. தேனைத்தேடி அருந்துவதற்கு ஓடும் வண்டினங்களைப் போல மனிதர்களும் தத்தம் வயிற்றுப்பாட்டையும் வேலையையும் கவனிப்பதற்குக் கிளம்பிவிட்டது.

டிங்டிங் என்ற சைகிலின் சப்தம் வாசலில் கேட்கிறது. கையிலிருக்கும் காப்பியை அப்படியேவைத்துவிட்டு ஓடும் அய்யர்வாளைப் பார்த்து, "நன்ருயிருக்கிறது "ஆக்கப்பொறுத்தது ஆறப் பொறுக்கவில்லை யாக்கும்" காப்பியைக் குடித்துவிட்டுப் போய் அந்தப் பேப்பரைப் படித்தால் என்ன! கிணற்று நீரை வெள்ளமா கொண்டுபோகும்? என்று சகதர்மணி கூறினுள். 'பெண்டாட்டியின் சொல்லுக்கு இரண்டில்லை' என்று அவரும் மடமடவென்று காப்பியைக் குடித்துவிட்டு வாசலுக்கு ஓடினுர். பிறகு பேப்பருடன் ஒரு சாய்வு நாற்காலியில் படுத்துக்கொண்டு அதைத் திருப்பித் திருப்பிப் புரட்டிப் பார்க்கிருர்! தேன்குடித்தநரிபோல் சந்தோஷம் அகத்தினழகு முகத்தில் தெரிந்தது பேப்பரைத் திருப்பித் திருப்பி பார்த்துக்கொண்டேயிருக்கிருர். "இப்படி ஆச்சரியத்துடனும் மலர்ந்த கண்களுடனும் எதை உற்றுப் பார்க்கிருர்! ஐயையோ! வாய்கூடப் பிளந்துவிட்டதே! பேப்பரில் என்ன அப்படி அதிசயம்!" என்று கேட்டுக்கொண்டே தர்மாம்பாள் அங்கு வந்து நின்ருள்.

அய்யர்வாள் கையிலிருக்கும் பேப்பரை சுட்டிக் காட்டுகிருரே தவிர வாயிலிருந்து ஒரு அட்சரமாவது வெளிவரவேயில்லை. வாயை மூடுகிருர்; மறுபடியும் திறக்கிருர். பாவம்! அதைக்கண்ட மனைவி நடுநடுங்கிப் போய்விட்டாள்.


அதே சமயத்தை எதிர்பார்த்திருந்த பிள்ளைகள் ஓடிவந்து அப்பா! "மூர்த்தி சிறிது கீர்த்தி பெரிது" என்கிற புகழ்மாலையை உங்களுக்குச்சூட்டவே நாங்கள் சமயத்தை எதிர்பார்த்தோம். சந்தோஷந்தானே? 15 லக்ஷம் நன்கொடை சரியானதுதானேப்பா! திருவள்ளுவர் "தோன்றின் புகழொடு தோன்றுக" என்று கூறியபடிச் செய்திருக்கிருேம். மேலும் "அம்மாவின் மனம்


போல மாங்கல்யமும், குணம் போல கீர்த்தியும்'' பொங்கி வழிந்தோடுகிறது.'' என்று கூறி தகப்பனுரை பிள்ளைகள் தடவிக் கொடுத்துப் பின், "கார்த்திக்குப் பின் மழையுமில்லை கர்ணனுக்குப்பின் கோடையும் இல்லை'' என்றபடி உங்கள் கொடையும் உலகில் "பூவோடு சேர்ந்த நாறும் மணம் பெற்றதுபோல்'' சாச்வதமாக நிற்கும்.

''இறைக்கும்கிணறுதான் சுறக்கும்; வெட்ட வெட்ட மரம் துளுக்கும்'' என்பதைப்போல கைகொண்டமட்டும் தர்மம் செய்தால்தான் குடியும் குலமும் விளங்கும்'' என்றுர்கள்.

அதிக சந்தோஷத்தால் திணறும் ஐயர் குமாரர்களைச் சேர்த்துக் கட்டிக்கொண்டார். தழுவினர். உச்சி மோந்தார். பேசத் தெரியாமல் விழித்தார். "பெற்றவர்களுக்கே தெரியும் பிள்ளையருமை'' என்ற பழமொழியை நன்ருக உணர்ந்தார்.

இதற்குள் இந்த பேப்பர் விஷயத்தைக் கண்ட பெரிய மனிதர்கள் சந்தோஷம் விசாரிக்க வந்துவிட்டார்கள். ''சார்! இருந்தாலும் உம்மைப்போலத்தான் இருக்கவேண்டும். பிடித்தாலும் புளியங்கிளையைப் பிடித்தீர்'' கொடுத்தாலும் அழியாத கலையைக் கொடுத்தீர். பேஷ். வெகு சந்தோஷம். தருமத்தை ஒருநாளும் மறக்கவேண்டாம் என்ற மூதுரையைக் கடைபிடித்த பிறகு இனி என்ன இருக்கிறது?'' என்று வாழ்த்தினர்கள். தர்மாம்பாளின் சந்தோஷத்தை அளவிட்டுக் கூறமுடியாது.





# பக்திப் பெருக்கு

"ரங்கப்ரியா"

ஸ்ரீ வைஷ்ணவ ஆசார்யரில் முதன்மையாக விளங்கும் ஸ்ரீ ராமானுஜரிடத்தில் உத்தம சிஷ்யராகிய, பிள்ளை யுறங்கா வில்லிதாஸர் மாதம் ஒன்றுக்கு தான் அரசனிடம் ஊதியம் பெற்றுவரும் ஆயிரம் பொன்னையும் தன் ஆசார்யனுக்குக் கொடுத்துவிடுவது வழக்கம். அந்தப் பணத்தை ராமானுஜர் பெற்று பாகவத கைங்கரியத்திற்குச் செலவு செய்துவந்தார். தினந்தோறும் ராமானுஜர் வில்லிதாஸருடன் காவேரிக்குச் சென்று நீராட்டம் செய்து திரும்புகையில் வில்லிதாஸரின் கையைப் பிடித்துக்கொண்டு வருவது வழக்கம். இதைப் பார்த்து மற்ற வைஷ்ணவர்கள், "உத்தமமான வைஷ்ணவ சீலராகிய ராமானுஜரே இவ்விதம் வில்லியின் கைப் பிடித்துவந்தால் மற்றவரின் செய்கைக்குக் கேட்கவும் வேண்டுமோ?" என்று புறங்காட்டிக்கொண்டார்கள். இதைத் தெரிந்துகொண்ட ராமானுஜர், வில்லிதாஸரின் மனத் தூய்மையை அவ் வைஷ்ணவர்களுக்கு எடுத்துக் காட்டவேண்டுமென்று, ஒருநாள் அவர்கள் போஜனம் செய்யும் சமயத்தில் அவர்கள் உலர்த்தியிருக்கும் வஸ்திரம் ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு முழம் கிழித்துக்கொண்டு வரும்படி ஒருவரை நியமித்தார். அவரும் அவ்விதமே செய்துவந்து ராமானுஜரிடம் கொடுக்க அதைப் பெற்று ராமானுஜர் பத்திரப்படுத்தினர்.

பிறகு போஜனம் அருந்திவந்த வைஷ்ணவர்கள் தங்கள் துணிகள் கிழிபட்டிருப்பதைக் கண்டு மனம் தாங்காமல் அளவுக்கடந்து திட்ட ஆரம்பித்தார்கள். ராமானுஜர் அதைக்கேட்டு 'இந்த மடத்தில் வைஷ்ணவர்கள் தவிர வேறு யாரும் வருவதில்லை. அப்படிக்கு அவ்விதம் நடந்துவிட்டால் பாகவத கைங்கர்யத்திற்கே என்று பேசாமல் இருக்கும்படி எவ்வளவு தூரம் தேத்தரவு சொல்லியும் அவர்கள் கேட்காமல் தங்கள் போக்காய் திட்டினார்கள்.

ராமானுஜர் பிறகு தன் சிஷ்யர்களில் இருவரை அழைத்து பாகவத கைங்கர்யத்தின் பொருட்டாக வில்லிதாஸரின் மனைவி பொன்னாச்சி உறங்குகையில் அவள் அணிந்திருக்கும் ஆபரணங்களை கழற்றிக்கொண்டு வரும்படியாக ஏவினர். அவ்விதமே அவர்கள் வில்லிதாஸர் வீட்டில் இல்லாத சமயம் சென்றார்கள். ஆச்சியார் படுக்கையில் ஒஞ்சரித்து படுத்துக்கொண்டிருக்கவே ஒரு பக்கத்து ஆபரணங்களை கழட்டிக்கொண்டிருக்கும்சமயம் ஆச்சியார் இவ்வாபரணங்கள் பாகவத கைங்கர்யத்திற்கு உதவவேண்டுமென்று நினைத்தாள். மறுபக்கம் திரும்பினால் அந்த ஆபரணங்களும் ஷ கைங்கர்யத்திற்கு உதவுமே என்று நினைத்துத் திரும்பினாள். இதைக் கண்ட அவர்கள் ஆச்சியார் விழித்துக்கொண்டதாக நினைத்து, கழட்டிய நகைகளை மாத்திரம் கொண்டுபோய் மடத்தில் ராமானுஜரிடத்தில் கொடுத்தார்கள்.

வில்லிதாஸர் வீடு திரும்பியதும் தன் மனைவியின் ஒரு பக்கத்து நகைகள் காணமலிருப்பது கண்டு என்ன என்று கேட்க, ஆய்ச்சியாரும் நடந்த விதம் அவருடன்

சொன்னதுடன், தன் ஆபரணங்கள் பாகவத கைங்கர்யத்துக்கு உதவ வேண்டும் என்று ஆசார்யனே தான் சிஷ்யர்களை ஏவி இவ்விதம் செய்கையில் ஸ்வதந்திரப்பட்டதினால் மறுபக்கத்து நகைகள் பாகவத கைங்கர்யத்துக்கு உதவாமல் போய் விட்டன என்று சொன்னாள்.

இதைக் கேட்ட வில்லிதாஸர் தன் மனைவியைப் பார்த்து "நீ ஸ்வாமியினிடம் எவ்வளவு அரிய பெரிய விஷயங்களைக் கேட்டிருந்தும், நாம் என்னும் அஹங்காரத்தை விடவில்லை. தொட்டிலில் உறங்கும் குழந்தையை தாய் பரிவுடன் அதற்கு வேண்டிய பால் ஊட்டி தாலாட்டிக் காப்பதுபோல் தாயாகிய ரக்ஷகன் குழவிகளாகிய நம்மைக் காப்பாற்றுகிறான். ரக்ஷகன் நம்முடைய நன்மையிலேயே கண் வைத்துள்ளான் என்பதை நீ அறிந்திருந்தும் நீ ஸ்வதந்திரப்பட்டதினால் உன் நகைகள் பாகவத கைங்கரியத்திற்கு உதவவில்லை. நீ ப்ரயத்தனப்படாமல் இருந்திருந்தால் அவர்கள் நீ உறங்குவதாக நினைத்து உன்னை மறுபக்கம் திருப்பி அந்த ஆபரணங்களையும் கழட்டி எடுத்துக் கொண்டு போயிருப்பார்கள். அதுவும் உத்தம கைங்கர்யத்துக்கு உதவியிருக்கும்.

நம் காரியத்துக்கு நாம் கடவோம் அல்லோம் அவனே சரக்காளனாய் வந்து நயாமி என்று கைக்கொள்வான் என்கிற பெரியோர் வசனத்தை மறந்தாய்.

கீதாசார்யனும் கீதையின் கடைசியில் சரமச்லோகத்தில் இதையே உறுதியாய் உபதேசித்தார். ஆகையால் இனி உன் உறவு எனக்கு வேண்டியதில்லை என்று, தான் ஷையாரிடம் உணவு கொள்ளாமலும் இருந்துவந்தார்.

இந்தக்கிரமத்தில் மூன்றுநாட்கள் சென்றன. பிறகு ராமானுஜர் இதையறிந்து அவர்களை அழைத்து விவரம் விசாரித்தார். வில்லிதாஸர் நடந்தவைகளை அப்படியே எடுத்துச் சொல்லி நம்மால்தான் எல்லாம் நடக்கிறது என்று நினைத்து ஸ்வதந்திரப்பட்ட ஸ்திரீயினிடத்தில் பெருமாள் அமுது செய்யவும் அப் பிரஸாதத்தைத்தான் அங்கீகரிக்கவும் தகுமோ என்று சொன்னார்.

ஸ்வாமியும் பொன்னாச்சியை அழைத்து விசாரிக்க ஆச்சியும் நடந்த விருத்தாந்தங்களைச் சொல்லி தன் மனம் இன்னும் பக்குவப்படவில்லையே என்று வருந்தி ஸ்வாமியை தண்டன் சமர்ப்பித்து நின்றார். அப்படி நின்ற ஆச்சியை என்ன செய்வது? என்று கேட்டார். அதற்கு தாஸர் "ஸ்வாமியின் இஷ்டம்போல் செய்யலாம். எனக்கு இனி ஆச்சியார் வேண்டாம்" என்று மறுத்தார். மறுத்தும் ஸ்வாமி "ஆச்சியாரை யாருக்காவது விடலாமா" என்று வில்விதாசரைக் கேட்டார். அதற்கு அவர் "ஸ்வாமி இஷ்டம்போல் செய்யலாம்" என்றார்.

உடனே ஸ்வாமி "இவளை உமக்கே கொடுத்தோம்" என்று ஆச்சியாரின் கையைப் பிடித்து வில்லிதாஸரின் கையில் கொடுத்தார். அவரும் "ஆசாரியரின் நியமனம்" என்று ஆச்சியாரை அங்கீகரித்தார்.

உடனே ராமானுஜர் தன் மடத்திலுள்ள வைஷ்ணவர்களை அழைத்து "உங்கள் துணிகளில் சில பாகம் களவாடப்பட்டபோது நாம் என்ன சொல்லியும் நீங்கள் கேளாமல் வாயில் வந்தவாறெல்லாம் திட்டினீர்களே இப்போது வில்லிதாஸரின் மனம் எப்படி பக்குவப்பட்டிருக்கிறது என்பதைப் பாருங்கள். அப்படிப்பட்ட பரிபக்குவமடைந்த மனத்துடையவரின் கையை நான் பிடித்துக்கொண்டு வந்ததை நீங்கள் பரிகசித்தீர்கள். ஜாதியில் உயர்வு காணமுடியாது. ஆத்ம சுத்தி. தான் மனிதனுக்கு வேண்டியது." என்று சொல்லிவிட்டு, பிள்ளையுறங்காவில்லிதாஸர் பொன்னாச்சியார், பாணன், மாறநேர் நம்பி, திருக்

கச்சிநம்பி இவர்களைப்போல்வாருடைய ஜாதியை நினைத்து சந்தேகம் கொள்வீர்களானல் நம்மாழ்வார் பாடிய


குலம் தாங்குசாதிகள் நாலிலும்
கீழிழிந்து எத்தனை
நலந்தானிலாத சண்டாள
சண்டாளர்களாகிலும்
வலந்தாங்கு சக்கரத்தண்ணல் மணி
வண்ணற்காளென்று உள்
கலந்தார் அடியார்தம்
அடியார் எம்மடிகளே.

என்கிற பாட்டையும் தொண்டரடிப்பொடியாழ்வார் பாடிய

பழுதிலா வொழுகலாற்றுப்
பலசதுப் பேதிமார்கள்!
இழிகுலத்தவர்களேலும்
எம்மடியார்களாகில்
தொழுமினீர் கொடுமின் கொண்மின்
என்று நின்னேடும் ஒக்க
வழிபட அருளிஞய்போல் மதிள்
திருவரங்கத்தானே!

அமரவோ ரங்கமாறும் வேதமோர்
நான்கும் ஓதி
தமர்களில் தலைவராய
சாதியந்தணர் களேலும்
நுமர்களைப் பழிப்பாராகில்
நொடிப்பதோரளவில் ஆங்கே
அவர்கள்தாம் புலையர்போலும்
அரங்கமா நகருளானே!

என்கிற பாசுரங்களையும் பாடி அவற்றின் அர்த்த பாவங்களை கவனித்துப் பாருங்கள்'' என்று சொல்லிவிட்டு சகலரும் பார்க்க வில்லிதாஸரை அருகில் அழைத்து ஆலிங்கனம் செய்துகொண்டு "நீர் எனது பரிசவேதிகை'' என்று உகந்துகொண்டார். பிறது வில்லிதாஸரும் அவர் பத்னியும் ஸ்வாமிக்கு கைங்கர்யம் செய்துகொண்டிருந்தார்கள்.






மனைவி :— நானும் எத்தனை நாளாய் ஒரு மோதிரம் வாங்கித் தாருங்கள் என்று கேட்டுக்கொண்டு இருக்கிறேன் இன்னும் வாங்கித் தரப்போகிறீர்கள் ஆகட்டும்! ஆகட்டும். எனக்கு என்றால் வாங்குவீர்களா!

கணவன் :— உனக்கு என்றால் வாங்கித்தராது பின்யாருக்கு எதை வாங்கித் தந்துவிட்டேன்சொல்லேன் பார்க்கலாம்.

மனைவி:–சொல்லட்டுமா? போன மாதம் ஒருபேனா இருக்கும்பொழுது இன்னும் புதுமாதிரி என்று வேறொரு பேன் நீங்கள் வாங்கிக் கொள்ளவில்லையா. அதைப்போல் எனக்கு வாங்கித் தரவேண்டும் என்றால் எத்தனை நாழி ஆகும்? பணம் என்னவோ நான் வீட்டுச்செலவுக்கு என்று நீங்கள் தரும் பணத்தில் சிக்கனம் செய்துக் கொஞ்சம் சொத்து வைத்திருக்கிறேன். அதுவும்தான் உங்களுக்குத் தெரியும்.

கண:—இப்பொழுது பணத்தைப் பற்றி நான் என்ன சொன்னேன்? இப்பொழுது தங்கம் வாங்கிச்செய்வதென்றால் பணம் அதிகம் பிடிக்கும். அதாட்டில் யாராவது விற்றால் வாங்கலாம் என்று பார்த்துக்கொண்டிருக்கிறேன். அதற்குள் நீ சண்டை போடுகிறாயே. கோபித்துக் கொள்ளாதேம்மா. வாங்கித்தரேன்.

மனைவி:—கோபம் என்ன? மணி ஆய்விட்டது. சாப்பிட வாருங்கள் —என்று அழைத்தாள். இருவரும் சாப்பிடச் சென்றார்கள்.

மறுநாள் காலை ராமமூர்த்தி கடைத் தெருவுக்கு காய்கறி வாங்கப் போகையில் யாரோ கூப்பிடுவது போல் இருந்தது. நாற்புறமும் சுற்றிப் பார்த்தான். அவன் நண்பன் கிருஷ்ணன்'எங்கேபோகிறாய் ராமூ? நீ முன்பு ஒருதரம் ஏதாவது மோதிரம் வந்தால் வாங்கவேண்டுமென்று சொன்னஞாபகம்.எனக்குத் தெரிந்தவர் இந்த மோதிரத்தை விற்றுத் தரச் சொன்னார். உன் ஞாபகம் வரவே உன் வீட்டுக்குத்தான் எடுத்துக்கொண்டு புறப்பட்டேன்'' என்று சொல்லி ஒத்தை கெம்புவைத்த ஒரு மோதிரத்தை எடுத்தான். அதைப் பார்த்ததும் ராமூவுக்கும் ரொம்ப பிடித்துவிட்டது. நண்பனை வீட்டுக்கு அழைத்துவந்து மோதிரத்தை மனைவிக்குக் காட்டினான். அவளுக்கு என்றே செய்தார்ப்போல் விரலுக்குத் திட்டமாய் இருக்கவே ஒருவிலை பேசி 35 ரூபாய்க்கு வாங்கினான்.

ராமு:—ஜானகி! நீ என்ன இருந்தாலும் அதிரிஷ்டசாலிதான்; கேட்ட மாத்திரத்தில் கிடைத்துவிட்டது. இப்பொழுது ராகுகாலம்; பொட்டியில் வைக்கிறேன். அப்புறம் போட்டுக்கொள்—என்று சொல்லி அதை வைத்துவிட்டு சாப்பாட்டை முடித்துக்கொண்டு ஆபீஸுக்குப் புறப்பட்டுப் போகும்பொழுது "ஜானகி இன்று வண்ணானை வரச்சொல்லியிருக்கிறேன். துணிகளை சலவைக்குப்போடு. எல்லாம் பார்த்துஎடுத்து வைத்திருக்கிறேன்'' என்று சொல்லிச் சென்றான்.

மாலையில் ராமமூர்த்தி அலையக் குலைய ஓடிவந்ததைப்பார்த்துபயந்து "என்னசமாசாரம்? இத்தனை அவஸரம்?'' என்று கேட்டாள்.


'ஒன்றுமில்லை.சொல்கிறேன் இரு' என்று அவன் ரூமுக்கு ஓடி கோட்

ஸ்டேன்டைப் பார்த்ததும் சப்தநாடியும் அடங்கியது போலாய்விட்டது. "ஜானகி! வண்ணான்வந்தானா? துணிகளைப் போட்டுவிட்டாயா?" என்று பதைபதைக்கக் கேட்டான்.

ஜானகி :—ஓ, வந்தான். நீங்கள் எடுத்துவைத்திருந்த எல்லாத் துணிகளையும் கணக்கு எழுதிப் போட்டுவிட்டேன். ஆமாம் மோதிரத்தை எந்தப் பெட்டியில் வைத்தீர்கள்? எங்குத் தேடியும் எனக்கு அகப்படவில்லையே?

ராமு :—இப்போ அந்த மோதிரம் வண்ணானுக்குப் போய் சேர்ந்திருக்கும். ஷர்டிலிருந்து பொட்டியில் எடுத்துவைப்பதற்கு மறந்துவிட்டேன். இதற்கு என்ன செய்வது? ஒன்றும் தோன்றவில்லையே!— என்று குழப்பமடைந்தான்.

ஜானகி இதைக்கேட்டதும் அப்படியே தம்பித்துவிட்டாள். "ஆசைப்பட்டுவாங்கியதற்கு இப்படியாவந்து சேரவேண்டும்? கையில் போட்டுக்கூடப் பார்க்கவில்லையே. வண்ணானிடம் போன வஸ்து எப்படி வந்து சேரும்? கேட்டால்தான் தருவானா என்ன?" என்று இருவரும் பெரிய யோசனையில் ஆழ்ந்துவிட்டார்கள்.



சட்டென்று ஏதோ நினைத்தவனாய் ராமமூர்த்தி புறக்கடைப் பக்கம்போய் வேலைக்காரச்சிறுமியைக் கூப்பிட்டு "உடனே போய் நம்ப வண்ணானை அழைத்துக்கொண்டு வா." என்று அனுப்பினான்.

ஜானகிக்கு ஒன்றும் புரியாமல் "எதற்கு வண்ணானை அழைத்துவரச் சொன்னீர்கள்? மிரட்டி வாங்கிவிடலாம் என்றா. அவனா தருவான்? மிரட்டினால் வருமா என்ன?"......

எதற்காக என்று இப்பொழுது சொன்னால் என்னை பைத்தியக்காரன் என்று சொல்வாய். செய்ததற்கப்புறம் பார்; உனக்கே ஆச்சர்யமாயிருக்கும். ஏதோ ஒரு யுக்தி கண்டு பிடித்திருக்கிறேன்...அதோ வண்ணானும் வந்துவிட்டான். நீ பேசாது இரு" என்று எச்சரித்தான்.

வண்ணானும் வெகு வணக்கமாய் யஜமானைக் கும்பிட்டுவிட்டுகின்றான்.

ராமமூர்த்தி வெகு நிதானமாய் "என்ன முனுசாமி! என்ன சமாச்சாரம்? பலே ஆசாமியாயிருக்கிறாயே! அந்த மோதிரத்தைக் கொண்டுவந்திருந்தால் கொடுத்துவிடு. இல்லாவிட்டால் கொண்டு கொடுத்துவிடு. உன்னை வீணாக உபத்ரவப்படுத்தவேண்டாம் என்றுதான் நல்லதனமாய் கேட்கிறேன். இல்லாவிட்டால் வரவழைக்கும் வழியில் வரவழைக்கிறேன். கொடுத்துவிடுப்பா" என்றான்.

வண்ணான் ஒன்றும் அறியாதவன்போல் "சாமி! இது என்ன தூக்கோ பழி? இத்தனை பழகியும் என்னைத் தெரிந்துகொள்ளலீங்களே நான் அப்படிப்பட்டவன் இல்லவே இல்லிங்கசாமி! ஏழையை சோதனை செய்யாதீங்க. அப்படி இருந்தாலும் கொண்டு கொடுத்துவிட்டு மறுவேலை செய்வேனுங்க. அப்படிப்பட்டவன் தான் நான்" என்று ப்ரமாதமாய் கூழைக்கும்பிடு போட்டான்.

ராமு:—எதற்காக இந்த வேஷம் போடுகிறாய்? அது உன்னிடம் தான் இருக்கு; தெரிந்த விஷயம். நான் என்னவோ ஒருவரைப்போல் உன்னை போலீஸில் இழுத்து சந்தி சிரிக்கச் செய்யப்போவதில்லை. எனக்கு ஒரு மந்திரம் தெரியும். அதைஉபயோகித்தால் அது எங்குப் போனாலும் விடாது பண்டத்தை இழுத்துவந்துவிடும். நீயும் நாலு இடம் துணி எடுத்து பிழைப்பவனாயிற்றே. அது வெளியில் தெரிந்தால் உன் பிழைப்பில் மண்விழுமே என்று உன் நல்லதை எண்ணிச் சொல்கிறேன். எலுமிச்சம்பழத்தை மந்திரித்து விட்டால் யார் திருடினார்களோ அவர்களுக்குக்கடும் வயிற்று வலி வந்து அது அப்படியே ஒரு கட்டியாய்விடும். பின்னால் படும் அவஸ்தை சொல்லமுடியாது. அதற்கும் தராவிட்டால் அந்த ஆசாமியை வைகுண்ட யாத்திரைக்கும் தயார் செய்துவிடும். ஜாக்ரதை. மரியாதை

யாய் தந்துவிடு. கொடுத்துவிட்டால்
ஒன்றும் செய்யாது. எப்படியும்
என் வஸ்து வந்து சேர்ந்துவிடும்.
உனக்குதான் அவஸ்தை. உன் குடும்
பம் சீர் அழிந்துவிடும்'' என்று
சொன்னான்.

இதையெல்லாம் கேட்டதும் வண்
ணனுக்கு முதலில் பயமாய்விட்டது.
பிறகு 'மந்திரமாவது மாயமாவது
என்ன செய்கிறதோ அதை பார்த்
துக்கொள்ளலாம்' என்று நினைத்த
வாறு, "சாமி! என்னை வீணாக சந்
தேகிக்காதே. நான் எடுத்திருந்தால்
தானே தருவதற்கு? எடுக்காதவரை
அந்த மந்திரம் என்ன செய்துவிடும்?
என் உண்மையை அந்த மந்திரமே
உனக்குக் காட்டட்டும்'' என்று
இறைந்துவிட்டுவீட்டுக்குப்போனான்

ஆனால் அவன் புத்தி ஒரு நிலை
யிலே இல்லை. நடந்த சகலமும் தன்
மனைவியிடம் சொன்னான். பெண்
புத்தியாதலால் மந்திரம் என்று
கேட்டதும் கதிகலங்கி "ஐயோ!
மந்திரம் மனிதரை மண்ணாக்கிவிடும்
முதலில் அதைக்கொண்டு கொடுத்து
விட்டு மறு வேலை செய்'' என்று
கணவனுக்கு எச்சரித்தாள்.

"போ பைத்தியம். மந்திரமாம்,
மாயமாம். அப்படிச் சொன்னால்
நாம் பயந்து தந்துவிடுவோம் என்று
ஐயா சொன்னார். அப்படித் தான்
மந்திரம் உண்மை என்றால் என்ன
தான் செய்கிறதோ பார்க்கலாமே
என்று சொல்லிச் சிரித்தான்.

மனைவி :—நான் சொல்வதைக்
கேளு. மந்திரம் மஹா பொல்லாது.
நீ பரீக்ஷைசெய்யப்போய் உனக்கே
மோசம் வந்தால் என்ன செய்வது?
அந்த மோதிரத்தைத் தா. நான்
கொண்டு கொடுத்துவிடுகிறேன்—
என்று எவ்வளவோ கேட்டாள்.
அவன் காதில்கூடப்போட்டுக்கொள்
ளாது படுக்கச் சென்றுவிட்டான்.

மனைவியிடம் வீராப்புபேசினானே
தவிர, உண்மையில் அவனை பயம்
விரட்டுகிறது. படுத்தாலும் படுக்கப்
பிடிக்கவில்லை. புரண்டு புரண்டு
உடம்பும் வலி எடுத்துவிட்டது. நடு
நிசியாயிற்று. இரவு ஏறயேற அவனை
அறியாது வயற்றில் ஏதோ சங்கடம்
செய்ய ஆரம்பித்துவிட்டது. சற்று
நேரத்துக்கொருதரம் எலிமிச்சம்
பழம் வந்து, "அதை எங்க யஜமா
னிடம் சேர்த்துவிடு, இல்லாவிட்டால்
உன்னை எந்தபாடு படுத்துகிறேன்
பார்'' என்று பயமுறுத்துவதுபோல்
இருந்தது. தலைவலி அவனால்
பொறுக்க முடியாது போய்விட்டது.
வயிற்றிலும் ஏதோ கல்லைப்போல்
கனப்பதுபோலவும் வலிப்பது
போலவும் இருந்தது. "ச்சீ! இது எல்
லாம் வீண் ப்ரமை. வலியாவது,
கிலியாவது'' என்று தன்னைத்தானே
தேற்றியவாறு படுத்தான். அடுத்த
நிமிஷமே அந்த தைரியம் போய்
பயம் தான் தலைதூக்க ஆரம்பித்தது.
படுக்கப்பிடிக்காது எழுந்து உலாத்த
ஆரம்பித்தான். இதையெல்லாம்
கவனித்த அவன்மனைவிக்கு ஒன்றும்
தோன்றாது எழுந்து வந்தாள். கண
வன் தூங்காது தவிப்பதைப்பார்த்து
பக்கத்தில் வந்து உட்கார்ந்தாள்.
அவன் உடம்பு நெருப்பாய் காய்வ
தைப்பார்த்து பின்னும் அவன்
வயிற்றுவலி, வயிறு கல்லாய் கனக்
கிறது என்று சொன்னதும் அவள்
தலையில் எரிமலையே புரண்டது
போலாயிற்று. 'ஐயோ! ராத்ரி
எல்லாம் சொன்னேனே கேட்டயா?
அப்பவே கொடுத்திருந்தால் ஒன்றும்
இருந்திருக்காது. கடவுளே! உதயம்
வரையில் ஒன்றும் இல்லாமல்
இருக்கவேண்டுமே! அவர்கள் பண்
டத்தை அவர்களிடம் சேர்த்துவிடு
கிறேன்.'' என்று ப்ரார்த்திக்க ஆரம்
பித்து "இப்போதாவது, தா. அவர்க
ளிடம் தந்துவிடுகிறேன்'' என்றாள்.
அதற்கவன் மறுத்து

"ஏய்? என்ன ப்ரமாதப்படுத்து
கிறாய்? எனக்கு வயிற்றுவலியும்
இல்லை, கியிற்றுவலியும் இல்லை.
அதை நினைத்துக் கொண்டால்
ப்ரமை அப்படி தோன்றுகிறது.
இதோ பார். எனக்கு ஒன்றும்
இல்லை'' என்று எழுந்திருந்தான்.
ஆனால் ஜ்வரம் அவனால் எழுந்

திருக்கமுடியவில்லை. அந்த கிலியின் வேகமே அவனுக்கு ஜுரம் வந்துவிட்டது. தன்னால் எழுந்திருக்கமுடியாதுபோன அப்புறம்தான் அவனை பயம் அதிகம் பிடித்துக்கொண்டது. "ஒரு வேளை அந்த மந்திரத்தின் சக்திதான் இப்படி இருக்கிறதோ என்னவோ. ஒரு வேளை என்னைக்கொன்றுவிடுமோ?" என்று நினைக்கும்போது அவனை ஒரு முழும் தூக்கிப்போட்டது. உடனே மனைவியைக்கூப்பிட்டு "ஒருவேளை நான் செத்துவிடுவேனோ என்னவோ இந்தா! இந்த மோதிரத்தை அவர்களிடமே தந்துவிடு" என்று எடுத்துத் தந்தான்.

"இந்த மந்திரம் என்ன செய்துவிடுமோ?" என்றுபயந்துகொண்டு இருந்தவள் இப்பொழுதாவது புத்தி வந்ததே என்று சந்தோஷத்தோடு மோதிரத்தை வாங்கிப் பொழுது விடிந்ததும் அதை எடுத்துக்கொண்டு யஜமான் வீட்டுக்கு ஓடினாள்.

"சாமி! அநியாயமாக உங்கள் சொத்தை எடுத்துக்கொண்டு வீணாய் அவஸ்தைப்படுகிறேன். ராத்ரி எல்லாம்ஜுரம், வயற்றுவலியும்என்னை பயப்பட வைத்துவிட்டது உங்க சொத்தை தந்துவிட்டால் சரியாய் விடுமோ என்று உதயத்திற்கே எடுத்துவந்தேன் இந்தாங்க சாமி! ஏழைகளை காப்பாத்தனுங்க. இப்போதாவது அவனுக்குப் புத்தி வந்ததேன்னுதான் சந்தோஷப்பட்டேன். உடம்பு ஒண்ணும் இல்லாதுஎழுந்தா போதுங்க" என்று அழுதாள்.

இதைப் பார்த்த தம்பதிகளுக்குச் சந்தோஷம் தாங்கவில்லை. மோதிரத்தை வாங்கிக்கொண்டு "முதலிலேயே தந்திருந்தால் இவ்வளவு தூரம் வந்தே இராது. இப்படி நடக்காவிட்டால் அவனுக்கு புத்தி எப்படி வருவது? இனியாவது புத்தியோடு பிழைக்கச் சொல்லு. இந்தா இந்த மருந்தைத் தா; ஜுரம் எல்லாம் சரியாய்விடும் போ" என்று மருந்தைத் தந்து அனுப்பினான்.

போகும்பொழுதுகூட "சாமி! ஏழை பிழைப்பில் மண்போடாது சங்கதியை அப்படியே மறந்துடுங்கள்" என்று வேண்டினாள்.

ராமு "ஜானகி! பார்தாயா யுக்தியை! புலி ஆளைக் கொல்லாவிட்டாலும்கிலி ஆளைக்கொன்றுவிடும்" என்று சொல்லும் வசனம் சரியாய்விட்டது பார்த்தாயா? என்னை முட்டாள் என்று பரிஹாஸம் செய்தாயே!" என்று சிரித்தவாறு அவள் கையை இழுத்து விரலில் மோதிரத்தை இட்டு அழகு பார்த்தான்.

தன் மோதிரம் கிடைத்துவிட்ட சந்தோஷத்தில் அவனுக்குஒன்றுமே பேசத் தெரியாது சந்தோஷப் பதுமையாக நின்றாள். அவளழகைப் பார்த்தவாறே ராமமூர்த்தியும் சந்தோஷக்கடலில் மூழ்கிப் பூரித்தான். இருவரும் பகவான் படத்தின்முன்பு சென்று வணங்கினார்கள்.

---

கற்புக் கனிகலமே கவர்ச்சிமிகும் காதைகளை
கோற்றேன்போல் கொடுத்தருளும் கோதை(நாயகி)யே-மோகினியி
மற்றும் பல கதைகள் செப்பாயோ இப்புவியில்
பார்த்தசாரதியின் பாக்யமே பரிந்து —ஸ்ரீமான் ஜெ. ர. ரங்கராஜ

கற்பு-கல்வி, கற்பனை, [illegible] மாதர் ஒழுக்கம்.
காதை-கதை கோற்றேன்-கொம்புத்தேன்.

பொங்கலோ பொங்கல்!



பொங்கலோ பொங்கல்!

பொங்கும் மங்களம் எங்கும் தங்குக.

225665

# 1945

## புது வருடத்திற்கு உகந்த
## உன்னதமான தீர்மானம்!

"மேன்மை தங்கிய கவர்னர்
அவர்களின் யுத்த நிதிக்கு
பிரதி மாதமும் ஏதாவது
ஒரு நன்கொடை யளித்துக்
கொண்டே இருப்பேன்."

A GOOD RESOLUTION
for this
NEW YEAR!
"I will give a monthly
donation to
H. E. THE GOVERNOR'S WAR FUND."

ஜகன்மோகினி அனுபந்தம்

Supplement to "JAGANMOHINI" of 1-1-45 Regd. No. M. 22


# சாரதி ஜவுளிகள்

★நாள்பட உழைப்பவை

952/83



சாரதி ஹாண்லூம்
டெக்ஸ்டைல்ஸ்

புரோப்ரைட்டர்ஸ்:-
ஏ. ஆர். ரெங்காச்சாரி & கோ., லிமிடெட்
தபால்பெட்டி நெ. 14 மதுரை.


## ஜகன்மோகினி

அநுபந்தம்

மோகினி அன்பர்களுக்கு சாரதியின் பொங்கல் வாழ்த்து

A. R. P. SARATHI, Post Box 14, MADURA.